www.padippakam.com

இருமாத இதழ்
விலை ரூ 20/-

# கவிதா சரண்

சனவரி - பிப்ரவரி 2004

இதழாய் ஓர் எழுத்தியக்கம்





## புகழேந்தியின் புகை மூட்டம்





## ஜெயமோகனின் திருட்டு - ஒரு சான்று


படிப்பகம்

www.padippakam.com

# தூரிகைப் போராளி - ஓவியர் புகழேந்தி

*பூங்குழலி*

கலை - மென்மையான உணர்வுகளை மீட்டும் கருவியாக மட்டும் அல்லாது ஒவ்வொரு காலகட்டத்திலும் சமூகப் புரட்சிகளுக்குத் துணையாகவும் தூண்டுகோலாகவும் நின்றிருப்பதை வரலாறு நமக்குச் சொல்கிறது.



அவ்வகையில் ஓவியக்கலை, வெறும் அழகியல் சார்ந்ததாக நில்லாது சமூக அவலங்களை, நம் கண்முன் நடக்கும் பலவகையான அத்துமீறல்களைச் சாடவும், வெகு மக்களுக்கு அதைக் கொண்டு சேர்க்கவும் பயன்படுமாயின் அதுவே ஒரு ஓவியரின் உண்மையான சமூகப் பங்களிப்பாக இருக்க முடியும்.


உலகெங்கிலும் அத்தகைய சமூகப் பங்களிப்பைத் தொடர்ந்து உளப்பூர்வமாக அர்ப்பணிப்போடு வழங்கி வரும் மிகச்சில ஓவியர்களில் முக்கியமானவர் ஓவியர் புகழேந்தி. அவரே கூறுவது போல் ஓவியங்களை சமூக அநீதிக்கு எதிரான ஒரு ஆயுதமாகவே அவர் பயன்படுத்தி வந்திருக்கிறார்.

'எரியும் வண்ணங்களில்' துவங்கி, இருபதாம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகளின் பதிவாக 'உறங்கா நிறங்கள்', குஜராத் நில நடுக்கப் பேரழிவை - 150 அடி நீள ஓவியமாக்கிய 'சிதைந்த கூடு', பெரியாரின் பன்முகங்களைக் காட்டும் கோட்டோவியங்களோடு 'திசை முகம்' என ஆண்டுதோறும் மக்களின் கண்ணுக்கும் கருத்துக்கும் தனது ஓவியங்களைக் காட்சியாக்கி வந்துள்ளார்.

அவ்வரிசையில் இந்த ஆண்டும் சமூக அவலங்களைத் தோலுரித்துக் காட்டும் ஒரு சிறந்த வரலாற்றுப் பதிவாக 'புகை மூட்டம்' என்ற தலைப்பில் ஓவியங்களைக் காட்சியாக்கி இருக்கிறார் ஓவியர் புகழேந்தி.

'புகை மூட்டம்' மதம், சாதி, அரசியல் அதிகாரம் ஆகியவை நடத்திய, நடத்தும், அத்துமீறல்களை, ஒடுக்குமுறைகளை முகத்தில் அறையும் விதத்தில் அப்பட்டமாகவும் அழுத்தமாகவும் படம் பிடித்துக் காட்டுகிறது.

'குஜராத் - காந்தியின் கருவறையா கல்லறையா?'



ஒவ்வொரு மனதையும் உலுக்கி எழுப்பும் இந்தக் கேள்வியோடு துவங்கும் 'புகை மூட்டம்,' குஜராத்தில் மதம் தன் கோர நகங்களால் குத்திக் கிழித்த மனிதத்தைக் காண்போர் உள்ளம் பதைக்கும் வண்ணம் எடுத்துக்காட்டுகிறது.

அது பிறப்பா இறப்பா என்றே வேறுபடுத்திக் காண இயலாத வகையில் தாயின் வயிற்றைக் கிழித்துக் கருப்பையிலிருந்து குழந்தையை சூலத்தால் குத்தி எடுத்த அந்த கொடூரக் கரங்களை, இடிக்கப்பட்ட மசூதியின் இடிபாடுகளிடையே சிதறிகிடக்கும் அன்பைப் போதிக்கும் குரான் தாள்களை, எரிக்கப்படும்முன் தானே விறகாய் அடுக்கப்பட்ட மனித உடல்களை, தொடர்புக்கானது இன்று கொலைக்கு வழிகாட்டியாய் ஆக்கப்பட்ட தொலைபேசி அட்டவணையை... இவற்றைக் காணும் நொடியில்... 'மதம் கற்றுத் தந்தது இதைத்தானா?' என்ற பெரும் கேள்வி நம் முன் எழுந்து நிற்கிறது.

குஜராத் சார்ந்த ஓவியங்களில் இந்துத்துவாவின் வெறியாட்டம் அப்பட்டமாகத் தெரியும் வண்ணம் சூலம் ஒரு குறியீடாக பயன்படுத்தப்பட்டிருப்பது ஓவியரின் நுட்பத்தைக் காட்டுகிறது.

மதத்தின் முகமூடியைக் கிழித்துக் காட்டிய கையோடு சாதியத்தின் கேவலத்தையும் சுட்டத் தவறவில்லை ஓவியர். நினைத்துப் பார்க்கவே கூசும், இம்மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் வெட்கித் தலைகுனியும்வண்ணம் மனிதனுக்கு மனிதன் மலத்தைக் கொடுத்துத் தின்ன வைத்த அவலத்தை நம் கண்முன் நிறுத்தியுள்ளார். விரும்பும் உணவை உண்ண மட்டுமே இயல்பாக, தானாக வெளிநீளும் நாக்கு, மலத்தை உண்ண வெளி நீண்டு தொங்குவதாகக் காட்டியிருப்பதன் மூலம், சாதிய அச்சுறுத்தலை, ஒடுக்குமுறையை மிக அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

- தொடர்ச்சி பின் அட்டை உள்பக்கம்

www.padippakam.com


கவிதாசரண்

இதழாய் ஓர் எழுத்தியக்கம்

ஜனவரி - பிப்ரவரி 2004

ஆசிரியர்
**கவிதாசரண்**

இதழ் விலை: ரூ. 20

சந்தாவிவரம்

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 20 |
| 10 இதழ்களின் நன்கொடை | ரூ. 200 |
| 25 இதழ்களின் நன்கொடை | ரூ. 500 |
| 50 இதழ்களின் நன்கொடை | ரூ. 1000 |
| வெளிநாடு தனி இதழ் | $ 2 |

தொடர்பு முகவரி:

**கவிதாசரண்**
31, டி.கே.எஸ். நகர்,
சென்னை - 600 019.
தொலைபேசி: 044-2573 44 99

**KAVITHAASARAN**
31, T.K.S. Nagar, Chennai-600 019.
Tamilnadu, India.
Phone: 044-2573 44 99

**E-mail:** kavithaasaran@yahoo.com

**Website**
htt://www.geocities.com/kavithaasaran/

ஓவியங்கள்:

கோவி. பரம்ஜோதி
இராஜராஜன்

நூல் மதிப்புரைக்கு 2 படிகள் அனுப்புக. ஓர் ஆண்டுக்குள் வெளிவந்த புதிய நூல்களை அனுப்புக

# உள்ளே

மதிப்பீட்டு அரசியல் 2
கறுப்பு இஸ்லாம் 7
தம்பலா 11
பிதாமகன் வெற்றியும் பாலாவின் தோல்வியும் 17
பச்சோந்தி 21
ஜெயமோகனின் திருட்டு 23
நினைக்கத் தெரிந்த மனமே 26
சாதி ஒழிப்பும் புள்ளி ராஜாவும் 37
பெரியார் பற்றி ஏ.எஸ்.கே. 39
ஈ.வெ.ரா.வின் ஊடாக - தமிழ்மொழி 43
வரலாறு துரோகிகளை மன்னிக்காது 46
செருப்புக்கும் கீழே சில மரமல்லி மலர்கள் 50
அபிப்ராய விமர்சனம் 52

பாரீஸ் அறிவாலயம்
PARIS ARIVAALAYAM
7, RUE PERDONNET, 75010 PARIS, FRANCE
TEL : 01 44 72 03 34 FAX : 01 44 72 03 35

வாசக நண்பர்களே
உங்கள் சந்தாவைப் புதுப்பியுங்கள். இதையே தனித்தனி நினைவூட்டலாகக் கொண்டு உடனடியாகப் புதுப்பியுங்கள். புதிய சந்தாதாரர்களைப் பெற உதவுங்கள்

எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளை மாதத்தின் 20 தேதிக்குள் அனுப்பித்தரக் கேட்டுக் கொள்கிறோம்.


படிப்பகம்

www.padippakam.com



# மதிப்பீட்டு அரசியல்

## 1. மீண்டும் பாரதி

இவ்விதழில் பாரதிவசந்தன் எழுதிய 'தம்பலா' என்னும் கதை மீள் வெளியீடாய் வந்திருக்கிறது. '20 ஆம் நூற்றாண்டு புதுவைக் கதைகள் - தொகுப்பு 2' இல் இடம் பெற்ற கதை. தொகுத்தவர்கள் பிரபஞ்சனும் பாரதி வசந்தனும். தொகுப்புகள் பரவலாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் செய்யப்படவில்லை. இப்படி போதுமான மதிப்பீடுகளற்று வெளியீட்டுப் பட்டியல் பெயர்களாகி விடும் நூல்கள் தமிழில் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. அதற்குப் பல காரணங்கள் இருக்கக் கூடும். அவற்றுள் ஒன்று மரபான வெளியீட்டு வணிகர்களுக்கு விமர்சனம் ஒரு பொருட்டல்ல. விற்றுத் தள்ளத் தெரிந்தால் போதும்.

இத்தொகுப்புகள் வெளிவந்தபோதே, என்னிடம் கொடுத்து இக்கதையைப் படிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டார் பாரதிவசந்தன். பின்னொருநாள் தொலைபேசியில் என் கருத்தைக் கேட்டார். ''எப்போதையும் விடக் கூடுதல் கவனம் எடுத்துக்கொண்டு வெகு நன்றாகவே எழுதியுள்ளீர்கள். பிரம்மாக்களின் இலக்கிய உலகம் இதுபோன்றதொரு எழுத்து நுட்பத்தைக் கற்கத் தவறினாலும் பாரதி அபிமானத்துக்காக உங்களை உச்சிமோந்து பாராட்டும். ஆனால் எனக்குத்தான் சகிக்க முடியவில்லை,'' என்றேன். வசந்தன் இதை எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் என்னால் பேசாமல் இருக்க முடியவில்லை. ''நீங்கள் என்ன புரிதலில் எழுதிக் கொண்டிருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. நீங்கள் எழுதியிருக்கிறீர்களே ஒரு வாக்கியம், 'வேகத் திரைகளினால் வேதப் பொருள்பாடி வந்து தழுவும் வளஞ்சார் கரை' என்று, நான் அதை எதிர்பார்க்கவில்லை. இதுவா உங்கள் மொழி? எனக்கு உடன்பாடில்லை. உங்களைப் போன்றவர்கள் இலக்கியப் போராளிகளாய்த் திமிர்ந்தெழ வேண்டிய தருணமிது. இலக்கியப் போராளி முதலில் தனக்கான மொழியைக் கண்டடைய வேண்டும். ஆனால் நீங்களோ மரபான இலக்கியவாதியாய் வெளிப்படுகிறீர்கள். மரபான இலக்கியவாதி தன்னளவில் அரிசயலற்றவன்போல் சாட்சியமளிக்கிறான். ஆனால் உண்மை அதுவல்ல. இந்தியாவில் அவன் பார்ப்பன அரசியலைப் பேணுகிறவன்; பார்ப்பன மேன்மைக்குத் தன்னை ஒப்புக் கொடுக்கிறவன்; நடைமுறையிலிருக்கிற 'நியாயங்களைக்' கேள்விக்குட்படுத்தாதவன். தனக்கான மொழியற்றவன். தன்னுணர்வும் தன்னெழுச்சியுமற்ற இரவல் மொழிக்காரன். பாரதியைப் பற்றி எழுத ஒரு பட்டாளமே இருக்கிறது. ஆனால் உங்களைப் பற்றி எழுத நீங்கள் மட்டும்தான் இருக்கிறீர்கள். பிரெஞ்சிந்தியத் தமிழ் பிரபஞ்சனுக்கு மாத்திரம் வருவதல்ல என்பது சரிதான். ஆனால் உங்கள் மொழி உங்களிடமிருந்துதான் வரவேண்டும்.''





வசந்தன் தன் தரப்புப் பார்வைகளையும் நியாயங்களையும் தேர்ந்த மொழியில் மிகுந்த நிதானத்தோடு முன்வைத்தார். எனினும் என் பொறுமையின்மையும் பிடிவாதமும் என் தரப்பு நியாயங்கள்தாம் இந்தக் கணத்தில் முதன்மையானவை என்பதாக அவரைக் கிட்டித்திருக்க வேண்டும்.

அப்போது அவர் ஒரு விபத்தில் சிக்கி, வலது கையை முறித்துக் கொண்டிருந்தார். பெரிய மாவுக்கட்டுப் போட்டு கழுத்தில் தூளியிட்டிருந்தது. உண்பதெல்லாம் இடக்கையால்தான். இடக்கையை 'பீச்சக்கை' என்று கீழிறக்கம் செய்து வெற்றுத் தூய்மைவாதப் புலம்பலில் அவர் தன்னை மேலும் வருத்திக் கொள்ளவில்லை என்பதே எனக்கான சமாதானமாகவும் அறிவுறுத்தலாகவும் இருந்தது.

அந்த உரையாடல் நடந்த ஒரு வாரத்தில் அவரிடமிருந்து 'மட்டவெள்ளி' என்னும் கதை வந்து சேர்ந்தது. அது ஒருவகையில் அவரது தன் வரலாறாகவே அமைந்திருந்தது. கை வலியைப் பொருட்படுத்தாமல் வருத்திக் கொண்டு எழுதி அனுப்பிவிட்டு, மீண்டும் புதுக்கட்டுப் போட்டுக் கொண்டு மேலும் சில வாரங்கள் அவதிக்குள்ளாகும்படியாயிற்று. அந்தக் கதை அடுத்த 'ஆக.செப்டம்பர் 2002 கவிதாசாரன்' இதழிலேயே வெளியிடப்பட்டது.

'தம்பலா'வைப் படித்த உடனே பாரதிவசந்தனின் முன்னுரிமைகளைப் பற்றி நான் அவ்வாறு பேசியிருந்தாலும், அந்தக் கதையை அவரின் தனித்துவங்களோடு தலித்தன்னிலையில் எவ்வித சமரசத்துக்கும் ஆட்படாமலேதான் எழுதியிருந்தார் என்பதை நான் அறியாமலோ மகிழாமலோ இல்லை. ஒருவேளை இது ஒரு பார்ப்பனரால் அல்லது ஆதிக்க சாதியனரால் எழுதப்பட்டிருந்தால் ஆதிக்க சாதிக்கெதிரான தம்பலாவின் செயலும் மொழியும் எவ்வளவு கொச்சைப்படுத்தப் பட்டிருக்கும்! அதன் மூலம் சுப்பிரமணிய பாரதியும் எவ்வளவு அசிங்கப்பட்டிருப்பான்! உண்மையில் பாரதிவசந்தன் தனக்கான பாரதியைச் சரியாகத்தான் உருவகித்திருக்கிறார். அதன் காரணமாகவே மதிமாறனின் பாரதி பற்றிய கடும் விமர்சனத்தைத் திருப்பூர் கிருஷ்ணன் எதிர்கொள்ள இவ்வாறு பேச முடிந்திருக்கிறது: ''பிரபஞ்சன் தொகுத்த புதுவைச் சிறுகதைகள் என்ற அருமையான நூலில், அதன் இன்னொரு தொகுப்பாளரான நண்பர் பாரதிவசந்தன் 'தம்பலா' என்ற தலைப்பில் அற்புதமான ஒரு வரலாற்றுச் சிறுகதை எழுதியுள்ளார். தோட்டித் தொழில் செய்யும் ஓர் அன்பரை பாரதி சகமனிதராக எந்த அளவு நேசித்தார் என்பதும் அத்தகையோர்க்கு உரிய சமூக அந்தஸ்து மறுக்கப்படுவது குறித்து அவர் எந்த அளவு கவலை கொண்டிருந்தார் என்பதும் அக்கதையில் தெள்ளத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கதையைப் படித்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் பற்றிய பாரதியின் கருத்தோட்டம் தெளிவாகப் புலப்படும். அவரின் சீர்திருத்தக் கண்ணோட்டங்கள் முற்போக்கு முலாம் பூசப்பட்டவையல்ல என்பதும், அவைகள் சொக்கத் தங்கமே என்பதும் தெரியவரும்.''

காலங் கடந்து இக்கதையை இப்போது வெளியிடுவதற்கு ஒரு காரணம் பாரதி பற்றிய கரடுமுரடான சர்ச்சைகளின் ஊடே இதுவும் ஒரு பேசு பொருளாகட்டும் என்பதும்தான்.

பாரதிவசந்தன் அடிப்படையில் பாரதி நேசர் என்பது இங்கு முதன்மைப்படுகிறது. நேசம்



படிப்பகம்

www.padippakam.com



என்பது ஒருவரைப் பற்றிய முற்றறிதலுக்குப் பின்னரே பிறக்கும் அல்லது பிறக்க வேண்டும் என்பதல்ல. நேசிக்கப்படுவோரின் மேல் ஒட்டிக் கொண்டுள்ள ஏதோ ஒரு துகளின் மெலிதான ஈர்ப்புகூட அதற்குப் போதுமானதாயிருக்கும். பாரதி தன் கவிதையினூடே அப்படியான காந்தத் துகள்களை நிறையவே பெய்து வைத்திருக்கிறான். அவை காந்தத்துகள்கள்தாமாஅல்லது வெறும் சொக்குப்பொடியா என்பது இன்றைய சர்ச்சையாய் இருக்கக்கூடும். உண்மையில் நம்மால் நேசிக்கப்படுபவர்கள் நம் ரசாயனங்களால் உருத்தேற்றப்பட்டு, நம் பிரியங்களால் நிறமேற்றப்பட்டவர்கள் தாமே தவிர நாம் அறியாத பகுதிக்குரிய மறைவானவர் அல்ல. நேசத்தில் நேசிக்கப்படுபவரைவிட நேசிக்கிறவர்தான் அதிகம் வெளிப்படுகிறார் என்பதே உண்மை. அந்த வகையில் பாரதிவசந்தன் அரிய மானுடப் பறவையாகவே 'பாரதி வெளி'யில் வலசை போயிருக்கிறார். ஆற்றுநீரை எவ்வளவுதான் அடித்தாலும் கலங்குவதில்லை. ஆனால் குளத்து நீருக்கு அந்தத் தூய்மை இல்லை. பாரதி செய்த நற்பேறு, பாரதிவசந்தனுக்கு அவன் ஆற்று நீராய் இருக்கிறான்.

பாரதியைப் பேசவும் பேசக் கேட்கவும் எனக்கும்கூடப் பிடிக்கும். அது ஒருவகையில் எனக்காகும் கனமும் கூட.

அவன் ஒரு கிறுக்கன். அவனிடத்திலும் வஞ்சகம் இருந்திருக்கும். ஆனால் எனக்கவன் பிள்ளைக் கிறுக்கன். எதிராளிக்கு என்ன பிடிக்கும் என்று தெரிந்து பதுங்கியவன் அல்லன். தன்னிச்சையாக, தன்னெழுச்சியாகத் தன்னைக் கவிழ்த்துக் கொட்டியவன்.

அவன் ஒரு பார்ப்பான். அவனுக்குப் பிடித்த ஆரியன் என்னும் சொல்லை ஹிட்லரின் ஞாபம் கருதித் தவிர்க்கிறேன். அந்தப் பார்ப்பான் கடைசிக் கணுவரை பார்ப்பானாய் ஊறித் திளைத்துத் திமிறி எழுந்தவன். பார்ப்பான்தான் எல்லாரினும் மேலானவன் என்று நம்பியவன். அதே நேரத்தில் கனகலிங்கத்தையும் பார்ப்பானாக்கிவிட முடியும் என்று முயன்று பார்த்த கிறுக்கன். கவனிக்காமல் விடப்படும் கனகலிங்கங்கள்தாம் பார்ப்பானின் காலன்கள் என்று கண்டு சொன்ன ஞானக்கிறுக்கன்.

உலகத்திலேயே மனித ஏற்றத்தாழ்வை அடிப்படை அலகாகக் கொண்ட ஒரே மதம் இந்து மதம் மட்டுமே. அந்த அலகை உருவி எறிந்துவிட்டால் அந்தக் கணமே பொக்கென நொறுங்கிப் பெயரற்றுப் போகும் அம்மதம். அதற்குப் பின்னும் ஏதோ ஒரு அதிசயத்தால் அதை இருக்கப் பண்ணமுடியும் எனில், எவனொருவனும் இந்துவாய் இருக்கக் கூச்சம் கொள்ளத் தேவையில்லை. ஒருவன் இஸ்லாமியனாயிருப்பது எவ்வளவு நியாயமோ அவ்வளவு நியாயம் இந்துவாயிருப்பதும் என்றாகி விடும். இது ஒருநாளும் நிகழப் போவதில்லை. காரணம் அது ஒரு மூடுண்ட மதம். அந்நியர்கள் அதில் நுழைய வழியில்லை. கூடவே 'அழுக்குப்பிறவிககளும்' கூட. நுழைந்தால் அவர்களை எந்தப்படி நிலையில் வைப்பது? அந்தத் தீர்வின்மைதான் அதன் திறவுகோல். இது தெரிந்திருந்தும் பாரதி தாழ்த்தப்பட்டவர்களை அதன் உள் இழுக்கக் கோருகிறான். அவர்கள் 'அழுக்குப் பிறவிகளாய்ப்' பார்க்கப்பட்டதால், இந்துக்கள் அல்லர் என்பதை அவன் அறிந்தே இருக்கிறான். அவர்களை அழுக்குப் போக குளிக்க வைக்கக் கோருகிறான். படிப்பிக்கச் சொல்கிறான். அவர்களோடு சமத்துவம் பேணச் சொல்கிறான். ஆனால் அவன் வருண தர்மம் பற்றி கேள்வி எழுப்புவதைத் தவிர்க்கிறான். எனில் தாழ்த்தப்பட்டவர்களை இந்து தர்மத்துக்குள் எப்படி அடக்குவான்? சதுர் வருணம் என்பதற்குப் பதிலாய் பஞ்ச வருணம் என்றா? சமத்துவம் கோரச் சொல்வதன் மூலம் எல்லாரும் ஏற்றத்தாழ்வு மறந்து அவரவர் பணியைத் தொடரும் சமநிலை வருணங்களாகவா? அதாவது ஆள்கிறவன் ஆள்கிறவனாகவே, உழைக்கிறவன் உழைக்கின்றவனாகவே, ஆனால் தோளோடு தோள் தொட்டுக் கொள்கிறவர்களாகவா? இது ஒன்று போதாதா தாழ்த்தப்பட்டவர்கள் வேரடி மண்ணோடு அதனை வீழ்த்துவதற்கு? அவன் கோரிக்கைக்கேற்பவே தாழ்த்தப்பட்டவர்கள் இன்று இந்துக்களாகக் கருதப்படுகின்றனர். ஆனால் எண்ணிக்கைக்கு மட்டும்தானே? எண்ணிக்கை குறைந்துவிடக் கூடாது என்பதற்காகத்தானே அவர்கள் மதம் மாறினால் இட ஒதுக்கீட்டுச் சலுகைகளை இழப்பார்கள் என்னும் பொறி வைத்துப் பிடித்து நிறுத்துவது? பாரதி கோரியதுபோல் நடைமுறையில் குறைந்தபட்சம் வருண சமத்துவம் கூட வரவே வராது என்பதைக் கடந்த தொன்னூறு ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம். பாரதிக்கும் தெரியும் இந்துமத லட்சணம். தன்னறிவுள்ள எந்த மதத்துக்காரனும் இந்துவாகும் கேவலத்துக்குச் சம்மதிக்க மாட்டான் என்பது அவனுக்கும் தெரியும். அதனால்தான் மதமற்ற தாழ்த்தப்பட்டவர்களைத் தவிர மற்ற மதத்துக்காரர்களை இந்துவாக்குவது பற்றி அவன் வாயே திறக்கவில்லை.

அவன் ஆசையை அறையலுற்றான். வஞ்சகமாகவா என்பது அவரவர் வார்ப்புக்கேற்றபடி.

பார்ப்பனர்களில் நம் நேசத்துக்குரியவர்களாய் பாரதியை விடவும் மேம்பட்டவர்கள் கிடைப்பது அபூர்வம் என்பதுதான் அவனுக்கான தகுதி. மற்றபடி அவன் உள்ளங்கையும் நெல்லிக்கனிக் கேற்றதாய் இல்லை என்பது இந்துவாய் அவன் பிறந்ததன் சாபம். இந்துவாய் உணரும் எல்லாருக்குமான சாபம்.

## 2. அயலான திராவிட இயக்கம்







சென்ற இதழ் நூல் மதிப்புரையில் 'அசலான திராவிட இயக்கக் கவிஞன்' என்று இளையபாரதிக்கு மகுடம் சூட்டியிருந்தார் கலாப்ரியா. அப்படி சூட்டியதற்கான விளக்கமும் அளித்திருந்தார். அந்த விளக்கத்துக்கப்பாலும் அசட்டையானதொரு சந்தர்ப்பத்தில் என் முதுகில் தட்டி அழைத்த தோழமைக்குரல் போல என் கவனத்தைக் குவியப்படுத்தியது அந்தச் சொற்றொடர். அந்த ஒன்றின் காரணமாகவே அவர் கவிதைகளினூடாக இந்தக் குறிப்பை எழுதும் தகுதியை எனக்கு வழங்கிக் கொண்டேன். அவரது 'மரணத்தின் நட்சத்திரங்கள்,' 'பட்டினபாலை' என்னும் அவ்விரு தொகுப்புகளையும் ஒருவித எழுச்சியும் ஈர்ப்பும் கொண்டு வாசித்தேன். அதற்குமுன் அவரை அங்கொன்றும் இங்கொன்றுமாக வாசித்திருந்தாலும் அடையாளப்படுத்தி வாசித்ததில்லை தொகுப்புகளில் அவர் கொடுத்திருக்கும் நன்றிப் பட்டியலையும் நூல் வெளியீட்டில் அவர் அழைத்திருந்த விருந்தினர் பட்டியலையும் அவதானிக்கும்போது தன்னை எல்லார்க்கும் நல்லவராய், எல்லார்க்கும் வேண்டியவராய் இருத்திக் கொள்ள முயலும் பிழைக்கத் தெரிந்தவராகவே வெளிச்சப்படுகிறார். வெளிப்பார்வைக்கு இது ஒரு நல்லம்சம் போலத் தோன்றினாலும் உள்ளூர ஒருவனின்



படிப்பகம்

சுயம் அழிக்கும் நோயாகவும் பொய் வளர்க்கும் கழிவாகவும்தான் அது வினைபுரியும் என்பது நடைமுறை ஞானம். ஆனால் அதுவல்ல இங்கு பேச்சுப் பொருள். இப்படிப் பிழைக்கத் தெரிந்த ஒருவர் கவிஞராக, அதுவும் நல்ல கவிஞராக வெளிப்படுவாரா என்பதே நமக்கான கேள்வி. வெளிப்படுவார் என்பதற்கு இளைய பாரதியே சாட்சியாகிறார் எனில் கவிதை நீங்கள் நினைத்ததுபோல் அப்படியொன்றும் புனிதமானதில்லை என்று சொல்வீர்களா? அப்படித்தான் இருக்கட்டுமே. எந்தப் புனிதக் கற்பிதமும் ஏதோ ஒரு தருணத்தில் உடைந்துபோகும் என்பதற்கு இதுவே சாட்சியாக இருந்துவிட்டுப் போகிறது. இந்த இடத்தில் சுவைக் குறைவாய் இருக்கும் என்பதற்காக அவரது குறையொன்றைச் சுட்டாமல இருந்து விட முடியவில்லை. தொடக்க காலத்தில் அவர் தன்னை ஒரு கவிஞனாகப் பயிராக்கிக் கொள்ளும் முயற்சியில் பிறர் கவிதை வரிகளைத் தனதேபோல் காட்டிக் கொண்டவர் என்னும் குற்றச்சாட்டுக்கு இலக்கானவர். ஒருவகையில் அதுவே அவருக்கொரு விளம்பரமாய்ப் பயன்பட்டதுண்டு. இன்று அவரது கவிதைக் களத்தில் நின்றுகொண்டு குணத்திலும் குறையிலும் மிகை நாடும் அரவணைப்போடு பார்க்கும்போது அந்தக் குற்றமே தவறாக வெளிப்பட்ட சரியமான புலமை என்பதாகவும் கணிக்கப்படலாம். அதாவது அந்தச் செயலிலும் அவர் கவிதைகளைத்தான் தேர்ந்தெடுத்தார், வெறும் கற்களையல்ல என்பதாக.

கவிதைகளைப் படிக்குமுன் கல்யாண்ஜியின் முன்னுரைகளைப் படிக்க நேர்ந்தது. எனக்கு அடங்காத பிரமிப்பு. ஊறறிந்த கவிஞர் ஒருவர், இன்னும் அணிந்துரை வாங்கிப் போடுவதில் ஆர்வமுள்ள ஒரு கவிஞரை இத்தனை கணக்கற்ற கவித்துவத் தொடர்களால் கொண்டாடுகிறாரே என்று பிரமிப்பு. பிறகு கவிதைகளைப் படிக்கும்போதுதான் தெரிந்தது இளைய பாரதியின் கவித்துவங்களில் எழுபது, எண்பது சதவீதங்களைத் தன் முன்னுரையில் தொகுத்தளித்திருக்கிறார் என்ற உண்மை. அதைக்கூடப் புரிந்து கொள்ளாமைதான் புத்தகங்களின் மேல் எனக்குள்ள பாமர மோகம்.

இந்தக் குறிப்பு அவரது கவிதை அழகுகளைத் தொகுத்துச் சொல்லும் இன்னொரு முயற்சியல்ல. அதைக் கல்யாண்ஜியே கச்சிதமாகச் செய்துவிட்டார். மாறாக இது அவர் கவித்துவங்களினூடாகக் கண்டடையும் அடையாளம் பற்றியதே. ஆகவே எனக்கு மேற்கோள்கள் அதிகம் தேவைப்படாது. வேண்டுமானால் ஒன்று சொல்லலாம். இளைய பாரதியின் கவிதைகள் வாசகர்களையும் கவிஞர்களாக உயர்த்திக் காட்டுபவை. எங்கெல்லாம் வெறுமைகள் கூடு கட்டுகின்றனவோ அங்கெல்லாம் காற்றின் ஊடாட்டம் அடைகாப்பதே போல் அவரது கவிதைகளும் அலை பரப்புகின்றன. காற்றுக்குத் திக்கும் திசையும் அத்துபடியாய் இருக்க வேண்டியது அவசியமில்லை, அவரது பல கவிதைகளுக்கும் கூட அதுவே வரையறையாகிறது.

கவிதைகளைப் படிக்கப் படிக்க கவிஞரைப் பற்றிய படிமங்களும் நிறங்களும் தளும்பித் தளும்பி ஒரு பதத்தை எட்ட முயன்றன. படித்து முடித்தபோது இவர் மண்ணா, கல்லா என்றொரு கேள்வி முளைத்தது. மண், தன்னில் சுரக்கும் நீருக்குத் தன் தகைமையை வழங்கும். ஆனால் கல் தன்னில் கசியும் நீருக்குத் தான் ஒரு தடமாய் மட்டுமே பிளந்திருக்கும். அதைப்போல இவரில் ஊறும் கவிதைகளுக்கு இவர் தடமாயிருக்கிறாரா தகைமையாய்க் கரைகிறாரா என்னும் ஐயம் எழுந்தது. ஆனால் ஒரு கட்டத்தில் இவர் கல்தான் என்பதாகத் தீர்மானமாயிற்று. அதன் பிறகு அவரின் கவிதைகள் சொற்களின் ஒப்பனையா அல்லது உணர்வுகளின் சிறகடிப்பா என்பதைத் தீர்மானிப்பதில் ஒரு குழப்பமும் இல்லை. ஒரு காலத்தில் இவர்,

> கடவுளே வந்து கூப்பிட்டாலும்
>
> குழந்தைகள் திரும்பிப் பார்க்காது
>
> பட்டாம் பூச்சி பிடிக்கும்போது
>
> என்று இழைய இழையக் குழந்தைகளோடு பட்டாம்பூச்சியாய்ப் பறந்துகொண்டிருந்தவர்
>
> வாழ்வனுபவங்களால் மிதிபட்டு மிதிபட்டு இறுகிப்போய்,
>
> அபகரிக்கப்பட்ட நட்சத்திரங்களை உருக்கி
>
> வார்த்த கிரீடத்தில் பதிக்க
>
> நவரத்தினங்கள் போதாதென்று
>
> குழந்தைகளின் களங்கமற்ற கண்களைப்
> பிடுங்கிப் பதிக்கின்றோம்

என்று நோகாமல் ஒப்புமை பேசும் சொற்களின் சுகவாசியாகி, பின்னும் வளர்ந்து பீடமாய் இறுகி, தன் கவிதைக்கு 'பிணங்களை அலங்கரிக்கும் பின் நவீனத்துவக்காரி' என்று கிளுகிளுப்பாய்த் தலைப்பிட்டு மகிழும் தடிப்பேறி முடிகிறார்.

இந்தப் பின்புலம் எனக்குப் பிடிபட்டதும் இவர் கவிதைகளில் ஒரு விஷயம் தூக்கலாகப்பட்டது. அதாவது, கவிதைகள் நெடுகிலும் 'வேசிகளின்' காட்சிகள் நடுகல்களைப்போல விரைத்துக் கொண்டு மேலெழும்பிக் கிடந்தன. வேசிகளை இவர் ஓரிடத்தில்கூட மனுஷிகளாய்ப் பார்க்கவில்லை என்பதோடு வேசிகளிடம் இவரும் மனிதனாக நடந்து கொள்ளவில்லை என்பதும் பல்லிடுக்கில் சிக்கிய கல்லைப்போல் கடிபட்டன.

உதாரணத்துக்கு ஒன்றிரண்டு வரிகளையேனும் மேற்கோள் காட்டத் தோன்றுகிறது :

1. ஒரே மாதிரியான வாழ்க்கை வேசிக்கு
2. ஒரு விலைமகள் தன் உடலை
   சௌகரியமாய்க் காட்டி சயனித்திருப்பதைப்போல
3. வசதியைப் பெருக்கித்தரும் வேசியின் வியர்வை
4. உன் வேசைத்தனமான வெற்றியைப்
   பரிகசிக்கும் என் தோல்விகள்
5. எனக்குத் தரிசனம்
   ஒரு வேசியிடம்
6. விரைவில் மூப்பெய்திவிடுகின்றன
   வேசியின் வீட்டுக் கண்ணாடிகள்
7. இச்சை தீர அனுபவித்துவிட்டு
   காசுகேட்ட வேசியை நான்
   காலால் உதைத்தபோது

இவர் அனுமானத்தில் அல்லது தன்னறிதலற்ற நம்பிக்கையில், இந்தியாவில் ஒவ்வொருவரும் சாதியில் பிறப்பதுபோல வேசிகள் வேசிகளாகப் பிறக்கிறார்களே தவிர வேசிகளாய் ஆக்கப்படுவதில்லை. அதுபோலவேதான் பத்தினிகளும். இவர் போன்றவர்களின் கணக்குப்படி எந்தப் பெண்ணும் பெண்ணாய்ப் பிறப்பதில்லை. ஒன்று வேசியாய்ப் பிறக்கிறாள். அல்லது பத்தினியாய்ப் பிறக்கிறாள். ஆனால் இருதரப்பாரும் பண்டமாகவே பயன்படுத்தப்படுகிறார்கள். இந்த மனோபாவத்துக்கு சர்வதேச முத்திரை உண்டெனினும் இந்து முத்திரை அழுத்தமாகக் கிடைக்கிறது. அதாவது அவர் இந்துப் பண்புக்குத் தன்னைத் தத்தம் கொடுத்தவர். அதவாது இந்துவாய் அறியப்பட வெட்கும் ஆசாரமான இந்து.

பெண்களைப் பற்றிய இவரது பிம்பம்கூட இவரை 'அசலான திராவிட இயக்கக் கவிஞனாக' ஆக்கியிருக்க வேண்டும். ஆனால் அசல்தான் அயலாகிப் போய்விட்டது.

திராவிட இயக்கத்தைக் கட்டியெழுப்பி, கொள்கை கோட்பாடுகளை வகுத்து, களமிறக்கிச் செயல்வடிவம் கொடுத்த பெரியார்கூட 'வேசி, தாசி, விபச்சாரி' என்னும் சொற்களைப்

www.padippakam.com



பயன்படுத்தியுள்ளார். ஆனால் அந்தப் பெயர்களின் கேவலங்களை உணர்த்துவதற்காகவும், அப்படி அறியப்படுபவர்களை ஒருங்கிணைக்கவும்தான். மற்றபடி பெரியார் அவர்களை அழைத்து மாநாடு நடத்தினார். அவரது கூட்டங்களுக்கு வருந்தி அழைத்து உபசரித்தார். அவர்கள் உரிமைகள் பற்றிப் பேசினார். பெரியாரின் திராவிட இயக்கம் பெண் விடுதலையை ஒருநாளும் பின்னுக்குத் தள்ளியதில்லை. பெண்ணைப் புனிதப்படுத்தி புழுதியில் போட்டு மிதித்ததில்லை. உலகம் பூராவிலும் பெண் விடுதலையை முன்னெடுத்தவர்களில் அவர்தான் இன்னமும் இணையற்றவராய் இருக்கிறார். பெண்களைப் பொறுத்தவரை அவருக்கு திரௌபதியும் ஒன்றுதான். கண்ணகியும் ஒன்றுதான். கற்பொழுக்கம் பேசி அவர்களைப் பிரித்துப் பார்த்ததில்லை. எல்லாப் பெண்களும் விடுவிக்கப்பட வேண்டியவர்களே. இதில் இதிகாசப் பெண்கள், காப்பியப் பெண்கள் என்றெல்லாம் வேறுபாடில்லை எனச் செயல்பட்டவர். ஆனால் கலாப்ரியா காட்டும் திராவிட இயக்கம் அப்படிப்பட்டதல்ல.

இளைய பாரதிக்கு மகுடம் சூட்டிய காலப்ரியா அதன் நியாயப்பாட்டை

> ''அர்ஜுனனுக்காக நிராகரிக்கப்பட்டது ஏகலைவனின் கிரீடம்


போன்ற வரிகள் மூலம் அவர் இதிகாசங்களை வழிபாட்டு மந்திரங்களாக ஏற்றுக் கொள்ளாமல் எதிர் வினையாற்றுகிற அசலான திராவிட இயக்க கவிஞன்,'' என்பதாக விளக்குகிறார். திராவிட இயக்கச் செயல்பாட்டை இப்படியொரு ஒற்றைத்தனமான குரலாக, எழுத்தாக, நூலாக, கிளுகிளுப்பூட்டும் பேச்சுக் கச்சேரிகளாக மாற்றிக் காட்டியவர் 'ஆரியமாயை'யும் 'கம்ப ரசமும்' வார்த்தளித்த பேரறிஞர் அல்லவா? அவர் பெரியாரை விட்டுப் பிரியும் முன்பே அவருக்குத் தோதான இயக்கவாதியாகத் தான் பேசிக்கொண்டிருந்தார். பிரிந்து வந்ததும் தலை இல்லாத இயக்கமாக, 'கடமை கண்ணியம் கட்டுப்பாடு' என்று ஒழுங்குபேசி விதிக்குள் அடங்கும் கிடையாகத் தன் இயக்கத்தை மாற்றிக் கொண்டுவிட்டார். 'பெரியாரே தலைவர்' என்னும் ஒரு பொய்யை முன்வைத்து, தான் கழித்துக் கட்டிய மூலக் கொள்கைகளை முன்னேற்றம் என்னும் சொல்லால் நிரப்பித் தனக்கான கழகத்தை உருவாக்கிக் கொண்டார். அந்த இயக்கத்துக்கு திரௌபதி தட்டுவாணி. கண்ணகி பத்தினி. அவர்தான் சொன்னாரே, ''அவள் படிதாண்டா பத்தினியும் அல்ல. நான் முற்றுந் துறந்த முனிவனும் அல்ல'' என்று. அதுதான் அவர் கண்ட இயக்கத்தின் பெண்ணியம் சார்ந்த மந்திரம். எல்லாம் பேச்சாகவே போன தந்திரம். ஆண்களின் வைப்பாட்டிமார்களை 'ஸ்டெப்னி' என்று மகுடம் சூட்டிக் களிக்கும் கலாச்சாரமாகக் கலைஞர் காலத்தினூடாகவும் அந்த மந்திரம் கட்டிக் காக்கப்படுகிறது.

இவர்களும் பெரியாரைப் போலவே இதிகாசங்களைக் கேள்விக்குள்ளாக்குவார்கள். ஆனால் காப்பிய மாந்தர்களை முன்னுதாரணமாக்குவார்கள். பார்ப்பனர்களைப் பகையாகக் கருதுவார்கள். ஏனெனில் இவர்கள் பார்ப்பன பீடத்தில் அமர அவர்கள் தடையாக இருக்கிறார்கள் என்பதால். அதாவது, பண்பாக்கத்தில் இவர்கள் பார்ப்பனர்களாகிப் போனவர்கள். பார்ப்பன ஒழுக்கங்களைப் பேணிப் புரக்கிறவர்கள். வெளிப்படையாகச் சொன்னால் பெண்களுக்கெதிராகத் தன்னளவில் ஒழுக்கம் பேணாத இந்துதர்ம ஒழுக்கவாதிகள் இவர்கள். இந்துப் பண்பு இவர்களுக்கு வழங்கிய நன்கொடை அது. இவர்கள் வீட்டுப் பெண்கள் யாவரும் பத்தினிகள்; அதுவும் பதுமஜாதிப் பத்தினிகள். மற்றவர்கள் பிறவிவேசிகள்.

இந்தவகை ஒழுக்கவாதம்தான் இன்று தமிழச் சமூகம் முழுதும் கோலாச்சிக் கொண்டிருக்கிறது. அதுவே திராவிடப் பண்பாகவும் அடையாளப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாரதியை உடைத்துப் போடும் மதிமாறனாகட்டும், அவரைப் புரக்கும் புனித பாண்டியனாகட்டும் இந்தவகை ஒழுக்கவாதக் கைகள்தாம் அவர்களையும் ஆசீர்வதிக்க நீண்டிருக்கின்றன.

அதிகாரம், ஆதிக்கம், அழித்தொழிப்பு, அராஜகம் போல ஒழுக்கவாதம் உலகம் முழுதுக்குமான ஒற்றைத்தன்மை கொண்டதல்ல என்பதை இவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. ஒழுக்கத்திற்கு அப்படியொரு தகுதியை வழங்கிவிட்டால் அதுவே அராஜகங்களின் அராஜகமாயிருக்கும் என்பதை வாழ்நாள் முழுதும் உடைத்துப் பேசியவர் பெரியார். ஒழுக்கவாதிகள் இன்று பெரியாரைப் போற்றினாலும் அவர்களின் கடைசிக் கையெறிகுண்டு பெரியாரைத் தீர்த்துக் கட்டுவதாகவே இருக்கும்.

## 3. வரலாற்றை அழிக்கும் வருண அரசியல்






ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் கிளையான பாரதியஜனதா கட்சி, மைய அரசின் ஆட்சியதிகாரத்தில் இன்னும் தன் சொந்தக் காலில் நின்று நிலைத்து விடவில்லை. இன்றுவரை இந்தியப் பெரும்பான்மை தக்கவைத்துக் கொண்டுள்ள ஆறுதலான அம்சமாக இதைத்தான் சொல்ல வேண்டும். ஆனாலும் இருபதாம் நூற்றாண்டின் கடைசி ஆண்டுகளிலேயே அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில மாநிலங்களிலும், முடிவில் கூட்டணி ஆட்சி என்னும் பெயரில் மையத்திலும் தன் ஆளுமையை ஊன்றிக் கொள்வதில் வெற்றி பெற்றிருக்கிறது. இந்திய வரலாறு நெடுகிலும் காற்றைப் போன்றதொரு இன்றியமையாமையைத் தக்கவைத்துக் கொண்டு வரும் வருண அரசியலின் நவீன அறிவியற்கால ஆதிக்க எழுச்சியாக இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த எழுச்சியை தம் சுயநலத்தாலும் அறியாமையாலும் அனுமதிப்பதற்கான விலையைத் தந்தாக வேண்டிய நெருக்கடியை இந்திய அரசியல் கட்சிகள் இன்னும்


படிப்பகம்

புரிந்துகொள்ளவோ விலகி நிற்கவோ முயலவில்லை என்பதோடு அவைகளே அதிகார அரசியலின் எச்சில் பருக்கைகளுக்கு ஆசைப்பட்டுத் துணைபோய்க் கொண்டிருக்கின்றன. எலும்புத் துண்டுகளுக்கு வாலாட்டும் பசித்த நாய்கள் திருடர்களுக்குக் கிடைத்த மந்திரக்கோல் அல்லவா. இந்தியப் பெரும்பான்மைச் சமூகம், அதிலும் குறிப்பாகத் தமிழ்ச் சமூகம் சூடும் சுரணையும் பெற்று விழித்துக் கொள்ளாவிடில் இன்னொரு ஆயிரங்காலத்துப் போராட்டத்தாலும் மீட்டுக் கொள்ள முடியாத அடையாள அழிப்புக்கு ஆளாக நேரிடும் அபாயம் எழுந்துள்ளது.

இந்திய அரசியல் வெளியில் மக்கள் நலன்களைப் புறக்கணிப்பதிலும், விதிவிலக்கற்று ஊழலில் திளைப்பதிலும், வாரிசு அரசியல் நடத்துவதிலும், சுயநலம் பேணுவதிலும், இயற்கை வளங்களைக் கொள்ளையிடுவதிலும், எதிர்காலத்தை இருட்டாக்கத் துணைபோவதிலும் எல்லாக் கட்சிகளும் ஒரே உலோகத்தால் வார்க்கப்பட்டவைதான். பாரதிய ஜனதா கட்சிக்கு இதில் கூடுதல் கௌரவம் கொடுப்பதெனில் அது நாட்டையே விற்றுவிட்டு சுதேசி அரசியல் நடத்தும் திறமை பெற்றது என்பதைச் சொல்லலாம். எல்லா அரசியல் கழிசடைத்தனங்களின் ஊடாகவும் அது தன் உயிர்த்துவமான அரசியல் திட்டத்தைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு, எவ்வளவு பெரிய இக்கட்டான சூழலிலும் அதை நிறைவேற்றுவதற்கான எல்லா வழிகளையும் வாய்ப்புகளையும் உருவாக்கிப் பயன்படுத்திக் கொள்கிறது என்பதே அதன் தனித்துவம். அதன் அழிவில்லாத திட்டமானது வேதகாலப் பண்பாட்டை முன்னிறுத்துவதன் மூலம் வருண தர்மத்தைப் பேணிக் காப்பது. இந்தியா முழுவதையும் இணைக்கும் அதன் பல்லாயிரம் கைகளும் ஒரே இலக்கிலும் திக்கிலும் செயல்படுகின்றன. அதனை வீழ்த்தும் கரங்கள் திசையெங்கும் சிதறிக் கிடக்கின்றன. ஆகவே அதன் வெற்றி இன்னும் எளிதாகிறது.

இப்போது அதன் மகத்தான திட்டங்களில் ஒன்றாய் இந்திய வரலாற்றைத் திரித்தெழுதத் தொடங்கிவிட்டது. அந்தப் படுபாதகச் செயலில் அவர்கள் செய்திருக்கும் அட்டூழியங்களைப் பட்டியலிட்டுக் காட்டும் கையேடாக, அ. மார்க்ஸ் எழுதியுள்ள 'வெறுப்பை விதைக்கும் வரலாற்றுப் பாடங்கள்' என்னும் நூல் வந்திருக்கிறது. இந்திய வரலாற்றை, இல்லாத வேதகால நாகரிகத்தில் தொடங்கி வேறெல்லா நாகரிகங்களையும் சிதைத்து, அல்லது அழித்து, ஆரிய மேன்மையை நிலைநாட்டி, இஸ்லாமியப் பகைமையை எண்ணெய் ஊற்றி வளர்த்து, திராவிட இனத்தையே காணாமல் போக்கி, காந்தியை, நேருவைக்கூட இருட்டடிப்புச் செய்து, புதிய வரலாறுகள் வெளிவந்திருக்கின்றன. அதைப் பற்றிய உண்மைகளையும் நாம் சந்திக்க இருக்கும் அபாயங்களையும் சொல்லும் இந்த நூல் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய ஒன்றாகும். சூழும் அபாயங்களைப் புரிந்துகொள்ளத் தவறினால் எவ்வித முன்னெச்சரிக்கையும் இல்லாமல் நம்மை நாமே தொலைத்துக் கொண்டுவிடுவோம்.

'காலச்சுவட்டின் ஆள்காட்டி அரசியல்' என்னும் சிறுநூல் நிறப்பிரிகை வெளியீடாக வந்துள்ளது. பலரும் கட்டுரை எழுதியுள்ளார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் மாயாவிக் கையாகவே காலச்சுவடு செயல்படுவதைக் காட்டியுள்ளார்கள். காலங்கருதி செய்யப்பட்டுள்ள முயற்சி என்றாலும் அதன் பணி முழுமையாகவும் செழுமையாகவும் செய்யப்படவில்லை. நிதானமான மொழியோடு ஆய்வு ரீதியாக இன்னும் அழுத்தமாகச் செய்திருக்க வேண்டும். நிறப்பிரிகையின் செயலூற்றம் அப்படி. உதாரணமாக, காலச்சுவடு தொடர்ந்து தினமலர் விளம்பரம் வெளியிட்டுக் கொண்டு வருகிறது. சிற்றிதழ்களில் தினமலர் விளம்பரம் தொடர்ந்து வருவது இதில் மட்டுமே. தினமலர் ஒரு கட்டத்தில் நிறப்பிரிகையாளர்களைத் தேசத் துரோகிகளாகச் சித்தரித்துக் காட்டிக் கொடுத்தது. அதன் காட்டிக்கொடுப்பு அரசியலில் அது ஒரு துளி. செய்திகளைச் சிதைப்பதிலும், உள்நோக்கம் கற்பிப்பதிலும், தமிழை - தமிழர்களை இழிவுபடுத்துவதிலும், திரிபு வேலை புரிவதிலும் அது ஒரு சரித்திரமே படைத்துக் கொண்டிருக்கிறது. இதுபற்றி எந்தவொரு சுரணையுமற்று காலச்சுவடு அதன் விளம்பரத்தை வெளியிட்டுக் கொண்டிருக்கிறது எனில் அதன் அரசியல் என்ன? இதுபோல நிறைய ஆய்வுகள் சேர்க்கப்பட வேண்டும். செய்துள்ளவரை ஒரு வரலாற்றுத் தோலுரிப்பாய் வெளிப்பட்டுள்ள கையேடு..

## புத்தக உலகம்

1. *'குடி அரசு' 1925*, பெரியாரின் எழுத்தும் பேச்சும், விலை ரூ.100. தந்தை பெரியார் திராவிடர் கழகம், 29, இதழியலாளர் குடியிருப்பு, சென்னை-41.
2. பெரியார் கண்ட சுயமரியாதை இயக்கம்: செயல்பாடுகளும் சாதனைகளும். எஸ்.வி.ராஜதுரை - வ. கீதா, ரூ.30, தந்தை பெரியார் திராவிடர் கழகம்.
3. தனியார்துறையில் இட ஒதுக்கீடு ஏன்? - விடுதலை இராசேந்திரன், ரூ.15, தந்தை பெரியார் திராவிடர் கழக வெளியீடு.
4. பெரியாரைத் திரிக்கும் புரட்டுகளுக்கு மறுப்பு - வ.மா.ஓ., புனித பாண்டியன், ரூ.30, தந்தை பெரியார் திராவிடர் கழக வெளியீடு.
5. பெரியார்: வரலாற்றுக் கையேடு, தஞ்சை மருதவாணன், ரூ.15, தந்தை பெரியார் திராவிடர் கழக வெளியீடு.
6. 1912-1973 திராவிடர் இயக்க வரலாற்றுச் சுருக்கம், தஞ்சை மருதவாணன், ரூ.25, தந்தை பெரியார் திராவிடர் கழக வெளியீடு.
7. மதுரை வீரன் கொலையும் திருமலை நாயக்கர் மகாலும், எழில் இளங்கோவன்.ரூ.20, ஆதித் தமிழர் பேரவை வெளியீடு, கோவை-641 041.
8. காட்டாளன், என்.டி. ராஜ்குமார், ரூ.25, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், 1, திருநாவுக்கரசு தெரு, திருவண்ணாமலை-606 601.
9. நிலாப் போர், இலக்குமிகுமாரன் ஞானதிரவியம், ரூ.50, அனன்யா, 8/87, பி.ஏ.ஒய்.நகர், புதுக் கோட்டை சாலை, தஞ்சாவூர்-613 005.
10. இனிது, பொன்.குமார், ரூ.20, கனிமொழி, 21/15, புது திருச்சிக் கிளை, வடக்குத் தெரு, லைன்மேடு, சேலம்-636 006.
11. மாதேஸ்வதந்த்ர தேசம், ம.ந. ராமசாமி, ரூ.60, நர்மதா பதிப்பகம், 10, நானா தெரு, சென்னை- 17.
12. அறுபத்தொன்பது விழுக்காடு, ம.ந. ராமசாமி, ரூ.65, நர்மதா பதிப்பகம், சென்னை-600 017.
13. கற்பூரங்களுடன் ஒரு கரித்துண்டு, ப. வெங்கட் ராமன், ரூ.30, வி.பி.எல். பதிப்பகம், 25/அ, வைத்தியர் தெரு, காஞ்சிபுரம்-2.
14. காலச்சுவட்டின் ஆள்காட்டி அரசியல், நிறப் பிரிகை, ரூ.15, நீலகண்டன், 45-A, இஸ்மாயில் மைதானம், லாயிட்ஸ் சாலை, சென்னை-600 005.
15. பாடநூல்களில் பாசிசம், வெறுப்பை விதைக்கும் வரலாற்றுப் பாடங்கள், அ. மார்க்ஸ், ரூ.20, சுயமரியாதை இயக்கம், நீலகண்டன், லாயிட்ஸ் சாலை, சென்னை-600 005.
16. எனது அறை, கே.புஷ்பராஜ் கவிதைகள், ரூ.30, வானவில் வெளியீட்டகம், 9-164, பரண்யரத்தள விளை, களியக்காவிளை-629 153.
16. விழிகளில் ஹைக்கூ, கவிஞர் இரா. இரவி, ரூ.25, மனோ புக் சென்டர், 155, புதுமண்டபம், மதுரை-1
17. ஙப்போல் வளை, இரா. காமராசு, ரூ.40, காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, ட்ரஸ்ட்புரம், சென்னை-600 024.
18. சாம்பலாடை, கவியோவியத் தமிழன், ரூ.20, அய்யலூர்-624 801.



படிப்பகம்

www.padippakam.com



# கறுப்பு இஸ்லாம்

ஹெச்.ஜி. ரசூல்

இஸ்லாமிய கோட்பாட்டு தனித்துவங்களில் ஒன்று அரேபியச் சமூகங்களில் நிலைபெற்றிருந்த அடிமைமுறையினைத் தகர்க்க முயன்றதும் ஒடுக்கப்பட்டிருந்த கறுப்பின மக்களின் விடுதலையை முன்நிறுத்தியதும் ஆகும். நன்மைவழி தீமை வழி இவ்விரண்டில் மலைப்பாதையைப்போல் கரடுமுரடும் மேடும் பள்ளமும் நிரம்பிய பாதை நன்மைவழிப் பாதை. (90:10:17). இது ஒருவனை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பது அல்லது பசித்துவாடும் ஏழைக்கு உணவளிப்பது என திருக்குர் ஆனின் வசனம் சுட்டிக் காட்டுகிறது.

இஸ்லாமியம் நடைமுறைப்படுத்தப்பட்ட துவக்க காலங்களில், வெவ்வேறு இனக்குழு மக்களிடையே நடைபெற்ற போரில் வெற்றி பெற்ற இனக்குழு போர்க் கைதிகளை அடிமைகளாகப் பிடித்து வருவதுண்டு. இதர போரில் வெற்றி பெற்ற பொருட்களை - கால்நடைகளைப் பங்கிடுவது போல இந்த அடிமைகளைப் பங்கிட்டுக் கொள்வதும் உண்டு.

இங்கு இத்தகைய அடிமைகளை விடுதலை செய்வதற்குச் சில நிபந்தனைகள் முன்வைக்கப்படுகின்றன. யூத - கிறிஸ்தவ குழுக்களிடையே இந்த அடிமைகளை விடுவிப்பதாக இருந்தாலும் அவ்வாறே.

ஒன்று, அந்த எஜமானனுக்கு, அடிமையை விடுதலை செய்ய விரும்புவோர் அதற்குப் பரிகாரமாக குறிப்பிட்ட அளவு திர்கம்களையோ, தினார்களையோ கொடுத்து அவர்களிடமிருந்து விடுதலை வாங்கிக் கொடுக்கலாம். ஒரு எஜமான் தன் அடிமையிடம் நீ இவ்வளவு பணம் அளித்துவிட்டு விடுதலை பெற்றுக் கொள் என அனுமதியளித்துவிட்டால் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட அடிமை என்று பொருள்படும் முகாதப் என்று அந்த அடிமை அழைக்கப்படுவான். பணம் முழுவதும் வழங்கப்பட்ட பின்னரே முழு விடுதலை சாத்தியமாகும். சில சமயங்களில் போர்களில் பிடித்துவந்த கைதிகளான அடிமைகளை விடுவிப்பதற்கு அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாத இஸ்லாமியர்களுக்கு கல்வி சொல்லிக்கொடுக்க வேண்டும். இப்படி பலவிதமாய் இதன் நடைமுறைகள் உருவாக்கப்பட்டன. அடிமைப்பெண்கள் மீதான வரம்பற்ற பாலாதிக்கமும் அக்காலத்தில் நிலைபெற்றிருந்தது. ''உம்முல்வலத்'' எனப்படும் சொல்லாடல் குழந்தையின் தாய் என்பதன் பொருளாகும். ஒரு எஜமானன் தனது அடிமைப்பெண் ஒருத்தியோடு பாலுறவு வைத்துக் கொண்டு அதன் விளைவாக குழந்தை பெற்றுவிட்டால் அத்தகைய அடிமைப்பெண்ணை எந்தவிதத்திலும் விடுதலை செய்ய வழியில்லை. எஜமானின் மரணத்திற்குப் பிறகுதான் அந்த அடிமைப்பெண்ணுக்கு விடுதலை கிடைக்கும்.

இத்தகையதான அடிமைச் சமூக நிலைபாடுகளிலிருந்து ஒரு சமத்துவம் நோக்கிய சமூகத்தை உருவாக்க முற்பட்டதின் விளைவே அபிசீனியாவின் கறுப்பு அடிமை பிலாலை விலைக்கு வாங்கி அவருக்கு விடுதலை வாங்கிக் கொடுத்து, தொழுகைக்கான அதானை ஒலிக்க பிலால் அவர்களுக்கு உரிமை கொடுத்து, கறுப்பின விடுதலையை இஸ்லாத்தின் மூலமாக சாத்தியமாக்கிய நபிகள் நாயகத்தின் நடைமுறைகள்.

இஸ்லாத்தின் கடமையாக்கப்பட்ட வழிபாட்டுச் செயல்களுக்குள் உட்பொதிந்து கிடந்த சமத்துவக்கூறுகள் நிற, இன, குல ஆதிக்கத்திற்கு எதிராகச் செயல்பட்டதின் விளைவாகவே ஒடுக்குமுறைக்கு ஆட்பட்டிருந்த மக்கட்பகுதிகள் இஸ்லாத்தின் பால் நகர்ந்து வரத் துவங்கின எனலாம். தொழுகை வணக்க வழிபாடு என்பது பள்ளிவாசலுக்குள் உயர்ந்தவன்/தாழ்ந்தவன், வசதியுள்ளவன்/வறியன் என்பதான பேதங்களைக் கடந்து செயல்பட்டது. இது ஒரு குறிப்பிட்ட பிரதேசத் தன்மை கொண்டும் அதேசமயம் பரந்த பண்பாட்டு மதிப்பீடுகளைக் கொண்டும் இயங்கின. ஹஜ் என்னும் இறுதிக் கடமையை நிறைவேற்றும் செயல் என்பது மக்கமாநகரின் கஃபத்துல்லாவில் நடைபெறும் உலக முஸ்லிம்களின் மாநாடாகவே அர்த்தம் பெறுகிறது. மொழி எல்லைகள், தேசம் என்பதன் புவியியல் பரப்பு எல்லைகள், கறுப்பு, வெள்ளை என்பதான நிற எல்லைகள் கடந்து முஸ்லிம்கள் அனைவரும் ஒரே குடும்பமாகத் திரளும் நடைமுறைகளை - சமத்துவத்தைப் பரிந்துரை செய்கிறது. ஹஜ் கிரியையை நிறைவேற்ற இஹ்ராம் என்னும் இருதுண்டு வெள்ளாடைகளே அனைவரும் அணிவதற்கான ஆடை. இத்தகையதான பின்புலத்தையும் பண்பாட்டு மதிப்பீடுகளையும் இஸ்லாம் தாராளமாகத் தன்னகத்தே கொண்டிருப்பதன் விளைவுதான் ஐரோப்பிய நாடுகளில் வெள்ளைஇனம் மேலானது கறுப்பினம் கீழானது என வகுக்கப்பட்ட ஆதிக்க மதிப்பீடுகளை சிதைத்தலை நோக்கிய இஸ்லாத்தின் பயணமாகிறது.

நபிகள் நாயகத்திற்குப் பிறகான கலீபாக்களின் ஆட்சி ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் நடைபெற்றன. இமாம் அபூபக்கர், உமர், உதுமான், அலி ஆகிய நான்கு கலீபாக்கள் எனும் பேரரசர்களின் ஆட்சிக்குப் பிறகு உமைய்யாக்கள், அபாசித்துகளின் ஒடுக்குமுறையும் ஆதிக்க மேலாண்மனோபாவமும் உலகியல் வெறியும் கொண்ட அதிகார ஆட்சி உருவாகியது. இச்சூழலில் இஸ்லாமியத்தின் மறு உருவாக்கம் மத்ஹபுகள் எனப்படும் மார்க்க சட்டப்பள்ளிகள் வழியாக முன்னிறுத்தப்பட்டது. இமாம்கள் அபுஹனீபா, ஷாபிஈ, மாலிகி, ஹன்பலி என மார்க்க அறிஞர்களின் கருத்தியல் சிந்தனைகள், மார்க்க நடைமுறைத் தொகுப்புகள் உருவாக்கப்பட்டன.

இமாம் அபுஹனீபாவின் காலம் கி.பி. 669 முதல் 769 வரையிலானதாகும். உமையாக்களின் ஆட்சிக் காலத்தில் தோன்றி அந்தக் கொடூர ஆட்சிக்கு எதிராக இயங்கியவர். ஈரானை பிறப்பிடமாகக் கொண்டாலும் அபாசித்துகளின்ஆட்சியில் பாக்தாதில் பிரதம நீதிபதியாக பணியாற்ற அழைக்கப் பட்டபோது மறுத்துவிட்டார். இவரது ஆட்சி எதிர்ப்பு நிலைபாடு காரணமாக சிறையில் அடைக்கப்பட்டு அங்கே மரணமடைந்தார். பிக்ஹு சட்டங்கள் குறித்தும், திருக்குர்ஆன், ஹதீதுகளில் விடை கிடைக்காத பிரச்சனைகளுக்கு மார்க்க அறிஞர்களின் ஒருமித்த கருத்துரு அடிப்படையில் செயல்பட வழிகாட்டும் கியாஸ், இஜ்மா, இஜ்திகாத் குறித்தும் புது அணுகுமுறையை ஜனநாயக வடிவில் உருவாக்கினார். இஸ்லாத்தில் இவர்தம் வழிகாட்டுதல்களை பின்பற்றும் மக்கள் ஹனபிகள் என்று அடையாளம் காட்டப்பட்டனர். மத்ஹபுகளைத் தோற்றுவித்த மார்க்க அறிஞர் தோன்றி, வாழ்ந்து, பிரச்சாரம் செய்த இடச்சார்பினை இந்த மத்ஹபுகளின் புவியியல் மற்றும் பிரதேச தன்மைகள் குறித்த தோற்றப் பாடுகளாகக் கருதலாம். உலகிலேயே மிக அதிகமான இஸ்லாமியர்கள் ஏறத்தாழ 34 கோடி பேர் ஹனபி

படிப்பகம்

www.padippakam.com


மத்ஹபினையே பின்பற்றுபவர்களாக உள்ளனர். பாகிஸ்தான், இந்தியா, வங்கதேசம், ஆப்கன், மத்திய ஆசியா, மற்றும்துருக்கி, சோவியத், சீனா உள்ளிட்ட நாடுகளில் இவர்கள் வாழ்கிறார்கள்.

இமாம் மாலிகி (கி.பி.711-791) மதினாவைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் இவர்தம் மார்க்கச்சட்டப் பள்ளியைப் பின்பற்றுபவர்கள் அதிகமும் ஆப்ரிக்க நாடுகளைச் சார்ந்த கறுப்பின மக்களே ஆவர். நபிகள் நாயகத்தின் சொல்லும் செயலும் சார்ந்த வாய்மொழி மரபுகளான 2000க்கும் மேற்பட்ட ஹதீஸ்களைத் தொகுத்து அல்முவத்தா என்றொரு பெருநூல் தொகுப்பை வழங்கியுள்ளார். ஐந்துகோடிக்கு மேற்பட்ட மக்கள் இமாம்மாலிகியை பின்பற்றியவர்களாக இஸ்லாமிய நடைமுறைகளை முழுமைப்படுத்துகிறார்கள். துனீஷியா, சூடான், மொரோக்கோ, வடஆப்பிரிக்கா, அல்ஜீரியா, குவைத், பஹரின், ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளில் இமாம் மாலிகியின் நடைமுறையைப் பின்பற்றுகிறார்கள்.

இமாம் ஷாபிஇ (கி.பி.761-820) அரபு நாட்டில் தோன்றிய மார்க்க சிந்தனையாளர். இமாம்மாலிகியின் மாணவர். ஏமன் நாட்டை மையப்படுத்தி வாழ்ந்தாலும் தனது ஆயுளின் இறுதிப்பகுதியில் எகிப்தில் வாழ்ந்து முடித்தார். தனக்கு முந்தைய இமாம்களின் வழிமுறைகளை, சிந்தனைத் தொகுப்புகளை உள்வாங்கிக் கொண்டு ஷாபிஇ மார்க்கப் பள்ளி சிந்தனைமுறைகளை தொகுத்தளித்தார். எகிப்து, சிரியா, ஜோர்டான், பாலஸ்தீனம், ஈராக், லெபனான், ஏமன், ஈரான், இந்தியா, இந்தோனேஷியா, மலாயா, புருணை, சிங்கப்பூர், தாய்லாந்து, மாலத்தீவு உள்ளிட்ட நாடுகளைச் சார்ந்த பத்துகோடிக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் ஷாபிஇ மார்க்கப் பள்ளியின் வழிகாட்டுதல்களை மேற்கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

இமாம் ஹன்பலி (கி.பி.780-850) தனது மார்க்கப் பள்ளியை நிறுவியபோது, நபிகள் நாயகம் சொல்லும் செயலுமான ஹதீஸ் எனும் 50,000 வாய்மொழி மரபுகளை தொகுத்தளித்தார். இது முஸ்னதுல் இமம் ஹன்பல் என்று அழைக்கப்படுகிறது. இமாம் ஷாபிஇயின் மாணவராக இருந்த இமாம்ஹன்பலியின் மரபுகளை சவுதி அரேபியா, சிரியா, உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் முப்பது லட்சம் மக்கள் பின்பற்றுகிறார்கள்.

இஸ்லாமிய ஆன்மிகமரபின் தத்துவமையமான இறைஒன்று என்கிற சித்தாந்தம் அடிப்படைத்தன்மையில் எந்தவித மாற்றமுமில்லாமல் இந்த மார்க்கப்பள்ளிகளின் ஏகத்துவ கொள்கையாக உருப்பெற்றிருந்தன. திருக்குர்ஆன் இந்த மார்க்கப்பள்ளிகளின் வழிகாட்டும் மறையாக இடம் பெற்றிருக்கிறது. ஆனால் நடைமுறையில் மார்க்கம் உள்ளிட்ட விஷயங்களில் வெவ்வேறு மரபுகளை பின்பற்றினர். இதனை தக்லீது எனக் குறிப்பிடலாம். இது நபிகள் நாயகம் பின்பற்றியதான நடைமுறைகளென அவரவர் கள ஆய்வின் மூலமாகப் பெறப்பட்ட ஹதீஸ்களின் அனுபவங்களிலிருந்து தருவித்துக் கொண்டனர். இதுபோன்றே திருக்குர்ஆனின் வாசனங்களைப் பொருள்கொள்வதில் தங்களது தனித்த அணுகுமுறை சார்ந்தும் விளக்கவுரை வழங்கினர்.

இந்த வகையில் நான்கு இமாம்களின் மார்க்கப்பணியும், சிந்தனைத் தேடலும், பிரதேசம் சார்ந்த தனித்தன்மைகளை உள்ளடக்கிய சிக்கலான பிரச்சனைகள் குறித்த மார்க்கத்தீர்ப்பும் இஸ்லாத்தின் ஒற்றையாதிக்க கலாச்சார மையத்தை உடைத்து பன்மை அடையாளத் தேடல்களை உருவாக்கியுள்ளன என அனுமானிக்கலாம்.

இஸ்லாமியத்தின் மற்றொரு வகையான எழுச்சி, தரீகாக்கள் மூலமாக 11 ஆம் நூற்றாண்டிலிருந்து துவக்கம் கொள்கிறது. ஈரானில் தோன்றி இஸ்லாத்தின் புத்தெழுச்சிக்குப் பங்காற்றிய அப்துல்காதிர்ஜீலானியை பின்தொடரும் மார்க்க வழிமுறைப் பிரிவு காதிரிய்யா தரீகா என்றழைக்கப்படுகிறது. தமிழகத்தில் இம்முறைமையை முன்னெடுத்துச் சென்றவர்களாக நாகூரில் அடங்கப் பெற்றிருக்கிற ஷாகுல்ஹமீது, ஆண்டகை, தக்கலை ஷெய்கு பீர்முகம்மது ஒலியுல்லா உள்ளிட்ட மார்க்க அறிஞர்களை, சூபிகவிஞர்களைக் குறிப்பிடலாம்.

கி.பி. *1197* களை ஒட்டி ஆப்பிரிக்க நாடுகளில் உருவான ஒன்று ஷாதிலிய்யா தரீகாவாகும். அப்துல் அல்ஹசன் முன்வைத்த மார்க்க சட்டவழிப்பிரிவு, வடஆப்பிரிக்கா, மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்கா, சூடான், துனீஷியா, துருக்கி, ரோமேனியா உள்ளிட்ட நாடுகளை மையப்படுத்தி இயங்கியது. இதுபோன்றே *1273* களில் ஈரான், துருக்கி உள்ளிட்ட நாடுகளில் உருவான மௌலானா ஜலாலுத்தீன் ரூமியின் மௌலவிதரீகா, *1388* களில் இந்தியா, சீனா, உள்ளிட்ட நாடுகளில் பரவிய காஜா பஹாத்தின் முகமது அவர்களின் வழிப்பாட்டையாக விளங்கிய நக்ஸபந்தியாதரீகா உள்ளிட்டவை இஸ்லாமியத்தின் அகமியப் பண்புகளின் செயல்முறையாக்கத்திற்கு விரிவான அளவில் அடிப்படையாக அமைந்தன.

இந்த நிலையில் துவக்க காலம் தொட்டு கறுப்பின மக்களின் வாழ்வின் ஆதாரமாய் மாறிய இஸ்லாத்தின் பரிமாணம், மத்ஹபுகள் எனும் மார்க்கப்பள்ளிகள் மூலமாகவும், தரீகாக்கள் எனும் ஞானவழிபாட்டைகள் மூலமாகவும், தொடர்ந்த செயல்பாட்டை, விடுதலைக்கான பண்பாட்டு நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளன. இதில் இமாம் மாலிகியின் மார்க்கப்பள்ளி முழுவதும் கறுப்பின மக்களின் உணர்வு நிலைகளில் உள்ளாகவே அடையாளம் காட்டியுள்ளன. இதுபோன்றே ஷாதிலிய்யாத தரீகாவின் சிந்தனை எல்லைகளும் ஆப்பிரிக்க நாடுகளின் பரப்பினை மையங்கொண்டே இயங்கியுள்ளதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆசிய, ஆப்பிரிக்க கண்டங்களில் இஸ்லாம் தன்னை வலுவாக நிலைநிறுத்திக் கொண்டதுபோல் (விரிவான அளவில்) ஐரோப்பிய நாடுகளில் இஸ்லாம் தன்னை முழுமைப்படுத்திட இயலவில்லை. ஆசிய, ஆப்பிரிக்க, அரபு சமூதாயங்களின் சமயமரபுகள் பழங்குடி மக்கள்சார் சமய மரபுகளாகவும், செமிட்டிக் அல்லாத மதங்களின் பண்பாட்டு அசைவுகளையும் கொண்டிருந்த நிலையில் இஸ்லாத்தின் செல்வாக்கு விரிவடைந்தது. ஆனால் ஐரோப்பிய நிலப்பரப்பில் யூத, கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கின் காரணமாக சில எதிர்கொள்ளல்களையும் சவால்களையும் சந்திக்க வேண்டிய நிலை இருந்தது.

உலகின் ஏழத்தாழ 55 நாடுகளில் எல்லா மார்க்கப்பள்ளி களையும், தரீகாக்களையும் உள்ளடக்கிய முஸ்லிம்கள் 100 கோடிக்கு மேல் வாழ்கிறார்கள். ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தமட்டில் பிரான்ஸில் 60 லட்சம் பேர் அதிகபட்சமாக வாழ்கிறார்கள். அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகையில் ஐந்து சதவிகிதத்தினர் முஸ்லிம்களாக உள்ளனர். ஸ்பெயினில் கடந்த 800 ஆண்டுகாலமாக முஸ்லிம்களின் ஆட்சி நடைபெற்றிருந்ததை இங்கு நினைவு கூரவேண்டும்.

அமெரிக்காவில் இஸ்லாம் பரவிய முறைமையைப் பரிசீலித்துப் பார்த்தால் வெள்ளைநிறவெறிக்கும், அதனை சமயரீதியாக ஏற்றுக்கொள்கிற கிறிஸ்தவர்களின் நிலைப்பாட்டிற்கும் மாற்றுக்குரலாக ஒடுக்கப்பட்டு அடிமைப்பட்டுக் கிடக்கிற கறுப்பின மக்களின் மதமாக இஸ்லாம் உருவாகி வந்துள்ளது. கறுப்பின மக்கள் பகுதியில் பாதிக்கபட்ட மக்களின் இயக்கமாய் கிறிஸ்தவம் கூட தன்னை அடையாளம் காண முயன்றது. ஐரோப்பிய வெள்ளை இனத்தவரின் நிறவெறி ஒடுக்கு முறைக்கும் காலனித்துவ ஆட்சிக்கும் எதிராக கறுப்பின மக்கள் சார்ந்த இன்னொருவகை கிறிஸ்தவம் முன்வைக்கப்பட்டது. கறுப்பின கலை இலக்கியப் படைப்பாளிகளின் குரலாக லாங்ஸ்டன் ஹியூக்ஸ் 1920 களை ஒட்டி எழுதிய கவிதைகளில் இது எதிரொலித்தது:

> இயேசுவானவர் ஒருகறுப்பராக திரும்பிவருவாரானால்
> அது நல்லதல்ல.


படிப்பகம்

www.padippakam.com



அவர் சென்று பிரார்த்தனை செய்ய முடியாத தேவாலயங்கள் இங்கு ஏராளமாக உள்ளன. எவ்வளவு புனிதப்படுத்தப்பட்டாலும் நீக்ரோக்களுக்கு அங்கே வாயில்கள் மறுக்கப்படும். ஆனால் இதை மட்டும் உறுதியாகச் சொல்லலாம். இயேசுவே நீர் உயிர்ப்பித்து வந்தால் நிச்சயமாக மீண்டும் சிலுவையில் அறையப்படுவீர்.

அமெரிக்காவில் வாழும் கறுப்பின மக்கள் ஆப்பிரிக்காவிலிருந்து கடத்திக் கொண்டுவரப்பட்டு இங்கு குடியேற்றப்பட்ட அடிமைகள். ஆப்பிரிக்க அமெரிக்கர்களான இவர்களை ஐரோப்பிய வெள்ளை நிறவெறி சமூகம் நீக்ரோக்கள் என்று அழைக்கிறது. கறுப்பு இழிவானது, வெள்ளை உயர்ந்தது என கட்டமைக்கப்பட்ட கருத்தியலின் விளைவாகவே வாழ்வின் எதிர்மறையான விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு கறுப்பு (black) என்ற சொல்லாடலை பயன்படுத்துவதைப் பார்க்கலாம். ஒருவரை மிரட்டி ஏமாற்றுவதற்கு Black mail, தந்திர கலைகளுக்கு Black magic என்பதாக இவை சொல்லப்பட்டு வந்துள்ளன.

காஸியஸ்கிளே என்பது போலத்தான் கறுப்பின மக்கள் பெயரிட்டுக் கொள்ள வேண்டும். கிளே அழுக்கு மண்ணைக் குறிக்கும் சொல்லாடலாகும். இதனை தமிழ்ச் சூழலில் ஒடுக்கப்பட்ட மக்கள் மண்ணாங்கட்டி என பெயரிடுவதற்கு ஒப்பாகக் கொள்ளலாம். வெள்ளைநிறவெறி ஆதிக்க கலாச்சார இருப்பின் அறிகுறியாகக்கூட இப்பெயரிடுதலை கருதலாம். இதுபோன்றே 'வெள்ளை மாளிகை' என்ற பெயரிடுதல் கூட அமெரிக்க அரசாங்கமும் அதிபரும், கறுப்பர்களுக்காக இல்லை, வெள்ளையர்களுக்காக மட்டுமே என்பதான அர்த்தமாகவே வெளிப்படுகிறது. எனவேதான் உணவகங்கள் உள்ளிட்ட பொதுவிடங்களில் தொங்கும் அறிவிப்பு பலகைகளில் கறுப்பர்களுக்கும் நாய்களுக்கும் அனுமதி இல்லை என்கிற வாசகம் இடம் பெற்றிருப்பதைப் பார்க்கலாம். 1781 களில் மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து பெயர்த்து கொண்டுவரப்பட்ட ஆண் பெண் அடிமைகளை வைத்தே அடிமைகளை உற்பத்தி செய்யும் பண்ணைகள் உருவாக்கப்பட்டதான வரலாறு அமெரிக்காவிற்குச் சொந்தமானது. இத்தகையதான அடிமை முறையை எதிர்த்து மார்ட்டின் லூதர்கிங் போராடிய போதும் நவீன வாழ்வியல் காலத்திலும் இத்தகையதான நிறவெறிக் கொடுமைக்கு முற்றுப்புள்ளியிட முடியவில்லை.

1. *அவன் உன்னை வலதுபுறத்தில் சவுக்கால் அடித்தால் உனது இடதுபுறத்தையும் காட்டிக்கொடு. இவற்றை இங்கே தாங்கிக் கொள். உன் தேவன் உன்னைப் பரலோகத்தில் வைத்துப் பரிசளிப்பான்.*

என்றெல்லாம் போதித்து நம்மை மயக்கத்தில் ஆழ்த்தியது.

2. *அமெரிக்காவின் ஒரு சிறையில் நீ. அமெரிக்க நாடு என்ற அகண்ட சிறையில் ஆப்பிரிக்காவின் ஆயிரமாயிரம் கறுப்புக் கைதிகள். இதுதான் நீ சார்ந்த இனத்தின் நிலை.*

1930களை ஒட்டி வெள்ளை இன நிறவெறிக்கும், அதற்குத் தத்துவ அங்கீகாரம் வழங்கிய கிறிஸ்தவத்தை விட்டும் வெளியேறி இஸ்லாமியனாக மாறிய எலிஜாபூல் என்ற எலிஜா முகமதுவின் மேற்குறிப்பிட்ட வாசகங்கள் மிக முக்கிய மானவை. இவர் கறுப்பர்களின் விடுதலைக்காக தோற்றுவித்த இயக்கம்தான் இஸ்லாத்தின் தாயகம் (Nation of Islam). இவ்வியக்கத்தின் செயல்பாட்டாலும் செல்வாக்கினாலும் இஸ்லாத்தின்பால் கறுப்பின மக்களின், சிந்தனையாளர்களின் கவனம் ஈர்க்கப்பட்டது. எலிஜா முகமதுவின் காலம் 1879-1975 க்கு இடைப்பட்டதாகும்.

ஆப்பிரிக்க இனமக்களின் விடுதலைக்காகவும் உரிமைகளுக் காகவும் போராடிய எலிஜாமுகமது வியட்நாம் மீதான அமெரிக்காவின் ஆக்ரமிப்பு யுத்தத்தை எதிர்த்து பிரச்சாரம் செய்ததால் சிறையிலும் அடைக்கப்பட்டார். இவர் தனது வழிகாட்டியாக ஷியாபிரிவைச் சேர்ந்த பர்துமுஹம்மதுவை ஏற்றுக்கொண்டார்.

இதுபோன்றே 1935 இல் நியூயார்க்கில் பிறந்த டிவைட்யார்க் என்னும் கறுப்பினப் போராளி 1965 களில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு தனது பெயரை ஈசாஅப்துல்லா என மாற்றிக் கொண்டார். அன்சாரு அல்லாஹ் கம்யூனிட்டி என்ற இஸ்லாமிய பிரிவை உருவாக்கினார். தனது பெயரை இமாம் ஈசாஅப்துல்லா முஹம்மது அல்மஹதி என முழுமைப்படுத்திக் கொண்ட பிறகு இஸ்லாமிய கடமை மற்றும் நடைமுறை சார்ந்த பின்பற்றுதல்களில் ஒரு நெகிழ்ச்சித் தன்மையை உருவாக்கினார்.

கறுப்பினமக்கள் பகுதியில் இயக்கம் நடத்திய எலிஜாமுகமதுவின் சிந்தனை, பேச்சு, பத்திரிகை செயல்பாட்டால் ஈர்க்கப்பட்டார். மால்கம்லிட்டில் என்ற மால்கம் அலெக்ஸ்ஹேலி படைப்பாளி மால்கம்எக்ஸின் வாழ்வை நவீன பிரதியாய் "Roots" என்ற நூலாக எழுதியுள்ளார். அமெரிக்கக் கறுப்பர்களின் புராதன மார்க்கமாக இஸ்லாம் உருப்பெற்றுள்ளதை அந்தநூல் வெளிப்படுத்தியது. இதுவே பின் தொலைக்காட்சித் தொடராகவும், திரைப்படமாகவும் வெளிவந்துள்ளது. ஆப்பிரிக்காவிலிருந்து கடத்தி வரப்பட்ட, பூர்வீகம் பற்றி அறியாத கறுப்பர்கள் என்பதை குறிக்கவே இந்த எக்ஸ் என்ற அடையாளம் பயன்படுத்தப் பட்டது. கறுப்பின மக்களின் கலாச்சாரசூழல், போதைப்பொருள் உற்பத்தி, குடிப்பழக்கம், வரம்பற்ற பாலியல் உறவு என்பதான நிலைகளிலிருந்து விடுபட இஸ்லாம் ஒரு மாற்றுக் கலாச்சார உருவாக்கத்திற்காக பிரச்சாரம் செய்யப்பட்டது. முகம்மது பேசுகின்றார் (Muhammed Speaks) பத்திரிகையின் தொடர்பால் மால்கம் எக்ஸ் கறுப்பின மக்களின் முக்கியத் தலைவராக உருவாகத் துவங்கினார்.

இனவெறி - நிற வெறியின் பிடியிலிருந்து விடுதலைபெற ஒரே வாசல் இஸ்லாம்தான் எனப் பிரச்சாரம் செய்த மால்கம் எக்ஸ், 1962களில் உலகக் குத்துச்சண்டை வீரர் கேசியஸ் மார்சிலஸ்கிளேயுடன்தொடர்பு ஏற்படுகிறது. உலகக்கோப்பையை குத்துச்சண்டைப் போட்டியில் வென்றபோதிலும் கூட உணவு விடுதிகளிலும், தங்கும் விடுதிகளிலம் கறுப்பன் என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப்பட்டது. குத்துச்சண்டை களத்தைவிட்டு வெளியே வந்துவிட்டால் நீ இன்னொரு கறுப்பன்தான் என அவமதிக்கப்பட்டார். இதன் விளைவாகவே கேசியஸ்கிளே முஹமத் அலியாக இஸ்லாத்திற்குள் நுழைகிறார். மால்கம் எக்ஸின் சிந்தனையால் ஈர்க்கப்படுகிறார்.

"அத்தனை நிறத்தையும் கொண்ட மனிதர்கள் இங்கே உண்டு. அத்தனைபேரும் ஒன்றுபோலவே ஆடை அணிந்திருந்தோம். ஒன்றுபோலவே தொழுதோம். ஒற்றுமை, சகோதரத்துவம் அலைபாயும் மனித சங்கமத்தை நான் இங்கே கண்டேன்.

இங்கும் வெள்ளையர்கள் உண்டு. ஆனால் இவர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து வந்த கறுப்பர்களிடமும் சூடானிலிருந்து வந்த கறுப்பர்களிடமும், ஹானாவிலிருந்த கறுப்பர்களிடமும் ஒரேவிதமாகவே நடந்துகொண்டார்கள். நிறம் இங்கே எந்தவிதத்திலும் தலையிடுவதில்லை."

மக்காவில் கஃபாவிற்குச் சென்று ஹஜ் இறுதிக் கடமையை நிறைவேற்றி வந்தபோது மால்கம்எக்ஸ் - மாலிக் அல்ஷாபாஸ் என்ற பெயர் தாங்கி மேற்கண்ட கருத்துகளை முன்வைக்கிறார். வெள்ளையர்கள் அனைவரும் எதிரிகள் என்ற நிலைப் பாட்டிலிருந்து சற்று வித்தியாசப்பட்டு, நிறவெறி கொண்டு அலையும் வெள்ளையர்களையே தனது எதிரிகளாக பிரகடனம் செய்தார். அமெரிக்க வெள்ளையர் குறித்த அனுபவத்திலிருந்து, அராபிய சூழலில் கூடும் ஹஜ் கிரியைகளில் நிறபேதமற்று வெள்ளைநிற முஸ்லிம்களிடமிருந்து பெற்ற அனுபவ வேறுபாட்டால் தனது வெள்ளையர் குறித்த பார்வையில்கூட மறுசிந்தனையை உருவாக்கிக் கொள்கிறார். இப்படியாகத்தான் வரலாற்றின் தடங்களில் இஸ்லாம் கறுப்பின விடுதலையோடு ஒரு நிறவெறி ஆதிக்க எதிர்ப்புமார்க்கமாகத் தன்னை அடையாளம் காட்டிக் கொள்கிறது.

எலிஜாமுகம்மது, ஈசாஅப்துல்லா உள்ளிட்ட கறுப்பின இஸ்லாமியத் தலைவர்கள், இறுதிக்காலத்தில் தங்களை நபியாக



படிப்பகம்

www.padippakam.com


பிரகடனப்படுத்திக் கொண்டார்கள். இஸ்லாமிய ஆன்மீகத் தளத்தில் முகம்மது ரசூல் அவர்களே இறுதிநபி என்பதாக முடிவு செய்யப்பட்ட கருத்து நிலைபெற்றுவிட்டதால் பிற இஸ்லாமியர்கள் இக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் உலக வரலாற்றில் தொடர்ந்து தங்களை நபியாக அறிவிக்கும் குரல்கள் எழுப்பப்பட்டுள்ளன.

கி.பி.1839 இல் காதியானில் பிறந்த மிர்சாகுலாம் அகமது 1880 களில் தன்னை நபியாக அறிவித்தார். திருக்குர்ஆன் முன்வைக்கும் காத்தமுன்நபி என்ற சொல்லாடல் அண்ணல் முகம்மது நபியை இறுதிநபியென்று சொல்லவில்லை. முத்திரைநபி என்றே கூறுகிறது என விளக்கமளித்தார். தன்னை மஹதி என்று சொல்லி ஈசாநபி, முஹம்மது நபி, கிருஷ்ணபரமாத்மா ஆகியோர்களின் ஒட்டுமொத்த அவதாரமென அறிவித்தார். இந்நிலையில் மிர்சாகுலாம் அகமதுவின் அடிநாதமான சிந்தனை கிறிஸ்தவர் (ஈசாநபி) இஸ்லாமியர் (முஹம்மதுநபி) இந்துக்கள் (கிருஷ்ண பரமாத்மா) ஒன்றிணைந்த சித்தாந்தமாக இந்தியச் சூழலில் வெளிப்பட்டுள்ளதோ எனவும் ஆராயலாம். இன்றைய காதியானி இயக்கம் மிர்சாகுலாம் அகமதுவை நபி என்றே நம்புகிறது. இதன் லாகூர் பிரிவினர் மிர்சாகுலாம் அகமதுவை ஒரு இஸ்லாமிய சீர்திருத்தவாதி என்று மதிப்பீடு செய்கிறது.

டாக்டர் ரஷாத்கலீபா எகிப்திய முஸ்லிம். அமெரிக்காவின் அரிஜோனாவில் ஒரு பேராசிரியர். திருக்குர்ஆனை ஆய்வுசெய்து அதன் மொழிக் கட்டமைப்பில் 19 என்னும் கணிதவியல் சமன்பாடு உட்புதைந்து கிடப்பதாக ஒரு கருத்தாக்கத்தை முன்வைத்தார். இது திருக்குர்ஆனை சமூகவியல் சார்ந்து தப்சீர் என்னும் விளக்கவுரை எழுதும் முறைமையிலிருந்து மாறுபட்டு இன்னொரு விதமாக அணுகியது. மொழி அமைப்பாக்கம் கணிதவியல் சார்ந்து விவாதிக்கும் முறையியலாக இது உருவானது. இத்தோடு ஹதீஸ்கள் குறித்த ஒரு மறுவாசிப்பை நிகழ்த்தினார். நபிகள் நாயகத்தின் மரணத்திற்குப் பின் ஏறத்தாழ 200 வருடங்களுக்குப் பிறகு தொகுக்கப்பட்ட நபிகள் நாயகத்தின் சொல்லும் செயலும் அனுமதித்ததும், தடுத்ததும் என்பதான வாய்மொழி மரபுகளைத் தொகுக்கும்போது அக்காலச் சூழலில் உருவாகிவிட்ட அரசியல் ஆட்சியதிகார போட்டிகள், போர்விஸ்தரிப்பு இராணுவ நடவடிக்கைகள், குழுக்களுக்கிடையிலான குழப்பங்கள், ஆணாதிக்கம் சார்ந்த கருத்தியல்கள் ஹதீதுகளில் புகுந்துவிட்டதாகவும் அறிவித்தார். ஸஹிஹ்ஸித்தா எனும் புகாரி, முஸ்லிம், அபுதாவூத், திர்மிதி, இப்னுமாஜா, நஸஈ, ஆகிய ஹதீது தொகுப்புகளுக்கு மாற்றாக இமாம்அலியை முன்னிலைப்படுத்தும் ஷியாக்களின் அல்குலைனி, இப்னுபாபுவைஹ், ஜாபர்முஹமது அல்தூஸி, அல்முர்த்தளா ஹதீது தொகுப்புகள் ஹிஜ்ரி 328-436 காலகட்டத்தினதாகும் என்பதை வெளிப்படுத்தினார்.

எனவே, இவைகளை மார்க்க ஆதாரங்களாக எடுக்க முடியாது என்றும் விவாதித்தார். நமது வாழ்வியலுக்கும் வழிகாட்டலுக்கும் குர்ஆன் மட்டுமே என்பதான முடிவுக்கு வந்து குர்ஆனிய சட்டங்களுக்கு மாற்றமாக பிற்காலத்தில் இஸ்லாமிய உலமாக்களும் ஆட்சியாளர்களும் தங்களுக்கு சாதகமாக ஷரீஅத் சட்டங்களை உருவாக்கிக் கொண்டார்களென்றும், பெண்உரிமைகள், திருமணங்கள், குற்றவியல் சட்டங்கள், இணைவைத்தல், தொழுகை, ஹஜ் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளிலும் ஒரு மாற்றினை முன்வைத்தார். குறிப்பாக பெண்சார்ந்த பிரச்சினைகளை முன்வைக்கும்போது திருக்குர்ஆனை ஆதாரமாகக் காட்டினார்.

''மாதவிடாயின்போது பெண்களுடன் தாம்பத்ய உறவிலிருந்து விலகி இருங்கள். அவர்கள் அதைவிட்டு நீங்கும் வரை அணுகாதீர்கள். பின்னர் உறவு வைத்துக் கொள்ளலாம்'' (2:222).

மாதவிடாய் நேரத்தில் தொழக்கூடாது, குர்ஆனைத் தொடக் கூடாது என்று கூறுவதெல்லாம் குர்ஆனிய சட்டமல்ல என விவாதித்தார்.

பெண்களுக்கு ஆடைவிதிகள் (Dress code) பற்றிப் பேசும்போது கண்ணியமான முறையில் உடையணிதலையே இஸ்லாம் வற்புறுத்துகிறது. ''மானம் காக்கும்படி கண்ணியமான முறையில் உடை அணிய வேண்டும். மார்பகங்களை மறைத்தும் வெளித்தெரிய அவசியமான உடலின்பகுதிகள்தவிர உடலின்இதர பகுதிகள் மூடியவண்ணமிருக்க'' (24:30,31).

இதை விட்டுவிட்டு குருட்டுத்தனமாக அரபிகளுடைய ஹிஜாப் அல்லது புர்கா உடுத்துவதை அவசியமல்ல என்றும் விஞ்ஞான தொழில் சமுதாய வளர்ச்சிக்கேற்றபடி இந்த கண்ணியமான உடைஅணிதல் இருக்கவேண்டுமெனவும் வற்புறுத்துகிறார். பாங்கில், தொழுகையில் அனைத்திலும் அல்லாஹ்வுக்கு இணையாக நபிகள் நாயகத்தை இணைவைப்பதாகவும் ஆன்மிகதளத்தில் விமர்சித்தார்.

1988இல் இவர் தன்னை ரசூலாக (தூதர்) அறிவித்துக் கொண்டார். நபிக்கும் ரசூலுக்கும் இடையேயான வித்தியாசத்தைப் பேசினார். நபி என்பது இறைவனால் வேதம் கொடுத்து அனுப்பப்பட்டவர்களை மட்டுமே குறிப்பதாகவும், ரசூல் (தூதர்) என்பவர் இறைவனால் தூது கொடுத்து அனுப்பப்பட்ட அனைவரையும் குறிப்பதாகவும், புழக்கத்திலிருக்கும் திருக்குர்ஆன் எனும் வேதத்தை மெய்ப்பிக்க அல்லாஹ்வால் நியமிக்கப்பட்ட மெய்ப்பிக்கும் தூதர் என விளக்கமளித்தார். இவரது திருக்குர்ஆன் மொழிபெயர்ப்புகளை வாங்கி சவுதி அரசு எரித்து அழித்தது என்கிற சேதியும் உண்டு. இறுதியாக ரஷாத்கலீபா 1990 ஜனவரி 31 இல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திருக்குர்ஆனிய கருத்தாக்கங்களில் நின்று புதுஉண்மைகளை காலச்சூழலுக்கு ஏற்ப அர்த்தப்படுத்தும் முயற்சி ஒருபுறம் வரலாறெங்கும் நிகழ்ந்துள்ளது. இதுவே புதிதாக கல்விகற்ற இஸ்லாமியப் படிப்பாளி மக்கள் பகுதியை இக்கொள்கையாக்கங்களின்பால் ஈர்ப்பதற்குப் பயன்பட்டது. எனினும் இஸ்லாமியத்தின்பால் இன்றுள்ள மிக முக்கியப் பிரச்சினை இதனை தமிழகச் சூழலில் கூட நிறுவனசமயம்சார் ஒரு சடங்கியல் மார்க்கமாக மட்டுமே அணுகுவதாகும். தொழுகையைக் கடைபிடித்தல், புனித ஹஜ் பயணம் பூர்த்தி செய்தல் என்கிற வகையிலான நடைமுறைகளை மேலெழுந்த வாரியாக முதன்மைப்படுத்தி, அதன் வரலாற்று துவக்கங் களுக்குச் சென்று கபருசியாரத் முதல் ஆண்கள் ஒன்றுக்கிருப்பது வரை ஆதாரங்களைத் தேடியலைந்து எந்த முறையில் இக்கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதான பிரச்சினைகளைப் பத்திரிகைகளிலும் டி.வி. மீடியாக்களிலும் அறிவின் அராஜக எல்லைக்குப் போய் மண்டைபிளக்க சிலர் விவாதிப்பதைப் பார்க்கிறோம். இது திரும்பத்திரும்ப மத அடிப்படைவாதத்தைக் கட்டமைக்கும் தூய்மைவாதம் பெயரிலான பாசிச செயல்பாடாகும். இந்த சடங்கியல்களையும் தாண்டி இக்கடமைகள் ஒரு குறியீட்டு மொழியாக, அதன் அடித்தளம் (Deep Structure) உணர்த்துகிற ஒற்றுமை, சகோதரத்துவம், விடுதலை உள்ளிட்ட சமூக அறவியல் (Social Ethics) மதிப்பீடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதே இன்றைய காலத்தின் கட்டாயமாகும். ●

## கடிதம்

*இதழ் குறித்து பேசுவதற்கு நிறைய உள்ளது, குறிப்பாய் உங்களது பக்கம். உயிர்ப்பலித் தடைச்சட்டம் கொண்டு வந்ததன் நோக்கம் என்ன? நான் எல்லோரையும் சீண்டிப் பார்க்கிறேன். அரசு ஊழியர்களை மண்டியிட வைத்தேன். மாணவர்களை அடித்து ஒடுக்கினேன், நெசவாளிகளைத் தட்டேந்த வைத்தேன். பணிந்தவர்கள் ஒடுங்கினார்கள். இப்போது சூத்திர, பஞ்சம என்ற பிரிவின் அடிப்படையில் உங்களைச் சீண்டிப் பார்க்கிறேன். நீ என்ன செய்யப் போகிறாய்? இதை மீறி நீ உயிர்ப் பலி கொடுக்கத் துணிந்து விட்டால் இன்னும் உன்னை ஒடுக்குவேன். உன்னை ஒடுக்குவதில்தான் எனது அதிகாரம் தொடர்ந்து தக்க வைக்கப் படும் - என்ற மனோநிலைதான் இந்தச் சட்டம். கோயில் உயிர்ப் பலி என்பது வேறு எதுவும் இல்லை. கறி தின்பது - அதை கூடித் தின்பது என்பதுதான். கவிதாசரணும் கூட தனது நிலையை பரிசீலனை செய்யலாம்.*

**சிவகங்கை** **குருசாமிமயில்வாகனன்**


படிப்பகம்

www.padippakam.com



# தம்பலா

**- பாரதி வசந்தன்**

'அந்த சுப்பிரமணிய பாரதி புதுச்சேரியைக் கெடுக்கிறதுக்கு வந்திருக்கின்றான். ஹரிஜன கனகலிங்கத்திற்கு உபநயனம் செய்து வைத்து பிராமணன் என்று சொல்லும்படித் தூண்டிவிடலாமோ... இதென்ன அபச்சாரமாய் இருக்கின்றது...?'

இந்தப்படிக்கும் இன்னும் பலவாறும் ஊருக்குள் கொஞ்சம்பேர் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்த காலம் அது.

புதுச்சேரியில் ஈஸ்வரன் தர்மராஜா கோயில் தெருவின் கிழக்குக் கோடி. வெகு தூரத்தே தெரிந்த அடர்ந்த தென்னை மரங்கள். அதனிடையே கிளைபரப்பிப் புதர்போல் வளர்ந்திருந்த பூவரச மரங்கள். சதாகாலமும் வாடி வதங்கியிருக்கிறது போன்று சாலை ஓரங்களில் பெருத்திருந்த தூங்குமூஞ்சி மரங்கள். யாவும் ஒருவகைப்பட்ட சௌந்தர்யமாயிருக்க சுற்றிலும் சின்னதும் பெரிதுமாய் நேர்த்தியான வீடுகள். அவற்றின் மத்தியில் அந்த மாடிவீடு மாத்திரம் தனியானதொரு அமைதியில் ஆழ்ந்திருக்கையில் எதிரே நடந்துபோகும் தூரத்தில் கடற்கரை தெரிந்தது. நீலக்கடல். காலை இளம்பரிதி வீசும் கதிர்கள். நெருப்பெதிரே சேர்மணிபோல் மோகனமாம் சோதிமுழுதும் தகதகவென்று மின்னிக் கொண்டிருக்கும் லாவண்யம். வேகத் திரைகளினால் வேதப் பொருள் பாடி வந்து தழுவும் வளஞ்சார்கரை. அங்கிருந்து வீசும் உப்புக் காற்று. அதன் ஈரம் படிந்ததில் அந்த மாடிவீட்டின் வெளிப்புறக் கைப்பிடிச் சுவரில் வேலைப்பாடுகள் மிகுந்த துருப்பிடித்த இரும்புக் கிராதிகள். மேலே பக்கவாட்டில் மூன்றாம் பிறைகளைக் கவிழ்த்து வைத்தது போன்று தொடர்ச்சியாய் மாடங்கள். புழுதி படிந்த உடைந்த கண்ணாடிச் சாளரங்கள் வழியே உள்ளே நுழைந்த சிட்டுக் குருவிகளின் உற்சாகம். அதன் பரவசத்தில் மிகப் பழைய அந்த வீடு புது சிருஷ்டியாகத் துலங்கிக் கொண்டிருந்தது. எதிரே விளக்கெண்ணெய்ச் செட்டியின் வீடு. பாரதி அந்த வீட்டைக் கவனித்தவாறு மாடியின் மேல் கூண்டிலிருந்து அவிழ்த்து விடப்பட்ட ஒரு சிறுத்தையைப் போன்று அப்படியும் இப்படியுமாக எதையோ தீவிரமாய் அவதானித்தபடியே நடந்து கொண்டிருந்தார்.

மிகவும் மெலிந்த சரீரம். ஆனால் வீர புருஷனுக்குரியதோர் நடை. ஆர்வத்துடன் எங்கும் கூர்ந்து நோக்கும் அஞ்சாத பார்வை. புருஷலக்ஷணமான மீசை. அக்கினிப் பந்துகள் ஜொலிப்பது போன்று பிரகாசத்துடன் விளங்கும் அகன்ற நெற்றி. அதில் இரத்தச்சிவப்பாய் மின்னும் குங்குமம். இந்த வண்ணமாக உணர்ச்சிப் பிழம்பாய் இருந்த பாரதிக்குத் தாம் உபநயனம் செய்வித்தது பற்றிய ஜனங்களின் பேச்சு கிஞ்சித்தும் வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை.

மாறாக, கனகலிங்கத்திற்குப் பூணூல் அணிவித்த அன்றைக்கு... 'இன்றுமுதல் நீர் பிராமணன். இனி யாராகிலும் உம்மை என்ன ஜாதி என்று கேட்டால் 'நான் பிராமணன்' என்று தைரியமாகச் சொல்ல வேண்டும். தெரிகிறதா...?' என்று கட்டளையிட்டுவிட்டு... 'அப்படிப் பிராமணன் ஆகிவிட முடியுமோ என்று கேட்கத் துணிந்தால் அது எனக்குத் தெரியாது. என் குருநாதர் பாரதியிடம் கேளுங்கள். அவர் உங்கள் ஐயத்தைப் போக்குவார் என்றே பதில் சொல்ல வேண்டும்...' என்று தாம் சொல்லிய இதுநாள் வரையிலும் புதுச்சேரியிலிருந்து ஒருவரும் தம்மிடம் கேள்வி கேட்கவோ வாது செய்யவோ முன்வராத துணிவில்லாத மனுஷரைக் குறித்துப் பாரதிக்குச் சிரிப்பே வந்தது. பாரதி தமக்குள் மெல்ல சிரித்துக் கொண்டார்.

'மூடஜனங்கள் அப்படித்தான் இருப்பார்கள். நமக்கு மண் உழுது... நெல் அறுத்துக் கொடுக்கின்ற உத்தமமான பஞ்சம ஜாதியாரை... இந்தத் தேசத்தில் ஆறில் ஒரு பங்காய் இருக்கின்றவரை நாம் நேர்மையுடனே நடத்த வேண்டாமோ...?'

இந்த விதமாகப் பாரதி தனக்குத்தானே கம்பீரத்தோடு பேசிக் கொண்டபோது இருட்டத் தொடங்கியிருந்தது. அந்த வேளையிலும்அவருக்கு கனகலிங்கத்தைப் போய்ப் பார்க்க வேண்டும்போலத் தோன்றியது.

சட்டென்று எழுந்தவர், 'பராசக்தி..' என்று சொல்லித் தம் கைகளை மேலே உயர்த்தி நமஸ்கரித்தவண்ணம் சிறிது நாழிகை மௌனமாயிருந்தார்.

புதுச்சேரி பிரெஞ்சிந்தியாவில் எலெக்சியோன் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்கிறது பார்த்த மாத்திரத்திலேயே புரிந்து போயிற்று. இந்த இடம்தான் என்றில்லாமல் எல்லா இடங்களிலுமே கட்சி விரோதங்களினால் மனுஷர்களுக்கு உபத்திரவங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அது மிகவும் பிரசித்தமான லெமோர் எலெக்சியோன் என்கிறதனால் பொல்திக் கட்சிகள் அதிதீவிரத்தோடே நடந்து கொண்டன. அவைகள் கூலிக்கு ஏற்பாடு செய்திருந்த ஆட்கள் பண்ணின அக்கிரமங்கள் வரம்பு மீறினதாய் இருந்தன. அதன்பொருட்டு ராட்சசத்தனமான வெறியாட்டம் புதுச்சேரி முழுதுமாக வியாபித்திருந்தது. எங்கும் கலவரமான நிலைமை. வெட்டும் குத்துமாக எந்த நேரத்தில் என்ன சம்பவிக்குமோ என அச்சத்தில் செத்துக் கொண்டிருந்தனர் ஜனங்கள். பகலில் இவ்விதம் எனில் ராத்திரியிலோ கையில் தீப்பந்தங்களுடனே வழிமறித்துத் தாக்குகிறது சர்வசாதாரணமாய் இருந்தது. இதுவும் அல்லாமல் வீட்டை உடைத்து உள்புகுந்து ஸ்திரீகளைக் கற்பழிக்கும் கொடூரங்களும் நடந்தன. அரசாங்கத்தின் கேள்விமுறையே இல்லாமல் நடந்து கொண்டிருந்த அசம் பாவிதங்கள் கண்டு பாரதி திகைத்துப் போயிருந்தார்.

'புதுச்சேரி சாந்தி நிறைந்த சன்யாசிகள் வசிக்கத் தகுந்த இடம். ஆடம்பரமில்லாத எளிய ஜீவனம் நடத்த விரும்புவோர்க்கு அது ஓர் அடைக்கல ஸ்தானம்...' என்று இதுநாளும் கருதி வந்தவருக்கு இந்த எலெக்சியோன் ரகளைகளினால் என்ன இவ்வாறெல்லாம் சம்பவிக்கின்றதே என்று சற்று மன வருத்தமாகத்தான் இருந்தது.

அந்த நினைப்புடனே வருவது வரட்டும் என்றபடிக்கு அந்த இருட்டு நேரத்திலும் கனகலிங்கத்தின் வீடு நோக்கிப் புறப்படுவதற்குச் சித்தமானார் பாரதி. ஆயினும் அந்தச் சமயங்களில் யார் என்ன என்று கேட்காமல் எவராக இருப்பினும் அடித்து உதைக்கிறதுசம்பவிக்கும்என்பது பாரதிக்கு நன்கு தெரியும். ஆகையினாலே யாரும் தம்மை எளிதில் அடையாளம் கண்டு கொள்ளக்கூடாது என்பதில் அவர் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தார். கருப்பு நிறத்தில் நெடியஎள வஸ்திரம் தரித்து... சிரசில் கருநிற சுங்கு தொங்கும் சிவப்புக் குல்லாய் அணிந்து... ஒரு கையில் தடி எடுத்த வண்ணம் கடற்கரை வழியாக உப்பளம் நோக்கி வந்து கொண்டிருந்தார்.

பாரதி சற்றேனும் மிடுக்கு குறையாத வராய்... மார்பை முன்புறமாய் உயர்த்தி... பயமறியாத ஒரு படைவீரனைப்போன்று குதித்து நடந்து குதூகலமாய் வரும் சமயம்... யாரோ இரண்டு முரட்டுத்தனமான ஆசாமிகள் பாரதியை வழிமறிப்பது போன்று குறுக்கே வந்து நின்றார்கள். சட்டென்று திகைத்துப் போன பாரதி கணத்திற்குள் தம்மைச் சுதாரித்துக் கொண்டு அவர்களை ஆழமாய் ஊடுருவிப் பார்த்தார்.

'ஒருவேளை.... பிரிட்டிஷ் ராஜாங்கத்தைச் சேர்ந்த ரகசிய போலீஸ்காரர்களாய் இருப்பார்களோ...?' அவ்விதமாய் பாரதி யோசிக்கும் வேளையில் அவர்களிலே

www.padippakam.com



தடிமனாய் இருந்த ஒருத்தன் மட்டும் பேசினான் :

''ஏய்... யார் நீ... இந்நேரத்தில எங்க போற...?''

பாரதியிடமிருந்து சற்றும் தாமதிக்காது உடனே பதில் வந்தது. ''அதையேதாம் நாமும் உங்களிடம் கேட்கிறோம். யார் நீங்கள்...? உங்களுக்கு என்ன வேண்டும்...?'' படபடவென்று பாரதி கேட்கவும் பக்கத்தில் இருந்தவனுக்கு பெருத்த கோபம் உண்டாயிற்று.

''என்ன உன் சம்பாஷணையே ஒரு தினுசா இருக்கு. நாங்க யாரு தெரியுமில்ல...?''

''நீங்கள் யாராயிருந்தால் எமக்கென்ன...?''

''நாங்க அனுமானிச்சது சரிதான்...''

பாரதி கடகடவென்று சிரித்தார்.

''என்ன... என்ன அனுமானித்தீர்...?''

''அதை உனக்குச் சொல்ல அவசியமில்லை. ஆனா... நீ எங்கள வேவு பார்க்கிறதுக்காக மாறுவேஷத்தில வந்திருக்கிற எதிர்க்கட்சிங்களோட கையாளுன்னு தெரிஞ்சி போச்சு. உன்னை எங்க ஜமாகிட்ட சொல்லி என்ன செய்கிறோம்னு இப்பப் பாரு...'' என்ற படிக்குச் சொல்லிக் கொண்டே அந்த முரடன் ஒருவகையான மூர்க்கத்தோடு கூச்சல் போடவும்... மற்றொருவன் செவிப்பறை கிழிந்துவிடும் படியாக விசில் அடித்துச் சத்தம் செய்யவும் எங்கிருந்தோ சில ஆட்கள் வெறியூட்டும் விதமாக இருட்டைத் தம்மீது அப்பிக் கொண்டவர்களைப் போலத் 'திபுதிபு வென்று...' ஓடிவந்தார்கள்.

அந்தக் கணம்தான் அது சம்பவித்தது. முன் ஏற்பாடாய் யாரோ சொல்லி வைத்தாற்போன்று அந்த மனுஷன் பலத்த சரீரத்தோடே மதுரை வீரனையோ அன்றி காத்தவராயனையோ ருசுப்படுத்தும் விதமாகப் பாரதிக்கும் அந்தக் கும்பலுக்கும் ஊடாக இடைமறித்து வந்து நின்றுகொண்டிருந்தான்.

எதற்கும் அதைரியப்படாத அவன் ஆஜானுபாகுவான தோற்றம் கண்டு பாரதிக்கு இதுவெல்லாம் ஏதோ கற்பனா உலகத்திலே நிகழ்கிறது போல அதிசயமாய்த் தோன்றியது. அவர், இவன் பாகத்துக்கு என்ன செய்விக்கப் போகிறானோ என்கிறது மாதிரியாக அவனையே உற்று நோக்கியவாறு இருந்தார்.

அந்த இருட்டிலும்கூட அவன் அச்சம் என்கிறதை என்னவென்றே அறியாதவனாய் நல்ல ஆகிருதியோடே இருந்தான். தன் பாரக்கிரம பலத்தை வெளிப்படுத்தும் விதமாக சதாகாலமும் கை விரல்களினால் முறுக்கிவிடப்படும் பெரிய மீசையும்... ஐயனார் கோயில் சிலையின் கண்கள் போன்று இரத்தச் சிவப்பேறிய கண்களுமாய்... சிரசில்



அங்க வஸ்திரத்தினால் நீண்ட தலைப்பாகை அணிந்து நிஜமான ஒரு வீரனைப் போன்று வெளிப்பட்டான். கட்டுமஸ்தான அவன் தேகத்தின் கம்பீரமான வடிவம் கண்டு அங்கிருந்தவர்கள் அடங்கிப் போனவர்களாய்த் தெரிந்தார்கள்.

''நல்லவங்களுக்கும்... பொல்லாதவங்களுக்கும் வித்தியாசம் காணாம என்னடா நீங்க கட்சி பண்ற லட்சணம்...?''

எடுத்த மாத்திரத்திலேயே அவனிடத்தில் இருந்து கோபத்துடன் வார்த்தைகள் வெளிப்பட்டன.

''இவரை யாருன்னு நினைச்சிகிட்டு இப்படிச் செய்யறீங்க...?''

எல்லோரும் அவன் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்களாய் பிரதியுத்தரம் எதுவும் பேசாமல் அப்படியே நின்ற வண்ணம் இருந்தார்கள்.

''ஏதோ நாம் செய்துகிட்டிருக்கிற வம்பு வழக்குலேயும் இந்தப் பிச்சேரிக்குன்னு ஒரு மரியாதை இருக்குன்னா... அது இவரு மாதிரியான மனுஷங்களாலதான். அதையும் கெடுத்திடுவீங்க போலிருக்கே. போங்கடா... போய் ஆக வேண்டிய ஜோலிய பாருங்க...''

அவன் அவ்விதமாய் சொன்னதைக் கேட்டுப் பாரதிக்கு மிகுந்த ஆச்சரியமாய் இருந்தது.

'இவன் யாராய் இருக்கக் கூடும். உருவத்துக்கும் சம்பாஷணைக்கும் ஒரு சிறிதும் தொடர்பின்றி நல்லவனாய்த் தோன்றுகின்றானே. தவிரவும் நம்மைத் தெரிந்தவன் போல் வேறு பேசுகின்றானே...' என்று நினைத்தவாறே நின்றிருந்தார்.

அவனே மறுபடியுமாக இந்தமுறை பாரதியைப் பார்த்துப் பேசினான் :

''சாமி... நம்ம ஊருக்கு எலெக்சியோன்னு வந்துட்டாலே அப்படி இப்படின்னு ஏதாவது நடக்கத்தான் செய்யும். இதெல்லாம் கட்சிக்காரங்க பண்ற பொலிடிக்கு. இதுக்கு சிலசமயம் நாங்களும் உடந்தையா இருக்கிறதால இந்தப் பசங்க ஏதோ அடையாளம் தெரியாம செய்துட்டானுங்க. நீங்க எதையும் மனசில வச்சிக்காம நல்லபடியா போய்ட்டு வாங்க...''

அவன்பாரதியைப் பார்த்துப் பெரிதாய் கையெடுத்து நமஸ்கரித்துவிட்டு அவர் பதிலுக்குக் காத்திராதவனாய் விடுவிடென்று அங்கிருந்தவர்களை எல்லாம் அழைத்துக்கொண்டு சடுதியில் இருட்டோடு இருட்டாக மறைந்து போனான்.

அவன் போனபின்னருங்கூட வெகு நேரமாகியும் பாரதிக்கு அவன் போக்கு பிடிபடாததாகவே இருந்தது.

'அந்தப் பராசக்தியேதான் நம்மைக் காக்கிறதுக்காக இந்நேரத்தில் இப்படி ஒரு மனுஷனை இவ்விடத்திற்கு அனுப்பியிருக்கின்றாள்...' என்று அவர் தமக்குத் தாமே மிகுந்த நெகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டே தன் சிரசை முன்னும் பின்னுமாக அசைத்தவாறு உணர்ச்சி வசப்பட்டவராய் கனகலிங்கத்தின் வீடு நோக்கி விரைந்து நடக்கலானார்.

ஈஸ்வரன் தர்மராஜா கோயில் வீடு.



படிப்பகம்

www.padippakam.com



யாரோ நீண்ட நேரமாய்க் கதவைத் தட்டுகிறதுபோல் பாரதிக்குத் தோன்றியது. 'யார் அங்கே...?' என்று உள்ளிருந்து குரல் கொடுத்தவாறு நடந்து வந்து கதவைத் திறந்தார். கதவு 'படீரென்று...' திறந்துகொண்டது.

வாசலில் கனகலிங்கம் நின்று கொண்டிருந்தான்.

ஒடிசலாகவும் இன்றி... மிகுந்த தடிமனாகவும் இன்றி... சராசரி தேகத்தோடு... முகத்தில் மீசை இல்லாது... கண்களில் பணிவை வெளிப்படுத்திக் கொண்டிருந்த அவன் தோற்றத்தைக் கண்டதுமே பாரதிக்குப் பரவசம் உண்டாயிற்று.

''அடேய்... கனகலிங்கம்... உன்னைத் தான் எதிர்பார்த்திருந்தேன். வா.... வா...''

சந்தோஷ மிகுதியால் பாரதி அவனை வரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டு போனார். மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவனைப் போன்று அவருடனே போன கனகலிங்கம் அந்த அறையைச் சுற்றிலுமாகப் பார்வையிட்டான்.

எங்கு பார்த்தாலும் துண்டுக் காகிதங்களும்.. 'இந்தியா' பத்திரிகையும்... அன்றைய தினம் தபாலில் வந்திருந்த 'ஹிந்து', 'சுதேசமித்திரன்' பத்திரிகைகளும் ஆக எல்லாமும் ஓரிடத்தில் சிதறிக் கிடந்தன. அறையின் ஓர் மூலையில் பழைய கருப்புச் சட்டையும்... மரத்தால் செய்யப்பட்ட பெஞ்சின் மீது ஒருவீணையும் இருந்தன.

''கனகலிங்கம்... என்ன அப்படிப் பார்க்கின்றாய்...? பத்திரிகைகளுக்கு வியாஸங்களும்... கடிதங்களும் எழுதிக் கொண்டிருந்தேன். பராசக்தி அருளால் எல்லாம் ஜெயம்...''

பாரதி சொல்லி முடிக்கவில்லை. கனகலிங்கம் மரியாதையுடனே தயங்கித் தயங்கி ஏதோ சொல்ல வாயெடுத்தான். அதற்குள்ளாகப் பாரதியிடமிருந்து 'சடாரென்று...' வார்த்தைகள் வந்து விழுந்தன.

''நேற்றைய தினம் உன்னைத் தேடிக் கொண்டு உம் வீட்டுக்கு வந்தேனே கனகலிங்கம். எங்கே போயிருந்தாய்...?''

''சாமி... ராத்திரி உங்கள பார்க்கறதுக்காகத்தான் இங்க வந்திருந்தேன். அதுக்குள்ள நீங்க என்னைத் தேடி அங்க வந்திருக்கீங்க...''

''ஒஹோ... அப்படி ஆகிவிட்டதா சங்கதி...?''

''சாமி... ஒரு விஷயம்...''

''என்னது கனகலிங்கம்...''

''உங்ககிட்ட யாரோ வம்பு செய்தாங்கன்னு கேள்விப்பட்டேனே...''

''ஆமாம்... ஆமாம்... அது எப்படி உனக்குத் தெரிந்தது...?''

கனகலிங்கம் சற்றே மௌனமாய் இருந்துவிட்டுப் பின்னர் மெதுவாகப் பாரதியிடம் சொன்னான்.

''ஊர்ல இருக்கிறவங்க சொன்னாங்க சாமி. இதெல்லாம் அந்தத் தம்பலா வகையறாவ சேர்ந்தவங்களோட கைவரிசையாத்தான் இருக்கும்....''

இவ்விதமாய் கனகலிங்கம் தம்பலா என்கிற பெயரை உச்சரித்த மாத்திரத்திலேயே பாரதி மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார்.

''என்னது... தம்பலாவா...? வெகு சிலாக்கியமான பெயராயிற்றே அது. நான் கூட அவ்வப்போது கேள்விப் பட்டிருக்கின்றேன். ஆனால் பார்த்தது கிடையாது...''

''சாமி... அவனோட நிஜமான பெயர் எனக்கும் தெரியாதுங்க. பிச்சேரியிலே எல்லோருமே அவனைத் தம்பலான்னு தான் கூப்பிடுவாங்க...''

''அப்படியா...?''

''ஆமாங்க சாமி. அவன் சுத்த முரடன். பெரிய வஸ்தாது. இப்ப நடக்கிற எலெக்சியோன் மட்டுமில்லைங்க... ஊர்ல எப்ப எங்க கலாட்டா நடந்தாலும் எல்லா ரவுடித்தனத்துக்கும் அவன்தாங்க ஜவாப்தாரி. தம்பலான்னு சொன்னாலே அழுதுகிட்டிருக்கிற பிள்ளைங்க கூட வாயை மூடிக்கும்...''

கனகலிங்கம் அதனை அருமையான பாவத்தோடு விவரித்ததைக் கேட்டுப் பாரதிக்கு உற்சாகம் பீறிட்டுக்கிளம்பியது.

''அடடே... மிகவும் சுவாரஸ்யமாக இருக்கின்றதே கனகலிங்கம். ம்... மேலே சொல்லு...''

''சாமி... அவன் நம் ஊரு ஷோ கொட்டகையில சூதாட்டம் நடத்துகிறவன். சாராயக் கடை, கஞ்சாக் கடையெல்லாம் குத்தகைக்கு எடுத்து நிறைய ஐஸ்வரியத்தோட இருக்கிறதாலே எப்பவும் அவனைச் சுற்றிப் பெரிய ஜமா இருந்துகிட்டே இருக்கும்...''

இந்தவிதமாகக் கனகலிங்கம், தம்பலாவின் வீர தீர பராக்கிரமங்களையெல்லாம் சொல்லிக்கொண்டே வந்தவன் மேற்கொண்டு ஒரு விஷயத்தை எப்படிப் பாரதியிடம் சொல்கிறது என்பது போன்று தயங்கித் தயங்கி நின்றிருந்தான்.

அவன் முகத்தையே ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்த பாரதிக்கு அது உடனே விளங்கிற்று என்கிறதைத் தெரிந்துகொண்ட கனகலிங்கம் எங்கே பாரதி கோபித்துக் கொள்வாரோ என்கிற பயத்தினூடே தொடர்ந்து பேசினான்.

''சாமி... அந்தத் தம்பலா இருக்கானே... அவன் பிச்சேரியில இருக்கிற தோட்டி சமூகத்துக்கெல்லாம் தலைவனுங்க...''

கனகலிங்கம் இவ்விதம் சொன்னதுதான் தாமதம். பாரதி கடகடவென்று பெரிதாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பு வெண்கலத்தின் ஓசைபோன்று அறை முழுக்க எதிரொலித்தது.

''என்ன கனகலிங்கம்... இதைச் சொல்வதற்கா நீ இவ்வளவு தூரம் தயக்கம் காட்டினாய்...? எனக்குத்தான் இந்த ஜாதி இழவெல்லாம் கிடையாதே. தவிரவும் தம்பலா தோட்டியாய் இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டுமே. அதனால் அவனுக்கொன்றும் இழுக்கில்லை. மாறாக அவனை அப்படியாக வைத்திருக்கின்ற நமக்குத்தான் அவமானம். தலை உடைந்து போகுமோ என்கிற பயம் நம்முடைய எலும்புக்குள் ஊறிக் கிடக்கிறது. ஆனால் தம்பலாவிடம் தைரியலட்சுமி எப்படிப் புகுந்து விளையாடுகிறாள் பார்த்தாயா...? இந்த பௌருஷத்தை நல்ல வழியிலே செலவழிக்கப்படாதாவென்று அவனைப் பார்த்துக் கேட்க வேண்டும் என்று நினைத்திருக்கின்றேன். ஆமாம்... அந்தத் தம்பலா இப்பொழுது எங்கே இருக்கின்றான்...?''

கனகலிங்கத்திற்கு பகீரென்றது. 'நம் குருநாதர் அவ்விடம் போனால் ஏதாவது விபரீதமாகி விடுமோ...' எனப் பயத்துடனே பேசாது இருந்தான்.

''என்ன கனகலிங்கம்... நான் கேட்டதற்கு உன்னிடமிருந்து பதில் இல்லையே...''

''சாமி, அது வந்துங்க... நம்ம புல்வார் பக்கத்தில இருக்குதுங்களே சுண்ணாம்புக் காளவாய்ச் சேரி...''

''சொல்லும்...''

''அங்கேதான் தம்பலாவின் வீடு இருக்கிறது...''

''சபாஷ், கனகலிங்கம்... நாம் அந்தத் தம்பலாவை உடனே போய்ப் பார்க்க வேண்டும். என்னோடு புறப்படு...''

கட்டளையிடுவது போன்று பாரதி சொல்லிவிட்டுத் தம்பலாவிடம் போகிறதற்கு ஆயத்தமானார். இதற்கு மேலும் தாமதம் செய்தாலோ, போக வேண்டாம் என்று தடுத்தாலோ பாரதி எவ்விதம் கோபித்துக் கொள்வார் என்கிறது கனகலிங்கத்திற்கு நன்றாகவே தெரியும். ஆகையினால் அவன் மறுமொழி பேசாது அவருடனே புறப்பட்டுப் போனான்.

சுண்ணாம்புக் காளவாய்ச் சேரி. தூரத்திலிருந்து பார்க்கையில் மிகுந்த வனப்புடனும், ஆழ்ந்த அமைதியுடனும் வெளிப்பட்டது. சேரியைச் சுற்றிலும் பச்சை மரகதத்தை வாரி இறைத்தது போன்று பசுமை மிளிரும் கழனிகள்... அதன் ஓரங்களில் அழகு ததும்பும் நீலத் தாமரை பூத்த ஓடைகள்... இரு கரைகளிலும் ஈச்சமரப் புதர்கள் என்றவாறு எங்கு நோக்கினும் இயற்கையின்

படிப்பகம்

www.padippakam.com



அதிசயம் ரம்மியமாய்க் காட்சியளித்தது. அருகில் எருமைகள் குளிப்பதற்கென்றே இருந்த கோரைக் குளம். சிறுபிள்ளைகள் குளத்தில் தலையை மட்டும் வெளியே நீட்டி மிதந்து செல்லும் எருமைகள் மீது ஏறி நிற்பதும்... அங்கிருந்த வண்ணம் தண்ணீருக்குள் குதிப்பதும்... நீர் மட்டத்துக்கும் மேலே நீள நீளமாய் வளர்ந்து கிடக்கும் கோரைப் புற்களைப் பறித்து ஒருவர்மேல் ஒருவர் அடித்து விளையாடுவதுமாக அந்தக் குளத்தையே அதம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். ஊரை ஒட்டினாற் போன்று கொஞ்சதூரம் தள்ளி பிரசித்தி பெற்ற செட்டிக்குளம். அதில் எந்நேரமும் தளும்பிக் கொண்டிருக்கும் கண்ணாடி போன்ற சுத்தமான தண்ணீர். மழைக்காலத்தே ஊசுட்டேரியிலிருந்தும் ஓடைகளிலிருந்தும் மிகுதியாகி வழிந்துவரும் தண்ணீர் இந்தக் குளத்தில் தங்கி என்றைக்கும் வற்றாமல் இருக்கிற தென்றால் இதற்கென்று ஒரு மவுசு ஜனங்களிடத்தில் எப்போதும் உண்டு. ஒருபுறத்தே மாடுகளுக்குப் புல் அறுத்துவரும் புல்லுக்காரிகள் குளத்தின் கரைப்பகுதியில் குனிந்தவாறு புல்லை அலசிக் கொண்டிருக்கையில் பக்கத்திலேயே புதுச்சேரி காசுக்கடையில் நகைகள் செய்கிற இடத்திலிருந்து எடுத்துவந்த மண்ணை ஏதாகிலும் பொன் கிடைக்காதாவென்று மிக சிரத்தையோடு அலசிக் கொண்டிருந்தார்கள் அரிப்புக்காரர்கள். இந்தச் செட்டிக் குளத்தில் குளித்து எழுந்தால் எப்பேர்ப்பட்ட ஜுரமும் சொஸ்தமாகும் என்கிற ஐதீகமும் நம்பிக்கையும் நீண்டகாலமாக இருக்கிறதைக் கேள்விப்பட்டிருந்த ஸ்திரீகள் தங்கள் பிள்ளைகளை வாஞ்சையோடு குளிப்பாட்டுவதை வெகுவாகப் பார்க்க முடிந்தது.

பாரதி வெற்றிலைப் பாக்கு போட்டுக் குதப்பிய வாயுடன் வலது கையினால் வேஷ்டியின் நுனியைப் பிடித்தவிதமாக கனகலிங்கத்தோடு விரைந்து வந்து கொண்டிருந்தார். சுண்ணம்புக் காளவாய்ச் சேரிக்குள் போகிற இடையன் சாவடி ரஸ்தாவுக்குள்ளே நுழைகிற சமயம். ஊரின் மேற்குப்புறத்தே கழனியை ஒட்டி பிரெஞ்சுப் படைகள் தங்குவதற்காகக் கட்டியிருந்த கோட்டைமேடு பராமரிப்பின்றி நிற்பது தெரிந்தது. ஆட்கள் அவ்வளவாக இல்லாதிருந்த அதன் மதில் சுவர்களைச் சுற்றிலும் எருக்கன் செடிகள் புதர்களாய் மண்டிக் கிடந்தன. அதனையொட்டி ஊருக்குள் நுழையும் செம்மண் ரஸ்தாவெங்கும் வரிசையாய் சீமைப் பூவரச மரங்கள். இளஞ்சிவப்பு நிறப் பூக்களோடு சிரித்தவண்ணம் நின்றிருந்த அந்த மரங்களின்கீழ் வெகு மும்முரமாக சில ஆட்கள் லொத்தோ ஆடிக் கொண்டிருந்தார்கள். சற்றே தள்ளி அங்கங்கே குப்பைகளும் கூளங்களும் குவிந்திருக்கையில் அவற்றின் மீது நாய்கள் படுத்துப் புரள்வதும் ஓடுவதுமாக இருந்தன. கூடவே சின்னதும் பெரிதுமாய் பன்றிகளும் அதன் குட்டிகளும் குறுக்கும் நெடுக்குமாக ஓடுவதைப் பொருட்படுத்தாது நஞ்சானும் குஞ்சானுமாய் சிறுபிள்ளைகள் கருத்துப் போன நிறத்தோடு பயமில்லாது நடந்துபோகிறதைப் பார்க்க முடிந்தது. அந்தச் சேரி முழுவதுமே எங்கு நோக்கினும் குடிசைகளாகவே தென்பட்டன. எல்லாம் தென்னங்கீற்றுகளால் ஆனவை. சிலது பனை ஓலைகளாலும் கருப்பஞ்சோலைகளாலும் கட்டப்பட்டவை. சொல்லி வைத்தாற்போன்று எல்லாக் குடிசைகளுக்கும் முன்பாக மாதுளஞ்செடியோ... நெல்லிக்காய் மரமோ.. இல்லை... கொய்யா மரமோ இவைகளில் ஏதாகிலும் ஒன்று நிச்சயமாய் இருந்தது.

பாரதி இடதுபுறத்தே திரும்பி அங்கிருந்த தோட்டித் தெருவுக்குள் அடியெடுத்து வைக்கையில் கனகலிங்கம் சொன்னான்.

''சாமி... அதோ பாருங்க ஒரு பெரிய தென்னந்தோப்பு...''

கனகலிங்கம் கைநீட்டிக் காட்டிய திசைநோக்கிப் பாரதி நிமிர்ந்து பார்த்தார். எதிரே விசாலமான தென்னந்தோப்பு தெரிந்தது. யாரோ ஒரே அளவுள்ள தென்னை மரங்களின் முனையில் மட்டைகளை வைத்துக் கட்டியிருக்கிறது போலன்று காற்றில் தலையசைத்துக் கொண்டிருந்தது அந்தத் தோப்பு.

''அதுதாங்க தம்பலா தோப்பு...''

கனகலிங்கம் சொன்னது கேட்டுப் பாரதி ஆச்சரியத்தில் தன் கண்களை அகல விரித்தவாறே பேசினார் :

''என்னது... இத்தனை விஸ்தீரணமுள்ள தென்னந் தோப்பா தம்பலாவுக்கு இருக்கின்றது...?''

''இதுமட்டும் இல்லைங்க சாமி. இன்னும் எக்கச்சக்கமா நிலபுலன்கள்... காடு கழனியெல்லாம் கூட அவனுக்கு இருக்கு...''

''அப்படியா சங்கதி...''

பேசியவாறே இருவரும் நடந்துவந்து கொண்டிருந்தனர். பக்கத்திலேயே துலுக்கத் தோப்பின் மையத்தில் எண்ணெய் ஆட்டும் மரச் செக்குகள் மாடுகள் இன்றி வெறுமையாய்க் கிடந்தன. ஆயினும் இதற்கு முன்பாகப் பிழிந்தெடுத்திருந்த சுத்தமான நல்லெண்ணெயின் வாசம் அந்தப் பகுதி முழுவதுமாக வியாபித்திருந்தது. பாரதியும் கனகலிங்கமும் சிறிது தூரம்தான் போயிருப்பார்கள். எதிர்ப்பட்ட ஒரு வீட்டைக் காட்டி 'இதுதான் தம்பலாவின் வீடு.,.'' என்று சைகையினால் காட்டினான் கனகலிங்கம்.

பாரதிக்குத் தம்பலாவின் வீட்டைப் பார்த்த மாத்திரத்திலேயே மகிழ்ச்சி உண்டாயிற்று. சுற்றி இருந்த குடிசைகளுக்கு மத்தியில் அந்த மாடிவீடு மாத்திரம் 'பளிச்சென்று' அழகாய்க் காட்சியளித்தது. சுண்ணாம்பினால் மிகவும் நேர்த்தியாகக் கட்டப்பட்டு வெள்ளையடிக்கப்பட்ட வீடு. வடக்குப் பார்த்த வாசற்படியும்... பெரிய ஓட்டுத் திண்ணையும்... அதன்மேல் பித்தளை பூண்கள் போட்ட பெரிய பெரிய மரத்தூண்களும்... பர்மா தேக்கினால் ஆன ஜன்னல்களுமாய் வீடு மிகுந்த ஐஸ்வர்யத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. சாத்தியிருந்த நிலைக் கதவின் வேலைப்பாடுகள் மிகுந்த பிரமாண்டம். அதன்மேலே மையமாய் கிறிஸ்தவர்களுக்கென்று உரித்தான சூரியப் பலகை என்கிறதான திருக்குடும்பம். அதன்ஒரு புறத்தில் யோசேப்பும் மறுபுறத்தில் தூய மரியாளும் நடுவே நியாயப் பிரமாணத்தின் பனிரெண்டு வயது நிரம்பிய இயேசு குமாரன் தம் கைகளை நீட்டியவாறு நிற்கும் தோற்றம். பின்னணியில் சிலுவை யும் தலைக்குமேல் பரிசுத்த தேவ ஆவியானவர் ரூபங்கொண்டு இறங்கும் சிறகுகள் விரித்த புறாவுமாக யாவும் தேக்கு மரத்தில் கடைந்தெடுத்த அற்புதம் வழிகின்ற மரச்சிற்பங்கள். அதன் இருபுறமும் குருத்தோலையில் ஆன சிலுவைகள். இவையெல்லாம் கண்டு பாரதிக்கு அளவில்லா சந்தோஷம் உண்டாயிற்று. சட்டென்று கனகலிங்கம் பக்கமாய்த் திரும்பிச் சொன்னார்.

''பார்த்தாயா கனகலிங்கம்... தம்பலா வீடு எத்தனை அழகாகவும் சுத்தமாகவும் இருக்கிறது என்று. ஆமாம்... அந்தத் தம்பலா கிறிஸ்தவ மார்க்கத்தைச் சேர்ந்தவனோ...?''

''ஆமாங்க சாமி. சென்னப் பட்டணத்து வாசல் பெரிய வீதியில இருக்கிற சம்பா கோயில் பங்குலதான் அவன் பூசைக்குப் போய்ட்டு வருவான்...''

மறந்துபோய் தம்பலா வீட்டின் முன்பாகவே 'அவன்...' என்று ஏகத்துக்குப் பேசிவிட்டோமே என்று கனகலிங்கம் சற்றே பயந்துபோய் தன் பேச்சை உள்ளுக்கிழுத்துக் கொண்டான்.

''கனகலிங்கம்... வீடு சாத்தியிருக்கின்றது. நீ போய் கதவைத் தட்டு. நான் இப்படிச் சிறிது நேரம் திண்ணையில் அமர்கிறேன்...''

சொல்லிவிட்டுப் பாரதி அங்கிருந்த ஓட்டுத் திண்ணையில் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்தார். உத்தரவுக்குக் கீழ்ப்படியும் ஒரு வேலைக்காரனைப் போன்று மறுபேச்சே இல்லாது கனகலிங்கம் தம்பலா வீட்டுக் கதவைத் தட்டுகிற சமயம், யாரோ குதிரையின் மேல் வருகிறது கண்டு இருவருமே திரும்பிப் பார்த்தார்கள்.



படிப்பகம்

வாசலின் அருகில் குதிரை வந்து நிற்கிறது தெரிந்தது. செம்மண்ணைக் குழைத்துப் பூசி மெழுகினாற்போன்று இளஞ்சிவப்பு நிறத்தில் கொழுகொழுவென்றிருந்தது குதிரை. அதன் செழுமை. 'அவசர காரியங்களுக்கு மட்டுமேதான் நான் பயன்படுகிறவன்...' என்கிறதை உணர்த்துகிறவிதமாக இருந்தது. குதிரையின்மேல் அமர்ந்தவாறு சிரசில் அங்கவஸ்திரத்தைத் தலைப்பாகையாகக் கட்டியபடி கம்பீரமாய் ஒருமனுஷன். அவன் பிடித்திருந்த குதிரையின் லகானை லாவகமாய் தளர்த்திக் கீழே இறங்கும் சமயம். எங்கிருந்தோ ஒருவன் ஓடிவந்து அந்தக் குதிரையை வாங்கிப்போய் வீட்டை ஒட்டியிருந்த இலந்தைப்பழ மரத்தில் கட்டினான்.

குதிரையிலிருந்து இறங்கிய அந்த மனுஷன் தன் வீட்டுத் திண்ணையில் பாரதி உட்கார்ந்திருப்பதும் கூடவே வேறொரு நபரும் வந்திருப்பதும் கண்டு அவசர கதியில், தான் சிரசில் கட்டியிருந்த தலைப்பாகையை அவிழ்த்துத் தோளின் மீது போட்டவாறு மிகுந்த பணிவோடு பாரதியைப் பார்த்து நமஸ்கரித்தான்.

'ஸ்தோத்திரம் சாமி...''

பாரதி அவனை வெகு ஆழமாக ஏற இறங்க ஊடுருவிப் பார்த்தார். குள்ள மான தோற்றம். சிரசின் முன் உள்ளாக ஏறிய வழுக்கை. பிரகாசமான நெற்றியில் மிகச் சின்னதாய் சந்தனப் பொட்டு. இரு காதுகளிலும் சிகப்புக்கல் மின்னுகிற தங்கக் கடுக்கன். கைவிரலில் பிரெஞ்சுக் கொடி பதித்த மோதிரம். கால்களில் அவன் அந்தஸ்தைச் சொல்லுகிற விலை கூடின செருப்பு. மல்லு வேட்டியைக் கீழ்ப் பாய்ச்சலாகக் கட்டிய வண்ணம் முழுக்கை வஸ்திரத்தோடு இருந்தவனின் நிறம் எரியும் நெருப்புப் போன்று இருந்தது.

அவன் நமஸ்கரித்தது கண்டு நிமிர்ந்து உட்கார்ந்த பாரதிக்கு மிகுந்த அதிர்ச்சி யாயிருந்தது. கூடவே அவனை வெகு அருகில் பார்த்ததும் சட்டென்று ஞாபகத்தில் வெளிப்பட உற்சாகத்தில் துள்ளிக் குதித்தவாறே பேசினார்.

''நேற்று நீர்தானே அந்த துஷ்டர்களிட மிருந்து என்னைக் காத்து விலக்கி அனுப்பினது...?''

''ஆமாங்க சாமி...''

''அப்படியானால் உமது பெயர்...?''

''தம்பாலாங்க. நேத்து ஒரு காரியமா உப்பளத்துக்கு வந்தேன். அப்பதான் உங்களைப் பார்க்கும்படி ஆனது...''

அவன் அவ்விதம் சொன்னது கேட்டுப் பாரதியும் கனகலிங்கமும் ஒருவரை ஒருவர் அர்த்தம் தொனிக்கப் பார்த்துக் கொண்டார்கள்.

''என்ன ஆச்சரியம்... என்ன ஆச் சரியம்... அந்தத் தம்பலா நீர்தானா...? என்னிடத்திலேதான் பராசக்திக்கு எத்தனை விளையாட்டு...''

பாரதி தன் மீசையை முறுக்கியவாறு அன்பு ததும்ப தம்பலாவைப் பார்த்தார். அவன் இன்னமும் நின்றுகொண்டுதான் இருந்தான்.

''ஏன் நிற்கிறீர் தம்பலா...? வந்து இப்படித் திண்ணையில் உட்காரும்...''

''இருக்கட்டுங்க சாமி. முதல் முதலா நம்ம வீட்டுக்கு வந்திருக்கீங்க. வாங்க உள்ள போய் பேசலாம்...''

''பரவாயில்லை தம்பலா... நமக்கு இது போதும். பயப்படாமல் நீர் வந்து என் பக்கத்தில் அமரும்...''

இவ்விதமாகப் பாரதி எவ்வளவோ வற்புறுத்தியும் கேளாமல் தம்பலா தன் தோள்மீது போட்டிருந்த அங்கவஸ் திரத்தை எடுத்துத் தரையில் விரித்துப் போட்டு அதன்மேல் உட்கார்ந்தான்.

''நான் யாரென்று தெரியுமா உமக்கு...?''

''தெரியுங்க சாமி. நீங்க சுதேசி...''

''அப்படியானால் நீர் என்ன பரதேசியா...?''

பளிச்சென்று கேட்டுவிட்டு பாரதி மிகுந்த உற்சாகத்துடன் சிரித்தார். அந்தச் சிரிப்பில் மயங்கியவர்களைப் போன்று கனகலிங்கமும் தம்பலாவும் கடச் சேர்ந்து சிரித்தார்கள். பாரதி என்ன நினைத்தாரோ சட்டென்று தன்சம்பாஷணையை வேறு திசைக்குத் திருப்பினார்.

''தம்பலா... நான் உம்மை ஒன்று கேட்க வேண்டும்...''

''தாராளமா கேளுங்க சாமி...''

''எல்லா ஜோலிகளுக்கும் நீர் குதிரையில் போகிறதுதான் வழக்கமோ...?''

''இல்லைங்க சாமி, கர்த்தரோட கிருபை யால் வெளிக் காரியத்துக்கும்... என் சொந்தக் காரியத்துக்கும்... கோர்னமா காரியத்துக்கெல்லாம் கோச் வண்டியில தான் போறேன். எப்பவாச்சும் சில சமயம் கழனி வேலைக்கும்... சாயந்திர வேலையானா காத்து வாங்கறதுக்கும் இப்படிக் குதிரைமேல போவேன். இப்படிப் போறது வர்றது பொறாமை பிடிச்ச உயர் ஜாதிக்காரங்களுக்குப் பிடிக்கலேன்னு தெரியுது. 'தோட்டிப் பயலுக்குத் திமிர பார்த்தியான்னு...' நான் இல்லாத நேரத்தில அதுவும் என் முதுகுக்குப் பின்னாடிப் பேசறாங்க...''

தம்பலா சொல்லிவிட்டுப் பற்களெல் லாம் வெளியே தெரியும்படியாக சர்வசாதாரணமாகச் சிரித்தான். அதில் வெளிப்பட்ட அலட்சியம் பாரதிக்குப் பிடித்திருந்தது.

''தம்பலா... ஒருவன் எவ்வளவு பெரியவனாய் இருந்தாலும் முதுகுக்குப் பின்னால் பேசினால் அவன் பேடிக்குச் சமம் என்கிறது உமக்குத் தெரியாதா...? நீர் பயப்படாமல் உம் காரியத்தைச் செய்யும். 'சாதிகள் இல்லையடி பாப்பா... குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்...' என்று நான் பாடினேன். அது பாப்பாவுக்குத்தான் நமக்கில்லையென்று இந்தப்படுபாதக மனுஷர்கள் முடிவு கட்டிவிட்டார்கள் போலிருக்கிறது...''

''சாமி... ஜாதித் திமிர் பிடிச்சவங்கதான் இப்படின்னா... சில சமயம் நம்ம ஆட்களும் கூட எங்கள மகாமோசமாக நடத்தறது மனசுக்கு வேதனையா இருக்குதுங்க. 'பீ வார்ற தோட்டிப் பசங் களுக்கு ஊழியம் பார்க்க வரமாட் டோம்னு...' எங்க காதுபடவே கேவலமா பேசறது கேட்க எவ்வளவு அவமானமா இருக்குது தெரியுங்களா...?''

''என்ன செய்யலாம் தம்பலா. ஜாதிக் கொள்கை வேரூன்றிக் கிடக்கும் நாட்டில் மனுஷ சுதந்திரம், சமத்துவம், சகோ தரத்துவம் என்னும் கொள்கைகளை நிலை நிறுத்துவதென்றால் அது சாதாரண வேலையா...? இந்த நாட்டில் கொஞ்ச ஜாதியா இருக்கின்றன...? அதிலும் ஏற்கெனவே மலிந்து கிடக்கும் பிரிவுகள் போதாதென்று புதிய புதிய ஜாதிப் பிரிவுகள் வேறு நாள்தோறும் ஏற்பட்ட வண்ணமாய் மனுஷ வர்க்கத்தையே நாசப்படுத்தி வருகின்றனவே...''

''இதையெல்லாம் பார்த்துகினு எங்கள மாதிரித் தாழ்ந்த ஜாதிக்காரங்க் எத்தனை காலத்துக்குத்தான் சாமி சும்மா இருப் பாங்க...? பிச்சேரியில எங்க தோட்டி சமூகத்த பொறுத்தவரைக்கும் என்னைத் தவிர யாருமே ஐஸ்வரியத்தோட இல்ல. ஏதோ நான் மட்டும் ஆண்டவர் கிருபை யால் ஆசிர்வாதத்தோட இருக்கேன். ஆனா... எங்க ஜனங்க வீடு வீடா போய் பீ வாருனாதான் அவங்களுக்கு அன்னைக்கு சாப்பாடு நிச்சயம். இந்த நிலைமையில... இந்த ஜாதி அந்த ஜாதின்னு ஜாதி வித்தியாசம் பார்க்காம எல்லா மனுஷர்களுக்காகவும் அவங் களோட அசிங்கத்த... அருவருப்ப... சகிப்புத்தன்மையோட வாரிச் சுத்தப் படுத்தறோமே, எங்களுக்கு எங்கங்க நியாயம் கிடைக்குது...?''

''நீர் கேட்கிறதும்... உமது கோபமும் மிகவும் சரியாக இருக்கின்றது தம்பலா. பெரும்பாலும் தாழ்ந்த ஜாதியார்களே அதிஏழைகளாக இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத விஷயம். உழைப்பும் அவர்களுக்குத்தான் அதிகம். அதிக உழைப்பு நடத்திவரும் வகுப்பினருக் குள்ளே அதிக வறுவு ஏற்படும் அநீதி உலகம் முழுவதிலும் இருக்கிறது. எனினும் நம்முடைய தேசத்தைப் போல இத்தனை மோசமான நிலைமை வேறெங்கு மில்லை என்கிறது எனக்குத்

www.padippakam.com



தெரி கிறது. ஆனால் இந்த மட ஜனங்களுக்குப் புரியவில்லையே...''

''அதான்... அவங்களுக்குப் புரியும் படியாக எங்களுக்குனு ஒரு சங்கம்போல அமைச்சிகிட்டு அதன் பிரகாரம் வேலை செய்துகிட்டு வர்றோம். கொஞ்ச நாளுக்கும் முன்பு வெள்ளக்காரத் தெருவில பீ வாரப் போன எங்க சகாவ அங்கிருக்கிறவங்க கேவலமாக பேசிட்ட தால் நாங்க என்ன செஞ்சோம் தெரியுங்களா...? பானை பானையா பீய வாரிகிட்டுப் போய் துய்ப்ளெக்ஸ் வீதி பூராவும் போட்டு உடைச்சிட்டு வந்திட் டோம். பிச்சேரியே நாறிப் போயிட்டது. ஒரு பய நடமாட முடியல. அப்புறம் குவர்னரே ஆளனுப்பி என்ன அழைச்சி சமாதானப்படுத்தி மன்னிப்பு கேட்கிற விதமா பேசினப் பிறகுதான் அந்த அசிங் கத்தையெல்லாம் சுத்தப் படுத்தினோம்...''

''அப்படியான காரியமா செய்தீர்கள் தம்பலா...?''

பாரதிக்கு அவன் சொன்னது நம்பமுடி யாத கதை போலத் தோன்றியிருக்கக் கூடும். சந்தேகம் அவர் முகத்தில் பரவியிருந்தது.

''நான் தினந்தோறும் ஆராதிக்கிற அந்தக் கர்த்தர் மேல ஆணையிட்டுச் சொல் றேங்க சாமி. அத்தனையும் உண்மை. 'ஒடுக்கப்படுகிற யாவருக்கும் கர்த்தர் நீதியையும், நியாயத்தையும் செய் கிறார்...'னு எங்க வேதம் சொல்லுது. அந்தக் கர்த்தர் நீதி நியாயம் செய்கிறாரோ இல்லையோ... இந்தத் தம்பலா கண்டிப்பா செய்வான்...''

அவன் குரலில் தொனித்த உறுதியும் ஆவேசமும் பாதிப்பின் வடுக்களாய் வெளிப்பட்டன. கண்களை இமைக்க மறந்து அவனையே உற்று நோக்கிய வண்ணம் இருந்தார். தம்பலா தான் பேசியதின் வேகத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் விடுபட்டு மெல்ல நிதானத்திற்கு வந்தவன் பாரதியிடம் பிரதியுத்தரமாக ஏதுவும் பேசத் தோன்றாமல் மௌனமாய் இருந்தான்.

''தம்பலா... உம்மைப் பற்றிச் சில்து கேள்விப்பட்டோம். உம்முடைய வீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டு உம்மிடம் இரண்டொரு வார்த்தை களாவது பேசவேண்டும் என்கிற அவா நீண்ட நாட்களாகவே எனக்கு இருந்து வந்தது. அது இன்றைக்குப் பூர்த்தியாகி விட்டது. அவ்வளவுதான். பராசக்தி... உமக்கும் உமது சமூகத்தாருக்கும் அருள் புரியட்டும். நாங்கள் போய் வருகின்றோம்...''

பாரதி திண்ணையைவிட்டு எழுந்தவாறு தம்பலாவிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு புறப்பட்டார். 'தம் வீட்டுக்கு வந்திருந்த பாரதியாருக்கு எவ்வித உபசரிப்பும் செய்ய முடியாது போயிற்றே...' என்கிற வருத்தமும், 'அவரிடத்தில் ஏதாகிலும் அதிகமாய்ப் பேசிவிட்டோமோ...' என்கிற எண்ணமும் தம்பலாவைப் பற்றியிருந்தது. அதனைத் தன் முகவாட்டத்தில் பிரதிபலித்தபடி பாரதியுடனே சிறிது தூரம் ரஸ்தா வரைக்கும் வந்தவன் அவரை நமஸ்கரித்து வழியனுப்பி வைத்துவிட்டுப் பிரிய மனதில்லாதவனாய்த் தன் வீடு போய்ச் சேர்ந்தான்.

பாரதியும் கனகலிங்கமும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். 'நம் குருநாதர் எதற்காக இவ்விதமாகவெல்லாம் பேசு கின்றார்... செய்கின்றார்...' என்கிறது கனகலிங்கத்திற்குப் புரியாது இருந்தது. அதை அவனுக்கு உணர்த்துவது போன்று, சொல்வது தெளிந்து சொல்லும் பாரதி நிறுத்தி நிதானமாக நேர்படப் பேசினார்.

''கனகலிங்கம்... தம்பலா நம்மிடம் எவ்வளவு நல்லவனாக நடந்துகொண் டான் பார்த்தாயா...? தேர்தல் காலங்களிலே ஜனங்களை அடிக்கிறதும் இம்சிக்கிறதுமாய் இருக்கிறான் என்று கேள்விப்பட்டுத்தான் அவனிடம் இது நாள் வரைக்கும் சிநேகம் செய்ய மனதில்லாது இருந்தேன். ஆனால்... அது எத்தனைப் பெரிய மூடத்தனம் என்கிறதை நேற்றைக்கும் இன்றைக்கும் நன்கு உணர்ந்து கொண்டேன். அதே விதமாக தம்பலாவினிடத்தும் அவன் சமூகத்தின் பேரிலும் நடத்தப்படுகின்ற நியாய அநியாயங்கள் குறித்தும் நாம் பிறருக்கு உணர்த்தியாக வேண்டும். தம்பலா... பார்க்கிறதுக்குத்தான் முரட்டுப் பலா. உள்ளே இருக்கின்ற மதுரமான சுளையைப் போன்று அவனுக்கு நேர்மையான இருதயம்...''

உணர்ச்சிவசத்தோடு கடகடவென்று அதிர்ந்து பேசிவந்த பாரதி சடக்கென்று தம் பேச்சை நிறுத்திக் கொண்டார். தீட்சண்யம் நிறைந்த அவரின் கண்கள் தீப்பிழம்பாய்ச் சிவந்திருந்தன. அடுத்து அவர் சொல்லுகிறது என்னவாக இருக்கும் என்கிறதைக் கேட்கும் ஆவலில் கனகலிங்கம் எதுவும் பேசாமல் அவரையே கவனித்தவாறு இருந்தான்.

பாரதி தீர்க்கமான முடிவோடும் தீர்மானம் நிறைந்த உறுதியோடும் அச்சம் தவிர்த்த ஆண்மையுடனே சொல்வதற்கு முற்பட்டார். இதுகாறும் அவர் நெஞ்சின் ஆழத்தில் கனன்று கொண்டிருந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் நெருப்புத் துண்டங்களாய் வந்து விழுந்தன.

''ஒரு மனுஷன் தாழ்ந்த குலத்திலே பிறந்துவிட்டான் என்கிறதுக்காக அவனை ஒதுக்கி வைப்பதோ, ஒடுக்கி வைப்பதோ அவனுக்கும் கேடு. பிறருக்கும் கேடு. இனிமேல் பள்ளனோ... பறையனோ... சக்கிலியோ... தோட்டியோ... யாரும் நம்மைக் கைநீட்டி அடிக்காதவண்ணம் பார்த்துக் கொள்வது நல்லது...'' ●

## கடிதம்

'கரடிசித்தூரில் அருந்ததியப் பெண்கள் மீது நடத்தப்பட்ட வன்முறை'யை கவிதாசரண் மூலம் அறிந்த போது, இதயம் வேதனையால் துடித்துப் போயிற்று. டாக்டர் அம்பேத்கர் வழி யிலும் மாவீரன் அய்யங்காளி வழியிலும் தீண்டாமைக்கெதிராக வீரமுடன் போராட வேண்டிய இந்த ஒடுக்கப் பட்ட இளைஞர்கள், ஏன் இப்படி திசைமாறி போகிறார்கள் என மனம் வேதனையடைந்தது.

நிகழ்ச்சிகளைப் படித்தபோது, இன் னொரு விஷயமும் மனதில் தோன்றி யது. இவர்களுக்கு இடையில் 'நாமும் மனிதர்களே!' என்ற உணர்வை தட்டி யெழுப்பினால் மட்டும் போதாது; நம்மைப் போல அதலபாதாளத்திற் குள், பொருளாதார ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் ஒடுக்கப் பட்டு வீழ்ந்துகிடக்கும் ஏனைய சாதியினரையும் நாம் கைதூக்கி விட வேண்டும்; மேல்சாதியினர் நம்மை இழிவாகக் கருதி நடத்துவது போல், நாம் நமக்கு ஒரு படிக்குக் கீழே நின்று கொண்டிருக்கும் பிரிவினரிடம் சாதி மேலாதிக்கம் செலுத்தக் கூடாது; ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுப்பது மட்டும் போதாது; மனித நேயமும் வேண்டும் - என்பவை களையெல்லாம் புதிய தலைமுறை யினருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியதிருக்கிறது என்றும் தோன்றியது.

நம் நாட்டில் சாதிக்குச் சாதி கண்ணுக்குத் தெரியாதபடிபோடப் பட்டுள்ள மாய வேலியைத் தகர்த் தெறிய வேண்டிய நம் தலித் சகோ தரர்களே, இப்படி சாதி வேலி தகர இடைஞ்சலாக நிற்கிறார்களே! இவர்கள் எப்படி இந்தியாவிற்குள் தலை விரித்தாடும் சாதிப்பேயை விரட்டியடிக்கப் போகிறார்கள்? என எண்ணி மனம் வேதனையடைந்தது.

- மேலே கண்ட (அருந்ததியப் பெண் கள் மீது நடத்தப்பட்ட பாலியல்) வன்முறையை எண்ணி, அதை நடத்திய இளைஞர்களும் - அவர் களுக்கு ஒத்துப்பாடிய பறையர்களும் மட்டுமல்ல, தமிழகம் முழுவது முள்ள பறையர் குலமே வேதனைப் பட வேண்டும்.

கொச்சி **எ.எம். சாலன்**



படிப்பகம்

www.padippakam.com



# 'பிதாமகன்' வெற்றியும் பாலாவின் தோல்வியும்

- ருத்ரன்

'சேது'வில் போக்கிரிக் காதலனையும், 'நந்தா'வில் தீனிக்கடன் தீர்க்கும் தாதாவையும் கதாநாயகர்களாக்கிய இயக்குநர் பாலா, 'பிதாமகன்' படத்தில், மிருகனைக் கதாநாயக னாக்கியிருக்கிறார். முக்கால் நிர்வாணத்துடன் கதாநாயகியுடன் ஆபாசமாகக் கூத்தடிப்பதில் மட்டுமே டார்ஜான் படங்களி லிருந்து பிதாமகன் சித்தன் வேறுபடுகிறான். மற்றபடி, நடை, பாவனை, கர்ஜனை ஆகியவகைளில் எவ்வித மாற்றமு மில்லை. கதை நாயகன் காட்டு மனிதனாக இருந்தாலும், வில்லனை எதிர்த்துப் போராடி அழிப்பது அல்லது திருத்துவதே நாயக லட்சணம் என்னும் தமிழ் சினிமாவின் தாரக மந்திரத்தை பாலா மறக்கவில்லை.

படத்தின் நாயகனைக் காட்டுவிலங்கு என்று குறித்திருப்பதில் தவறோ அல்லது அதிகபட்சமானதோ ஏதுமில்லை. கதாநாயகன் சித்தனாக நடித்த விக்ரம், ''டிஸ்கவரி போன்ற சேனல்களில் இயல்பாகவே மிருகங்களின் ஒவ்வொரு அசைவுகளையும் மனிக்கணக்காகப் பார்த்து ரசிப்பேன். அதெல்லாம் சித்தனுக்குப் பயன்பட்டது'' (தினமணி கதிர், 2-11-2003) என்கிறார்.

படத்தில், சித்தன் என்னும் நாயகப் பாத்திரம் இயல்புக்கு மாறாக புனையப்பட்டிருந்த போதிலும், 'பிதாமகன்' எதார்த்தமான படைப்பு என்று பாராட்டப்படுவதானது, விமர்சகர்களின் சினிமா ஊடகத் 'தெளிவினை'த் தெளிவாக்குகிறது. மேலும், தமிழ் சினிமா தொடர்ந்து எவ்விதம் பயனிக்க வேண்டும் என்கிற அவர்களின் அக்கறையும் புரிகிறது. முதலில், இத்தகைய அசட்டுத்தனமான, அறிவிலித்தனமான, பிழைப்பு வாத விமர்சகர்களிடமிருந்து ரசிகர்களைக் காப்பாற்றியாக வேண்டும். அப்போதுதான், ஆரோக்கியமான - மக்களுக்கான சினிமா சாத்தியமாவதற்கான வெளிச்சம் புலப்படும்.

சித்தன், மயானத்திலிருந்து தெருவுக்கு வருகிறான். ரொட்டி கொடுக்காத ஓட்டலையும் சிப்பந்திகளையும் துவம்சம் செய்கிறான். தனியுடைமையின் கொடுமையைப் புரிந்திராத கற்கால மனிதன் சித்தன், அவனது அழுக்குக் கைப்பையை அவனுக்கு மட்டுமே உரியதாகக் கருதி, அதைக் கெட்டியாகப் பிடித்தபடி எங்கும் நடக்கிறான்.

உழைப்பாளிகளின் களைப்பு நீங்குவதற்காக மட்டுமே கஞ்சா விற்று, 'சேவை' ஆற்றும் கதாநாயகி. பாலாவும் பலரும் சொல்வது போல, கதாநாயகி, கல்லூரி மாணவி மஞ்சுவல்ல; கஞ்சா விற்கும் கோமதிதான். இந்த அங்கீகாரம், கதாநாயகனின் ஜோடி என்னும் சடங்கிற்கானதல்ல; கதையில் அப்பாத்திரத்தின் முக்கியத்துவத்தையும், அதனால் கதை நகரும் தன்மையையும் சார்ந்ததாகும்.

கதைநாயகி, அருவருப்பான மற்றும் அறிவில்லாத விலங்கு மனிதனைக் கண்டதும் காதல் கொள்கிறாள். கதாநாயகன் யாராக இருந்தாலும் எவ்வாறு இருந்தாலும் அவனைக் கதாநாயகி காதலித்தாக வேண்டும் என்னும் தமிழ் சினிமாவின் பாரம்பரியத்தை பாலாவால் உதறமுடியவில்லை. சித்தன் போன்றவனைக் காதலிப்பதற்கு சினிமாப் பெண்களால் மட்டுமே முடியும் என்பது சினிமாவின் எழுதப்படாத சட்டம். அதை மீறுவதற்குத் திராணியில்லாத பாலா, அவளுக்கு சித்தன் மீது கரிசனம் என்று சொல்லக்கூடும். ஆனாலும், கரிசனம் கூட காதலாகத்தான் வெளிப்பட முடியுமா என்னும் கேள்வி, பாலாவை அம்பலப்படுத்தும்.

கோபம் வந்தால் இடம், பொருள், ஏவல் பாராது தரையில் விழுந்து புரண்டு கதறும் மஞ்சு, தன்னை ஏமாற்றியவனும் கிண்டலடிப்பவனுமான சக்தியின் மீது காதல் கொண்டு, தமிழ்ச் சினிமாவின் மானத்தைக் காப்பாற்றுகிறாள். ஊடலாகத் தொடங்கி, காதலாக மலரும் ஆயிரக்கணக்கான படங்களைப் பார்த்துப் பழகிப் போன தமிழ் சினிமா ரசிகர்களின் ரசனைக்கு மதிப்பளித்து பாலாவும் பலர் அரைத்த மாவையே அரைத்திருக்கிறார்.

நியாயமாக உழைத்துச் சாப்பிடுவதற்கு ஏற்ற உறுதியான உடலும், துணைக்கு இரண்டு நண்பர்களையும் பெற்றிருக்கும் சக்திக்கு, சூதாட்டம் நடத்தியும், பொருட்கள் வியாபாரம் என்றும் நாட்டு மருந்து விற்பனை என்றும் மக்களை ஏமாற்றியும் பிழைக்கத்தான் பிடிக்கிறது. இதன் மூலம், சம்பாதிப்பதற்கு விதவிதமான பித்தலாட்ட வழிகளை சிபாரிசு செய்கிறார் பாலா.

'தேன்கிண்ணம்' படத்தின் நாகேஷ், விஜயலலிதா பாணியிலான பாடலும் நடனமும் முடிந்த பிறகு, ''நீ நல்லா டேன்ஸ் ஆடற. என்னோடு வந்திடு. சினிமாவுல சேத்து விடறேன்'' என்று நிஜ கதாநாயகி சிம்ரன் அழைத்தும், அதை அலட்சியமாக மறுக்கும் காட்சியில், நியாயமாக உழைப்பதற்கு வாய்ப்பில்லாமல்தான் மோசடிகளைச் செய்கிறான் போலும் என்னும் எண்ணத்தைத் தகர்த்துவிடுகிறான் சக்தி. ஆகவே, பாலாவின் முக்கியக் கதாபாத்திரம், உழைக்காமல் பிழைக்க விரும்பும் சோம்பேறி; மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கும் மோசடிக்காரன். இவ்வாறாக, பாலாவின் உருவாக்கங்களில் ஒருவன் உணர்வற்ற காட்டு விலங்கு; இன்னொருவன் உணர்வுள்ள காட்டு விலங்கு. 'இதுகள்' இரண்டினையும் காதலித்தே தீரவேண்டும் என்கிற கட்டாயத்திற்காக இரண்டு பெண்கள்; கஞ்சா விற்பவளாகவும், கல்லூரி போகிறவளாகவும். போலீசும் கல்லூரிப் பெண்களும் துரத்தும்போது, மஞ்சுவை முதுகில் தூக்கியபடி ஓடும் சக்தி, அவளது பாவாடையை அவிழ்த்து விட்டு தப்பித்துக் கொள்ளாததை மாபெரும் தியாகமாக, சிறையில் தன்னைப் பார்க்க வரும் மஞ்சுவிடம் சொல்ல, அவள் திகைத்துப் போகிறாள்; மயங்கியும் போகிறாள். இது சக்தியின் யோக்கியத்தனத்தை வெளிப்படுத்தும் காட்சியா? அல்லது அவனை நியாயப்படுத்தும் காட்சியா? அல்லது போக்கிரிக்குள் ஒளிந்திருக்கும் நல்லவனைக் காட்டும் காட்சியா? என்று பாலாவும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அவரது தேவையெல்லாம், அவனை அவள் காதலிக்க வேண்டும்; அதற்கு ஒரு தொடர்புக் காட்சி (Lead Scene) வேண்டும். அவ்வளவே!

கஞ்சா வியாபாரி கோமதி, விலங்கு மனிதன் சித்தன், மோசடிக் காரன் சக்தி மற்றும் அவனது இரண்டு நண்பர்கள் ஆகியோர் அடங்கிய சமூகத்தின் வெறுக்கத்தக்க கும்பலுடன், ஒரு மேல் நடுத்தர வர்க்கத்து கல்லூரிப் பெண்-பல் மருத்துவரின் மகள், நேரங்காலமற்று சுற்றித் திரிவதையும் லூட்டி அடிப்பதையும் அவளைப் பெற்றவர்களும் கண்டிக்கவில்லை; பகுதி மக்களும் கண்டுகொள்ளவில்லை. பாலா, மஞ்சுவின் குடும்பத்தை ஒரு குடும்பமாகவே கருதவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



போலீஸ் ஸ்டேஷனில், பல போலீஸ்காரர்களை அடித்து நொறுக்குகிறான் சித்தன். கதாநாயகன் என்னும் தனியொருவன் பலபேரை அடித்து வீழ்த்த முடியுமா என்று காலங்காலமாக logic வினா எழுப்பி வரும் கலை விமர்சகர்கள், சித்தன் விஷயத்தில் எதார்த்தம் மீறாத சண்டைக்காட்சி என்று திருப்தியடைகின்றனர். முரட்டுத்தனமும் மூர்க்கத் தனமும் இருந்தால் முப்பது பேரையும் அடித்துத் துவைக்க முடியும் என்ற புதிய சூத்திரத்தை பாலா நிறுவியிருப்பதாகப் புல்லரித்துப் போகின்றனர். ஆனால், உண்மைக்குப் பொருந்தாத இந்தச் சூத்திரத்தை, 'தங்கமலை ரகசியம்,' 'அடிமைப்பெண்', 'ஜம்பு' போன்ற படங்களில் ஏற்கெனவே பார்த்தாயிற்று. அதாவது, பாலாவின் சூத்திரம் அச்சுப்பிறழாத தமிழ்ச்சினிமா சூத்திரமாகும்.

ஒருவன் பலசாலி. அதனால் போலீஸ்காரர்கள் அவனைக் கண்டு அஞ்சுகிறார்கள். அவனைக் கைது செய்வதற்கு வீடு தேடி வந்து கெஞ்சுகிறார்கள். போலீஸ்காரர்களுக்கு சில கட்டுப்பாடு களை விதித்த பிறகு, அவனாகவே ஜீப்பில் ஏறி உட்காருகிறான். முன் இருக்கையில் உட்கார்ந்துகொண்ட அவனை இறக்கி, பின்னுக்கு அனுப்புவதற்கு பயந்த போலீஸ் அதிகாரி, பின்னால் சென்று உட்கார்ந்து கொள்கிறார். போலீஸ் அதிகாரி இருக்கையில் கம்பீரமாக கைதி; கைதிக்கான பின் இருக்கையில் அஞ்சி நடுங்கியபடி போலீஸ் அதிகாரி. இதில் கூடுதல் செய்தி என்னவெனில், அந்தக் கைதி பேசத் தெரியாதவன், சிரிக்கத் தெரியாதவன், அழத்தெரியாதவன், மூடன், காட்டுமிராண்டி. எல்லாவற்றுக்கும் மேலாக, அவன் சொத்துக்களும் பணமும் அரசியல் பின்புலமும் இல்லாத ஏழை.

மேற்சொன்ன காட்சியை நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆகவேண்டும் என்கிறார் 'பிதாமகன்' பாலா! தமிழகத்தின் மிகப் பெரும் கட்சியின் தலைவரான கருணாநிதியை, நடு இரவில் எழுப்பி இழுத்துப் போன நிஜம், பாலாவின் கண்களுக்குத் தெரியவில்லை. அப்போது, கருணாநிதி எழுப்பிய, ''அய்யோ! என்னைக் கொல்றாங்கப்பா'' என்னும் ஓலம் பாலாவின் காதுகளில் விழவில்லை. குருவியைச் சுடுவதைப் போல யாரை, எங்கு, எப்போது சுட்டுத் தள்ளலாம் என்று துப்பாக்கியும் ஜீப்புமாக கொலை வெறியுடன் அலைந்து கொண்டிருக்கும் தமிழகக் காவல்துறைக்கு பாலாவின் நற்சான்றிதழ் அவரது சமூகப் பார்வையின் கோளாறாகும்.

தமிழகப் போலீசின் லாக்கப் மரணங்கள், காவல் நிலையக் கற்பழிப்புகள், போலி மோதல் பெயரிலான படுகொலைகள் ஆகிய ரவுடித்தனங்களை சாதாரண மனிதனும் தினந்தோறும் அறியும் சூழலில், அறிவுஜீவியும், தொடர்ந்து மூன்று 'வெற்றிப் படங்களை' இயக்கி ஹாட்ரிக் அடித்த புகழ்பெற்ற இயக்குனருமான பாலா அறிந்திருக்கவில்லை. படம் பார்ப்பவர்கள் அனைவரையும் 'சித்தன்' என்று நினைத்துவிட்டார் போலும்!

''தேவர் எப்பொழுதும் கவிஞர்களிடம் ஒரு விஷயத்தைச் சொல்வாராம். நான் ஒரு மகா முட்டாள். எனக்கு ஒரு பாடல் வரிகள் புரிந்து, அந்தப் பாடல் எனக்குப் பிடித்துவிட்டால், தமிழ் நாட்டுக்கே பிடித்துவிடும் என்பாராம்'' (குமுதம் ஜங்ஷன் இதழில் மருதபரணி). தமிழ்நாட்டு மக்களை மகாமுட்டாள் களாகக் கருதிய சின்னப்பா தேவரின் நம்பிக்கை பாலாவிடமும் தொடர்கிறது.

பதினைந்து கிலோ கஞ்சா வைத்திருந்தால், ஜாமீன் கிடைப்பது அரிது என்கிறது இந்தியக் குற்றவியல் சட்டம். மிகப்பெரிய பணபலமும் அரசியல் பலமும், ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் என்னும் அங்கீகாரமும் இருக்கும் சுதாகரனுக்கே, ஜாமீன் மனுக்கள் பலமுறை தள்ளுபடி செய்யப்பட்டு, பலநாட்களின் சிறைவாசத்துக்குப் பிறகு ஜாமீன் கொடுக்கப்பட்டது. தற்போது, அதேபோல பணபலமும் அரசியல் புள்ளிராஜாவின் பின்புலமும் உள்ள செரீனா, பலமுறை ஜாமீன் மனு போட்டும், தள்ளுபடியாவது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. உண்மை நிலவரம் இவ்வாறு இருக்கையில், எதார்த்த படம் எடுக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளும் பாலாவின் 'பிதாமகன்' சித்தனுக்கு மனுபோட்ட உடனே ஜாமீன் கிடைத்துவிடுகிறது. படக் காட்சியின்படி, இருபத்தைந்துக்கும் மேற்பட்ட குதிரைகளில் ஏற்றப்பட்ட பலமூட்டை கஞ்சாவுடன் கையும் கடத்தலுமாகப் பிடிக்கப்பட்டவன் சித்தன். பாலாவுக்கு எதார்த்தமும் புரியவில்லை; சட்டத்தின் எழவும் தெரியவில்லை. பொய் சொல்லி சம்பாதிக்கத்தான் தெரிந்திருக்கிறது அவரது கதாபாத்திரம் சக்தியைப் போல.

குதிரைகளில் கஞ்சா கடத்தும் மிகப்பெரிய கூட்டத்தைப் பிடிப்பதற்கு காட்டிற்குள் செல்லும் போலீஸ், துப்பாக்கி என்ற ஆஸ்தான ஆயுதத்தை மறந்தே போனது. போலீஸ்காரர்கள் கடத்தல்காரர்களோடு குஸ்திப் பயில்வான்களைப் போலக் கட்டிப்பிடித்து உருள்கிறார்கள். அதனால் எல்லோரும் தப்பித்துவிட, ஆடாமல் அசையாமல் நின்றிருக்கும் சித்தன் மட்டும் பிடிபடுகிறான்.

மதத்தீவிரவாதிகளும் கடத்தல்காரர்களும் நக்சல்பாரிகளும் தனியாட்களாக ஆயுதமின்றி இருக்கும் சமயத்திலும், நவீனத்துப்பாக்கிகளுடன் சுற்றிவளைக்கும் தமிழகப் போலீசின் நிஜ முகத்தினைத் தனது கலைமுகத்தின் வழியாக மறைக்க முயல்கிறார் பாலா. மிகப்பெரிய, ஆபத்தான கஞ்சா கடத்தல் கும்பலைக் காட்டுக்குள் சென்று பிடிப்பதற்கு நவீன ஆயுதம் அவசியமில்லை என்பதும் சாதாரண லத்தியே போதுமானது என்பதும் பாலாவின் நம்பிக்கை. ரவுடிகள் வீரமணி, வெங்கடேச பண்ணையார் போன்ற கட்டப் பஞ்சாயத்துத் தாதாக்களைக் கூட, துப்பாக்கி சகிதமாகச் சந்தித்துவரும் தமிழகக் காவல் துறையின் ஆயுதக் கலாச்சாரம், பாலாவின் 'கலை'க் கண்களுக்குத் தெரியவில்லை.

சேது, நந்தா ஆகிய படங்களை, பல பழைய படங்களின் கலவையாக்கிப் புதுமை என்று பீற்றிக்கொண்ட பாலா, இப்போதும், தங்கமலை ரகசியம், அடிமைப்பெண், ஜம்பு மற்றும் பிறமொழி டார்ஜான் படங்களிலிருந்து காப்பியடிக்கப் பட்ட பிதாமகனைத் தனது புதுமைச் சித்திரமாக உச்சி முகர்ந்து கொள்கிறார். படத்தில், கஞ்சா கடத்தல் புள்ளியான வில்லனைத் தூக்கும் அடிமைகள் போல பாலாவுக்குப் பல்லக்குத் தூக்கிகளாக பல விமர்சகர்கள் வாய்த்திருக்கிறார்கள். அதனால்தான், பாலா செய்திருக்கும் கதைத் திருட்டை அவர்கள் மக்கள் முன் சொல்லவில்லை. மேலும், மயானத்தில் பிறந்து வாழ்பவன், கற்கால மனிதனுக்குத் திரும்பிப் போகிற வகையில், தமிழ் நாட்டிலுள்ள மயானங்கள் மனித வாசனையற்ற அடர்ந்த காடுகளில் இருக்கின்றனவா? அவனால் சக மனிதர்களுடன் சகஜமாக உறவு கொள்வதற்கு வழிகளும் வாய்ப்புகளும் இல்லையா? என்னும் நியாயமான கேள்விகளை பாலாவை நோக்கி எவரும் எழுப்பவில்லை.

ஜோதிலட்சுமியை 'சேது'வில் ஆடவிட்டது படத்தின் வியபாரத்திற்காகவும் வினியோகஸ்தர்களுக்காகவும்தான் என்று சப்பைக் கட்டு கட்டிய பாலா, 'பிதாமக'னில் சிம்ரனை ஆடவிட்டிருக்கிறார். முன்பு போலவே, தற்காப்புக் காரணம் சொல்லியாகிவிட்டது. சிம்ரனின் ஆட்டம் மட்டுமே வியாபார உத்தி என்றும் மற்றதெல்லாம் கலைநேர்த்தியானது என்று நம்புபவர்களுக்கு பாலாவின் சுயவிளக்கம் போதுமானதாக இருக்கலாம். ஆனால், 'பிதாமகன்' முழுவதுமே அப்பட்ட மான கலாச்சார மற்றும் பண்பாட்டு மீறல் என்றும், கீழ்த்தரமான வணிக மோசடி என்றும் புரிந்து கொள்பவர்களுக்கு பாலாவால் பதில் சொல்லமுடியாது; அவரது சீரழிவுக் கலையறிவை மறைத்துக் கொள்ளவும் இயலாது.

உண்மை இவ்வாறிருக்க, ''ஆடும்போது கூட சிம்ரனின் இடைப்பகுதி தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக உள்ளே ஒரு பனியனையும் அணிவித்துக் கண்ணியமாகக் காட்சியை அமைத்திருக்கிறார் பாலா'' (சுகதேவ், தினமணிக் கதிர், 16.11.2003) என்று திருப்தி கொள்வது, தமிழ் சினிமாக்களின் ஆபாச அலங்கோலத்தை உணர்த்துகிற அதேவேளையில், தமிழ் சினிமா விமர்சகர்களுக்கு கருத்தியல் அடிப்படையிலான அக்கறை எதுவுமில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது.



படிப்பகம்

1. ரயிலில் சக்திவேல் ஏலம் விடும் ஒரு சென்ட் பாட்டிலை ஒருவர் இருநூறு ரூபாய்க்குக் கேட்க, ''கம்பெனி'க்குக் கட்டுப்படியாகாது என்று சொல்லி, இரு நூறு ரூபாயை வாங்கிக் கொண்டு ஒரு சோப்பு டப்பா கொடுக்கப்படுகிறது. அப்போது அவரை ''எந்த ஊர்'' என்று சக்தி கேட்க, ''ஆண்டிப்பட்டி'' என்று சொல்லுவார்.

2. சக்தி மற்றும் சித்தன் கும்பலால் கடத்திவரப்பட்ட நடிகை சிம்ரன் ஆட மறுக்கும்போது, ''நீ ஒரு டேன்ஸ் போடு. உன்னை நாங்க மந்திரியாக்கிக் காட்றோம்'' என்று ஒரு கிழவி சொல்லுவாள்.

மேற்சொன்ன காட்சித் துளிகள் (shots) இரண்டிலும், நிகழ்கால அரசியல் நையாண்டி செய்யப்படுகிறது. ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலில் ஜெயலலிதாவுக்கு வாக்களித்த தொகுதி மக்களின் ஏமாளித்தனமும், அரசியலில் சினிமாக் கவர்ச்சிக்குப் பலியாகும் தமிழக மக்களின் முட்டாள் தனமும் சுட்டிக் காட்டப்படுகின்றன. இவைகளை வைத்து, பாலாவுக்கு சமூக அக்கறை இருப்பதாக சில விமர்சகர்கள் கதைவிடுகிறார்கள். அது, ''பெரியார் வீட்டு முற்றத்தில் பாலா கால்பதித்து இருக்கலாம்'' (புதிய காற்று, நவம்பர் 2003) என்பதாகவும் நீள்கிறது. ஆனாலும், அவ்வாறு கருதுவதற்கு முகாந்திரம் ஏதுமில்லை. ஏனெனில், பாலா விமர்சித்திருக்கும் அரசியல் கட்சிகள் ஒரு சில மட்டுமே. நிலவும் ஊழல், சந்தர்ப்பவாத, சுயநல, பதவி, அரசியலை பாலா எங்கேயும் எப்போதும் சாடியதில்லை. குறிப்பாக, பிராந்தியக் கட்சிகளே அவரின் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கின்றன. இதன் மூலம், தேசியக் கட்சிகள் யோக்கியமானவை என்று சாமர்த்தியமாக சொல்லப் படுகிறது. திராவிடக் கட்சிகளின் பிடியிலிருந்து தமிழகத்தை மீட்பது அவரது நோக்கமாக இருக்கலாம். அல்லது, விதிவிலக்குகளை வைத்துவிட்டு ஒட்டுமொத்த எதிர்ப்புகளி லிருந்து தப்பித்துக்கொள்ளும் லாவகமாகவும் கொள்ளலாம். எதுவாயினும், பாலாவின் நிலைப்பாடு, பிழைப்புவாத அரசியல் என்பதே உண்மை.

''பாலாவுக்கு புது மகுடம்'', ''தமிழ் சினிமாவின் மைல் கல்'', ''வழக்கமான ஃபார்முலாக்களை மீறிய துணிச்சலான படம்'', ''தரத்திலும் வியாபாரத்திலும் வெற்றிப்படம்'' என்றெல்லாம் பல திசைகளிலிருந்தும் பிதாமகனுக்குப் பாராட்டுகள் குவிகின்றன. இத்தகைய பாராட்டுகள் அனைத்தும் பொருத்த மற்றவை. ஆனாலும், வருமானத்தின் அடிப்படையில் வெற்றிப் படம் என்பதை மறுக்க முடியாது. எனினும், வசூலை வைத்து வெற்றிப் படங்களைப் பட்டியலிட்டால், மாபெரும் சாதனைகளைப் படைத்த படங்களுக்கு முன்னால், 'பிதாமகன்' நிற்க முடியாது.

வசூலில் சாதனை படைக்கிறது என்கிற ஒரே காரணத்துக்காக ஒரு படத்தை சரியான சினிமாவாக அங்கீகரிக்க நேருமெனில், இன்றைக்கு ஷகீலா நடித்த ஆபாசப் படங்களே முதல் இடங்களைக் கைப்பற்றும். இருப்பினும், தற்கால தமிழ் சினிமாவின் சூழலில், பிதாமகனின் வசூல் கவனத்திற்குரியதாகும்.

கரடுமுரடான முகத்தை அழகு படுத்துவதற்காக முடிதிருத்தக் கடைக்கு அழைத்துச் செல்லப்படுகிறான் சித்தன். முக சவரம் செய்வதற்கு கிரீம் போட்டுவிட்டு, முகத்திற்கருகில் கத்தியைக் கொண்டு போகும்போது, சவரத் தொழிலாளியை மூர்க்கமாகத் தள்ளிவிட்டு ஓடுகிறான். அந்த நேரத்தில், வேறொரு நாற்காலியில் இருக்கும் சக்திக்கு முகசவரம் முடிந்து பவுடர் பூசப்படுகிறது. எங்கு சென்றாலும், எதைப் பார்த்தாலும், ''டிஸ்கவரி சேனலின்'' (விக்ரம் பேட்டி) குரங்குபோல இமை கொட்டாமல் பார்க்கும் சித்தன், ஏற்கெனவே சக்திக்கு முகசவரம் செய்ததை பார்க்கத் தவறிவிட்டார் என்பதைப் பதிவு செய்யவில்லை. அல்லது, பார்த்திருந்தும் கத்தியைப் பார்த்து பயந்து அல்லது புரியாமல் அவ்வாறு நடந்து கொண்டான் என்றும் சொல்லப்படவில்லை. இக்காட்சியின் முரண்பாடு, பாலாவின் கதாபாத்திரத்தின் தன்மையை அவரே புரிந்திருக்க வில்லை என்பதைத்தான் காட்டுகிறது. மேலும், 'சித்தன்' போக்கு, பாலா போக்காகியிருக்கிறது.

சினிமாவில் எதார்த்தம் விரும்புவதாகவும், அதைத் தனது படங்களில் பின்பற்றுவதாகவும் சொல்லிக் கொள்ளும் பாலாவுக்கு, இயற்கையாக முடி வளரும் என்னும் எளிய உண்மை புரியாமல் போய்விட்டது. அதனால்தான், சித்தனுக்கு தலைமுடியும் நீள்வதில்லை; தாடி, மீசையும் வளர்வதில்லை. சராசரி இயக்குனர்கள் என்று சொல்லப்படுபவர்களின் படங்களில் கூட, கதாபாத்திரத்துக்கு ஏற்ற ஒப்பனைகளைக் காணமுடிகிறபோது, 'கலை இயக்குனர்' என்று முடி சூட்டிக் கொண்டிருக்கும் அல்லது சூட்டப்பட்டிருக்கும் பாலா, சித்தனின் ஒப்பனையில் உரிய முயற்சிகளை செய்யவில்லை. ஆனாலும், கறை ஒட்டிய பற்களுக்காகவும் மண் பூசப்பட்ட முகத்திற்காகவும் பாராட்டு பஜனை பாடுகிறார்கள் பல்லக்குத் தூக்கிகளான விமர்சகர்கள்! அளவான வெளிறிய தலைமயிரும், ஒழுங்குபடுத்தப்பட்ட தாடி மீசையும் அவர்களின் கண்களுக்குத் தெரியவில்லை. கவர் கலாச்சாரத்தில் ஊறிப் போயிருக்கும் வியாபார பத்திரிகைகளின் விமர்சகர்களுக்கு கவருக்குள் காந்தி சிரித்தால் போதும். பூனை யானையாகும்; எலி புலியாகும். தவிர, கலை இலக்கியம் மற்றும் சமூகம் பேசும் சிற்றிதழ்கள் பலவும் சதா பிதாமகனைப் புகழ்ந்து கொண்டிருக்கும் போக்கு ஏனென்று புரியவில்லை. ஒருவேளை, தனித்து நிற்க முடியாத கோழைத்தனமாக இருக்கலாம். அல்லது, 'விசிலடிச்சான் குஞ்சு'களாகவே இருப்பதற்கு விரும்பலாம்.

''ஆதி மனிதனுக்கு'' (விக்ரம் பேட்டி) உரிய அனைத்து அம்சங்களையும் சிரமத்துடன் கற்றுக்கொண்டு தத்ரூபமாக நடித்து, 'கலைச் சேவை' செய்திருப்பதாக விளம்பரத்திக் கொள்ளும் விக்ரமுக்கு, ஆதி மனிதனுக்கும் உரோம வளர்ச்சி உண்டு என்னும் அறிவில்லை. இந்த லட்சணத்தில், நவம்பர் 2003 'புதிய காற்று' இதழ், ''யார் அடுத்த சூப்பர் ஸ்டார்?'' என்னும் கேள்விக்கு விக்ரமின் நடிப்பு விடையளித்து விட்டதாக பூரித்துக் கொள்கிறது. ஆனாலும், தமிழ்ச் சினிமாவின் சூப்பர் ஸ்டார் பட்டத்திற்கும் கலை அறிவுக்கும் சம்பந்தம் எதுவுமில்லை என்னும் வரலாற்று உண்மை ஆறுதல் அளிப்பதாகும்.

கஞ்சா கடத்தல் தலைவனால் கொல்லப்படும் 'ஆள்காட்டி' போலீசின் பிணத்தை எரிக்கும் போதும், சக்தியின் பிணம் எரியும் போதும் சித்தனை, சித்தர் பாடலை சத்தமாகப் பாடவைத்த பாலா, அவன் மயானவாதி என்பதை நினைவு படுத்தும் உத்தியாக்கியிருக்கிறார். இருப்பினும், எதுவுமே புரிந்துகொள்ள முடியாத, பேசத் தெரியாத அவனால் சித்தர் பாடலை மட்டும் மனனம் செய்யவும் பாடவும் முடிந்தது எப்படி என்னும் கேள்விக்கு பாலாவிடமிருந்து, அதாவது, படத்திலிருந்து எந்த பதிலும் இல்லை. ஒருவேளை, கற்றுக் கொள்ளும் திறன் அவனுக்கு இருந்தது என்றால், கடைசி வரை பேசா மடந்தையாகவும் நாகரிகமற்ற முரடனாகவும் இருப்பது முரண்பாடானதாகும். மேலும், இளம் வயதில், சுடுகாட்டில் பிணங்களை எரிப்பதற்கு முன்பு, ''முகத்தை மூடப் போறன். பாக்கறவங்க பாத்துக்கலாம்'' என்பது போன்று இயல்பாகப் பேசும் சித்தன், இளைஞனானவுடன் 'ஊமை'யாகிப் போனதன் மர்மம் விளங்கவில்லை பாலாவுக்கு! எப்படியோ, படம் முடியும் தருவாயில், ''சக்தியைக் குடு'' என்று வில்லனிடம் சித்தன் கேட்பது மாயமாய் நடந்தேறுகிறது!

காலங்காலமாக, தமிழ் சினிமா போட்ட ராஜபாட்டையில், அதன் சட்டம்-ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு, அதன் வியாபாரத் தந்திரங்களுக்கு உடன்பட்டு, மக்கள் சிந்தனைகளைச் சீரழிக்கும் அனைத்து சூத்திரங்களிலிருந்தும் இம்மியும் பிசகாமல், காப்பியடிக்கும் 'பரம்பரைப் புத்தி'யுடன் எடுக்கப்பட்டிருக்கும் பாலாவின் 'பிதா மகன்' படத் தொடக்கத்தில் வெட்டியான் சொல்வதைப் போல ''சிவபெருமானின் மகன்'' மட்டுமே! வேறு அர்த்தங்களோ கற்பிதங்களோ எதுவுமில்லை. அந்த வகையில், பாலாவின் பிதாமகன் 'தறுதலை' என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

www.padippakam.com


'பிதாமகன்' அதன் தயாரிப்பாளர் வி.ஏ. துரைக்கு இன்னொரு லாபப் படம்; இயக்குனர் பாலாவுக்கு இன்னொரு வெற்றிப் படம்; ரசிகர்களுக்கு இன்னொரு பொழுதுபோக்குப் படம். நமக்கு, மக்களுக்கு எதிரான இன்னொரு தமிழ்ப்படம்.

புதிதாகவும் ஆரோக்கியமானதாகவும் சிந்திக்கத் தெரியாத பாலாவுக்குக் கிடைக்கும் அங்கீகாரமும் பாராட்டுகளும், தமிழ் சினிமாவை மேலும் சீரழிக்கும் முயற்சிகளாகும். சமூக அக்கறையற்ற தமிழ் சினிமாவின் வக்கிரப் போக்கு தொடரவும், அதற்கான கலைஞர்களை உருவாக்கவும், 'பிதாமகன்' போன்ற படைப்புகளுக்கான வெற்றுப் புகழுரைகள் வழிகோலும். இந்நிலை தடுக்கப்படவேண்டுமெனில், சினிமாவை வெறும் கலைக் கண்களோடு விமர்சிப்பது மட்டும் போதாது. சமூகம், அரசியல், புரட்சி, சமூக மாற்றம் போன்றவைகளையும் இணைக்கவேண்டும்.

மக்களுக்கான சினிமா என்பதற்கான தகுதி டூயட்டோ பாட்டுக்களோ இல்லாமல் இருப்பது மட்டுமல்ல. அவ்வாறெனில், பெரும்பாலான ஆங்கிலப் படங்களையும் சில தமிழ்ப் படங்களையும் மக்களுக்கானவை என்று சொல்லவேண்டியதாகிவிடும். மேலும், ஆபாசம் இல்லாமல் இருப்பது மட்டும் மக்கள் சினிமாவுக்கான தகுதி எனில், பெரும்பாலான கடந்த கால சமூகப் படங்களும் புராணப் படங்களும் அத்தகுதிக்கு உரியனவாகும் ஆபத்து நிகழ்ந்துவிடும். மேலும், ஒரு படத்தை வியாபாரத்திற்கானதா அல்லது மக்களுக்கானதா என்று அடையாளம் காண்பதற்கான முக்கியமான அம்சங்கள், காட்சியமைப்பு, கேமரா கோணம், ஒளி-ஒலி அமைப்பு, படத்தொகுப்பு, கிராஃபிக்ஸ் போன்ற தொழில் நுட்பங்களில் இல்லை; கதையில்தான் அடங்கியிருக்கிறது. கதையை மேலும் வலுப்படுத்தும் விதமாக திரைக் கதையும் வசனமும் அமைய வேண்டியது அவசியமானதாகும். அடுத்ததாகவே தொழில் நுட்பம் முக்கியப் படுகிறது.

காட்சி ஊடகமாகிய சினிமாவில், வசனம் அவசியமற்றது எனவும் கேமராவே கதை சொல்லிவிடும் எனவும் 'கலை வெறி' கொள்வது சமூக நலனைப் புறக்கணிப்பதாகும். எந்த வொரு ஊடகமும் நிலவும் சமூகத்தின் படிப்பறிவு, புரிந்து கொள்ளும் திறன், ஊடகங்களுடனான தொடர்பு, வாழ்வியல் தேவைகள் ஆகியவைகளைக் கணக்கில் கொள்ளவேண்டும். சில வெளிநாடு மற்றும் அயல்மொழித் திரைப்படங்களின் கலைத் தன்மைக்கு ஈடாக இங்கேயும் படங்கள் எடுக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தும் சில 'அறிவாளிகள்', சொந்த மக்களின் உள்வாங்கும் திறனைக் கருத்தில் கொள்வதில்லை. மேலும், சமூக மாற்றத்துக்கான புரட்சிகரக் கருத்துகளைக் கோருவதில்லை. சர்வதேசத் தரத்திற்கு தமிழ் சினிமா உயர்த்தப்பட வேண்டும் என்று எழுதுபவர்களும் பேசுபவர்களும் கலையை மட்டுமே முன்மொழிபவர்களாக இருக்கிறார்கள். கலையின் பிறப்பிடமான மக்கள் சமூகத்தின் வாழ்வுரிமைகளின் மீது அக்கறை வைப்பதில்லை.

இத்தகைய நல்ல முயற்சிகளை சிறிதேனும் மேற்கொண்ட படங்களை உடனடியாகக் குறிப்பிடுவதாயின், கோமல் சுவாமிநாதன் கதை வசனம் எழுதி கே. பாலசந்தர் இயக்கிய 'தண்ணீர் தண்ணீர்', கோமலின் 'ஒரு இந்தியக் கனவு', ஸ்ரீதர்ராஜனின் 'கண் சிவந்தால் மண் சிவக்கும்' தெலுங்கிலிருந்து மொழி மாற்றம் செய்யப்பட்ட நாராயண மூர்த்தியின் 'சிவப்பு புலிகள்', தாசரி நாராயணராவின் 'அடிமைப் பெண்' ஆகியவை களைச் சொல்லலாம். இந்தப் படங்கள், கணிசமான மக்களால் பார்க்கப்பட்டவை என்பது கூடுதல் சிறப்பாகும். ஆயினும், இப்பட்டியல் முழுமையானதல்ல.

ஒரு புறம், 'இப்படம் மக்களுக்கானதல்ல, விருதுக்கானது' என்ற முழக்கத்துடன் எடுக்கப்படும் படங்களால் தமிழக மக்களுக்கு மட்டுமல்ல, தமிழ் சினிமாவுக்கும் பயனில்லை. பெருவாரியான உழைக்கும் மக்களின் நலன்களை ஒதுக்கி விட்டு, புதுமை என்கிற பெயரில் எதைச் சொன்னாலும் எப்படிச் செய்தாலும் அப்படம் மக்களுக்கு எதிரானதே. இன்னொரு புறம், சமூக பிரக்ஞையுள்ள படங்களை எடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, அதீத கலைத் தன்மைகளை வெளிப் படுத்தி, மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போன முற்போக்குக் கலைஞர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

புதிய உள்ளடக்கத்துடனும் உத்வேகத்துடனும் சமூக அக்கறையுள்ள படைப்பாளிகள் தமிழ் சினிமாவைக் கைப்பற்றும் வரை, மக்களுக்கு எதிரான சீரழியும் சினிமாக்களைத் தடுக்க முடியாது. 'பிதாமகன்' போன்ற பத்தோடு பதினொன்றையும் நிறுத்த முடியாது. அதேபோல, அத்தகைய மோசமான படங்களைப் பாராட்டியும் சீராட்டியும் பரிசுகளையும் சலுகைகளையும் ரொக்கத்தையும் பெறும் விமர்சகர்களின் சுயநலப் போக்கையும் ஒழிக்க முடியாது.

கடைசியாகக் கிடைத்த செய்தி:

'பிதாமகன்' வெற்றியின் பிதாமகன் யார்? என்னும் போட்டி பாலாவுக்கும் விக்ரமுக்கும். விக்ரம், தான்தான் என்கிறார். பாலா பின்வாங்குவதாக இருந்தாலும், விட்டுக் கொடுப்பதாக இல்லை. அதனால், பிதாமகனின் பிதாமகன் இளையராஜா என்கிறார்; அப்புறம் சூர்யா என்கிறார். விக்ரம், தொடை தட்டி களத்தில் இறங்க, பாலாவோ பினாமிகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்.

இந்தக் கழிசடை சண்டை எக்கேடும் ஆகட்டும். நமக்கு அது முக்கியமில்லை. ஆனாலும், 'பிதாமகன்' மட்டுமல்ல, வெற்றி பெற்றதாகச் சொல்லப்படும் அனைத்துத் தமிழ் சினிமாக்களின் வெற்றிக்கும் பிதாமகன், தமிழ் மக்களின் அறியாமையும், வணிக இதழ்கள் மற்றும் தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களின் புத்திசாலித்தனமான வியாபார உத்தியும்தான் என்பதை மட்டும் இப்போதைக்கு சொல்லி வைப்போம். ●


## தை மாத வெளியீடு

## தணிகைச் செல்வன் நூல்கள்

| | |
|---|---|
| **1. கவிதைகளில் அவன் மானிடன் (கவிதைகள்)** | **- ரூ. 60** |
| **2. கிழக்கு முதல் கிழக்கு வரை (சமகாலச் சமூக/வரலாற்றுப் பார்வைகள்)** | **- ரூ. 50** |
| **3. இலக்கும் இலக்கியமும் (திறனாய்வுச் சிந்தனைகள்)** | **- ரூ. 50** |
| ***மூன்று நூல்களும் சேர்ந்த ஒரு தொகுதியின் முன் பதிவுச் சலுகை விலை*** | ***- ரூ.100*** |

***வெளியீட்டு விழா வரை இச்சலுகை நீடிக்கும். அஞ்சல் கட்டணம் ரூ.20 சேர்த்தனுப்புக.***

***10 தொகுதிகள் கோருவோருக்கு அஞ்சல் கட்டணத்தை நூலகம் ஏற்கும்.***

காசோலை/வரைவோலை/பண அஞ்சல் அனுப்ப வேண்டிய முகவரி :

தணிகைச் செல்வன், தணிகை நூலகம்
15, சீராம் குடியிருப்பு, தாம்பரம் சானடோரியம்
சென்னை-600 047. தொலைபேசி : 22232810




படிப்பகம்

www.padippakam.com



# பச்சோந்தி

மூலம் : ஆன்ட்டன் செக்காவ் :

ஆங்கிலம் வழி தமிழில் லதா ராமகிருஷ்ணன்

(ருஷ்ய இலக்கியத்தின் முதன்மைப் படைப்பாளிகளில் ஆண்ட்டன் 'செக்காவ்'வும் ஒருவர். துர்கனீவ், தாஸ்தாவ்ஸ்கி, ஹெர்ஸென், புஷ்கின், டால்ஸ்டாய் முதலிய உலகப் பிரசித்தி பெற்ற ருஷ்யப் படைப்பாளிகளின் பட்டியலில் தனது கட்டுரைகள், சிறுகதைகள் மற்றும் நாடகங்கள் வழி இடம் பெற்றிருக்கும் செக்காவ் 1860இல் டாகன்ரோக் என்ற இடத்தில் பிறந்தார். தந்தையின் தொழில் திவாலாகி அதன் விளைவாய் அவர்கள் ஊரை விட்டு வெளியேறும்படியாகியது. 1879இல் செக்காவ் மாஸ்கோவிலுள்ள தன் குடும்பத்தாரோடு மீண்டும் சேர்ந்து, மருத்துவம் பயின்று 1884இல் மருத்துவராகப் பணியாற்றத் தொடங்கினார். கடும் உழைப்பு. போதிய வருமானமின்மை. இதனால், குடும்பத்திற்கு உதவும் பொருட்டு, மருத்துவம் பயின்று வந்த நாட்களிலேயே நகைச்சுவையான விஷயங் களை சிறிய பத்திரிகைகளுக்கு எழுதி வந்தார். 1887இல் அவருடைய முதல் நாடகம் ஐவனோவ் செயிண்ட் பீட்டர்ஸ் பர்கில் இலக்கியப் படைப்பாக வெற்றி பெற்றது. 1888இல் கனமான விஷயங்களைத் தாங்கி வெளியாகும் பத்திரிகைகளில் தனது கதைகளை வெளியிடத் தொடங்கினார். 1890இல் செர்பியாவினூடாய் பயணம் செய்து அங்கே கைதிகளை சிறை வைத்திருக்கும் தண்டனைக் குடியிருப்புப் பகுதிக்குச் சென்று, அவர்கள் நிலைமைகளை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்தார். அவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர் எழுதிய The Steppe என்ற கதை புஷ்கின் விருது பெற்று இலக்கியவுலகில் அவருடைய அந்தஸ்தை நிறுவியது. The Seagull, Uncle Vanya, The Three Sisters முதலிய அவருடைய நாடகங்கள் பெரிதும் பேசப்பட்டவை. ஒரு மருத்துவராக குடியானவர்களுக்கு இலவச மருத்துவமனை நடத்தி வந்தார். கொள்ளை நோய், பஞ்சம் இவற்றை எதிர்த்து உத்வேகமாய் பணியாற்றினார். 1901இல் தனது நாடகங்களில் பங்கு பெறும் நடிகை Olga Knipperஐ மணம் செய்து கொண்ட முதலே பலவிதமான நோய்களால் பாதிப்படைந்திருந்த செக்காவ் 1904இல் இறந்தார். அவருடைய எழுத்துகள் சராசரி வாழ்க்கையின் தனித்துவமிக்க அம்சங்களை எடுத்தியம்பியவை. இக்கதை Russian Classics Series என்ற தொகுப்பு நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஓச்சுமெலோவ் பிரமாதமான புதிய கோட் ஒன்றை அணிந்து கொண்டு, கையில் ஒரு பொட்டலத் துடன் சந்தைப்பகுதியைக் கடந்து சென்றான். அவனுக்குப் பின்னால் செந்நிறத் தலைமுடியுடனான கான்ஸ்டபிள் ஒருவன் பறிமுதல் செய்யப்பட்ட 'சதைப் பற்றுள்ள பழங்கள்' விளிம்பு வரை தளும்பிக் கொண்டிருக்கும்படியான சல்லடையொன்றை சுமந்தபடி விரைவாக நடந்து போய்க் கொண்டிருந்தான். சுற்றிலும் ஒரே நிசப்தமாயிருந்தது.... சந்தைப் பகுதியில் ஆள் நடமாட்டமேயில்லை. சின்னக் கடைகள் மற்றும் சத்திரங்கள், எத்தனையோ பசித்த முகவாய்களைப் போல் கடவுளின் உலகத்தை அலுப்போடும் களைப்போடும் வாய்பிளந்து நோக்கியவாறு காணப்பட்டன. அவர்கள் அருகே எந்தவொரு பிச்சைக்காரனும் கூட நின்று கொண்டிருக்கவில்லை.

திடுமென 'ஓச்சுமெலோவ்'வின் காதுகளை வந்தடைந்தது ஒரு குரல். "ஆக, நீ கடிப்பாய், அப்படித்தானே, கேடு கெட்ட நாயே! அதைத் தப்பிக்க விட்டு விடாதீர்கள் பசங்களா! நாய்க்கடி இப்பொழுதெல்லாம் அனுமதிக்கப் படுவதில்லை. அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்! அடடா!"

ஒரு நாயின் முனகல் கேட்டது. அந்த ஒலி வந்த திசை நோக்கித் தன் பார்வையை செலுத்திய ஓச்சுமெலோவின் கண்ணில் பட்டது இதுதான். வியாபாரி 'பிச்சுகினு'டைய விறகுக் கொட்டிலிலிருந்து மூன்று காலில் வெகு வேகமாய் ஓடி வந்து கொண்டிருந்தது ஒரு நாய். அதனைத் துரத்தியவாறு கஞ்சி போட்ட சட்டையும், பொத்தானிடப்படாத இடுப்புக் கச்சையும் அணிந்தவண்ணம் ஒரு மனிதன் வந்து கொண்டிருந்தான். அவனுடைய முழு உடலும் முன்னோக்கி வளைந்திருந்தது; அந்த மனிதன் சற்றே நிலை தடுமாறி, பின் அந்த நாயை அதனுடைய பின்னங்கால்களில் ஒன்றைக் கையில் பற்றிப் பிடித்து விட்டான். இன்னொரு முனகல் கேட்டது. பின், இன்னொரு இரைச்சல். "அதைப் போக விட்டு விடாதே." தூக்கக் கலக்க முகங்கள் கடைகளுக்கு வெளியே துருத்தி நீண்டன. கண்ணிமைப் பொழுதில் ஒரு கூட்டம், தரையைப் பிளந்து கொண்டு மேலெழும்பியதாய், அந்த விறகுக்கிடங்கைச் சுற்றிக் கூடியது.

"பார்த்தால் ஏதோ பொதுமக்கள் தொடர்பான பிரச்னை, இடையூறு போல இருக்கிறது, மாண்புமிக்க மேலதிகாரியே," என்று அந்த கான்ஸ்டபிள் கூறினான்.

ஓச்சுமெலோவ் திரும்பி அந்தக் கூட்டத்தை நோக்கிச் சென்றான். அந்த விறகுக் கொட்டிலின் வெளி வாயிற் கதவிற்கு நேர் எதிராய் அவன் மேற்குறிப்பிட்ட அந்த, பொத்தானிடப் படாத அரைச்சட்டையணிந்திருந்த நபரைக் கண்டான். அந்த ஆள் தனது வலது கையை உயர்த்தி, ரத்தம் சொட்டிக் கொண்டிருந்த விரல் ஒன்றை அங்கு கூடியிருந்தோருக்குக் காட்டிக் கொண்டிருந்தான். "கட்டாயம் உனக்குத் தருவேன், கேடு கெட்ட பிசாசே," என்ற வார்த்தைகள் அவனுடைய போதையேறியிருந்த முகத்தில் எழுதப்பட்டிருப்பதாகத் தெரிந்தது. அவன் காட்டிக் கொண்டிருந்த விரலே கூட ஏதோ வெற்றிப்பதாகை போல் காட்சியளித்தது. ஓச்சுமெலோவ் அந்த நபரை, பொற்கொல்லன் க்ருயுக்கின் என்று அடையாளங் கண்டு கொண்டான். கூட்டத்தின் நட்ட நடுவில், அதன் முன்னங்கால்கள் மிகவும் அகலப் பிளந்திருக்க, அதன் உடல் முழுவதும் விதிர்த்திருக்க அமர்ந்திருந்தது அந்தக் குற்றவாளி - ஒரு வெண்ணிற 'போர்ஸாய்' நாய். கூரான மூக்கும், முதுகில் ஒரு மஞ்சள் திட்டுமாக இருந்தது அது. கலங்கியிருந்த அதன் கண்களில் துயரும், பீதியும் கலந்த ஒரு 'பாவம்' தொக்கி நின்றது.

"இதெல்லாம் என்ன?" என்று, அந்தக் கூட்டத்தினூடாய் முன்னேறிச் சென்றவாறே கேட்டான் ஓச்சுமெலோவ். "இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய் நீ? எதற்காக உன்னுடைய விரலை உயர்த்திக் காட்டிக் கொண்டிருக்கிறாய்? யார் சத்தம் போட்டது?"

"நான் பாட்டுக்கு நடந்து போய்க் கொண்டிருந்தேன், மேன்மை தங்கியவரே. சாதுவான ஆட்டுக்குட்டியைப் போல் அத்தனை அமைதியாகப் போய்க் கொண்டிருந்தேன்." தன்னுடைய கைமுஷ்டிக்குள் இருமியவாறே சொல்ல ஆரம்பித்தான். "இங்கேயிருக்கும் மித்ரி மித்ரிச்சிடம் மரம் சம்பந்தமாய் கொஞ்சம் வேலையிருந்தது எனக்கு. அதற்காய் வந்தேன். ஆனால் திடீரென, எந்தவொரு காரணமுமில்லாமல் இந்த சனியின் என் விரலைக் கடித்து விட்டது. மன்னிக்கவும்... ஆனால் நான் வேலை பார்க்கும் மனிதன். என்னுடையது மிகவும் நுட்பமான தொழில். அவர்களை எனக்கு நஷ்டஈடு தரச் செய்யுங்கள். ஒருவேளை என்னால் ஒரு வாரத்திற்கு இந்த விரலை அசைக்க முடியாமல் போகலாம். வெறிபிடித்த, பயங்கரப் பிராணிகளை நாம் சகித்துக் கொள்ள வேண்டும் என்று எந்தச் சட்டத்திலும் சொல்லவில்லை, மேன்மை தங்கியவரே. எல்லோரும் கடிக்கத் தொடங்கி விட்டால் பின் வாழ்க்கை சகிக்க முடியாமல் போய் விடும்..."

"ம்ம்ம்... சரி சரி," என்று இருமிக் கொண்டும், தனது புருவங்களைத் திருகியபடியும், கடுமையாகக் கூறினான் ஓச்சுமெலோவ். "சரி... எல்லாம் சரி... யாருடைய நாய் இது? இதை நான் இப்படியே விட்டு விட முடியாது. நாய்களைக் கண்டபடி சுற்ற விடுபவர்களுக்கு நான் ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும். எப்பொழுதோ செய்திருக்க வேண்டியது - சட்டதிட்டங்களை மதித்து நடக்க விருப்பமில்லாத கனவான்


படிப்பகம்

www.padippakam.com

களுக்கு எப்பொழுதோ பாடம் கற்பித்திருக்க வேண்டும். கண்ட கண்ட நாய், ஆடு, மாடு, கால்நடைகளையெல்லாம் இஷ்டத்திற்கு சுற்ற விட்டால் என்ன ஆகும் என்று அந்தக் கேடு கெட்டவனுக்கு நான் காட்டித் தருகிறேன். 'இது இப்படித்தான்' என்று காட்டித் தருகிறேன். எல்ட்ரின்,'' என்று கான்ஸ்ட்டபிள் பக்கம் திரும்பியவாறே, தொடர்ந்தான் அவன். ''இந்த நாய் யாருடைய தென்று கண்டுபிடி. பின், நடந்தது பற்றிய ஒரு அறிக்கை தயார் செய். கொஞ்சமும் தாமதமில்லாமல் இந்த நாய் தண்டிக்கப்பட்டு, சாகடிக்கப்பட வேண்டும். ஒருவேளை இதற்கு வெறி பிடித்திருக்கலாம்... நான் கேட்கிறேன், யாருடைய நாய் இது?''

''இது ஜெனரல் 'ஜிகலோவ்'வுக்குச் சொந்தமானது என்று நினைக்கிறேன்.'' கூட்டத்திலிருந்து ஒரு குரல் கூறியது.

''ஜெனரல் ஜிகலோவ்! ம்ம்... என்னுடைய கோட்டைக் கழற்ற உதவி செய் எல்ட்ரின்... ஷ்ஷ்... எத்தனை வெப்பமாக இருக்கிறது... நிச்சயம் மழை பெய்யப் போகிறது.'' அவன் க்ருயுக்கின் பக்கம் திரும்பினான்.'' ஒரு விஷயம் எனக்குப் புரியவில்லை. அது எவ்விதம் உன்னைக் கடிக்க நேர்ந்தது? அது எவ்விதம் உன்னுடைய விரலை எட்டிப் பிடித்திருக்க முடியும்? இத்தனை சிறிய நாய், அதுவும் நீ இத்தனை பெரிய உடம்புக்காரன்! நீ உன்னுடைய விரலை ஒரு ஆணியால் கீறி விட்டுக் கொண்டு, அதைக் காட்டிப் பணம் சம்பாதிக்கத் திட்டம் தீட்டியிருக்க வேண்டும். உன்னை மாதிரி ஆசாமிகளையெல்லாம் எனக்குத் தெரியாதா என்ன? பிசாசுக் கூட்டமாயிற்றே!''

''அவன் எரிந்து கொண்டிருந்த சிகரெட்டைக் கொண்டு அதனுடைய மூக்கு நுனியை விளையாட்டாக அழுத்திச் சுட்டான், மேன்மை தங்கியவரே. அதனால் அது அவன் மேல் எகிறியது. அது ஒன்றும் யாருடைய விளையாட்டுப் பொருளு மில்லை. அந்தப் பொற்கொல்லன் எப்பொழுதுமே இப்படித்தான் ஏதாவது விஷமம் செய்து கொண்டேயிருப்பான், மேன்மை தங்கியவரே.''

''உன் பொய்களை அவிழ்த்து விடாதே, ஒன்றரைக் கண்ணா! நான் அப்படிச் செய்ததை நீ பார்க்கவில்லை. அப்புறம் ஏன் பொய் சொல்கிறாய்? மேன்மை தங்கியவர் ஒரு விவேகமுள்ள கனவான். அவருக்குத் தெரியும், யார் பொய் சொல்லுகிறார்? யார் கடவுள் சத்தியமான உண்மையைச் சொல்லுகிறார் என்று அவருக்குத் தெரியும்! சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.... அனைத்து மனிதர்களும் இன்று சமம். என்னுடைய சகோதரர் ஒருவர் கூட காவல்துறையில்தான் இருக்கிறார். உனக்குத் தெரியாதென்றால் இப்பொழுது தெரிந்து கொள்...''

''விவாதம் செய்யாதே!''

''இல்லை, அது ஜெனரலின் நாய் அல்ல,'' என்று திட்டவட்டமாகக் கூறினான் கான்ஸ்டபிள். ''ஜெனரலிடம் இந்த மாதிரி ஒரு நாயே கிடையாது. அவரிடமுள்ள நாய்கள் எல்லாமே கட்டு மஸ்தான வேட்டை நாய்கள்.''

''நிச்சயமாகத் தெரியுமா?''

''வெகு நிச்சயமாகத் தெரியும், மேன்மை தங்கியவரே.''

''நீ சொல்வது சரியே. ஜெனரலின் நாய்கள் எல்லாமே விலையுயர்ந்தவை. நல்ல ஜாதி நாய்கள். ஆனால் இது - அதைப் பார்த்தாலே தெரிகிறதே! அசிங்கம் பிடித்த குப்பை மேட்டுத் தெரு நாய்! இதைப் போய் யாரேனும் வளர்ப்பார்களா என்ன? உனக்கென்ன பயித்தியம் பிடித்திருக்கிறதா? இப்படிப்பட்ட ஒரு நாய் மாஸ்கோவிலோ அல்லது பீட்டர்ஸ்பர்கிலோ இருந்திருந்தால் அதற்கு என்ன ஆகியிருக்கும் என்பது உனக்குத் தெரியுமா? சட்டத்தைப் பற்றி யாரும் கவலைப்பட மாட்டார்கள். நொடியில் அதைத் தீர்த்துக் கட்டிவிடுவார்கள். நீ ஒரு அட்டூழியத்திற்கு பலியாகியிருப்பவன் க்ருயுக்கின். இதை நீ சும்மா விட்டு விடக் கூடாது. அவனுக்குக் கட்டாயம் ஒரு பாடம் கற்பிக்கப்பட வேண்டும்... ஏற்கனவே கற்பிக்கப் பட்டிருக்க வேண்டியது...''

''ஒருவேளை, இது ஜெனரலுடைய நாய்தானோ என்னவோ'' என்று உரத்த சிந்தனையாய், கூறிக் கொண்டான் கான்ஸ்டபிள். 'வெறுமே அதைப் பார்ப்பதால் மட்டும் தீர்மானமாகச் சொல்லி விட முடியாது. இதே சாயலுள்ள நாய் ஒன்றை நான் அவர் வீட்டு வெளி முற்றத்தில் சமீபத்தில் ஒருநாள் பார்த்திருக்கிறேன்.''

''ஆமாம், இது ஜெனரலின் நாய்தான் என்பதில் சந்தேகமே யில்லை,'' என்று கூட்டத்திலிருந்து குரல் எழுந்தது.

'ம்ம்ம்! எனக்குக் கோட்டு அணிவித்து விடு, எல்ட்ரின்... குளிர்காற்று என் மீது வந்து மோதுவதாக உணர்ந்தேன். உடல் நடுங்குகிறது எனக்கு. அதை ஜெனரலிடம் எடுத்துச் சென்று அவர்களிடம் கேள். நான் அதைக் கண்டுபிடித்ததாகவும், அவர்களிடம் அனுப்பி வைத்ததாகவும் சொல். மேலும், அதைத் தெருவில் திரிய விட வேண்டாமென்று அவர்களிடம் சொல். ஒருவேளை, அது விலையுயர்ந்த நாயாக இருக்கக் கூடும். கண்ட காட்டுமிராண்டியும் சிகரெட்டுகளை அதன் மூக்கில் திணிக்கலாம் என்று நினைக்கத் தொடங்கி விட்டால் அது விரைவிலேயே கெட்டுப் போய் விடும். நாய் என்பது மிகவும் நளினமான பிராணி. நீ மரியாதையாக உன் கையை கீழே இறக்கு மரமண்டையே! உன்னுடைய முட்டாள் விரலை ஒவ்வொரு வரிடமும் காட்டுவதை நிறுத்திக் கொள். அது உன்னுடைய தவறுதான்...''

''இதோ, நம்முடைய ஜெனரலின் சமையற்காரர் வருகிறார். அவரிடம் கேட்போம்... ஹேய், இதோ பார், ப்ரோக்கோர்! இங்கே வா, கிழவா! இந்த நாயை நன்றாகக் கவனி... இது உங்களுடையதா?''

''அடுத்தது என்ன! எங்கள் வாழ்நாளிலேயே இப்படியொன்றை நாங்கள் வைத்துக் கொண்டிருந்ததே இல்லை''.

''இனிமேல் வேறெந்த விசாரணையும் மேற்கொள்ள வேண்டிய தில்லை'', என்றான் ஒச்சுமெலோவ். ''இது ஒரு தெருநாய்தான். இங்கே நின்று கொண்டு இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப் பதில் என்ன லாபம்? இது ஒரு தெருநாய் என்று உனக்கு சொல்லப்பட்டு விட்டது. எனவே இது ஒரு தெருநாய்தான். அதைக் கொன்று விட்டு அதோடு விஷயத்தை முடித்துக் கொள்.''

''இது எங்களுடையது இல்லை,'' என்று தொடர்ந்தான் ப்ரோக்கோர். ''இது ஜெனரலுடைய சகோதரருக்குச் சொந்தமானது. சிறிது காலம் முன்புதான் அவர் இங்கு வந்து சேர்ந்தார். நம்முடைய ஜெனரலுக்கு 'போர்ஸோய்'கள் மீது எந்தவித ஆர்வமுமில்லை. ஆனால், அவருடைய சகோதரருக்கு அவற்றைப் பிடிக்கும்...''

''என்ன, ஜெனரலின் சகோதரர் வந்தாகி விட்டதா, வ்ளாடிமிர் இவானிச்?'' என்று ஆச்சரியத்தில் கூவினான் ஒச்சிமெலோவ். அவனுடைய முகமெங்கும் ஒரு பரவசச் சிரிப்பு பரவியது. ''என்ன ஒரு இனிமையான செய்தி! இதில், எனக்கு இந்த விஷயம் தெரியவே தெரியாது. இங்கேயே தங்கியிருப்பதற்காக வந்திருக்கிறாரா?''

''சரியாச் சொன்னீர்கள்.''

''என்ன ஆச்சரியம்! தன் சகோதரரைப் பார்க்க விரும்பினார். இதில், எனக்கு விஷயம் தெரியவே தெரியாது. ரொம்ப சந்தோஷம்! எடுத்துக் கொள்... இது ஒரு அழகான, சின்ன நாய்! அவன் விரலைக் கடித்து விட்டதா? ஹா - ஹா - ஹா! இதோ பார், வீணாக நடுங்காதே! கிர்-கிர்... குட்டி ராஸ்கல் கோபமா யிருக்கிறான்... என்ன மாதிரி நாய்க்குட்டி!''

ப்ரோக்கோர் அந்த நாயைத் தன்னிடம் அழைத்துக் கொண்டு அந்த விறகுக் கொட்டிலை விட்டு நாயுடன் வெளியேறினான். கூட்டம் க்ருயுங்கினைப் பார்த்துச் சிரித்தது.

''நான் உன்னை விடப் போவதில்லை!'' என்று ஒச்சுமெலோவ் அவனை அச்சுறுத்தி விட்டு, பிறகு, தனது பிரமாதமான கோட்டை தன்னைச் சுற்றிப் போர்த்திக் கொண்டு, தொடர்ந்து சந்தையைக் கடந்து தன் வழியே சென்றான். ●



படிப்பகம்

www.padippakam.com



# ஜெயமோகனின் திருட்டு - ஒரு சான்றாதாரம்

(சொல்புதிது டிசம்பர் 2001, இதழ் 8க்குப் பின்னர் இதழ் 9 என்று வந்த இதழில் (இவ்விடத்தில் வெளியிடப்பட்ட தேதி இல்லை. இதழ் வெளிவந்த தேதியை கண்டுபிடிப்பவருக்கு ஏதாவது பரிசு கொடுக்கலாம்) தமிழ்இசை பற்றிய சில கட்டுரைகளும், இசை பற்றிய ஒருவரது பேட்டியும் வந்துள்ளது.

பக்கம் 4இல் உள்ள எஸ்.அருண்மொழி நங்கை பெயரில் வெளிவந்திருக்கும் ''தமிழிசை ஒரு பின்னோக்கிய பார்வை'' என்ற கட்டுரை 1997இல் வெளிவந்த ''மனோரமா இயர் புக்'' பக்கங்கள் 176 முதல் 185 வரை உள்ள ''தமிழக இசை'' என்ற கட்டுரையில் பக். 182 முதல் 185 வரை உள்ள பகுதியின் முழுமையான ''காப்பி''யாக உள்ளது. மனோரமா இயர்புக்கில் அந்தக் கட்டுரையை எழுதியவர் தற்பொழுது தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தில் இசைத்துறைத் தலைவராகப் பணிபுரியும் பேராசிரியை திருமதி இ.அங்கயற்கண்ணி அவர்கள்

இக்கட்டுரை சிலபகுதிகள் நீக்கப்பட்டு, சில சொற்கள் மாற்றப்பட்டு ('வழங்கிய' என்பதற்கு 'இயற்றிய' என்றும் 'இந்தளம்' என்ற தமிழ்ப் பண்ணின் பெயர் 'இளந்தளம்' என்றும் மாற்றப்பட்டுள்ளது. இளந்தளம் என்று எந்தப் பண்ணிற்கும் தமிழில் பெயர் இல்லை என்பதை காப்பி அடிக்கும் அவசரத்தில் மறந்து விட்டனர் போலும்.

ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்பதற்கு நாயன்மார்கள் என்றும், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் என்பதற்கு - ஆழ்வார்கள் என்றும், இக்காலங்களில் என்பதற்கு - இக்கால கட்டங்களில், பேணினர் என்பதற்கு - வளர்த்தனர் என்றும் வெளியிடப்பட்டுள்ளது. இத்தகைய முழுமையான காப்பிக்கு தமிழில் திருட்டு என்று பெயர்.

9 இதழ் ஆசிரியர் குழுவில் உள்ளவர்கள், 1. ஜெயமோகன், 2.வேதசகாயகுமார், 3. அருண்மொழி நங்கை, 4. மோகனரங்கன், 5. சூத்ரதாரி. ஆசிரியர் - சரவணன் 1978 கட்டுரை எஸ்.அருண் மொழி நங்கை பெயரில் உள்ளது. (இவர் ஜெயமோகன் துணைவியார்.)

இக்கட்டுரைத் திருட்டு பற்றி நண்பர்களிடம் உரையாடும்போது ஒருவர் இந்த ஒரு கட்டுரைதானே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்ற கட்டுரைகள் உண்மையானவைதான் என்று எப்படி நம்புவது என்றார். அடுத்தவர் பொருளை அபகரிப்பது அரசியலில் அன்றாட நடைமுறைதான். இது இலக்கியத்திலும் தொடர வேண்டுமா? ஆம், மக்கள் முட்டாள்கள் என்பது அரசியலுக்கு சரிதான். இலக்கிய வாசகர்கள், சக எழுத்தாளர்களுக்குமா? - இத்திருட்டை வெளிச்சத்துக்குக் கொண்டு வர எனக்கு உதவிய முனைவர் சு. துரை அவர்களுக்கு என் நன்றி. - பொ. வேல்சாமி)

**சொல் புதிதுவில் வெளிவந்த வடிவம்**

## தமிழிசை - ஒரு பின்னோக்கிய பார்வை

**எஸ். அருண்மொழி நங்கை**

பெண்பாற் இயலிசைப் புலவரான காரைக்காலம்மையார் (5ஆம் நூற்றாண்டு) இயற்றிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இசை உலகில் முக்கியத்துவம் பெறுகின்றன. பதிக மரபிற்குப் புத்துயிரூட்டிய அம்மையார் நட்டபாடை, இளந்தளம் ஆகிய இரு பண்களில் பாடிய பதிகங்களைப் பின்வந்த இயலிசைப் புலவர்கள் முன்னோடியாகக் கொண்டனர்.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் சைவ-வைணவ சமயங்களைப் பரப்புவதற்கும், இறைவனைத் தலங்கள் தோறும் சென்று வழிபடுவதற்கும் பல்லாயிரக் கணக்கான தேவாரப் பாடல்களையும், திவ்வியப் பிரபந்தப் பாடல்களையும் இயற்றித் தமிழிசையை வளர்த்தெடுத்தனர். இக்கால கட்டங்களில் வாழ்ந்த பல்லவ மன்னர்கள் (7-ஆம் நூற்றாண்டு) இசைக் கலையை வளர்த்தனர் என்பதற்கு மகேந்திரவர்ம பல்லவ மன்னன் புதுக்கோட்டையில் உள்ள குடுமியான் மலையில் பொறித்த இசை பற்றிய கல்வெட்டே சான்று.

இராசராச சோழன் காலத்தில் (கி.பி. 985-1014) தேவாரப் பாடல்கள் பாடுவதற்குக் கோயில்களில் 48 ஓதுவார்களுக்கும், உடுக்கை, 'கொட்டி மத்தளம்' வாசிப்போர் இருவருக்கும் ஆக 50 பேருக்குக் கொடுக்கப்பட்ட நிவந்தங்கள் பற்றிய செய்திகளைத் தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுக்கள் உரைக்கின்றன.

பதின்மூன்றாம் நூற்றாண்டில், சாரங்கதேவர் இயற்றிய 'சங்கீத ரத்னாகரம்' எனும் வடமொழி இசை இலக்கண நூலில், 'தேவார வர்த்தினி' எனும் அடைமொழியுடன் பல தமிழ்ப்பண்களும், பெயர்களும், இலக்கணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர், தமிழக இசையின் தாளங்களை விளக்கும் வகையில் பல்லாயிரக்கணக்கில் முருகப்பெருமானின் பெயரில் திருப்புகழ்ப் பாடல்களைச் சந்த நடையில் பாடியருளினார். அவையே தமிழக இசையின் தாளக் கூறுகளுக்கு மூல இலக்கிய ஆதாரங்களாகத் திகழ்கின்றன. இன்றைக்கு வழக்கில் உள்ள நூற்றுக்கணக்கான தாளங்கள் திருப்புகழ்ப் பாடல்களின் அமைப்பிலிருந்தே பெறப்படுகின்றன.

சோழர் காலத்தை அடுத்து தமிழகத்தை ஆண்ட விசயநகர, நாயக்கர், மராட்டிய (17, 18, 19ஆம் நூற்றாண்டுகள்) மன்னர்களும் இசையைப் போற்றிப் பேணினர். அம்மன்னர்களின் தாய்மொழிப் பாடல்கள் ஆதரிக்கப்பட்டன. இவை தமிழிசை மரபை ஒட்டிப் பாடப்படும் 'கர்நாடக சங்கீதம்' எனும் பெயரில் குறிக்கப்பட்டன. இவ்வாறு கோயில்களிலும், அரசவைகளிலும் இருந்து வந்த தமிழக இசை, பொது மக்களுக்காக அரங்குகளில் வேற்று மொழிப் பாடல்கள் மூலம் அறிமுகப் படுத்தப்பட்டது. இக்கால கட்டங்களில் முத்துத் தாண்டவர் (1560-1640), மாரிமுத்துப் பிள்ளை (1712-1787), அருணாச்சலக் கவிராயர் (1711-1778) முதலானோர் பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் பிரிவுகளைக் கொண்ட கீர்த்தனை, பதம் முதலான இசைப் பாடல்கள் இயற்றியிருப்பினும், அவை தமிழல்லாது வேற்று மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு மன்னர்கள் ஆண்ட காலத்தில் பாடப்பட்டதால் ஆதரிக்கப்படாமல் போய்விட்டன.

இதையடுத்து தஞ்சையில் வாழ்ந்த சங்கீத மும்மூர்த்திகள் என்று போற்றப்பெறும் தியாகராஜ சுவாமிகள் (1767-1847), முத்துசுவாமி தீட்சதர் (1775-1834), சியாமா சாஸ்திரிகள் (1762-1827) ஆகியோர் தெலுங்கு, வடமொழியில் பல பாடல்கள் இயற்றி கர்நாடக இசையை மேம்படுத்தினர். இம்மூவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாதலால் இவர்கள் இயற்றிய பாடல்களின் இசைமரபு தேவாரம் மற்றும் தமிழிசைப் பாடல்களை அடியொற்றியவை எனக் கருதலாம். இவர்களை அடுத்து, கோபால கிருஷ்ண பாரதியார், வேதநாயகம் பிள்ளை, இராமலிங்க அடிகளார், நீலகண்ட சிவன், ஆகியோர் தமிழ்ப் பாடல்களை



படிப்பகம்

www.padippakam.com

இயற்றினர். இருபதாம் நூற்றாண்டில் கோடீசுர ஐயர், பாபநாசம் சிவன், மகாகவி பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை ஆகியோர் தமிழ்க் கீர்த்தனைகள் இயற்றித் தமிழிசையை வளப்படுத்திய போதிலும், சங்கீத மும்மூர்த்திகளின் பாடல்களால் செவ்விசை அரங்குகளில் தமிழ்ப் பாடல்கள் பிரபலமடையவில்லை. இந்நிலையில் தமிழ் நாடகங்களில் தமிழ்ப் பாடல்கள் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தின. சங்கரதாஸ் சுவாமிகள், மதுரை மாரியப்ப சுவாமிகள் பாடல்கள் குறிப்பிடத்தக்கன. பின்னர் திரைப்படங்களில் தமிழிசைப் பாடல்கள் இடம் பெறும் காலகட்டம் தொடங்கியது. குறிப்பாக எம்.கே.தியாகராச பாகவதர், ஜி.என்.பாலசுப்பிரமணியம், தண்டபாணி தேசிகர், பி.யூ.சின்னப்பா போன்றோர்கள் செவ்விசையை அடிப்படையாகக் கொண்ட திரைப்படப் பாடல்கள் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றன.

செவ்விசை அரங்குகளில் வடமொழி, தெலுங்குப் பாடல்கள் பாடப்பட்டு வந்த நிலையிலும், தமிழ்ப்பாடல்களுக்குரிய இடம் தரப்படாத நிலையிலும், தமிழ்நாட்டு இசையரங்குகளில் தமிழ்ப் பாடல்கள் முழங்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு, டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் சீரிய முயற்சியில் சென்னையில் 1943ஆம் ஆண்டில் தமிழிசைச் சங்கம் நிறுவப்பட்டது. அங்கு ஆண்டுதோறும் நடைபெற்று வரும் தேவாரப் பண்ணாராய்ச்சி மாநாட்டில் ஆராய்ந்ததில் 25 பண்களுக்குரிய இன்றைய இராகங்கள் கிடைத்துள்ளன. அவை பாடப்படும் காலங்களுக்கேற்ப பகற்பண்கள், இரவுப் பண்கள், பொதுப் பண்கள் என வகைப்படுத்தியுள்ளனர்.

இத்தகு சிறப்பு வாய்ந்த தமிழிசை சென்ற நூற்றாண்டு வரை செவ்விசையாகவே இருந்தது. பொதுமக்கள் விரும்பி இலயித்துக் கேட்கும், வண்ணமிருந்தது. ஆனால், இந்த நூற்றாண்டில் இந்நிலை மாறியுள்ளது. இன்றைய நிலையில் தமிழிசை என்றாலே, புதுப்புதுக் கவிஞர்கள் இயற்றிய பக்திப் பாடல்களும், திரை இசைப் பாடல்களுமே நினைவுக்கு வருகின்றன. தமிழிசையில் உயிர்நாடியாகத் திகழும் இன்னிசை தன்மை மாறி, ஒத்திசையும் இன்னிசையும் கலந்ததொரு கலப்பிசையாகத் தமிழிசை இன்றைய திரை இசையமைப்பாளர்களால் புது உருவம் அடைந்துள்ளது. இப்புது உருவத்தையே மக்கள் விரும்பி மயங்குவதால், தமிழில் செவ்விசைப் பாடல்கள் அருகி வருகின்றன.

நாளைய தலைமுறையினருக்குத் 'தமிழிசை' சென்று சேருமா என்பதே ஐயம்தான்.

---

'மனோராமா இயர் புக்'இல் வெளிவந்த மூலக் கட்டுரை

# காலந்தோறும் தமிழிசை

**முனைவர் இ. அங்கயற்கண்ணி,**
இசைத்துறை தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பெண்பாற் இயலிசைப் புலவரான காரைக்காலம்மையார் (5 ஆம் நூற்றாண்டு) வழங்கிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் இசை உலகில் முக்கியத்துவம் பெறுகின்றன. பதிக மரபிற்கு புத்துயிரூட்டி அம்மையார் நட்ட பாடை, இந்தளம் ஆகிய இரு பண்களில் பாடிய பதிகங்களைப் பின்வந்த இயலிசைப் புலவர்கள் முன்னோடியாகக் கொண்டனர்.

இவ்வகையில் திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர் முதலான நாயன்மார்களும் (7,8 ஆம் நூற்றாண்டு), பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் முதலான ஆழ்வார்களும், சைவ வைணவ சமயங்களைப் பரப்புவதற்கும் இறைவனைத் தலங்கள் தோறும் சென்று வழிபடுவதற்கும் பல்லாயிரக் கணக்கான தேவாரப் பாடல்களையும் திவ்வியப் பிரபந்தப் பாடல்களையும் இயற்றித் தமிழிசையை வளர்த்தெடுத்தனர். இப்பாடல்களின் இசை மரபு, கோயில்களில் வழிவழியாக வந்த ஓதுவார்களாலும், அரையர்களாலும் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன.

இக்காலத்தில் வாழ்ந்த பல்லவ மன்னர்கள் இசையறிஞராக விளங்கி, இசைக் கலையை வளர்த்தனர். மகேந்திரவர்ம பல்லவன் (7ஆம் நூற்றாண்டு) புதுக்கோட்டையில் உள்ள குடுமியான்மலையில் இசை பற்றியதொரு கல்வெட்டினைப் பொறித்திருந்தான்.

இராசராச சோழன் காலத்தில் (கி.பி. 985-1014) தேவாரப் பாடல்கள் பாடுவதற்குக் கோயில்களில் 48 ஓதுவார்களுக்கும், உடுக்கை, கொட்டி மத்தளம் வாசிப்போர் இருவருக்கும் ஆக 50 பேருக்கு கொடுக்கப்பட்ட நிவந்தங்கள் பற்றிய செய்திகளைத் தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுக்கள் உரைக்கின்றன.

இன்றைக்குத் தேவாரப் பாடல்களைப் பாடிவரும் முறையினை அடிப்படையாகக் கொண்டு சென்னை தமிழிசைச் சங்கத்தில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் தேவாரப் பண்ணாராய்ச்சி மாநாட்டில் ஆராய்ந்ததில் இருபத்தி நான்கு பண்களுக்குரிய இன்றைய இராகங்கள் கிடைத்துள்ளன. இவை பாடப்பட்டு வரும் காலங்களுக்கேற்ப பகற் பண்கள், இரவுப் பண்கள், பொதுப் பண்கள் என்றவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| எண் | பண்கள் | இராகம் |
|---|---|---|
| பகற் பண்கள்: | | |
| 1. | புறநீர்மை | பூபாளம் |
| 2. | காந்தாரம் | நவரோசு |
| 3. | பியந்தைக்காரந்தாரம் | நவரோசு |
| 4. | கௌசிகம் | பைரவி |
| 5. | இந்தளம் | நாதநாமக்ரியை |
| 6. | தக்கேசி | காம்போதி |
| 7. | நட்டராகம் | பந்துவராளி |
| 8. | சாதாரி | பந்துவராளி |
| 9. | நட்டபாடை | கம்பீர நாட்டை |
| 10. | பழம் பஞ்சரம் | சங்கராபரணம் |
| 11. | காந்தார பஞ்சமம் | கேதார கௌளை |
| 12. | பஞ்சமம் | ஆகிரி |
| இரவுப் பண்கள் | | |
| 13. | தக்கராகம் | காம்போதி |
| 14. | பழந்தக்க ராகம் | சுத்த சாவேரி |
| 15. | சீகாமரம் | நாதநாமக்ரியை |
| 16. | கொல்லி | நவரோசு |
| 17. | கொல்லிக் கௌவாணம் | நவரோசு |
| 18. | வியாழக்குறிஞ்சி | சௌராஷ்ட்ரம் |
| 19. | மேகராகக் குறிஞ்சி | நீலாம்பரி |
| 20. | குறிஞ்சி | குறிஞ்சி |
| 21. | அந்தாளிக்குறிஞ்சி | சாமா |
| பொதுப் பண்கள் | | |
| 22. | செவ்வழி | எதுகுலகாம்போதி |
| 23. | செந்துருத்தி | மத்தியமாவதி |
| 24. | திருத்தாண்டகம் | அரிகாம்போதி |

பதின்மூன்றாம் நூற்றாண்டில் சாரங்கதேவர் இயற்றிய சங்கீத ரத்னாகரம் என்னும் வடமொழி இசை இலக்கண நூலில் தேவார வர்த்தினி என்னும் அடைமொழியுடன் பல தமிழ்ப்பண்களும், பெயர்களும் இலக்கணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர், தமிழக இசையின் தாளங்களை விளக்கும் வகையில் பல்லாயிரக் கணக்கில் முருகப்பெருமானின் பெயரில் திருப்புகழ்ப் பாடல்களை சந்தநடையில் பாடியருளினார். இவையே தமிழக இசையின் தாளக்கூறுகளுக்கு மூல இலக்கிய ஆதாரங்களாகத் திகழ்கின்றன. இன்றைக்கு வழக்கிலுள்ள நூற்றுக்கணக்கான தாளங்கள் திருப்புகழ்ப் பாடல்களின் அமைப்பிலிருந்தே பெறப்படுகின்றன.

சோழர் காலத்தை அடுத்துத் தமிழகத்தை ஆண்ட விசயநகர, நாயக்க, மராட்டிய (17,18,19ஆம் நூற்றாண்டுகள்) மன்னர்களும், இசையைப் போற்றி வளர்த்தனர். அம்மன்னர்களின் தாய்மொழி தமிழல்லாது தெலுங்கு, மராத்தி, இந்தி மொழிகளாக இருந்ததால் தமிழிசையின் செல்வாக்குக் குன்றி, தமிழ் நாட்டில் தெலுங்கு, கன்னடம், வடமொழி, மராத்தி, இந்தி முதலான வேற்று மொழிப் பாடல்கள் ஆதரிக்கப்பட்டன. இவை தமிழ் இசை மரபை ஒட்டிப் பாடப்பட்டு ''கருநாடக சங்கீதம்'' என்னும் பெயரில் குறிக்கப்படலாயின.

இவ்வாறு கோயில்களிலும், அரசவைகளிலும் இருந்து வந்த தமிழக இசை, பொதுமக்களுக்காக அரங்குகளில் வேற்று மொழிப் பாடல்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கால கட்டங்களில் முத்துத் தாண்டவர் (1560-1640), மாரிமுத்தா பிள்ளை (1712-1787), அருணாசலக் கவிராயர் (1711-1778) முதலான தமிழ் இயலிசைப் பாவலர்கள் தோன்றி, பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் பிரிவுகளைக் கொண்ட கீர்த்தனை, பதம் முதலான இசைப்பாடல்கள் இயற்றியிருப் பினும், இவை தமிழல்லாது வேற்றுமொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மன்னர்கள் ஆண்ட காலத்தில் பாடப் பட்டதால் ஆதரிக்கப்படாமல் போய்விட்டன.

இதையடுத்துத் தஞ்சையில் வாழ்ந்த சங்கீத மும்மூர்த்திகள் என்று போற்றப் பெறும் தியாகராஜ சுவாமிகள் (1767-1847), முத்துசுவாமி தீட்சிதர் (1775-1834), சியாமா சாஸ்திரிகள் (1762-1827) ஆகியோர் தெலுங்கு, வடமொழியில் பல பாடல்கள் இயற்றிக் கருநாடக இசையை மேம்படுத்தினர். இவர்கள் மூவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாதலால், இவர்கள் இயற்றிய பாடல்களின் இசை மரபு தேவாரம் மற்றும் தமிழிசைப் பாடல்களை அடியொற்றியவை எனக் கருதலாம். இவர்களை அடுத்து கோபாலகிருஷ்ண பாரதியார், வேதநாயகம் பிள்ளை, இராமலிங்க அடிகளார், நீலகண்ட சிவன் ஆகியோர் தமிழ்ப் பாடல்கள் இயற்றினர். இருபதாம் நூற்றாண்டில் கோடீசுர ஐயர், பாபநாசம் சிவன், மகாகவி பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை ஆகியோர் தமிழ்க் கீர்த்தனைகள் இயற்றித் தமிழிசையை வளப்படுத்தினர். இருந்த போதிலும் சங்கீத மும்மூர்த்திகளின் பாடல்களால் செவ்விசை அரங்குகளில் தமிழ்ப் பாடல்கள் பிரபலம் அடையவில்லை.

இந்நிலையில் தமிழ் நாடகங்களில் தமிழ்ப் பாடல்கள் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தின. சங்கரதாஸ் சுவாமிகள், மதுரை மாரியப்ப சுவாமிகள் பாடல்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. இதில் நடித்த எஸ்.ஜி.கிட்டப்பா, கே.பி.சுந்த ராம்பாள் போன்றோர் தமிழ் மக்களிடையே அடைந்த செல் வாக்கு இங்கு நினைவு கூரத் தக்கது. இந்நாடகங்கள் வாயிலாக சென்ற நூற்றாண்டில் தமிழிசை வளர்ந்தது.

பின்னர் திரைப்படங்களில் தமிழிசைப் பாடல்கள் இடம்பெறும் கால கட்டம் ஏற்பட்டதும் நாடகங்கள் போற்றுவாரற்றுப் போயின. குறிப்பாக எம்.கே.தியாகராச பாகவதர், ஜி.என்.பாலசுப் பிரமணியம், தண்டபாணி தேசிகர், பி.யு. சின்னப்பா போன்றோரின் செவ்விசை அடிப்படையிலான திரைப்படப் பாடல்கள் பெரும் வரவேற்புப் பெற்றன.

செவ்விசை அரங்குகளில் வடமொழி, தெலுங்குப் பாடல்கள் பாடப்பட்டு வந்த நிலையிலும், தமிழ்ப் பாடல்களுக்கு உரிய இடம் தரப்படாத நிலையிலும், தமிழ்நாட்டு இசையரங்குகளில் தமிழ்ப்பாடல்கள் முழங்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு டாக்டர் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அவர்களின் சீரிய முயற்சியில் சென்னையில் தமிழிசைச் சங்கம் 1943ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதன் வாயிலாக ஆண்டுதோறும் தேவாரப் பண்ணாராய்ச்சி மாநாடுகளும், தேவார, திருப்புகழ், திவ்வியப் பிரபந்த இசையரங்குகளும் இன்றளவும் நடைபெற்று பல நல்ல ஆக்கப் பணிகள் தொடர்கின்றன. இவ்வாறு செல்வாக்குப் பெற்ற, இன்று நம்மிடையே உள்ள ஓதுவார்களில் தருமபுரம் பி.சுவாமிநாதன், திருப்பனந்தாள் மூத்துக் கந்தசாமி தேசிகர், வி.சோமசுந்தரம், காஞ்சிபுரம் எம்.என்.வேங்கடவரதன் (திவ்வியப் பிரபந்தம்) ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

## தமிழிசையின் இன்றைய போக்கு

தமிழக இசைக்கேயுரிய சிறப்பு நிலைகளைத் தொகுத்துக் காண்கையில், தமிழக இசையானது இயற்கையினின்றும் தோன்றியது. இயற்கைச் சூழ்நிலைக்கேற்ப ஐந்து நிலங்களாகப் பிரிக்கப்பட்டு அந்தந்த நிலப்பகுதி இசையை வளப்படுத்தி யமை, மக்களின் வாழ்க்கை முறையோடு பின்னிப் பிணைந்து பிரிக்க முடியாத கூறாக இருந்தமை, வெறும் பொழுதுபோக்குக் கலையாக இல்லாமல் மனிதனைப் பண்படுத்தும் பாங்கில் இருந்தமை, நாட்டுப்புற இசையாக இருந்து பண்படுத்தப் பட்டுத் தமக்கேயுரிய இசை இலக்கண முறையைக் கொண்டு வளர்ந்து, தற்போது கருநாடக இசை என்னும் பெயரில் வழங்கப்பட்டு வருவது ஆகிய நிலைகளைக் கொண்டது.

இத்தகு சிறப்பு வாய்ந்த தமிழிசை சென்ற நூற்றாண்டு வரை செவ்விசையாகவே இருந்தது. பொது மக்களும் விரும்பிக் கேட்கும் வண்ணம் இருந்தது. ஆனால் இந்த நூற்றாண்டில் இந்நிலை மாறியுள்ளது. இன்றைய நிலையில் தமிழிசை என்றாலே புதுப்புதுக் கவிஞர்கள் இயற்றிய பக்திப் பாடல்களும், திரைப்படப் பாடல்களுமே நினைவுக்கு வருகின்றன. இவை கிதார், பியானோ போன்ற இசைக் கருவிகளின் துணையோடு இசையமைக்கப்படுகிற மெல்லிசைப் பாடல்களாகவும், திரைஇசைப் பாடல்களாகவும் திகழ்கின்றன.

தமிழிசையின் உயிர்நாடியாக விளங்கும் மெலடித்தன்மை மாறி, ஹார்மோனியம், மெலடியும் கலந்ததொரு கலப்பிசையாகத் தமிழிசை இன்றைய திரை இசை அமைப்பாளர்களால் புது உருவம் அடைந்துள்ளது. ''இவை மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்று தமிழில் செவ்விசைப் பாடல்கள் அருகியுள்ளன என்னும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

தமிழகத்தில் இசையைப் பாடமாகத் தரும் கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களிலும் தெலுங்கு, வடமொழிப் பாடல்களே அதிக அளவில் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இசை இலக்கணங்களும் வடமொழி நூல்களில் காணப்படும் செய்தி களின் அடிப்படையிலேயே பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. என்றாலும் இந்நிலை மாறுவதற்குரிய முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இசைத்துறை நிறுவப்பட்டு தேவாரம், திருப்புகழ் முதலான வற்றில் உயர் ஆய்வுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை நூல்களாகவும் வெளிவந்துள்ளன. இவ்வாறே சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும், இசை ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு நூல்கள் வெளிவந்துள்ளன. முனைவர் ஏ.என்.பெருமாளின் தமிழர் இசை, ஆர். ஆளவந்தார் எழுதிய தமிழர் தோற்கருவிகள், முனைவர் இ.அங்கயற்கண்ணி எழுதியுள்ள பஞ்சமரபின் இசைமரபு ஆகியவை குறிப்பிடத் தக்கவை. ஓதுவார்கள் பாடியுள்ள பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு சுர தாளக் குறிப்பு நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. இவையனைத்தும் உரிய வகையில் இன்றைய தலைமுறை யினருக்குச் சென்றடைய வேண்டும்.

வளர்ந்து வரும் அறிவியல் உலகில், இயற்பியல், கணிதவியல், மருத்துவம், விவசாயம் ஆகிய அறிவியல் துறைகளை இசை அறிவியலோடு இணைத்து கணிப்பொறி வசதிகளையும் பயன்படுத்தி ஆராயும் போக்கும் வளர வேண்டும். இத்தகைய ஆய்வுகள் உலகளவில் தமிழக இசையின் பெருமையை உயர்த்தும் என்பதில் ஐயமில்லை. ●

படிப்பகம்

www.padippakam.com



# நினைக்கத் தெரிந்த மனமே....

- வளர்மதி

தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக எதிரியின்மீது பாய்வது உயிர்ப் பிராணிகளின் இயற்கைக் குணம் - *துன்பக்கேணி, புதுமைப் பித்தன்*

அறிவுத் துறைகளுள் செயல்படுபவர்களுக்கு அவசியமான, உகந்த லட்சணமாக பொதுவாக எல்லோராலும் சொல்லப் படுவது அறிவு நாணயம் (intellectual integrity). தான் நம்பும், எழுதும், பேசும், பரப்பும் கருத்துகளுக்கு உண்மையாக, சாத்தியமான அளவில் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் இருக்க முயற்சிப்பது. எழுத்தளவில், தரவுகளையும் கருத்து களையும் மறைக்காமல், திரிக்காமல் கையாளும் அடிப்படை நேர்மை இதற்கு முதல் நிபந்தனை. அறிவுத் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் குறித்து எழும் முதல் கேள்வி இதுவாகத் தான் இருக்கிறது.

இன்னொரு கேள்வியும் இருக்கிறது. அது intellectual conscience; அதாவது, அறிவுத்திற மனசாட்சி. அறியாதவற்றை அறிந்தது போலப் பேசாமலிருப்பது; சற்று விரிந்த அளவில், தனது அறிவின் எல்லைகளைப் பற்றிய (குறைந்தது ஒரு மௌனமான) ஒப்புதலுடன், அதற்குள் நின்று மட்டுமே பேசுவது. வேறு வகையில்சொல்வதென்றால், "all in all அழகுராஜா" (ஜெயமோகன்) மாதிரி, எல்லாவற்றைப் (தான் அறிந்திராதவை, அல்லது மேலோட்டமாக மட்டுமே அறிந்தவை) பற்றியும் அதிரடியான கருத்துகளை உதிர்த்துக் கொண்டிருக்காமல், ஒரு சிறு நிதானத்துடன், எல்லைகளை ஒப்புக்கொண்டு எழுதுவது.

தமிழ் சிற்றிதழ் உலகில் எத்தனை பேர் இந்தக் கேள்விகளுக்கு முன் நிற்பார்கள்? தெரியவில்லை.

எப்படியாக இருந்தாலும் (யார் எக்கேடு கெட்டுப் போனாலும்) தரவுகளையும் கருத்துகளையும் திரிக்காமல் பொருள்கோடல் (interpretation) முயற்சிகளில் இறங்கவேண்டும் என்பது அறிவுத் துறைகளின் முதல் நிபந்தனை என்பதில் யாருக்கும் எந்த மறுப்பும் இருக்க முடியாது (என்று நினைக்கிறேன்).

இந்தப் பீடிகைகள், இங்கு காரணத்தோடுதான் - திருவாளர். ரவிக்குமார்.

அசந்தர்ப்பமான ஒரு சந்தர்ப்பத்தில் (காலச்சுவடு அலுவலகத் திற்குள் வைத்து), ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பாக தான் எழுதியவற்றையெல்லாம் ஒருமுறை அவர் புரட்டிப் பார்க்க நேர்வதாக கற்பனை செய்துகொள்வோம். எதிரே, மேசையில் ஒரு அதிநவீன lap-top; monitor அணைக்கப்பட்டிருக்கிறது. பக்கத்தில், காலச்சுவடு இதழ், செப்-அக்.2003. "கொடுங்கனவின் பாரம்" என்ற அவரது கட்டுரைப் பக்கம் விரிந்திருக்கிறது (AC என்ப தால் மின்விசிறி இல்லை; இதழின் பக்கங்கள் 'சிறகடிக்கவில்லை').

ஒரு நிமிடம், ஒரேயொரு நிமிடம், lap-top இன் monitor தானாக உயிர்பெற்று, திரையில் அவரது மனசாட்சி தோன்றுகிறது. (ரவிக்குமாரின் முகம் close-up இல்). தாடியைச் சொரிந்து கொண்டே அவரைப் பார்த்துச் சிரிக்கிறது. தோன்றியது போலவே மறைந்து, monitor அணைந்திருக்கிறது. ரவிக்குமார் ACஇலும் வியர்த்திருக்கிறார். அப்போது, தனக்குத் தானே என்ன சொல்லிக் கொள்வார்? "எப்படியிருந்த நான் இப்படி ஆயிட்டேன்!" (என் தாய்வழிப் பாட்டனார், சிவாஜி ரசிகர் மன்றப் பத்திரிகை ஒன்றை நடத்தியவர்.)

கற்பனைக்கு எல்லைகளுண்டு. உண்மைகளும் வரையறைக் குட்பட்டவை. ஆனால், பொய்களுக்கு எல்லைகளும் இல்லை, வரையறைகளும் கிடையாது. எல்லைகளுக்குட்படாத விளை யாட்டாக நிகழ்த்தும்போது, பொய் சொல்வது ஒரு கலை யாகிறது. கள்ளங்கபடமற்ற குழந்தையின் பொய்களைப் போல.

> அன்றாட வாழ்வில் மனிதர்கள் ஏன் உண்மையே பேசுகிறார்கள்? நிச்சயமாக, பொய் சொல்லக்கூடாது என்று ஏதோவொரு கடவுள் கண்டித்து வைத்திருப்பதால் அல்ல. மாறாக, உண்மை பேசுவதில் சில சௌகரியங்கள் இருப்பதனால்தான்; பொய் பேசுவதற்கு நடிப்புத்திறனும், கற்பனை சக்தியும், ஞாபக சக்தியும் நிறையவே தேவை. (ஒரு பொய்யைச் சொல்பவர், அதனால் எழக்கூடிய சிரமங்களை - முதல் பொய்யை மறைக்க, இன்னும் இருபது பொய்களைப் புனைய வேண்டியிருக்கும் - பற்றிய முன்னுணர்தல் இன்றியே சொல்கிறார் என்று ஸ்விஃப்ட் சொல்வது இதை மனதில் வைத்துத்தான்).
>
> குழந்தையாக இருந்தபோது விளையாட்டில் கொண்டிருந்த தீவிரத்தை மீண்டும் கண்டுகொள்வதில்தான் ஒரு மனிதனின் பக்குவம் அடங்கியிருக்கிறது. - நீட்ஷே

ஆனால், ரவிக்குமார் அவிழ்த்துவிட்டுக் கொண்டிருக்கும் பொய்கள், திரித்தல்கள் எத்தகையவை? கேவலமானவை, கபடத்தனம் மிகுந்தவை. பெரியாரைப் பற்றிய முதல் சுற்றுப் பொய்கள், திரித்தல்களுக்குப் பிறகு, இப்போது, மதச்சார் பின்மைக் கொள்கையின் "குறைபாடுகள், போதாமைகள் பற்றிய பரிசீலனை" என்ற பெயரில் அவர் தொடங்கி வைத்திருக்கும் 'விவாதம்' மிகுந்த ஆபத்தானது. "இந்திய வரலாற்றைப் பற்றிய மறுபரிசீலனை" என்ற போர்வையில், கடந்த 15 ஆண்டுகளில் புதிய-இடதுசாரி வரலாற்றாய்வாளர்கள் மிகக் கடுமையாக உழைத்து உருவாக்கித்தந்திருக்கும் தெளிவுகளை ஒரே அடியில் வீழ்த்திவிட முயற்சிப்பவை. நுட்பமான இந்த இந்துத்துவ வாதங்களை எதிர்கொள்ளாமல் இருப்பது அதற்குப் பலியாவது. அதனாலேயே இங்கு இதை எழுதுவது அவசியமாயிற்று.

முதலில், ரவிக்குமார் செய்திருக்கும் மட்டரகமான இரண்டு திரித்தல்களைப் பார்த்துவிடுவோம்.

பர்ட்டன் ஸ்டெய்ன், தர்மா குமார், ஐராவதம் மகாதேவன் என்று பலரை ஆதாரங்களாகக் காட்டினாலும், ரவிக்குமார் சஞ்சய் சுப்பிரமணியத்தின் கட்டுரையின்[1] வாதங்களையே பெரிதும் சார்ந்தும், திரித்தும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

சஞ்சய் சுப்பிரமணியம், தஞ்சாவூர் மாவட்டத்தில் நீண்ட

1. Kaushik Basu and Sanjay Subrahmanyam (Ed.) - Unravelling the Nation (Penguin, 1996) என்ற நூலில் உள்ள சஞ்சய் சுப்ரஹ்மண்யம் அவர்களின் Before the Leviathan: Sectarian Violence and the State in Pre-Colonial India என்ற கட்டுரை.

இக்கட்டுரை சாத்தியமானதற்கு முதல் நன்றியை காலச்சுவடுவின் புதிய ஹிஸ்டாரியன் ரவிக்குமார் அவர்களுக்கே சொல்லியாக வேண்டும் - சில காலம் விலகியிருந்த வரலாற்றுப் புலத்திற்குள் மீண்டும் நுழைய வைத்ததற்காக. படைப்பாக்கம் தொடர்பான கிளர்த்தல்களைத் தந்த சில தரவுகளை வாசிக்க நேர்ந்ததற்காகவும்.

Subaltern Studies தொகுப்பு முழுவதையும் வாசிக்கத் தந்த திரு. ராயன் அவர்களுக்கும், மற்ற நூல்களில் சிலவற்றைத் திரட்டித் தந்த (இங்கு பெயர் குறிப்பிட்டு ஜோஜியாலஜிஸ்டு கண்ணனாரின் எதிரிகள் லிஸ்டிற்குள் மாட்டிவிட விருப்பமில்லை) நண்பர்களுக்கும் எனது நன்றிகள்.



படிப்பகம்

www.padippakam.com



காலமாக[2] திப்பு சுல்தானின் பெயரைச் சொல்லி குழந்தைகளைப் பயமுறுத்தி வந்தார்கள் என்று எழுதுவது,[3] ரவிக்குமாரின் laptopஇல், ''தமிழ்நாட்டில், சமீபகாலம்வரை குழந்தைகளைப் பயமுறுத்த திப்பு சுல்தானின் பெயர் பயன்படுத்தப்பட்டதும் உண்மை''-யாக டைப் ஆகிறது (magical realism! poetic licence?)

மீண்டும், ''இந்தியாவின் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பு அதன் தனித்துவமான மக்கட்பிரிவுத் தொகுப்புகள்: இங்கு பெரும்பான்மைவாதத்தை முன்மொழிவது, அதன் அண்டை நாடுகளில் நிலவுகிற சமூகங்களுக்கு மொழிவதை விடவும் மிகவும் சிரமமானது'' (India's distinctive contribution is its peculiar demography: majoritarianism is a far more difficult proposition here than in almost any society in its neighbourhood) என்று சஞ்சய் சுப்பிரமணியம் எழுதுவதை, ''இந்தியாவின் குறிப்பிடத்தகுந்த வேறுபாடு என்னவெனில் ''பெரும்பான்வாதமாகும்'' (Majoritarianism). தன் அண்டை நாடுகளின் சமூகங்களிலிருந்து இந்தியாவை வேறுபடுத்துவது பெரும்பான்மை மதவாதத்தின் வன்முறைதான் என்கிறார் அவர்,'' என்று திரித்து எழுதுகிறார்.[4] பெரும்பான்மைவாதம் இந்தியச் சூழலில் எந்த அளவிற்கு சாத்தியம் என்று சஞ்சய் சுப்பிரமணியம் கேட்கும் கேள்வி, பெரும்பான்மைவாதம் இங்கு இயல்பானதுதான் என்ற தொனியாக திரிந்துவிடுகிறது ரவிக்குமாரின் வார்த்தைகளில்!

இந்த இரண்டு இடங்கள் மட்டுமல்ல, அவருடைய கட்டுரையின் மொத்த நோக்குமே விஷயங்களைத் திரிப்பதுதான். வேறு ஒரு சூழலில், வேறு சில காரணங்களையொட்டி, கல்வியாளர் களிடையே நிகழ்ந்து கொண்டிருக்கும் விவாதங்களில் சிலவற்றை மட்டும் பொறுக்கியெடுத்து, தனது தற்போதைய சகாக்களை திருப்தி செய்வதற்காக, நுட்பமான இந்துத்துவ வாதங்களாக மாற்றிக் கொடுக்கும் வேலையையே ரவிக்குமார் செய்து கொண்டிருக்கிறார். இதை வெறும் குற்றச்சாட்டாக வைக்காமல், தெளிவுபடுத்த முயற்சிக்கிறேன்.

பர்ட்டன் ஸ்டெய்ன், தர்மா குமார் போன்றோர் அடிப்படையில் பொருளாதார வரலாற்றாசிரியர்கள். இத்துறையில் இவர்கள் இருவரது பங்களிப்புகளுமே (விவாதத்திற்குரியவை என்றபோதிலும்) குறிப்பிடத்தகுந்தவை. தமிழ்ச்சூழலிலும்கூட அறியப்பட்டவை. இவர்கள் வழியில் வந்துள்ள சஞ்சய் சுப்பிரமணியம் தற்போது, விவாதத்தைத் தூண்டும் நோக்கில் (அதாவது, கவனத்தை ஈர்க்கும் வகையில்) சற்று அதிரடியாகவே ஆங்காங்கே கருத்துகளை உதிர்த்துக் கொண்டிருக்கிறார். இவரது பிரதான இலக்கு, Subaltern Studies குழுவினராகத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் வரலாற்றாய்வாளர்கள், அதிலும் குறிப்பாக, ஞானேந்திர பாண்டே. அப்போதைக்கப்போது திபேஷ் சக்ரவர்த்தி, பார்த்தா சாட்டர்ஜி. சில சமயங்களில் இவர்களோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளாத ரொமிலா தாப்பரும்கூட - இவர்கள் அத்தனை பேரையும் 'இடதுசாரி-தேசியவாத வரலாற்றாசிரியர்கள்' என்று சேர்த்து வைத்து அடிக்க இவர் தேர்வு செய்துகொள்ளும் soft-target இர்ஃபான் ஹபீப். (ஹபீபின் 'மார்க்சிய' வரலாற்றெழுதியலில் உள்ள குறைகளையும் வறட்டுத்தனங்களையும் பலரும் சுட்டிக்காட்டி நிராகரித்துப் பல காலமாயிற்று.)

என்றாலும், சஞ்சய் சுப்பிரமணியம் வைக்கும் 'விமர்சனங் களின்' 'ஆக்ரோஷத்தை' எப்படியாகப் புரிந்து கொள்வது? 1996 இல் வெளிவந்த நூலொன்றுக்கு பர்ட்டன் ஸ்டெயினும் இவரும் இணைந்து எழுதியுள்ள அறிமுகவுரையில் இதற்கான பதில் கிடைக்கிறது.[5]

இதில், பொருளாதார வரலாற்றாய்வுகள் பேரளவிலான (macro) நிகழ்வுகளை நுண் அளவிலான (micro) நிகழ்வுகளோடு இணைக்கத் தவறியதை ஒப்புக்கொள்ளும் இருவரும், இதன் விளைவாக, 60கள் தொடங்கி, பொருளாதார ஆய்வுகள் பின்னடைவுக்கு உள்ளாகி, கலாச்சார ஆய்வுகளும் சொல்லாடல் களன் குறித்த ஆய்வுகளும் (கல்வி நிறுவனங்கள் சார்ந்து) ஆதிக்கத்திற்கு வந்துவிட்டதையும் குறிப்பிடுகிறார்கள்.[6] இத்தகைய ஆய்வுகள், அறிவுத் தோற்றவியல், ontology மீதான அதிகப்படியான கவனக்குவிப்பில், பொருளாதார - வரலாற்று ஆய்வுகளுக்கேயுரிய, அடிப்படையான தரவுகளைப் பற்றிய பரிசீலனைகள், அலசல்களிலிருந்து விலகி, இத்துறைகளைத் தவறான வழிகளில் திசை திருப்பிவிட்டதாகவும் குறைபட்டுக் கொள்கிறார்கள். இதிலிருந்து மீளும் முயற்சியாக, பொருளாதார - வரலாற்று ஆய்வுகளை 'அவற்றுக்கேயுரிய' பழைய பாதையில் (இரண்டிற்கும் இடையிலான, அவசியமான இணைவை உருவாக்குவதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு) மீண்டும் செலுத்தும் முயற்சியாக, ஜூலை 1992 இல், லண்டன் பல்கலைக் கழகத்தின் School of Oriental and African Studies நடத்திய பட்டறையின் விளைவாக, முதல் முயற்சியாக, இந்த நூல் உருவானதையும் குறிப்பிடுகிறார்கள்.

அதாகப்பட்டது, விஷயம் இவ்வளவுதான்: 'வாழ்ந்து கெட்டவர்களின்' புலம்பல். 60 களின் இறுதிகள் வரையிலும்கூட கல்வி நிறுவனங்களில் செல்வாக்கு மிகுந்த துறைகளில் ஒன்று பொருளாதார - வரலாற்றுத் துறை. கல்வி நிறுவனங்களில் ஒரு துறைக்கு இருக்கும் செல்வாக்கின் பலாபலன்கள் - பணம், புகழ், அறிவு - அதிகாரம், அதிகாரத் தொடர்புகள் - தெரிந்தவர்கள் இந்தப் புலம்பலைப் புரிந்துகொள்ள முடியும்.

சபால்டர்ன் குழுவினரின் எழுத்துகள் ஒரு புதிய வறட்டுத் தனமாக உருவாகியிருக்கிறது என்று 1996இல் தொடங்கும் புலம்பல், யாருடைய கவனத்தையும் ஈர்க்க முடியாமல் போவதால், 2001இல் கோபமாக மாறுகிறது. ஆத்திரம் கண்ணை மறைக்க, சஞ்சய் சுப்பிரமணியம், தனது புதிய நூலின் இறுதியில், இனவெறி மிகுந்த ''சர்தார்ஜி ஜோக்'' ஒன்றைச் சொல்லி முடிக்கும் அளவுக்குச் செல்கிறார்.[7]

2. மற்றவர்களுடையது என்று குறிப்பிட்டுச் சொல்லுமிடங்கள் தவிர்த்து, அழுத்தங்கள் என்னுடையவை.

3. திப்பு சுல்தானின் பெயர் வீரத்திற்கு அடையாளமாகவே தமிழ் நாட்டு மக்களின் பொது அறிவில் பதிந்திருப்பதாகவே இதுவரையில் அறிந்திருக்கிறேன். திப்பு சுல்தான் குறித்த நாட்டுப்புறப் பாடல்களில் பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடிய அவருடைய வீரத்தின் புகழ் பாடியவற்றையே வாசித்திருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் திப்புவின் பெயரைச் சொல்லி குழந்தைகளுக்கு 'பூச்சாண்டி' காட்டினார்கள் என்று சஞ்சய் சுப்பிரமணியம் சொல்லும் 'உண்மை' (ரவிக்குமாரின் கட்டுரையில் முதலில் இதை வாசித்தபோது அதிர்ந்து போனேன். சஞ்சயின் புத்தகம் கிடைத்த பிறகு, அதுகூட அவரது சொந்த சரக்கல்ல என்பது புரிந்தது) ஆச்சரியத்திற்குரியது. விவரம் தெரிந்தவர்கள் இது குறித்து எழுதலாம்.

4. அம்பேத்கரோடு ஒப்பிட்டு, பெரியாரது கருத்துகள் 'பெரும் பான்மைவாதம்' என்று 'தாய் மண்' இதழில் இவர் வைத்த 'ஆய்வு முடிவுகளுக்கு' ஏற்ப திரித்திருக்கிறார் என்று தோன்றுகிறது.

5. Burton Stein and Sanjay Subrahmanyam (Ed.) - Institutions and Economic Change in South Asla, OUP, 1996. பர்ட்டன் ஸ்டெயினது மறைவு (1996) தமிழ்ச் சூழலில் பதிவுறாமல் போனது வருத்தத்திற்குரியது. அவருடைய Peasant State and Society in Medieval South India என்ற நூல் தமிழ்ச் சூழலிலும் கூட பரவலான தாக்கத்தை விளைவித்த ஒன்று.

6. பிரிட்டனில் ஸ்டுவர்ட் ஹால், ரேமண்ட் வில்லியம்ஸ் ஆகியோரின் ஆய்வுகளையொட்டி எழுந்த கலாச்சார ஆய்வுகள், ஃப்ரான்சில் ஃபூக்கோவின் எழுத்துகளையொட்டி எழுந்த சொல்லாடல் களன் குறித்த ஆய்வுகள், இருதரப்பினரது செல்வாக்கில், குறிப்பாக ஃபூக்கோவின் பார்வைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து எத்வர்த் சேத் எழுதிய Orientalismஇன் விரிவான தாக்கம், 80 களின் இறுதிகளில் எழுந்த இந்திய சபால்டர்ன் குழுவினரின் வரலாற்றாய்வுகள் சர்வதேச அளவில் விளைவித்த தாக்கம், இவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் சொல்கிறார்கள்.

7. Sanjay Subrahmanyam, Penumbral visions - Making Politics in Early Modern South India, OUP, 2001. வண்டிச் சாவியைத் தொலைத்த ஒருவன், சாவியைத் தொலைத்த இடத்தை விட்டுவிட்டு, வெளிச்சம் அதிகமாக இருக்கிறது என்பதற்காக, தெருவிளக்கின் கீழே தேடிக் கொண்டிருந்த கதையாக இருக்கிறது சபால்டர்ன் குழுவினரின் ஆய்வுகள் என்று கேலி செய்கிறார். சர்தார்ஜி என்றல்லாமல், மோட்டாரிஸ்ட் என்று எழுதினாலும், இது ''சர்தார்ஜி ஜோக்'' என்பது தெரிந்த விஷயம்.

படிப்பகம்

www.padippakam.com


இது academic politicsஇன் உச்சம். சுத்தமான காழ்ப்புணர்வு என்பதற்கு மேலாக எதுவும் இல்லை.

அவருடைய அக்கறையெல்லாம் ஒன்றின் மீதுதான் குவிந்திருப்பதாகத் தோன்றுகிறது: காலனியத்திற்கு முந்தைய இந்திய வரலாற்றுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டும். காரணம், அது அவருடைய துறை. அதற்காக, இன்றைய மதவாதத்தின் வேர்களை காலனியத்திற்கு முந்தைய காலப் பகுதியில் தேடவேண்டும்.[8] அக்காலப் பகுதியில் 'இந்துக்களுக்கும்' 'முஸ்லீம்களுக்கும்' இடையில் நிகழ்ந்த கலவரங்களை 'ஆழமாக' ஆய்வு செய்ய வேண்டும். இதைச்செய்யாமல் இன்றைய மதவாதம் காலனிய அரசு இங்கு உருவாகி, நிலைபெற்ற காலப்பகுதியில்தான் உருவானது என்று சொல்பவர்கள்[9] சோம்பேறிகள் - தெருவிளக்கின் வெளிச்சத்தில் சாவியைத் தேடும் சர்தார்ஜிகள்!

இன்றைய மதவாதத்தின் வேர்கள், காலனியத்திற்கு முந்தைய காலப்பகுதியில் நிகழ்ந்த 'இந்து-முஸ்லீம்' கலவரங்களில் இருக்கக்கூடும் என்பதைத்தான் இந்துத்துவவாதிகள், அங்கிருந்துதான் தொடங்கியது என்று வலுவாகச் சொல்கிறார்கள். அவர்கள் மசூதிகளை இடிப்பதற்காகச் சொல்கிறார்கள். சஞ்சய் சுப்பிரமணியம் 'ஆய்வு நோக்கிலும்', அவரை முன்மொழியும் 'தலித் ஹிஸ்டாரியன்' ரவிக்குமார், தனது பார்ப்பன விசுவாசத்தைக் காட்டவும் சொல்கிறார். எப்போதோ பரிசீலிக்கப்பட்டு, தெளிவான காரணங்களோடு இதற்குப் பலரும் மறுப்புகள் சொல்லியிருக்கிறார்கள். அவை எதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாது, திரும்பத் திரும்ப அதே பிரச்சினையை எழுப்புபவர்களை யார் எப்படி திருப்தி செய்ய முடியும்?

என்றாலும், தமிழ்ச் சூழலுக்கு அவ்வளவாக வந்து சேராத சில புதிய நோக்குகளை அறிமுகம் செய்வது பயனுள்ளதாக இருக்கும்.

காலனியத்திற்கு முந்தைய (pre-colonial) காலப்பகுதி, 'இந்துக்களும்' 'முஸ்லீம்களும்' ஒற்றுமையாக வாழ்ந்த 'பொற்காலம்'என்ற கருத்தாக்கம் ஹிர்ஃபான் ஹபீப் போன்ற மரபான மார்க்சியர்களால் முன்வைக்கப்பட்ட ஒன்று. ஆனால், 80களின் இறுதியில், ரொமிலா தாப்பர் உள்ளிட்ட வரலாற்றாசிரியர்கள் பலரும் இதை மறுத்ததோடு மட்டுமல்லாமல், அக்காலப் பகுதியில் நிலவிய பகைமையின் தன்மை மீதும் கவனத்தைக் குவித்து, ஆய்வுகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் சென்றார்கள். காலனியத்திற்கு முந்தைய, இந்தியத் துணைக்கண்டம் எனும் நிலப்பகுதியில், 'இந்துக்களுக்கும்' 'முஸ்லீம்களுக்கும்' இடையிலான உறவின் தன்மை பரவலாக பகைமை கொண்டதாகவே இருந்தது என்பதை ஒப்புக்கொண்ட வரலாற்றாசிரியர்கள் பலரும், இந்த இருதரப்பினரும் ஒருவர் மற்றவரைப் பற்றிக் கொண்டிருந்த பார்வைகளை அலசத் தொடங்கினார்கள்.[10]

முதலாவதாக, 'இந்துக்கள்' 'முஸ்லிம்களை' என்னவாகக் கருதினார்கள்? தெளிவான பதில்: 'முஸ்லிம்களாகக்' கருதவில்லை. முஸ்லீம்களைக் குறிக்க ஆளுகையிலிருந்த சொற்களிலிருந்தே இது விளங்கும்: மிலேச்சர்கள், யவனர்கள், துருக்கியர்கள் (turuka).

மிலேச்சர்கள் என்ற பதம், அசுத்தமானவர்கள் என்ற பொருளில் சமஸ்கிருதம் பேசாத அல்லது வர்ணாஸ்ரம தர்மத்தை ஒழுகாதவர்களைக் குறிக்க வேதகாலத்திலிருந்தே புழக்கத்தில் இருந்திருக்கிறது.

இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது, கிரேக்கர்களுக்கு கிரேக்க மொழி பேசாதவர்கள் காட்டுமிராண்டிகள் (barbarians) - barbaros, புரியாத மொழியைப் பேசுபவர்கள் என்பதிலிருந்து பெறப்பட்டது. கிரேக்க மொழி மட்டுமே அவர்களுக்கு பகுத்தறிவை வெளிப்படுத்தும் சாத்தியமுள்ளது. பகுத்தறிவு உள்ளவர்கள் - கிரேக்கர்கள், அம்மொழி பேசும் இனத்தவர் மட்டுமே மனிதர்கள். மற்றவர்கள் காட்டுமிராண்டிகள்.

இஸ்லாமியர்களுக்கு மற்றவர்கள் kafirs, அதாவது இறைநம்பிக்கையற்றவர்கள். அவர்களைப் பொறுத்தவரையில் இஸ்லாத் ஒன்றே மார்க்கம். அதைப் பின்பற்றாத பிற சமயத்தினர் அனைவரும், நாத்திகர்களும் சேர்த்து காஃபிர்கள்.

ஆனால், பார்ப்பனிய, வைதீக மதத்திற்கு, சமஸ்கிருதம் பேசாதவர்கள் மட்டுமல்ல, அசுத்தமானவர்களும் வர்ணாஸ்ரம தர்மத்தை ஒழுகாதவர்களும் மிலேச்சர்கள்.

கிறித்தவர்கள் பயன்படுத்திய பதத்திற்குப் பிறகு வருவோம்.

யவனர்கள் என்ற பதம், கிரேக்கர்களையும், பொதுவில் மேற்கு ஆசியாவிலிருந்து வந்தவர்களையும் குறிக்க ஆளப்பட்டது. தொடர்ந்து முஸ்லிம்களைக் குறிக்கவும் ஆளப்பட்டது. துருக்கியர்கள் என்ற பதம் மதம் சார்ந்தல்லாமல், இனத்தைக் குறிக்கவே ஆளப்பட்டது. R.S. ஷர்மா, துருக்கியர்களை எதிர்த்த போருக்காக விதிக்கப்பட்ட tarushka-danda என்ற குறிப்பான வரியைப் பற்றியும் கூட குறிப்பிடுகிறார்.[11] இவை எதுவும் தற்காலத்திய மதவாதம் சார்ந்த அர்த்தத்தில் இல்லை என்பதே இங்கு கவனத்திற்குரியது.

முஸ்லிம்கள் - இந்துக்கள் என்று மதம் சார்ந்து இரண்டு மக்கட்பிரிவினைரைக் கருதும் போக்கு, பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்பகாலத்தில்கூட நிலைபெற்று விடவில்லை. ஒரு பரவலான பொதுக்கருத்தாக வெகுமக்களிடத்தில் உருவாகி விடவில்லை. பிரிட்டிஷார் தமது இளம் அதிகாரிகள் 'அடிமைகளைத்' திறம்பட ஆளும்பொருட்டு கல்கத்தாவில் நிறுவிய ஃபோர்ட் வில்லியம் கல்லூரிக்காக எழுதப் பணிக்கப் பட்ட முதல் மூன்று வரலாற்று நூல்களுள் ஒன்றான Rajabali (1808) இன் பார்ப்பன ஆசிரியர் மிருத்யுஞ்ஜய் வித்யா லங்கர் 1808இல் கூட முஸல்மான் என்ற பதத்தை தொடர்ச்சியாகக் கையாள வில்லை.[12] யவனர்கள் என்ற பதம் அவரது பிரதியில் தொடர்ந்து முளைத்துவிடுகிறது.

8. சஞ்சய் சுப்பிரமணியத்தின் அரசியல் சாய்வுகள் என்ன ஏது என்று அறியேன். ஆகையால், அவருடைய வாதங்களின் போக்கு எதை நோக்கி இட்டுச் செல்கிறது என்று தெரிந்தும் அவரை இந்துத்துவவாதி என்று 'முத்திரை குத்துவதைத்' தவிர்க்கிறேன்.

9. காலனிய அரசின் 'பிரித்தாளும் சூழ்ச்சி'யால்தான் இங்கு மதவாதம் (வகுப்புவாதம்) உருவானது என்று வாதிட்ட பழைய மார்க்சியர்கள், அக்காலப்பகுதியில் அரசியல், பொருளாதாரம், காலனிய அரசு பரவவிட்ட புதிய சொல்லாடல் களன், அது கட்டமைத்த மேற்கத்திய மாதிரியிலான வரலாற்றெழுதியல் 'இந்துக்கள்', 'முஸ்லிம்களில்' இருந்த வேறுபட்ட பிரிவினரின் பார்வைகள் என்று பல்வேறு காரணிகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு ஆய்வு செய்துள்ள சபால்டர்ன் குழுவினரின் எழுத்துகள் என்று இருதரப்பினரையும் சேர்த்து வைத்துச் சொல்கிறார்.

10. இது தொடர்பாக எழுந்த மறுபரிசீலனைகளில் முக்கிய திருப்புமுனைகளாக அமைந்த நூல்கள் சில : 1) G.D. Sontheiker and H.Mulhe (eds.,) Hinduism Reconsidered, (Manohar Publications, Delhi, 1989); 2) A. Hiltebeitel, The Cult of Draupadi, Mythologies: From Gingee to Kuruksetra, (University of Chicago Press, 1988); 3) Asim Roy, The Islamic Syncretistic Tradition in Bengal (Princeton, 1984). ரொமிலா தாப்பரின் Communalism and the Historical Legacy: Some Facets (Social Scientist, Vol.18, Nos.6-7) என்ற கட்டுரையும் முக்கியமான ஒன்று.

11. R.S. Sharma, Communal History and Rama's Ayodhya,PPH, 1990.

12. Partha Chatterjee, Claims on the Past: The Geneology of Modern Historiography in Bengal (in) Subaltern Studies VIII.


படிப்பகம்

www.padippakam.com


காலனியத்திற்கு முந்தைய 'இந்தியாவில்' இந்து - முஸ்லிம் உறவுகளைப் பொறுத்தவரையில் எந்தவித சச்சரவும் இல்லாத 'பொற்காலமாகவும்' இருக்கவில்லை. தீராத பகையுடன் கூடிய மோதல்களாகவும் இருக்கவில்லை. நீண்டகாலம் அருகருகே வாழ்ந்த இரு சமூகங்களும் மற்ற தரப்பினரது பார்வைகளையும், நம்பிக்கைகளையும், ஒழுகலாறுகளையும் புரிந்துகொள்ளத் தலைப்பட்டன. கரைத்துக் கொள்ளும் முயற்சிகளும் இருந்தன. உரசல்களும் நிகழ்ந்தன.

ரவிக்குமார் சொல்ல வருவதைப்போல இந்தப் போக்குகளை முதலில் சுட்டிக் காட்டியவர்கள் தர்மா குமாரோ சஞ்சய் சுப்பிரமணியமோ அல்ல. யாருமே இதையெல்லாம் ஆய்வுக்குட் படுத்தவில்லை என்று இவர்கள் குற்றச்சாட்டை வைப்பது 90களின் பிற்பாதியில். ஆனால், 80களின் இறுதிகள் தொடங்கியே இவை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுவிட்டன. இவற்றில், மத்திய கால மராட்டியத்தில் நிலவிய உறவுகளைப் பற்றிய N.K. Wagle என்பவரின் கட்டுரை ஒரு மிக முக்கியமான முன்னோடி என்று குறிப்பிடலாம்.[13] அதிலிருந்து சற்று விரிவாகப் பார்ப்பது நல்லது.

மராட்டியத்தில், சிவாஜியின் ஆட்சியைத் தொடர்ந்து எழுந்த பார்ப்பன பேஷ்வா மன்னர்களின் காலத்தில் caritra-bakhars (historical biographies - வம்சாவளி வரலாறுகள்) என்று அழைக் கப்பட்ட வரலாற்று நூல்கள் எழுதப்பட்டன. இவற்றின் நோக்கம் மராட்டிய பேஷ்வா ஆட்சிக்கு வரலாற்று நியாயப் பாட்டைத் தருவது; இந்திய நிலப்பகுதியை ஆண்ட தெய்வீக அருள்பெற்ற அரச வம்சாவளிகளின் தொடர்ச்சி என்று சொல்வது. குறிப்பாக, முகலாய ஆட்சியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து எழுந்த மராத்திய ஆட்சியை இந்த வழியில் வைப்பது.

பொதுவாக, இவை கிருத யுகத்தில் தொடங்கி, கலியுகத்தின் 'இந்து' மன்னர்களின் வம்சாவளிகளைப் பற்றிய பட்டியலாக நீள்பவை. அதுவரையில் பிரச்சினை இல்லை. 'இந்து' வம்சா வளிகள் முடிந்து, அவர்கள் வழியில், முகலாயர்களின் ஆட்சியை எப்படி விளக்குவது?

1795 ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டதாகக் கணிக்கப்படும் (ஆசிரியர் பெயர் குறிக்கப்பெறாத) நால்யுக சரித்திரம் (Caryugaci bakhar) இந்தப் பிரச்சினையைக் கையாளும் விதம் சுவாரசிய மானது. முகலாயர்களின் ஆட்சியை நியாயப்படுத்த, யவனர் களின் (கவனிக்க, முஸ்லீம்கள் அல்ல, யவனர்கள்) வருகையை விளக்க இந்த நூல் ரமலா சாஸ்திரம் (குர்-ஆன்!) என்பதை ஆதாரமாகக் கொள்கிறது.

இந்நூலின்படி, ரமலா சாஸ்திரம் 'இந்துக்' கடவுள் சிவபெரு மானால் அருளப்பட்டது. சிவன் ரமலா சாஸ்திரத்தை பார்வதிக்குச் சொல்கிறான். பார்வதி அதை ஸ்கந்தனுக்குச் சொல்ல, ஸ்கந்தன் அதை நாரத முனிக்குச் சொல்கிறான். நாரதன் தன் பங்குக்கு பிருகுமுனிவரிடம் சொல்ல, அவர் அதைத் தமது மகனான சுக்ராச்சாரியனுக்குச் சொல்கிறார். சுக்கிராச்சாரியார் அதை யவனர்களுக்குச் சொல்கிறார். இப்படியாக நீள்கிறது வரலாறு (his-story).

தொடர்ந்து, யவனர்களின் தோற்றமும் அவர்களுக்கு தில்லி அரியணை கிட்டியதும் விளக்கப்படுகிறது. முகமது நபி பைகம்ப முனியாக 'அவதரிக்கிறார்'. ஒருமுறை பார்வதியும், கணேசனும் அருகில் இல்லாது சோர்ந்து, கயிலாய மலையில் தனியாக அமர்ந்திருக்கிறார் சிவன். அப்போது பைகம்ப முனி அவர்முன் தோன்றுகிறார். சிவன், என் மனைவியையும் பிள்ளையையும் தேடிக் கண்டுபிடிக்கவே உன்னைத் தருவித்தேன் என்கிறார். பைகம்பர் ஒரு நொடியில் அவர்களிரு வரையும் கொண்டுவந்து சேர்க்கிறார். பரவசப்பட்டுப்போன சிவன் ''மனித வடிவில் பூமியில் தோன்றுவாயாக'' என்று அருளுகிறார். சிவனது அருளால் ஆதாம் தொடங்கி ஏழு பைகம்பர்கள் பூமியில் கலியுகத்தில் தோன்றுகிறார்கள். யவன சகாப்தம் அவர்களால் உருவாகிறது. ஹஸ்தினாபுரம் தில்லியாக பெயர் மாற்றம் பெற்று, யவனப் பேரரசின் ஆட்சி தொடங்குகிறது.

நால்யுக சரித்திரம் விதிவிலக்கான நூலும் அல்ல. 1773இல் எழுதப்பட்ட பரசுராம சரித்திரம், Sapta prakarnatmaka caritra, இன்னும் பல வம்சாவளி வரலாறுகளும் இதுபோன்ற புராணக் கதைகள் வழியாக 'இந்து' மரபிற்குள் வைத்து இஸ்லாமிய (யவன) வருகையை விளக்கத் தலைப்படுகின்றன. மேலும், இஸ்லாமிய ஆட்சி 'இந்து தர்மத்தை' ஒழுகி நடந்துகொள்ளும் வரையில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கு பரசுராம சரித்திரம் இஸ்லாமிய வம்சாவளியைப் பட்டியலிடும் போக்கில் குறிப்பிட்டுச் சொல்வது நல்லதொரு உதாரணம்:

''யவனர்களின் அரசர் பூலோகத்தை நீதியுடன் பரிபாலனம் செய்தார். பாண்டவர்களை அரசர்களாக ஏற்றுக்கொண்ட நான்கு வர்ணங்களும் இவர்களையும் ஏற்றுக் கொண்டனர். யவனர்கள் இந்தக் கௌரவத்தை ஏற்றுக்கொண்டு அதற்குப் பிரதியுபகாரமாக, தமக்குக் கப்பம் கட்டிய சிற்றரசர்களைப் பாதுகாத்து அருளினர். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் அனைவரையும் அவரவர் தகுதிக்குரிய வகையில் நடத்தினர். அவர்களுடைய க்ஷேத்திரங்களுக்கும் புண்ணிய தீர்த்தங்களுக்கும் நாசம் விளைவிக்காமல், அவற்றைப் பாதுகாத்து பராமரிப்பதில் மிகுந்த அக்கறையும் எடுத்துக் கொண்டனர். மகாபாரதக் கதைகளையும் சாஸ்திர விவாதங் களையும் மிகுந்த மரியாதையோடு செவிமடுத்தனர். ஆனால், சில முஸ்லிம்கள், இப்படியெல்லாம் நடந்து கொள்வது சரியில்லை என்றும், தமது மார்க்கத்திற்கு எதிரானது என்றும் கருதினர். இந்த ஒற்றுமையைக் குலைக்க சதியாலோசனை செய்தனர்.''

18 ஆம் நூற்றாண்டு மராட்டியத்தில், இஸ்லாமியர்கள் கையிலிருந்து ஆட்சி நழுவிப் போனதொரு சூழலில் 'இந்து' வரலாற்றாசிரியர்களேகூட இஸ்லாமியர்களை மராட்டியத்தின் முற்றிலும 'மரபு சார்ந்த, மண் சார்ந்த' ஆட்சியாளர்களுள் ஒருவராகவே பார்த்திருக்கிறார்கள். புராண வகைப்பட்ட வரலாறுகளைப் புனைந்து 'ரமலா சாஸ்திரத்தின்' தோற்றத்தை விளக்கவும் தலைப்பட்டிருக்கிறார்கள். இஸ்லாமிய ஆசிரியர் களும்கூட இவற்றையொத்த முயற்சிகளை செய்திருக்கிறார்கள். இவர்களது எழுத்துகளை, மராட்டிய பார்ப்பன பேஷ்வா ஆட்சி வலுப்பெற்ற காலத்தில் எழுதப்பட்டவை, அதற்கு முன்பாக முஸ்லிம் அரசர்களின் காலத்தில் எழுதப்பட்டவை என்று பிரித்து அணுகலாம்.

16 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியிலும், 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலுமாக, இஸ்லாமிய அரசு செல்வாக்குக்குட்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்தவரான சூஃபி ஞானி ஷேக் மகம் மதுவின் எழுத்தோடு, 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், பார்ப்பன பேஷ்வா ஆட்சி வலுவாக நிலைகொண்டுவிட்டிருந்த காலத்தில் வாழ்ந்தவரான ஷா-முனி என்பவர் எழுதியதோடு ஒப்பிட்டுப் பார்ப்பது இதற்கு உதவியாக இருக்கும்.

ஷேக் மகம்மது Yogasamgrama என்ற தத்துவ நூலுக்காகவே பெரிதும் அறியப்படுபவர். இஸ்லாமிய எதிர்ப்பாளராக அறியப்படும் ராமதாஸராலேயே மாபெரும் ஞானி எனப் புகழப்பட்டவர். மராத்திய பக்தி இலக்கியத்தை ஆய்ந்தவர்கள் பலரும் ஷேக் மகம்மதுவின் குரு சாந்த போகலே என்ற பார்ப்பனர் என்று ஊகம் செய்கின்றனர். சாந்த போகலேவோ ஷேக் மகம்மதுவின் தந்தையாரான ராஜே முகம்மதுவின் சீடராக

13. N.K. Wagle, Hindu-Muslim Interactions in Medieval Maharashtra (in) Hinduism Reconsidered, Manohar Publications, New Delhi, 1989.

www.padippakam.com



இருந்தவர். ஆக, 16ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலேயே, மதமாற்றம் செய்துகொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தங்கள் ஏதும் இல்லாமலேயே ஒரு பார்ப்பனர் இஸ்லாமிய ஞானி ஒருவரிடம் சீடராகச் சேர்வதும், இஸ்லாமியர் ஒருவர் பார்ப்பனரிடம் சீடராகச் சேர்வதும் நிகழ்வது சாத்தியமாகி யிருக்கிறது. சாதுக்கள், சந்நியாசிகளின் உலகில் இது சாதாரண மாகவும் இருந்திருக்கலாம்.

Yogasamgrama வில் ஷேக் மகம்மது ராமன், கிருஷ்ணன், சிவன், விஷ்ணு போன்ற 'இந்துக்' கடவுளர்களை தாராளமாகவே ஏற்றுக் கொள்கிறார். அந்நூலின் பதினெட்டு அத்தியாயங் களையும் கணேசனுக்கான துதியைச் சொல்லியே ஆரம் பிக்கவும் செய்கிறார். என்றாலும்கூட அவர் ஏக இறை என்ற பார்வையையே வழிமொழிவது அவரது எழுத்தில் தொடர்ந்து வெளிப்படுகிறது. இறைவனை உருவமற்றவனாக, குணங் களற்றவனாக, கண்களுக்குப் புலப்படாதவனாகவே விவரிக்கிறார். ஹரி, அல்லா என்று இரு கடவுளர்கள் இருந்தால், அவர்கள் தமக்குள் சண்டையிட்டே அழிந்திருப்பார்கள் என்று சற்றுக் கிண்டலாகவும் பேசுகிறார்.

சூஃபி ஞானிகளுக்கே உரிய முறையில் இணைவையும் முன்மொழிகிறார்: ''மராத்தியர்கள் (கவனிக்க, ஹிந்துக்கள் அல்ல மராத்தியர்கள்) அவனை சத்குரு என்கிறார்கள். முஸ்லிம்களோ சக்கா பீர் (sacca pir) என்கிறார்கள். இரண்டுக்கும் வித்தியாசம் கிடையாது. சகோதரர்களே கண்களைத் திறவுங்கள்.''

Yogasamgrama வழமை மீறிய அளவிற்கு பார்ப்பன வைதிக மதம், சாஸ்திரங்கள் மீதான வெளிப்படையான விமர்சனங் களடங்கிய நூலும்கூட. அதேபோது, நாட்டுப்புற தெய்வங்கள் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகளையும் அது கடுமையாக விமர்சனம் செய்கிறது. புகைப்பது, பாலியல் தொழில், நாட்டுப்புற தெய்வங்களுக்கு விலங்குகளைப் பலியிடுதல், அலகு குத்துதல் போன்ற சடங்கு, செய்முறைகளை அது சிறிதும் சமரசமற்ற தொனியில் விமர்சனம் செய்கிறது. உதாரணமாக, பாதை யோரங்களிலும், வயல்வெளிகளின் மூலை முடுக்குகளிலும் கண்ட கண்ட இடங்களில் நட்டுக்கிடக்கும் சிறு தெய்வங்களைப் பற்றிச் சொல்ல வரும்போது: ''இந்தக் கடவுளர்கள் எல்லாம் அவ்வளவு சக்தி வாய்ந்தவையாக இருந்தால், நாய்கள் அவற்றின் மேல் சிறுநீர் கழிப்பது எப்படி?'' என்கிறார் ஷேக் முகம்மது.

இந்த விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டு, முஸ்லிம், சூஃபி ஞானிகள், இந்துப் பார்ப்பன வேத விற்பன்னர்களிடையே குரு-சிஷ்யப் பாரம்பரியம் அளவிற்கு உறவுகள் நிலவியது. என்றாலும், இது இரு சமூகங்களுக்கிடையிலான பொதுவான விதியாகவும் இருக்கவில்லை. உரசல்கள் கடுமையாக இருந்திருப்பதும் தெரிகிறது.

அவற்றைத் தணிக்கும் முகமாகவோ என்னவோ ஷேக் மகம்மது இப்படியும் எழுத நேர்ந்திருக்கிறது: ''மக்கள் என்னை மிலேச்ச சாதியைச் (மீண்டும் கவனிக்க, முஸ்லீம் அல்ல மிலேச்ச சாதி) சேர்ந்தவன் என்கிறார்கள். அதனால்தான் அவன் நமது கடவுளரைப் பழிக்கிறான். அவனை நம்ப முடியாது. முஸல்மான்கள் நமது கோயில்களையும் விக்கிரகங்களையும் இடித்துத் தள்ளுவதைப் பார்க்கிறோம். அவனும் அவர்களில் ஒருவன். விக்கிரங்கள் மண்ணோடு மண்ணாக்கப்பட்டு விட்டன. இனி வழிபடுவதற்கு என்ன இருக்கிறது. நமது கடவுளர்களை அழிப்பது யவனர்களின் பரம்பரைப் பழக்கம். அவன் அவர்கள் வழி வந்தவன். அதனால் அவன் சொல்வதையெல்லாம் செவி மடுக்கக் கூடாது. ஷேக் மகம்மது சொல்கிறேன், முஸல்மான் களும் இறைவனால் படைக்கப்பட்டவர்களே. முஸல்மானாகப் பிறந்தும் அவன் குர்-ஆன், புராணம் இரண்டிலும் தேர்ந்தவன். தன் சொந்த நன்மையின் பொருட்டே அவன் மழுவற்ற புனித நூல்களை செவிமடுக்கிறான். இறைவனைப் போற்றும் ஒருவனின் குலத்தோற்றத்தை ஒருவர் ஆராயக்கூடாது.''

18 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில், பார்ப்பன பேஷ்வா ஆட்சி வலுவாக நிலைகொண்டிருந்த காலத்தில் எழுதிய ஷா-முனியின் பார்வைகள் இவற்றிலிருந்து எங்கெங்கு விலகின, எவற்றைத் தொடர்ந்தன என்று ஒப்பிட்டுப் பார்ப்பது, சில புள்ளிகளை விளக்க உதவும். ஷா - முனி 1778இல் எழுதிய சித்தாந்த போதா என்ற நூலுக்காக அறியப்படுபவர். அக்காலத்தின் வழமையை யொட்டி ''பதினெட்டு சாதிகள், ஐம்பத்திரண்டு வர்ணங்களின்'' தோற்றம் பற்றி எழுதப் புகும் ஷா-முனி, புராண வடிவில் இஸ்லாமியர்களின் தோற்றம் பற்றி எழுதுவது:

''மகாவிஷ்ணு வர்ண பேதங்களை பிரம்மாவுக்கு விளக்கினான். யவனர்களின் (18 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் கவனிக்க, முஸ்லிம்கள் அல்ல யவனர்கள்) வழக்கங்களை முன்னமே விளக்கினேன். அதோடு இதையும் சொல்கிறேன். தில்வா ஒரு மாபெரும் ரிஷி. யவனர்கள் அவரை ஆதாம் என்று அழைத்தார்கள். தில்வா மகாவிஷ்ணுவை வழிபட்டான். சிவனை வெறுத்தான். கார்ஃபாவா சிவனை வழிபட்டான். மகாவிஷ்ணுவை தொடர்ந்து கேலி செய்து வந்தான். இருவருக்கும் இடையில் பகை நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. கார்ஃபாவா ஒரு சிவாலயத்தை எழுப்பி, பூஜை புனஸ்காரங்கள் செய்து வழிபட்டு வந்தான். தில்வா ஒரு மசூதியைக் கட்டி அதில் வழிபட ஆரம்பித்தான். ஒருநாள், கார்ஃபாவின் பசு, தில்வா வசித்து வந்த இடத்திற்குள், அவன் எழுப்பியிருந்த மசூதிக்குள் நுழைந்து நின்றுகொண்டிருந்தது. தில்வா தனக்குள், ''இந்தப் பசு என் வழிபாட்டு தலத்தின் மத்தியில் நின்றுகொண்டிருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டான். கோபங்கொண்டு, அதை ஒரு தடி கொண்டு அடிக்க ஓடினான். பசு திருப்பித் தாக்கி தன் கொம்புகளால் அவனைக் குத்திக் கொன்றது. அவனுடைய துடுக்கான மகன் முசல், கடுமையான சினங் கொண்டு, ஒரு ஆயுதத்தால் பசுவைக் கொன்று, அதன் மாமிசத்தைத் தின்று தன் தந்தையின் மரணத்திற்குப் பழி தீர்த்துக் கொண்டான். அவன் வழியில் பிறந்த மக்கள் அவனைப் போலவே ஆயினர். பசுக்களைக் கொன்று உண்ணத் தொடங்கினர். தில்வாவின் இல்லம் தின் என்று அழைக்கப் பட்டது. (இஸ்லாத்தைக் குறிக்க வழக்கத்தில் இருந்த மராத்தி சொல்). முசலின் வழித்தோன்றல்கள் முஸல்மான்கள் என்று அறியப்படுகிறார்கள். கார்ஃபாவிற்கு எதிரான பகையுணர்வு அவர்கள் வம்சத்தில் வழிவழியாக கொள்ளப்பட்டு வந்தது. அதனாலேயே மராட்டியர்கள் (கவனிக்க, 'இந்துக்கள்' அல்ல மராட்டியர்கள்) காஃபிர்கள் (காஃபிர்கள் - இறை நம்பிக்கை யற்றவர்கள்) என்று அழைக்கப்படுகிறார்கள். அதனாலேயே அவர்களது விக்கிரகங்களையும் சிவாலயங்களையும் இடிக் கிறார்கள். அவர்களுடைய கடவுளர்களையும் வெறுக்கிறார்கள். யவன சாதி (கவனிக்க) தோன்றிய கதை இதுதான்.''

ஷேக் மகம்மதுவைப் போலவே ஷா-முனியும் 'இந்துப்' படிமங்களைத் தாராளமாகக் கையாளும்போதே, அவரைப் போலவே ஏக இறைமையையும் தொடர்ந்து வலியுறுத்துகிறார். அதோடு மட்டுமல்லாமல், 'இந்து' சமூகத்துள் நிலவிய சமூக வழமைகளையும் கடுமையாக விமர்சிக்கிறார். ஒரு உதாரணம் :

''சொக்கமேளர் (மராட்டிய பக்தி இலக்கியத்தில் வந்த தலித் மஹார் சாதியைச் சேர்ந்தவர்) இறைவனைத் தொழுதார். என்றாலும், மக்கள் அவரிடமிருந்து ஒதுங்கியே இருந்தார்கள். சொர்க்கத்தில் சொக்கமேளருக்கென்று தனியான வசிப்பிடம் இருக்குமா என்ன? இழிகுலத்தில் பிறந்தோரும் உயர் குலத்தில் பிறந்தோரும் ஆற்றுக்குள் இறங்கி தமது குடங்களை நிரப்பி கரையேறுகிறார்கள். உயர் குலத்தில் பிறந்தவன் சொல்கிறான், ''எங்களைத் தொடாதே. தள்ளி நில்.'' சற்று நேரத்திற்கு முன்பாகத்தான் இருவரும் ஒரே நீரில் நின்று கொண்டிருந்தார்கள். தான்பிறந்த சாதிக்கும் மற்றவருடையதற்கும் பாகுபாட்டைப் பேணுவது வீணான முயற்சி என்று ஷா-முனிக்குத் தெரியும். அவனுக்குப் பாகுபாடுகள் எதுவும் கிடையாது.''

தீண்டாமைக்கு எதிரான, சாதியத்திற்கு எதிரான தெளிவான குரல்.

16 ஆம் நூற்றாண்டளவில் எழுதும் ஷேக் மகம்மதுவின் எழுத்துகளில் ஏக இறைமைக் கொள்கை மீதான அழுத்தம் கூடுதலாகவும் பல்தெய்வ வழிபாடு மீதான தாக்குதல் கடுமை



படிப்பகம்

www.padippakam.com



யாகவும் இருக்கும் அதேசமயம், இறுதியில் தன் மீதான குற்றச்சாட்டை மறுப்பது (இழிந்த 'மிலேச்ச சாதியில்' பிறந்தவன்) என்ற தொனியில் முடிகிறது.

அவருக்குச் சற்றே முந்தைய காலப்பகுதியில் வாழ்ந்து மறைந்த மராத்திய பக்தி இயக்கக் கவிஞர்களுள் ஒருவரான ஏக்நாத் **(1553-1599)** - ஒரு மராட்டிய 'இந்து' - எழுதிய இந்து - துருக்கிய சம்வாதம் (விவாதம்) என்ற நூலிலும் இதே அம்சங்கள் தெளிவாகப் புலப்படுகின்றன. ஒரு இந்துவுக்கும் ஒரு துருக்கியருக்கும் (கவனிக்க) இடையிலான விவாதம் என்ற வடிவில் எழுதப்பட்டுள்ள இந்நூலில் விவாதம் பெரும்பாலும் சமய வழமைகளைப் பற்றியே சுற்றிச் சுற்றி நடக்கிறது. விவாதத்தின் வன்மை நாயே பேயே என்று திட்டிக்கொள்ளாத குறைதான். இந்துக்களின் சாதியமைப்பு மீதான தாக்குதல் துருக்கியர் கூற்றாக வருகிறது. இறுதியில், இருவரும் இறைவனின் முன்னிலையில் சாதிய ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்று சமாதானமடைந்து தழுவிக் கொள்கிறார்கள். விவாதம் சாதி பற்றிய பிரச்சினையில் சூடேறிவிட்டது என்று 'இந்து' ஒப்புக்கொள்கிறான்.

தொகுப்பாகச் சொல்வதென்றால், 'மத்திய' காலத்தில், 'இந்து-முஸ்லிம் மோதல்களின்' மையப் புள்ளி சஞ்சய் சுப்பிரமணியம் காண விரும்புவதைப் போல, இன்றைய 'நவீன' இந்தியாவில் நிகழ்வதைப் போன்ற வகுப்புவாத/மத மோதல்களாக, அல்லது குறைந்தது அவற்றின் நுண் மூலங்களாகக்கூட இருக்கவில்லை என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. அக்காலப் பகுதியின் மோதல்களின் தன்மை கோயில்கள், விக்கிரகங்களின் இடிப்புகளுக்கும் காரணமாகக் கருதப்பட்ட, துருக்கியப் பண்பாக, யவனப் பண்பாகக் கொள்ளப்பட்ட, மிலேச்சத் தன்மையில் குவிகிறது. அதாவது, இஸ்லாத்தை தலித் சமூகங்கள் பெருமளவில் தழுவிக் கொள்வவதற்கு முன்பாகவே (துருக்கியர், யவனர், மிலேச்சர் என்ற பத ஆளுகையிலிருந்து இப்படிக் கொள்வதே சரியாக இருக்கும்) அசுத்தமான, அதனால் தீண்டக்கூடாத இனமாக முஸ்லிம்களை 'இந்து' சமூகம் விலக்கி வைத்து அணுகியதில் குவிந்திருக்கிறது என்று கொள்ளலாம்.

தர்மாகுமார் மேற்கோள் காட்டும் ஈட்டன் என்பவரை மேற்கோள் காட்டி, இஸ்லாத்தின் பரவல், வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், இந்து-முஸ்லிம் உறவுகள் மூன்று கட்டங்களாக - "இந்துக்கள் முதலில் அல்லாவை, முகமதுவை, தமது தெய்வங்களோடு இணையாக வைத்துப் பார்த்தனர். இரண்டாவதாக, தங்களுடைய தெய்வங்களோடு அவற்றை இரண்டறக் கலந்தனர். மூன்றாம் கட்டத்தில் இந்துக் கடவுளர்களின் இடத்தை அல்லாவை, முகமதுவை வைத்துப் பதிலீடு செய்தனர் (inclusion, identification, displacement)" நிகழ்ந்திருக்கவே அதிக வாய்ப்பிருக்கிறது என்று ரவிக்குமார் முன்மொழிவது நுனிப்புல் மேய்தல் என்பதும் மேலே பார்த்தவற்றிலிருந்து பெறப்படும்.

முதலாவதாக, ரவிக்குமார் முன்மொழியும் இந்தக் கருத்து, 'முஸ்லிம்களாக மாறிய இந்துக்கள்' என்ற அடிப்படை முற்கோளிலிருந்து தொடங்குகிறது. உடன் சாதுர்யமாக வழவழ குழகுழ வாதமாக சரிந்து விடுகிறது. "பிராமண ஒடுக்கு முறைக்கு ஆளாகாத தொல்குடியினர் இஸ்லாத்தைத் தழுவினர். எல்லைப்புறப் பிரதேசமான பஞ்சாபிலும் வங்காளத்திலும் தான் இஸ்லாம் வேகமாகப் பரவியிருந்தது. (இஸ்லாத்தின் பரவலில், வங்காளத்தை 'எல்லைப்புறப் பிரதேசமாகச்' சொல்லும் ரவிக்குமாரின் வாதத்தை, அசட்டுத்தனம் என்று சொல்வதா, குயுக்தி என்று சொல்வதா, ஹிஸ்டரியை மட்டுமல்ல ஜியாகரபியையும் கூட தன் இஷ்டத்திற்கு வளைக்கும் அவரது அதிசூரத்தனம் என்று வியப்பதா?) பஞ்சாபில் பல்வேறு ஜாட் சாதியினரே மதம் மாறினர்" என்று அடுக்கத் தொடங்கிவிடுகிறார்.

இரண்டாவதாக, இந்தக் கூற்றில், முஸ்லீம்களின் நோக்கு என்ன என்பது கருத்தில் கொள்ளப்படவே யில்லை. (இந்துத்துவவாதிகளுக்கு அதில் என்ன அக்கறை!)

தர்மா குமார் வழியாக, ஈட்டன் வழியாக, ரவிக்குமார் முன்மொழியும் இஸ்லாத்தின் பரவல் பற்றிய இந்த மாதிரி, வலுவான, பருண்மையான அலசல் அற்ற, அருவமான, தேங்கிய மாதிரி (static model) என்பதற்கு மேலாக ஒன்றும் இல்லை. மேலே பார்த்தவற்றிலிருந்து இஸ்லாத்தின் பரவலில் முதற்கட்டமாக வெளிப்படுவது மோதல் (Confrontation) என்ற கட்டம். அது சாதியை, தீண்டாமையை மையமாகக் கொண்டிருந்தது என்பது குறித்துக் கொள்ள வேண்டியது.

அடுத்ததாக, ஷா-முனியின் எழுத்துகளில் வெளிப்படும் 'இந்துப் புராண' மரபில் வைத்து யவனர்களின் தோற்றம் பற்றிய விளக்கங்களை எப்படிப் புரிந்து கொள்வது?

ஷா-முனியின் காலத்தையொட்டி (18 ஆம் நூற்றாண்டின் பிற்பாதிகள்) மராத்திய 'இந்து' எழுத்தாளர்கள் எழுதிய 'வரலாறுகளிலும்' வெளிப்படும் இதே விதமான போக்கை எப்படி விளங்கிக் கொள்வது? அதாவது, ஒரே காலப்பகுதியில், 'இந்து', 'முஸ்லிம்' இரு தரப்பினரிடமிருந்தும் ஒரே மாதிரியான விளக்கங்கள் எழுவதை எப்படியாக பொருள்கோடல் செய்வது?

முதல் விஷயம், ஷேக் மகம்மதும் ஏக்நாத்தும் எழுதுவது இஸ்லாமிய ஆட்சியாளர்கள் நிலைகொண்டிருந்த காலப் பகுதியில், ஷா-முனியும் பகார் சரிதங்கள் எழுதியவர்களும் எழுதத் தொடங்கியபோது. மராட்டியத்தில் பார்ப்பன பேஷ்வா மன்னர்கள் ஆட்சியில் நிலைகொண்டு விட்டிருந்தார்கள். அதிகாரச் சூழலுக்கேற்ப விளக்கங்களில் மாறுதல்கள் நிகழ ஆரம்பிக்கின்றன.

இரண்டாவது, சரித்திர பகார்களின் ஆசிரியர்கள் இஸ்லாமிய வரலாற்றையும் நம்பிக்கைகளையும் 'இந்துப்' புராண மரபின் வழிநின்று விளக்க முற்படுவது இஸ்லாத்தை இணைத்துக் கொள்ளும் அல்லது கரைத்துச் செறித்துவிடும் (accommodation/ assimilation) முயற்சி என்று சொல்லலாம்.

ஆனால், இஸ்லாமிய எழுத்துகளிலும் வெளிப்படும் அதே போன்ற விளக்கங்களை இதற்கிணையான கரைந்து போதலாகச் சொல்லிவிட முடியுமா? 'இந்து' எழுத்தாளர்களைப் பொறுத்த வரையில், இஸ்லாமிய மரபை, 'அவதாரங்கள்' வழியாக வைத்து விளக்குவது அவர்களுக்கு ஏற்கனவே நன்கு பரிச்சயமான புராண மரபோடு இயைந்து செல்வது. இஸ்லாமியர்களுக்கோ அந்த மரபு புதியது என்பது மட்டுமல்ல, பிரச்சினைக்குரியது. அவர்களது அடிப்படை இறைமைக் கொள்கையோடு முரண்படுவது. பின்னும் எப்படி அவர்கள் அந்த 'வலைக்குள்' விழுந்தார்கள்?

இதை விளங்கிக்கொள்ள வங்காளச் சூழலை வைத்து, இஸ்லாத்தைத் தழுவிக்கொள்ளும் சாத்தியமுள்ள 'இந்து' சமூகப் பிரிவினருக்கு அதை, அவர்களுக்கு, அவர்களுடைய மரபில் வைத்து விளங்கச் செய்ய, எளிதில் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்த இஸ்லாமிய "கலாச்சாரப் பரிமாற்றாளர்கள்" (cultural mediators) பற்றிய அஸிம் ராயின் நூல்* ஒரு புதிய கோணத்தைத் தருகிறது. மராட்டிய சூழலில் கண்ட ஷா-முனியையும் இப்படியான கலாச்சாரப் பரிமாற்றாளர்களில் ஒருவராகக் குறிப்பிடலாம். இந்த பரிமாற்றாளர்கள் முனைந்தது கரைத்தல் (assimilation) அல்ல, ஒருங்கிணைதல் (integration). ஒருங்கிணைதல் முரண்களை மழுங்கச் செய்த அல்லது விலக்கிய இணைத்தல் (accommodation), ஒட்டுப்போடுதல் அன்று. முரண்படும் புள்ளிகளை விலக்காமல் அவற்றை ஆக்கப்பூர்வமான அதிர்வுப் புள்ளிகளாகத் திருகுவது.

* Asim Roy, The Islamic Syncretistic Tradition in Bengal (Princeton, 1984).



படிப்பகம்

www.padippakam.com



ஷா-முனி, இரு சமூகங்களுக்கிடையிலான பகைமையை இந்த 'மண்ணுக்கேயுரிய' சைவ-வைணவப் பகைமையாக மாற்றிப் பொருள்கோடல் செய்வதை, இப்படியான ஒரு திருகலாகச் சொல்லலாம். ஏக இறைமைக் கொள்கையில் சமரசம் செய்து கொள்ளாமலேயே, சொக்கமேளர் மீதான தீண்டாமை விலக்கலைச் சுட்டிக்காட்டியபடியே, அதாவது விலகி நிற்கும் புள்ளிகளைத் தக்க வைத்துக்கொண்டே, 'இந்து' மரபுப் பக்கம் சாய்ந்து, இஸ்லாத்தை விளக்கப்படுத்தி, 'இந்து-முஸ்லிம்' மோதலை, சைவ-வைணவ மோதலாக, மீளவும் ஒரு இயக்கப் புள்ளியாக அதிர விடும் அவரது பொருள்கோடல் எத்தனை ஆக்கப்பூர்வமானது!

இந்த இரண்டாவது கட்டத்திலும் மோதல்களின் தன்மை, இன்றைய நவீன வகையிலான மத/வகுப்புவாத மோதல்களை ஒத்தாக இருக்கவில்லை என்பதும், மீண்டும் மீண்டும், யவனர்கள் என்ற பதம் இரு பக்கங்களிலிருந்தும் எழுவதையும் அழுத்தமாக கவனத்தில் கொள்ள வேண்டும். ஷா-முனி, யவனர்கள், மிலேச்சர்கள் என்ற பதங்கள் தவிர்த்து அவிந்தர்கள் என்ற பதத்தையும், விருப்பப்பூர்வமான பதமாக முஸல்மான்கள் என்ற பதத்தையும் ஆள்கிறார். இறுதியாக, வேத, புராண, தர்மசாஸ்திரங்கள் போன்ற பார்ப்பனிய மரபுகள், நாட்டுப்புற சிறுதெய்வங்கள் உள்ளிட்ட மரபுகளைச் சேர்ந்த 'இந்து'க்களைக் குறிக்க அவர் ஆளும் பதம் 'இந்து' என்பதோ 'இந்து தர்மம்' என்பதோ அல்ல; மாறாக, மராட்டிய தர்மம்.

இந்து-முஸ்லிம் உறவுகளில் எழுந்த அடுத்த நிலை குறித்து பார்ப்பதற்கு முன்பாக, வரலாறு எழுதுதலில் உள்ள அடிப்படையான பிரச்சினைகள் சிலவற்றை கவனத்தில் கொள்வது நல்லதெனப்படுகிறது. நவீன வரலாற்றெழுதியல் ஹெகலின் தத்துவம் சார்ந்து எழுந்த ஒன்று. ஹெகலின் ஒட்டுமொத்த தத்துவப் பார்வையுமே வரலாற்று அடிப்படையிலானது. உலக வரலாறு என்ற கருத்தாக்கத்தை உருவாக்கியதே அவர்தான் என்று சொல்வதும் மிகையாகிவிடாது. மிகவும் விரிவான வரலாற்று ஆய்வுகளை அவர் தமது தத்துவத்திற்கு அடிப்படையாகக் கொண்டிருந்தார்.

அவருடைய பார்வையின் அடிப்படையான கோளாறு, வரலாற்றை, காலத்தை ஒரு வட்டமாகப் பார்த்ததில் அடங்கியிருக்கிறது. வரலாற்றை இயக்கும் சக்தியாக அவர் கண்டது Geist (உலக ஆன்மா). காரல் மார்க்சின் விமர்சனத்தை அடியொற்றி 'மார்க்சியர்கள்' பொதுவாக இதை இறை என்று புரிந்து, இன்று வரையிலும்கூட ஹெகலை 'கருத்துமுதல்வாதி' என்று விமர்சித்து வருகின்றனர். ஆனால், 1930 களில் அலெக்சாண்டர் கொயேவ் என்ற ஃபிரெஞ்சு மார்க்சிய அறிஞர் இதை மானுட உழைப்பு என்பதாகப் பொருள்கோடல் செய்தார். (ஹெகல் பொருளாதாரம் குறித்தும் விரிவான ஆய்வுகள் செய்தார்).

இந்நோக்கில், மானுட இருப்பின் அர்த்தம், இருத்தலின் சாரம் உழைப்பு. என்றாலும், இதன் சாத்தியங்கள் வரையறுத்துவிட முடியாதவை. உழைப்பினால் உருவாகும் மானுடனின் சாரம் (human essence) படிப்படியாக வளர்ந்து ஒரு உயர்ந்த கட்டத்தை அடைந்ததும் மீண்டும் இன்னொரு முறை, இன்னும் உயர்ந்த நிலையில் ஒரு சுழலில் சுற்றி வரும். இதன்படி நிகழ்காலமும் எதிர்காலமும் கடந்த காலத்தின் ஆரம்பப் புள்ளியில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்டவை. ஆங்கிலத்தில் இத்தகைய நோக்கை teleology என்பர்.

காரல் மார்க்ஸ் ஹெகலை இந்த விதத்தில் மீறவில்லை என்றே சொல்லலாம். உழைப்பு என்பதை சற்றே விரித்து, உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரணின் வளர்ச்சியாக வரலாற்றை விளக்கி, அதற்கு வரலாற்றுப் பொருள் முதல்வாதம் என்று பெயர் சூட்டியதற்கு மேலாக அவர் சென்றுவிடவில்லை.

இப்பார்வைக்கு மாற்றுகள் எதுவும் எழுந்துவிடாமலும் இருக்கவில்லை. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிகளில் மார்க்சியத்திற்கு எதிரான நிலையெடுத்த வரலாற்றாசிரியர்கள் பலரும், ஹெகலின் செல்வாக்கிற்கு உட்படாதிருந்த ஆங்கிலேய ஃபிரெஞ்சு வரலாற்றாசிரியர்களும், வரலாற்றை நேர்கோட்டு (linear) மாதிரியில் பொருள்கோடல் செய்ய முற்பட்டனர். இப்பார்வையும் நிகழ்காலத்தின் ஒரு புள்ளியை, கடந்த காலத்தின் ஒரு புள்ளியோடு இணைத்து விளக்கிவிடும் சாதுர்யம் கொண்டதாகவே இருந்தது. இதன் தவிர்க்க முடியாத உடன்-விளைவு, காலத்தை வெளிமயமாக்குவது (spatialise). கடந்த காலத்தின் ஒரு புள்ளியை எடுத்து, விரித்து விரித்து விளக்கும் போதே இது நிகழ்ந்துவிடுகிறது. ஒருவேளை காலத்தை வெளியாக விரிக்கும் பண்பு வரலாறு எழுதுதலுக்கேயுரிய - அது எத்தகையதாக இருந்தாலும் - மீறவே முடியாத பிரச்சினையாகவும் இருக்கலாம்.

1960 களில் வரலாற்றெழுதியலின் இந்த நேர்கோட்டு மாதிரியை கிட்டத்தட்ட தனியொரு நபராகவே நின்று கேள்விக்குள்ளாக்கியவர் ஃபூக்கோ. அதில் முதல் பரிசோதனையாக அவர் மேற்கொண்டது geneological (கால்வழி மரபு) model. இன்றுள்ள ஒருவரின் மூதாதையரைத் தேடும்போது குடிவழி மரபில் தொடர்ச்சியின்மைகள், கலப்புகள் பலவற்றைக் காண நேரிடலாம். தொடர்ச்சியின்மைக்கும் புறக்காரணிகளுக்கும் அதிக அழுத்தம் தந்த மாதிரி இது. ஆனால், வெகுவிரைவிலேயே ஃபூக்கோ இந்த மாதிரியிலும் அதிருப்தி கொண்டார். (ஃபூக்கோவிற்கு முன்பாகவே நீட்ஷே இந்த மாதிரியின் அடிப்படையில் அறவியலின் தோற்றத்தை ஆய்ந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. ஃபூக்கோவும் கூட நீட்ஷேவிடமிருந்தே இதை எடுத்துக் கொண்டார். மார்க்சிய மூலவர்களும்கூட, குறிப்பாக எங்கெல்ஸ், தமது வரலாற்றாய்வுகளில் புறக்காரணிகள் (போர்), தொடர்ச்சியின்மைகள் (பஞ்சம்) போன்றவற்றுக்கு அழுத்தம் தந்தே அணுகியிருக்கிறார்கள். மார்க்சிய வரலாற்று ஆய்வுகளில் ஒரு வறட்டுச் சூத்திரமாகவே உருவாகிக் கொண்டிருந்த 'பொருளதாரக் காரணிகளுக்கு' எதிராக, எங்கெல்ஸ் தமது கடைசிக் காலங்களில் தொடர்ந்து கருத்துகளைத் தெரிவித்துக் கொண்டிருந்தார் என்பதையும் இந்த இடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.)

அடுத்ததாக அவர் பரிசோதித்துப் பார்த்தது archeological (தொல்லியல்) model. புதையுண்டுபோன கடந்த கால நாகரிகங்கள் பற்றிய தொல்பொருள் ஆய்வுகளில் ஒரு காலப்பகுதியைச் சேர்ந்ததாகக் கருதப்படும் பொருள்களினூடே அதற்கும் முந்தைய அல்லது பிந்தைய காலப்பகுதியைச் சேர்ந்ததாகக் கருதப்படும் பொருள்களும் சேர்ந்து விரவியே இருக்கும். ஒவ்வொரு காலப்பகுதிக்குரிய அடுக்கிலும் இப்படியே தொடர்ந்து போகும். குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய அடுக்கில் அந்த நாகரிகத்தின் 'வளர்ச்சிக் கட்டத்தில்' இவற்றில் எது தீர்மானகரமான காரணியாக அமைந்திருக்கக்கூடும் என்பது ஆய்வாளரின் பிரச்சினையாக நிற்கும். இந்த மாதிரியைக் கைக்கொள்வதில் புறக்காரணிகள், தொடர்ச்சியின்மைகள் மட்டுமல்லாது அணுக்கங்களையும் (contiguities) கணக்கில் கொள்ள முடியும்.

சபால்டர்ன் குழுவினரின் எழுத்துகள் பலவற்றிலும் இந்த அணுகுமுறையைக் காண முடியும். ஆனால், சஞ்சய் சுப்பிரமணியமும் அவர் பெரியதொரு சாதனையாளரைப் போலக் குறிப்பிடும் C.A. Bayly என்பவரும் மேற்கொள்ளும் அணுகுமுறை நேர்கோட்டு வரலாற்றெழுதியல். இன்றைய மதக்கலவரங்களை மத்தியகால' உறவுகளோடு நேராக இணைத்து முடிச்சு போடும் அணுகுமுறை. ஞானேந்திர பாண்டே பெய்லியைக் குறிப்பிட்டு 'தொடர்ச்சிவாத' (continuity argument) அணுகுமுறையை வைப்பவர் என்று தெளிவாகவே நிராகரிக்கிறார்.* சஞ்சய் சுப்பிரமணியம் இந்த விமர்சனத்தைப் புறக்கணித்து, தமது Before the leviathan கட்டுரையில் மத்திய கால உறவுகளைப் பற்றிய ஆய்வுகளில் இறங்கவில்லை என்ற

* Gyanendra Pandey, The Construction of communalism in colonial India. (OUP, 1991). பார்க்க, பக்.15.



படிப்பகம்

www.padippakam.com



விமர்சனத்தை பாண்டேயின் மீது வைப்பதை வெறும் அசட்டைத்தனம் என்று மட்டும் கூறிவிட முடியாது. இதன் பின்னணியாக இருப்பது அவருடைய இன்னொரு சாய்வு.

சஞ்சய் சுப்பிரமணியத்தின் அடிப்படையான தாக்குதல் இலக்கு, காரல் மார்க்ஸ் தமது ஆரம்பகால எழுத்துகளில் முன்வைத்த Asiatic Model. இந்நோக்கில், 'இந்திய' சமூகம் ஒரு விதிவிலக்கான, இயக்கமற்ற, தேக்கமுற்ற சமூகம். பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தின் பாதகமான அம்சங்களையும் மீறி, அதுவே இங்கு மாற்றத்தின் சலனத்தையாவது ஏற்படுத்தக் கூடியது. (காரல் மார்க்ஸ் தமது பிற்கால எழுத்துகளில், குறிப்பாக, *1857-8* கையெழுத்துப்படிகளில் இந்தக் கருத்துகளை மறுபரிசீலனை செய்திருக்கிறார்.) இந்த ஆசிய மாதிரி என்ற கருத்தமைவை மறுத்து, 'இந்திய' சமூகம் காலனியத் தலையீட்டிற்கு முன்பாக, இயக்கம் மிகுந்த ஒன்றாகவே இருந்தது என்பதை நிறுவும் முயற்சிகளாகவே சஞ்சய் சுப்பிரமணியத்தின் எழுத்துகளை வாசிக்கும்போது தோன்றுகிறது. ஆனால், அவர் அதற்கும் ஒரு படி மேலே சென்று, 'இந்தியத் தன்மை' குறித்துப் பேசுவதும், கண்மூடித்தனமான மார்க்சிய எதிர்ப்பில் இறங்கி, சபால்டர்ன் குழுவினரை மரபான மார்க்சியர்களாக எடுத்துக் கொண்டு காய்வதும் நுட்பமான இந்துத்துவ சார்பு வரலாற்றைக் கட்டமைப்பதை நோக்கிச் சரிவதாகி விடுகிறது. (ரவிக்குமார் இவரைத் தேடிப் பிடித்து இங்கே இறக்கும் 'மர்மம்' இதுதான்.)

இதற்கு மறுப்பாக, இங்கு முன்வைத்திருக்கும் மாதிரி, புறக்காரணிகள், தொடர்ச்சியின்மைகள், அணுக்கங்களைக் கணக்கில் கொண்டது. அதாவது, இங்கு பிரித்துச் சொல்லும் கட்டங்களை காலவரிசைப்படி ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்த போக்குகளாக அல்லாமல், சில பிரதேசங்களில், சில காலப்பகுதிகளில் நிலவிய சாத்தியங்கள் என்பதாக அணுக வேண்டும். உதாரணத்திற்கு, 'மத்திய காலம்' என்று சொல்லும் காலனித்தியத்திற்கு முந்தைய நீண்ட காலப்பகுதியில் சில சமயங்களில் ஒரே நேரத்தில் நிலவிய உறவுகளாகப் (வட இந்தியப் பிரதேசங்களில் என்ற வரையறையோடு) பார்க்கலாம். தென் இந்திய, குறிப்பாக தமிழக நிலைமைகளில் இதிலிருந்து மாறுபட்ட உறவுகள் நிலவியிருக்கவும் சாத்தியங்கள் உண்டு. அது குறித்தும் குறைந்தபட்ச (இப்போதைக்கு என்னால் முடிந்த அளவில்) சில தகவல்களையும் தர முயற்சிக்கிறேன். அதோடு, ஈட்டனை மேற்கோள் காட்டி ரவிக்குமார் முன்மொழியும் inclusion, identification, displacement என்ற இயக்கமற்ற (static) மாதிரிக்கு மாற்றாக, இந்து-முஸ்லிம் உறவுகளில் இருதரப்பினரது பார்வைகளையும், அவற்றில் நிகழ்ந்த மாறுதல் களையும், அவை சந்திக்கும், முரண்படும், விலகிச் செல்லும் புள்ளி களையும் கணக்கில் கொள்கிற ஒரு இயக்கத்திலுள்ள (dynamic) மாதிரியை, அதன் முதலிரண்டு கட்டங்களாக மோதல் (confrontation) இணைத்தல்/கரைத்தல் (accommodation/ assimilation) - ஒருங் கிணைதலாக (integration) முன்மொழிகிறேன்.*

இந்தப் புரிதல்களோடு, மூன்றாம் கட்டத்திற்குள் 'நுழைந்தால்', நம்மை எதிர்கொள்வது சற்றும் எதிர்பாராத ஒரு புறக்காரணி - காலனியத் தலையீடு. இதன் விளைவாக உருவாகும் ஒரு தொடர்ச்சியின்மை - காலனியத்திற்கு முந்தைய இந்து-முஸ்லிம் உறவுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட தன்மையிலான உறவுகளின் தோற்றம். என்றாலும், தொடர்ந்து தென்படும் சில அணுக்கங்கள் - 'இந்து - இந்திய மனத்தின், மரபின்' விலக்கி வைப்பது, கரைத்துக் கொள்வது என்ற 'செழித்த' பண்புநலன்.

(தொடரும்)

* இக்கட்டுரையை எழுதும் போக்கில் உருவகித்த மாதிரி இது. இங்கு குறிப் பிட்டுச் செல்லும் வரலாற்றாய்வாளர் களின் ஆழமான ஆய்வுகளிலிருந்தே உருவாக்கிக்கொண்டது என்ற போதிலும், இதன் குறைகளுக்கும் 'தோல்விகளுக்கு மான' பொறுப்பு முழுக்க முழுக்க என்னையே சேரும். ●

## பச்சை நிறமே பச்சை நிறமே

'எங்க அம்மாவுக்கு'
பிடித்த நிறம் - பச்சையாம்
எங்கெங்கு காணினும் சக்தியடா
என்றான் பாரதி - எங்க
அம்மா எங்கும் பசுமையாய்
காட்சியளிக்கின்றார்.
பச்சை என்றால்
பசுமையைக் குறிக்கும் - இங்கு
வறட்சியல்லவா நிலவுகிறது?
அழைப்பிலும்
அன்பிலும்
அடிப்பதிலும்
கல்வெட்டிலும்
காலடித் தடத்திலும்
கண்ணில் படும்
திசையெங்கும்
பச்சைமயம்
விழாக்களில்
ஆளினைத்தவிர
அனைத்தும் பச்சைமயம்
இல்லையென்றால் - அன்றிரவே
பசை இல்லாமல் ஆக்கிவிடுவார்; எங்க அம்மா
முன்தேதியிட்டு - அவசர உத்தரவு
பள்ளி - கல்லூரிகளில்
பச்சை நிறமுள்ள சீருடை
அணிய வேண்டுமாம்
இல்லையென்றால்
அனைவருக்கும்
'டெஸ்மா'தான்.



கடைகளில்
காலியாகிவிட்டன
பச்சை பெயிண்ட்
எங்கே
'கிரீன்மா'
பாய்ந்துவிடுமோ என்று
நடுக்கத்துடன் வியாபாரி

**- 'அம்மாவின் பச்சையன்'**

கல்லூரி மாணவர்
(நடுக்கத்துடன்)





படிப்பகம்

www.padippakam.com


# மொழி பெயர்ப்புக் கவிதைகள்

**மொழிபெயர்ப்பும் குறிப்பும் : வளர்மதி**

## SOS

கவனிக்கவும்
கறுப்பு மக்கள் கவனிக்கவும்
ஆண் பெண் குழந்தை எல்லா கறுப்பு மக்களும்
கவனிக்கவும்
எவர் எங்கே இருந்தாலும் கவனிக்கவும்
அவசரம், மறுமொழி பேசவும்
கறுப்பு மக்கள் மறுமொழி பேசவும்
அவசரம், எவர் எங்கே இருந்தாலும் கவனிக்கவும்
எல்லா கறுப்பு மக்களும் கவனிக்கவும்
எல்லா கறுப்பு மக்களும் கவனிக்கவும், மறுமொழி பேசவும்
கறுப்பு மக்கள் உடன் மறுமொழி பேசவும்.

**- அமிரி பராகா (1934 - )**

அமிரி பராகா 60களில் கறுப்பு அழகியலைக் கட்டமைப்பதில் முக்கியப் பங்காற்றியவர். 70களில் கறுப்புத் தேசிய இயக்கம் குறுகிய வரையறைகளுக்குள் சிக்கியிருப்பதாக விமர்சித்து மார்க்சியத்தை நோக்கி நகர்ந்தார். இவரது பெயர் மாற்றங்களே இவரது அரசியல் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும். பெற்றோர் இட்டது Everett Le Roy. கல்லூரிக் காலத்தில் ரூலி ஜலூர் ஜலூலிவு என்று (ஃப்ரெஞ்சு வாடை வீச) மாற்றிக் கொண்டார். 60களில் கறுப்புத் தேசிய இயக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்டபோது Imam (spiritual leader) Ameer (blessed me) Baraka (prince) என்று இஸ்லாமியப் பெயரைச் சூட்டிக் கொண்டார். மார்க்சியத்தை நோக்கி நகர்ந்தபோது Imam என்பதைக் கழற்றிவிட்டார்.

SOS என்பது தொடக்கத்தில், கப்பல்கள் ஆபத்தில் சிக்கிக் கொள்ளும்போது தரும் அவசரச் செய்தியாக இருந்தது (Save our souls). அமிரி பராகா சிறிது காலம் விமானப் படையில் பணியாற்றியவர்.

•

## தங்கைக்கு ஒரு கடிதம்

நுனிநாக்கில் பழிப்பது
மானிடற்கேயுரிய பலவீனத்தின்பாற்பட்டு பெருமை பேசித்திரிவது
அல்லது விதித்துக்கொண்டுவிட்ட எல்லைகளை மீறத்துணிவது
யாவும் ஆபத்தானது
ஒரு பெண் கடவுளரைப் பகைத்துக் கொள்வதென்பது ஆகாது
மூழ்கடித்துவிடக் கூடிய கடல்கள் துயர்தரும் பயங்கரங்கள்
கொடும்பாவங்களெனும் சாபம்
அதோடு
சீறிப் பாய்கிற மின்னலையும் கடவுளர் தம்வசம் வைத்திருக்கின்றனர்.

ஆனால் இதைவிடவும் மோசமானதிருக்கிறது
மண்டியிடுவது துதிப்பது அலைக்கழித்து ஆட்டம் காட்டுவது
அன்பாயிருப்பது அல்லது துன்பத்துளிகளைக் கொட்டுவது
அல்லது சட்டென்று ஒன்றுமறியாக் குழந்தையை அணைத்துக்கொள்வது
எதுவும் நடக்காது
நீ
நல்ல அழகானவளோ இல்லையோ, நிச்சயிக்கப்பட்டிருப்பவளோ அல்லது
மணம் துறந்திருப்பவளோ - ஒன்றும் பலிக்காது
கடவுளர்கள் பலி கொள்பவர்கள்
தீரத் தீரக் கேட்பவர்கள்.

இவை மட்டும் செய்ய உனக்கு அனுமதியுண்டு
வெயிலுக்கென்று நிழல் தேடக்கூடாது
இருள் இறங்கும்போது எந்த விளக்கும் ஏற்றி வைக்கக்கூடாது
சத்தம் காட்டாமல் மூச்சு விடவேண்டும்
அப்புறம்
எப்போதும் அவர்கள் உன்னுள் கூர்ந்து நோக்குகிறார்கள்
என்ற பயமிருக்கட்டும்
அமைதியாக
உன் இதயத்தைப் பூட்டி வைத்துவிடு
கடவுளரை, அவர்களது மேன்மைமிக்க லீலைகளை
துணிந்து எதிர்த்தால்
மரணம் நிச்சயம்.

***- ஆன்னி ஸ்பென்சர் (1882-1975)***

ஆன்னி ஸ்பென்சர் : உயிரோடு இருந்த காலத்தில் மிகக் குறைவாகவே கவிதைகளைப் பிரசுரித்ததாலோ என்னவோ சரியான அங்கீகாரம் கிடைக்கப் பெறாதவர். இவருடைய Before the Feast of Shushan என்ற கவிதையோடு இன்னும் நான்கு கவிதைகளை ஜேம்ஸ் வெல்டன் ஜான்சன் என்ற புகழ்பெற்ற ஆஃப்ரோ-அமெரிக்கக் கவிஞர் தாம் தொகுத்த The Book of American Negro Poetry (1922) என்ற தொகுப்பில் சேர்த்தார். அதன் பிறகே அவருடைய கவிதைகள் தொடர்ந்து பல தொகுதிகளிலும்


படிப்பகம்

எல்லா இளைஞர்களைப் போலவும்
அவர்களும் கனவுகள் கண்டார்கள்
புகழைப் பற்றியும் காதலையும் அதிகாரத்தையும்.

எல்லா இளைஞர்களைப் போலவும்
அவர்களும் நம்பிக்கை வைத்தார்கள்
வாழ்வின் பொன்னான வேளை குறித்து.

மற்ற எல்லோரையும் போலவே அவர்களும் கண்டார்கள்
நீர்க்குமிழிகள் போல காற்றில் மிதந்து
தம் கனவுகள் சிதறிப் போனதை.
எதுவுமே நடவாதது போல்
இப்போது
இங்கு வாழவும் கற்றுக் கொண்டார்கள்.

*- ஜியார்ஜியா டக்ளஸ் ஜான்சன் (1886 – 1966)*

ஜியார்ஜியா டக்ளஸ் ஜான்சன் ஹார்லெம் மறுமலர்ச்சிக் காலத்தின் (1919-40) தலைசிறந்த பெண் கவிஞர்களுள் ஒருவராகக் கருதப்பட்டவர். இவருடைய முதல் கவிதைத் தொகுதி The Heart of a Woman 1912 இல் வெளியானது. நல்ல வரவேற்பைப் பெற்றபோதிலும், இனப் பிரச்சினையின்பால் கவனம் செலுத்தவில்லை என்பதற்காக விமர்சிக்கப்பட்டது. Bronze : A Book of Verse (1922) என்ற தொகுப்பில் முழுக்க முழுக்க இனப் பிரச்சினை குறித்த கவிதைகளைத் தந்து இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். என்றபோதிலும், பொதுவில் இவரது ஆர்வங்கள் காதல், வாழ்வு குறித்த உணர்ச்சிமயமான, ஏக்கம் நிறைந்த குறிப்புகளாகவே இருந்தன.

●

## வேண்டுதல்

இங்கே, வீட்டில்
ஒரு சின்ன மூலையில்
பலிபீடம் ஒன்று வைக்கலாமா என்று யோசித்திருக்கிறேன்
எது எப்படியா, வீட்டில் எங்குவேண்டுமானாலும்
மண்டியிட்டு விழுந்துவிடுவது எனக்குப் பழக்கமானதுதான்
சில நேரங்களில் எதைப்பற்றியுமே யோசிக்காமல்
மண்டியிட்டு வணங்குவதுண்டு
கடவுளே, இதோ என் சித்தம், எடுத்துக்கொள்
என்று சில போது சொல்வதுண்டு
ஏனென்றால் அந்த நேரங்களில்
எப்போதுமே வீட்டில் ஒருவரும் இருப்பதில்லை
அதனால் என் சித்தத்தை எடுத்துக்கொண்டு
என்னை அவன் வழியில் இட்டுச் செல்லவேண்டுமென்று
ஆண்டவனை நான் கேட்டுக் கொள்வதுண்டு.

உண்மையிலேயே இன்று நல்ல மழையடிக்கிறது
என்ன?

*- இஸபெல்லா மரியா ப்ரௌன்*

தனது ஆறாம் வயதிலேயே ப்யானோ வாசிக்கக் கற்றுக் கொண்டவர் கவிதைகளோடு கூட இசைப் பாடல்களும் இயற்றுபவர்.

●

●

அவளைக் காதல் செய்ய என்னை அனுமதிக்கும் முன்பாக
அவள் எப்போதும் எப்போதும்
எப்போதும் நான் அவளை மட்டுமே காதல் செய்வேன்
என்று என்னை சத்தியம் செய்யச் செய்தாள்.
நான் அவளிடம் சொல்ல முயற்சித்தேன்
சொன்னேன், "கண்ணே, இதோ பார், நாம் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வோம்
எது என்ன ஆனாலும் நாமிருவரும் காதல் செய்வோம்
மே தினம் வரை, பிற்பாடு என்ன ஏது என்று யோசிப்போம்.
எப்படியிருந்தாலும், மே தினம் எனது பிறந்த நாள்
அன்று நிச்சயம் நான் நல்ல மகிழ்ச்சியான மனநிலையிலேயே இருப்பேன்
அப்பாது இதுபோலவே தொடர்ந்து இருக்க விரும்பினால்
நமது சிறிய இந்தக் காதல் ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்வோம்
கிறிஸ்துமஸ் வரைக்கும்."

●

அவள் கேட்பது போலத் தெரியவில்லை
வேறு வழியில்லாமல் நான் அவளுக்கு சத்தியம் செய்து கொடுத்தேன்
அன்பே அந்தச் சந்திரனை உருக்கி தங்கத்தில் உனக்கு
காதணிகள் செய்து தருவேன்

*- நார்மன் லாஃப்டிஸ் (1943-)*

Black Anima என்ற கவிதைத் தொகுதி, Small time, The Messenger என்ற இரு திரைப் படங்கள் இவரது படைப்புகளில் முக்கியமானவை. கட்டுரையாளராகவும் நாவலாசிரியராகவும்கூட அறியப்படுபவர். தற்போது Medgar Evers College, City University of NewYork இல் பேராசிரியராகப் பணி புரிகிறார்.

இக்கவிதை ஃப்ரான் சிலிருந்து வந்துகொண்டிருந்த அம்மா இதழ் 9இல் ஏற்கனவே பிரசுரமானது.

www.padippakam.com


உன் கண்களின் சிமிட்டல்களுக்கு முன்னால்
மின்மினிப்பூச்சிகள் என்ன பிரமாதம்
என்று உருகினேன்
இன்னும் இதுபோல அபத்தங்களை உளறித் தள்ளினேன்.

●

முடிந்த பிறகு
அவளை ப்ராட்வேயில் ஒருபாருக்கு அழைத்துச் சென்றேன்
அவள் முகம் காதல் செய்த களிப்பில் இன்னும் சிவந்திருந்தது
நான் அதைக் கண்டுகொள்ளவில்லை
என்னை ஒளிக்காமல் சொல்லிவிட்டேன்
அன்பாக இருக்க இரக்கமற்றவன் போலக் காட்டிக்கொண்டேன்.

●

அவளுக்குச் சொன்னேன், ''கட்டிலில் நான் சொன்னதையெல்லாம் வைத்து
கற்பனைகள் எதையும் வளர்த்துக் கொள்ளாதே
ஒரே பெண்ணோடு சுருக்கு மாட்டிக்கொள்ள என்னால் முடியாது.''

●

அவள் வயிறு வெடிக்கச் சிரித்தாள்
ஊளையிட்டாள், ''அந்தக் குப்பையை எல்லாம் நம்பிவிட்டதாகச்
சொல்லிவிடாதே''
மணலில் விழுந்த மீன் அடித்துக்கொள்வது போல மூச்சு வாங்கினாள்
''நீ ரொம்பவும் உணர்ச்சிவயமானவளாக இருக்கிறாய்.''

●

வீட்டின் அசட்டுப்பயலைச் செல்லமாகத் தட்டுவதைப் போல
என் கன்னத்தில் தாயன்போடு முத்தமிட்டாள்
என் கணவன் திரும்பவுதற்கு முன்னால்
வீடுபோய்ச் சேரவேண்டும் என்று கிளம்பினாள்
அவள் திருமணமானவள் என்பது கூடத் தெரியாமல்...
சில நாட்கள் கழித்து
எவ்வளவு அன்பான பெண் அவள் என்று
அவளைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்
தொலைபசியில் அழைக்க முயற்சித்தேன்
ஆனால் அவள் எனக்குத் தவறான எண்ணைத் தந்திருந்தாள்.

●



## புதிய முகம்

எச்சரிக்கைகளற்று சுழன்றோடும் குருதியின்
இருள் நிறைந்த புதிர்களை
கரையுடைத்துப் பாயத்துடிக்கும் வெள்ளமென
விளிம்பில் தளும்பும் உணர்ச்சி வேகங்களை
சலனமேதுமில்லாமல் நோக்க
காதலை நினைத்து கவலை கொள்ளாதிருக்க
நிறைந்த மனதோடு அதன் வருகையை எதிர்கொள்ள
மதிக்க
நான் பழகிக் கொண்டுவிட்டேன்
பன்முகங்கொண்ட நமது நான்களுக்குள்
எங்கோ
வற்றாதிருக்கும் ஒரு ஊற்றிலிருந்து
அது சுரக்கிறது என்று தோன்றுகிறது
உனக்கு நான் காட்டும் இந்த முகம்
இந்தப் பூமியில்
இதுவரையில்
யாருக்கும் காட்டாதவொன்று.

-ஆலிஸ் வாக்கர்

Colour Purple என்ற நாவலின் மூலம் உலகளாவிய அளவில் அறியப்பட்டவர். (இந்த நாவல் Steven Spielperg ஆல் திரைப்படமாக எடுக்கப்பட்டது.) இவரைப் பற்றிய சற்று விரிவான அறிமுகத்துடன்

இவரது சிறுகதையொன்று நிறப்பிரிகை இலக்கிய இணைப்பு 4இல் வெளியாகியுள்ளது.

இக்கவிதை ஒரேயொரு இதழோடு நின்றுபோன வேறு வேறு இதழில் பிரசுரமானது.


படிப்பகம்

www.padippakam.com



# சாதி ஒழிப்பும் 'புள்ளி ராஜா'வும்

## (ஜாகர் கட்டுரைக்கான காளிங்கராயனின் கட்டுரை மீதான கருத்துகள்)

- ருத்ரன்

மார்க்சியம், பெரியாரியம் என்கிறபோது, கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் முக்காலங்களைக் கணக்கில் கொண்டும், கொள்கையாளர்கள், சந்தர்ப்பவாதிகள் ஆகிய வேறுபாடுகளைக் கணக்கில் கொள்ளாமலும் விமர்சிப்பவர்கள், புத்தம், அம்பேத்கரியம் என்கிறபோது புத்தரோடும் அம்பேத்கரோடும் மட்டும் நின்றுகொண்டும், கொள்கையாளர்கள், சந்தர்ப்பவாதிகள் ஆகியோர் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டியும் வியாக்கியானம் செய்வது வழக்கமாயிருக்கிறது. இந்தப் போக்கு, அறிவுக்கும் ஆய்வுக்கும் உகந்ததல்ல. தோழர் காளிங்கராயனின் கட்டுரையிலும் இதுபோன்ற தவறுகளும் சார்புகளும் வரவிக்கிடக்கின்றன. அனைத்தையும் பட்டிய லிட்டு எழுதத் தொடங்கினால் இக்கட்டுரை மிகப் பெரிதாகிவிடும் என்பதால் இயன்றவரை சுருக்கியும் தேர்ந்தெடுத்தும் எழுதப்படுகிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான போராட்ட காலத்தில், கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையில் இருந்த சில பார்ப்பனர்களின் சிந்தனை மற்றும் செயற்பாடுகள் பலமுறை பலரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் செய்யப்பட வேண்டியதும் அவசியமாகும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனாலும், கம்யூனிஸ்டுகள் அனைவரையும், ''இந்திய சனாதனிகள்'' என்றும் ''இடது சாரி பூணூலிஸ்டுகள்'' என்றும் நிறுவ முடியாது. இத்தகைய பொருத்தமற்ற சொல்லாடல் களில், இந்தியக் கம்யூனிச இயக்கத்தின் தியாகித் தோழர்களைக் கொச்சைப் படுத்துவது துரோகமானதாகும்.

காங்கிரஸ், முஸ்லீம் லீக், இந்து மகாசபை போன்றவை களோடும் ராஜாஜி போன்றவர்களோடும் கம்யூனிஸ்டுகள் இணைந்து செயற்பட்டவர்கள் என்று குறை சொல்லும் தோழர் காளிங்கராயன், அன்றைய அரசியல், சமூக, சர்வதேச சூழல்களைப் பார்க்கத் தவறுகிறார். மேலும், இதுபோன்ற குறுகிய பார்வையில், பெரியார், அம்பேத்கர் ஆகியவர்கள் மீதும் குற்றம் சுமத்துவது எளிமையானது. எனவே, கடந்த கால அரசியல் நிலைமைகளை ஆய்வு செய்வதற்கு இன்றைய நிலைப்பாடுகள் மட்டுமே போதுமானதல்ல.

கம்யூனிஸ்ட் கட்சியிலும் ''சாதியம் தலைவிரித்தாடுகிறது. தலித் மக்கள் தமது தீண்டாமையொழிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு செல்லவேண்டாம். புத்தமதத்திற்கு செல்லுங்கள்'' என்று சொன்ன அம்பேத்கர், லட்சக்கணக்கான மக்களுடன் புத்தமதம் தழுவிய விழாவில், மூடச்சடங்குகளும் சம்பிரதாயங்களும் மேலோங்கி நின்றன. ''அம்பேத்கர் சொன்னதில் என்ன தவறு?'' என்று கேட்கும் தோழர் காளிங்கராயன், மத அடிப் படையிலான முட்டாள்தனமான நம்பிக்கைகளும் நடவடிக் கைகளும் சாதி மற்றும் தீண்டாமையின் ஊற்றுக்கண் என்னும் அடிப்படையில் அம்பேத்கரை விமர்சிக்க முடியவில்லை.

மேலும், தற்காலத்தில், புத்தர் சிலைகளுக்கு பாலாபிஷேகம் செய்யப்படுவதற்கும், புத்தர் 'கோயில்களில்' விழாக்களை நடத்தி வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்கும் காரணத்தைக் கண்டறிய வேண்டும். இந்நிகழ்வுகள் நீடிக்கும் மற்றும் வளர்க்கும் புத்தம், யாருக்கான மதம் என்பதையும் விளக்க வேண்டும். அதுமட்டுமின்றி, மும்மாரி பொழிந்து உலக மக்கள் சுபிட்சமாக வாழவேண்டுமெனில், ஒவ்வொருவரும் புத்தர் பெயரைதினமும் உச்சரிக்க வேண்டும் என்றும் பகுத்தறிவுக்குப் புறம்பான கேவலமான மதப்பிரச்சார அவலத்தைக் கண்ட பிறகும், ''பௌத்தம் புரட்சிகரமானது'' என்னும் கி.மு. வையே சொல்லிக் கொண்டிருப்பது வரட்டுத்தனமாகும்.

''இந்து மதத்தின் இழிவிலிருந்து தலித்துகள் வெளியேறுவதில்'' தோழர் ஜாகர் உட்பட யாருக்கும் ''சங்கடம்'' இருக்க முடியாது. ஆயினும், ''நிறுவனமாகிக் குறுகிப் போன பௌத்தம், கிறித்துவம், இஸ்லாம்... போன்ற'' மதங்களுக்கு மாறுவதால், தலித்துகள் எப்படி விடுதலை அடைய முடியும் என்பதே சங்கடத்திற்குரியது.

அம்பேத்கர், ''இலட்சக்கணக்கானோரைத் திரட்டி மதம் மாற்றிய''தைப் போல, ''காசேதான் கடவுளடா என்று ஜல்லி யடிக்கும் இடதுசாரி இயக்கங்கள் இதுவரை எத்தனை லட்சம் பேரை ஒருங்கிணைத்து 'மதநீக்கம்' என்கிற கலாச்சார இயக்கத்தை நடத்தியுள்ளனரென்று சொல்ல முடியுமா மிஸ்டர் ஜாகர்?'' என்று கேட்கிறார் தோழர் காளிங்கராயன்.

1. அம்பேத்கரின் செயற்பாடுகளை இடதுசாரிள் முன்னுதாரண மாகக் கொள்ள வேண்டும் என்று விரும்புவது தவறானதாகும். அதேபோல, கம்யூனிஸ்டுகளின் வேலைத் திட்டத்தைப் போன்று அம்பேத்கர் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது அதிகபட்சமானதாகும்.

2. கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரை, ''கலாச்சார இயக்கம்'' அல்லது பண்பாட்டுப் புரட்சி என்பது, புதிய ஜனநாயகப் புரட்சியின் தொடர்ச்சியாகும். மேலும், 'மத நீக்கம்' என்பது, இந்துமத நீக்கம் மட்டுமல்ல; அம்பேத்கரின் புத்த மதம் உள்ளிட்ட அனைத்து மதங்களையும் ஒழிப்பதாகும்.

3. ''காசேதான் கடவுளடா என்று ஜல்லியடிக்கும் இடதுசாரி இயக்கங்கள்'' என்னும் வர்ணனை ஆதாரமற்றதாகும்; கண்டிக் கத்தக்கதாகும். மேலும், வெளிநாட்டுப் பணத்தில் இதழ்கள் நடத்தியும், கருத்தரங்கம், பயிற்சிமுகாம் என்னும் பெயர்களில் 'கட்டுடைப்பு' செய்யும் வசதியாக இருக்கும் சில தலித் இயக்கங்கள் மற்றும் சில தனிமனிதர்களைப் போன்று, கம்யூனிச இயக்கங்கள் எதுவுமில்லை; கம்யூனிஸ்டுகள் யாருமில்லை. ஒருவேளை, உழைக்கும் மக்களிடம் நன்கொடை பெறுவதையும் உண்டியல் குலுக்குவதையும் ''ஜல்லியடி'ப் பதாகத் தோழர் காளிங்கராயன் கருதியிருந்தால், அதைவிட இழிவான வக்கிரம் ஏதுமில்லை.

4. ''கிறித்துவ மதத்தை சாதிய மதம் என்று தொடக்கத்திலேயே'' அம்பேத்கர் ''புறக்கணித்து'' விட்டு, புத்த மதத்தைத் தேர்ந் தெடுத்த பிறகும், அம்பேத்கர் மற்றும் புத்தமதத்தின் புகழ் பாடிக்கொண்டே, பெருவாரியான தலித்துகள் கிறித்துவ மதத்தில் சேர்வதற்கான காரணததைத் தோழர் காளிங்கராயன் சொல்ல வேண்டும். அம்பேத்கரின் ஆய்வு சரியானதல்ல என்பதாலா? அல்லது புத்த மதம் தவறானது, கிருத்துவ மதம் சரியானது என்பதாலா?

''அம்பேத்கரையும் பெரியாரையும் இன்று வரையிலும் கம்யூனிஸ்டுகள் தமது எதிரிகளாகப்'' பாவிக்கிறார்கள் எனறு தோழர் காளிங்கராயன் சொல்வது புதிய கண்டுபிடிப்பல்ல. இதற்கு முன்பே சில 'அறிவுஜீவி'களால் சொல்லப்பட்டு,

படிப்பகம்

www.padippakam.com



மார்க்சியவாதிகளால் முறியடிக்கப்பட்டும் உள்ளன. அதுபோன்ற கண்டுபிடிப்புகள், கருத்து முரண்பாடுகளைப் பகை மோதல்களாகப் புரிந்துகொண்ட தவறான விளைவாகும். மக்களுக்கான சிந்தனையில் தொடக்க நிலையில் இருப்பவர்கள் அல்லது உள்நோக்கம் கொண்டவர்கள் ஆகியோரால்தான், நட்பு முரண்பாட்டாளர்கள் மீது ''எதிரி'', ''பகைவன்'' போன்ற சொற்களை வீசமுடியும்.

இங்கே, மார்க்சிய வழியிலான புரட்சி நடந்தேறுவதற்கு ''சாதியம்'' தற்காலிகத் தடையாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மேலும், இத்தடையில், பார்ப்பனிய கருத்தாக்கங்களை சுவீகரித்துக்கொண்ட சில அம்பேத்கரிய வாதிகள், தலித்தியவாதிகள் ஆகியவர்களின் பங்களிப்பு இருப்பதை மறக்க முடியாது. அதற்காக, ''...மார்க்சிய முதன்மைச் சூத்திரம் இங்கே எடுபடாமல் போனது'' என்று கருதுவது வெறுப்புணர்வின் வெளிப்பாடாகும். இங்கே, மார்க்சியம் எடுபடாமல் போயிருதால், தோழர் காளிங்கராயனுக்கு, இப்போது, மார்க்சியத்தை விமர்சிக்கும் வாய்ப்பு கிடைத்திருக்காது.

''...காந்தியத்தையும் - கம்யூனிசத்தையும் ஒப்பிட்டு'' ஜீவா எழுதிய கட்டுரைகளுக்காக, அவைகளைப் பற்றிக் குறிப்பிடாத தோழர் ஜாகரிடம் நியாயம் கேட்பது நேயமானதல்ல.

நவீன காலத்தில், ''....மார்க்சியம் எவ்வாறு முகங் கொடுக்கிறது?'' என்கிற பாணியில் தோழர் காளிங்கராயன் சில கேள்விகளை எழுப்பியுள்ளார். அவைகளுக்கான பதில் ஒரு கட்டுரையிலோ அல்லது ஒரு நூலிலோ சொல்லி முடிவதல்ல. மேலும், அத்தகைய பொறுப்பினைத் தனிமனிதர்களின் மீது சுமத்துவதும் பொருத்தமானதல்ல; நடைமுறைப் போராட்டத்தின் மூலம் கற்றுக் கொள்வதும் கற்பிக்கப்படுவதுமாகும். தோழர் காளிங்கராயன் கற்றுக் கொள்பவரெனில், களத்தில் இறங்கட்டும்; கற்பிக்கப்படுபவர் எனில், காத்திருக்கட்டும்.

நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம் ஆகிய அனைத்து கால கட்டங்களிலும், ஏற்றாற்போல வளர்ச்சியடைந்த மார்க்சியம், இன்றைய மற்றும் நாளைய சூழ்நிலைகளையும் உள்வாங்கிக் கொள்ளும் திறன் படைத்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மேலும், இதேபோன்ற வினாக்களைப் பிற இசங்களை நோக்கியும் எழுப்ப முடியும் என்பதைத் தோழர் காளிங்கராயன் புரிந்து கொள்ள வேண்டும். வரலாற்றில் நிருபிக்கப்பட்ட அறிவியலான மார்க்சியத்தில் பொதிந்திருக்கும் தீர்வுகளைப் போன்று, பரிசோதனைத் தளத்துக்குக் கூட இன்னும் பயணப்படாத பிற தத்துவங்கள், நவீன கேள்விகளுக்குத் தாக்குப் பிடிக்கும் என்று உறுதி அளிப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. இத்தகைய எதார்த்தங்களை ஒதுக்கிவிட்டு, ''மார்க்சியத்தின் ஒற்றைத் தீர்வு பொருளாதார சமத்துவம்தானா?'' என்றும் கேட்கிறார் தோழர் காளிங்காரயன். ஒருவேளை, அவர் அறிந்திருக்கும் மார்க்சியம் அவ்வாறு இருக்கலாம்.

''எங்களிடம் மட்டுமே எல்லாம் இருக்கு. தத்துவ வளம் கொழித்துக் கிடக்கிறது'' என்று எழுதி, 'அந்நியன்' ஆவதில், 'சாதியொழிப்பு'க்கு எந்த விதத்திலும் உதவ முடியாது. 'நீங்கள், நாங்கள்' என்று அடிமைகளுக்குள் பிரிவினை பேசும் சிறுபிள்ளைத்தனம், எதிரிக்கு சாதகமாகவே அமையும்.

இந்த நேரத்தில், ஒடுக்கப்பட்டவர்களின் ஒற்றுமையை வலியுறுத்திப் பேசிய தோழர் இன்குலாப்பை, தலித் விரோதியாகக் கட்டம் கட்டி 'புதிய கோடாங்கி' விளாசித் தள்ளியது நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. ஏறத்தாழ கால் நூற்றாண்டுக்கும் மேலான அவரது சமூகப் பணியும், எண்ணற்ற தலித் மக்களுக்கு உணர்வூட்டிய அவரது 'மனுசங்கடா' பாடலும் ஒரு நொடியில் மறக்கப்பட்டது. முன்னுதாரணமாகக் கொள்ளப்பட வேண்டிய அவரது வாழ்க்கை, தலித்தல்லாத தலித்தியவாதிகளைப் புறக்கணிப்பதில், 'யாருக்கு நஷ்டம்' என்னும் அவரது எதார்த்தமான கேள்வியில் எடை போடப்பட்டது. தலித் விடுதலைக்கு ஆதரவாக பதில் தேடுவதற்கு அக்கேள்வியைப் பயன்படுத்தாமல், தலித் பார்ப்பனர்களின் சுயநலத்துக்காகக் கையாளப்பட்டது.

இருப்பினும், மார்க்சியவாதிகளும் பெரியாரியவாதிகளும் இதுபோன்ற கூச்சல்களுக்கு அஞ்சத் தேவையில்லை. சான்றிதழ் தரவேண்டியவர்கள் ஒடுக்கப்பட்ட மக்கள்; பெறவேண்டியவர்கள் சமூகப் போராளிகள். இடையில், பிதற்றல்காரர்களுக்கு வேலையும் இல்லை; அவைகளை எவரும் பொருட்படுத்த வேண்டிய தேவையுமில்லை.

சமீப காலங்களாக, மதத்தின் பேராலும் மக்களின் பேராலும் வெளிநாடுகளிலிருந்து நிதிபெற்று நடத்தப்படும் தலித் இயக்கங்களுக்கும், உண்மையிலேயே சமூக அக்கறையுடன் மக்களை நம்பி இயங்கும் தலித் இயக்கங்களுக்கும் வித்தியாசங்களை அறிய முடியவில்லை. ''தலித் அமைப்புகளில் தத்துவ வளம் கொழித்துக் கிடக்கிறது,'' என்று பிரகடனப்படுத்தும் தோழர் காளியங்காரன், போலியையும் அசலையும் கண்டறிவதற்கு ஒரு தத்துவத் துளியை அருள வேண்டும். ஏனெனில், தோழர் காளிங்கராயனும் விரும்பும் ''சாதியொழிப்பு'' நிறைவேறுவதற்கு 'போலிகள்' ஒழிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இந்திய விடுதலைப் போராட்டத்திலும், தமிழ்த் தேசம் மற்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் பலியானவர்களில் பெரும்பாலானோர் தலித்துகள் என்று தோழர் காளிங்கராயன் உருகுகிறார். வாதத்திற்காக, சாதிரீதியாகப் பார்த்தாலும் அவரது கணக்கீடு தவறானதாகும். சாதியை சாகடிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டே, செத்துப்போனவர்கள் மீதெல்லாம் சாதிச் சான்றிதழ்களை ஒட்டுவதும், வரலாறு சொல்லும் உண்மைப் பதிவுகளை அழித்து, சாதிமுத்திரை பதிப்பதும் பார்ப்பனியமே அன்றி வேறில்லை.

அடுத்து, தோழர் காளிங்கராயன் ''வெண்மணி'க்கு வருகிறார். வெண்மணியில் எரிக்கப்பட்டவர்கள் எந்தவொரு அம்பேத்கர் கட்சி மற்றும் மன்றத்தையோ, தலித் இயக்கத்தையோ சார்ந்தவர்கள் அல்ல. அவர்கள் கம்யூனிஸ்டுகள்; அதனாலேயே கொல்லப்பட்டவர்கள். அத்தியாகிகள் மீது 'தலித் பதாகை'யைப் போட்டு மூடுவதற்கு யாருக்கும் அருகதையில்லை. உரிமை இருக்கிறதென்று முழங்குபவர்கள் முதலில் இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லட்டும்.

வெண்மணி படுகொலையைச் செய்த மக்கள் விரோதி கோபாலகிருஷ்ண நாயுடுவுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்கிற உணர்வு, அம்பேத்கரியவாதிகளுக்கும் தலித்தியவாதிகளுக்கும் ஏன் எழவில்லை? தோழர்களின் ரத்தத்தில் கை நனைத்த எதிரியின் ரத்தத்தை கை நனைப்பதற்கு அம்பேத்கரியவாதிகளும் தலித்தியவாதிகளும் ஏன் முன்வரவில்லை? இன்று, சாதியின் பேரில் சொந்தம் கொண்டாடுபவர்கள், அந்த அதிகார வெறியனுக்கு முடிவு கட்டிய நக்சல்பாரித் தோழர்களை உச்சரிப்பதுகூட இல்லையே, அது ஏன்? வஞ்சம் தீர்த்ததும் அதன் மூலம் தியாகிகளுக்கு உரிய செவ்வணக்கம் செலுத்தியதும் சாதி உணர்வா? வர்க்க உணர்வா?

இவ்விஷயத்தில், தனிநபர் அழித்தொழிப்பு சரியானதல்ல என்று வெட்டிப் பேச்சு பேசுபவர்கள், வெட்கங்கெட்டவர்கள்; வீரமற்றவர்கள்; கொள்கையற்றவர்கள்.

மார்க்சிஸ்ட் கட்சியின் உழவர் போராட்டத்தில் பலியான வெண்மணித் தியாகிகள், நக்சல்பாரிகளின் தத்துவத்திலும் ஆயுதத்திலும்பெருமைப்படுத்தப்பட்டார்கள் என்ற உண்மையை, எந்த சாதிவெறிக் கொம்பனாலும் மறைக்க முடியாது. ஏனெனில், வரலாறு எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

தோழர் காளிங்கராயன், கடைசியாக தருமபுரிக்கு வருகிறார். ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறையை எதிர்த்த வீரஞ்செறிந்த போராட்டங்களில் பல தோழர்கள் இறந்திருப்பினும் யார் என்ன சாதி என்கிற ஆராய்ச்சியினை நக்சல்பாரிகள் ஒருபோதும் செய்ததில்லை. இயக்கத்தில் நெருக்கமாக செயற்படும்போதுகூட, சாதிகள் அவர்களுக்குத் தேவைப்படுவதில்லை.

''...சாதியொழிப்புப் போராட்டங்களில் எத்தனை ஆதிக்கசாதி காம்ரேடுகள் தமது இன்னுயிரை ஈந்தனர் என்று சொல்ல முடியுமா தோழரே!'' என்று தோழர் காளிங்கராயன் கேட்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com



இந்நிலையில், கம்யூனிஸ்டுகளின் வர்க்கப் புரட்சியில் சாதி ஒழிப்பும் அடங்கியிருக்கிறது என்பதையும் அதற்கான மண்ணின் மார்க்சியம் வளர்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் காழ்ப்புணர்ச்சியற்ற சிந்தனையாளர்கள் எவரும் மறுப்பதில்லை. அதன் அடிப்படையில், ஒன்றினைச் சொல்லியாக வேண்டும். சாதியை மறுத்த தியாகித் தோழர்கள் மீது சாதிகளைத் திணித்து அவர்களைக் கேவலப்படுத்துவதில் எனக்கு உடன்பாடில்லை. இருப்பினும், கட்டாயத்தின் பேரில், இரண்டு உதாரணங்களை மட்டுமே சொல்லுவது போதுமானது என்று கருதுகிறேன். தோழர்கள் மன்னிக்க!

தமிழக நக்சல்பாரிப் புரட்சியின் தியாகித் தோழர்கள் பாலன் (1980), ரவீந்திரன் (2000) ஆகிய இருவருமே ''ஆதிக்க சாதி காம்ரேடுகள்'' என்பதைத் தோழர் காளிங்கராயன் அறிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக, தியாகித் தோழர் ரவீந்திரன் பார்ப்பன சாதியில் பிறந்தவர் என்பது முக்கியமானது. அதுமட்டுமின்றி, ''புதிய ஜனநாயகப் புரட்சிக்கு'' அர்ப்பணித்துக்கொண்ட தியாகித் தோழர்களில் பலர், தலித்தல்லாதவர்கள் என்பது கூடுதல் செய்தியாகும். இதுபோன்ற வரலாற்று நிகழ்வுகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளாமல், ''தலித்துகள்தான் பலியிடப்பட வேண்டுமா?'' என்று சீறுவது அர்த்தமற்றது. ஏனெனில், கமயூனிஸ்டுகள், தலித்துகளுக்கோ அல்லது வேறு சாதிகளுக்கோ உரியவர்கள் அல்ல. அவர்கள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கானவர்கள். ஒடுக்குபவன் எந்த சாதியில் இருந்தாலும் அவன், கம்யூனிஸ்டுகளின் எதிரி; ஒடுக்கப்படுபவன் எந்த சாதியில் இருந்தாலும் அவன் கம்யூனிஸ்டுகளின் தோழன்.

''தாமிரபரணி'' கிருஷ்ணசாமியையும், 'வடமாவட்ட' திருமாவள வனையும் கேட்க வேண்டிய கேள்வியை கம்யூனிஸ்டுகளிடம் தவறுதலாகக் கேட்டிருக்கிறார் தோழர் காளிங்கராயன்.

தலித்துகளின் உயிர்கள் மீது அளவற்ற பற்றும் பாசமும் வைத்திருக்கும் தோழர் காளங்கராயனுக்கு ஒரு வேண்டுகோள்:

தலித்துகள் ஒருவரையும் பலிகொடுக்காமலேயே தங்களின் ''சாதியொழிப்பு போராட்டங்களை'' நிறைவு செய்து கொள்க!

இறுதியாக, மேற்கோள் காட்டியிருக்கும் வத்சலகுமாரனின் கவிதை, மார்க்சியத்தைச் சாடுவதாக தோழர் காளிங்கராயன் கருதுகிறார். ஆனால், அது, அம்பேத்கரியம் உள்ளிட்ட அனைத்து தத்துவங்களையும் கொச்சைப்படுத்துவதை அவர் உணரவில்லை.

நாளொரு வேசியைப் புணரும் காமாந்தகர்களையும் பொறுக்கி களையும் மார்க்சியம் நம்பியிருக்கவில்லை. அத்தகையவர் களிடம் சென்று மார்க்சியத்தைப் பிரச்சாரம் செய்யவேண்டிய நிலையில் மார்க்சியர்களும் இல்லை. எனினும், பாலுணர்வு வெறியர்களின் கருத்துகளைத் தனக்குத் துணையாகக் கொள்ளும் தோழர் காளிங்கராயன் அவர்களுக்குப் புகலிடம் தரக்கூடும். ஏனெனில், ''தத்துவத்தினிடத்தில் கலையை'' வைக்கும் கலையை அவர் அறிந்திருக்கிறார். வேசியைப் புணர்வதும் கலைதானென்று அடையாளமும் காட்டி யிருக்கிறார். கூடவே, அம்பேத்கர் தத்துவம், தலித்தியம் என்றெல்லாமும் முழங்குகிறார்!

முடிப்பதற்கு முன்பு, 'புள்ளிராஜாவுக்கு எய்ட்ஸ் வருமா?' என்னும் விளம்பரத்தைப் பார்த்து அல்லது படித்துப் பயனடையுமாறு தோழர் காளிங்கராயன் வழியாக, கவிஞர் வத்சலகுமாரனைக் கேட்டுக் கொள்கிறேன். வேசியின் ''எச்சில் முத்தத்திலிருந்து'' வாழ்க்கைக்கான நம்பிக்கையைப் பெறத் துடிக்கும் தத்துவக் 'கலை'ஞர்களுக்கு, இதுபோன்ற ஆலோசனைகள் வழங்குவதில் தவறொன்றும் இல்லை என்றே கருதுகிறேன். ஏனெனில் இவர் போன்றவர்கள் நீடித்த ஆயுளில் இருந்தால்தான், ''தத்துவத்தினிடத்தில் கலையை'' வைக்கும் படைப்புகளை உருவாக்க முடியும். அவைமூலம், ''சாதியொழிப்பு போராட்டங்களை'' தோழர் காளிங்கராயன் நடத்துவதற்கு ஏதுவாகும். எனவே, விபச்சாரன் வத்சலகுமாரன் வாழ்க! தோழர் காளிங்கராயனின் ''சாதியொழிப்பு'' போராட்டம் வெல்க! ●

**ஆவணம்**

# நான் ஏன் பெரியார் பற்றி ஒரு நூலை எழுதவேண்டும்? அதை ஏன் சிங்கார வேலருக்குக் காணிக்கையாக்க வேண்டும்?

## ஏ.எஸ்.கே.

(சென்ற இதழில் நான் நேசிக்கும் இரு பார்பனர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். மேலும் சிலரை-ஜவஹர்லால் நேரு உட்பட அப்பட்டியலில் இணைக்க முடியும். அவர்களில் ஒருவர் ஏ.எஸ்.கே. தமிழகத்தில் அண்ணல் அம்பேத்கர் குறித்தும் பெரியார் ஈ.வெ.ரா. குறித்தும் யாரும் கண்டு கொள்ளாத சூழலில் அவர்கள் குறித்து நூல்கள் எழுதியவர் அவர். அம்பேத்கர் பற்றிய அவருடைய நூல் குறிப்பிடத் தக்கது. 'பகுத்தறிவின் சிகரம் ஈ.வே.ரா. பெரியார் என்னும் தனது நூலுக்கு அவர் எழுதிய மூன்னுரையிலிருந்து சில பகுதிகள் இங்கே. 1970களில் எழுதப்பட்ட இம் முன்னுரை 1999ல் பாரிநிலைய வெளியீடாக வந்த மேற்குறித்த நூலில் உள்ளது - அ.மார்க்ஸ்.)

பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைப் பற்றிய இந்த நூலை நான் எழுதியதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றைச் சுருக்கமாக இங்கு விளக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

1. பெரியார் ஈ.வெ.ரா. பிராமண துவேஷி; பிராமணர்கள் அவருக்குப் பிடிக்காது என்று பெருவாரியான பிராமணர்கள் நினைப்பதோடு, பிரச்சாரமும் செய்து வருகிறார்கள். இந்தக் கருத்து முற்றிலும் தவறு; இது பெரியாரைப் பற்றிய அவதூறுப் பிரச்சாரமாகும்.

பெரியார் அவர்களே பல கூட்டங்களிலும், நேரடியாகப் பலர் அவருடன் உரையாடிய காலத்திலும் ''பிராமணர்களை அல்ல, பிராமணியத்தையேதான் நான் எதிர்க்கிறேன்'' என்று கூறியுள்ளார். அவர் பிராமணியத்தை எதிர்த்தது நாத்திகக் கண்ணோட்டத்தால் என்பதில் சிறுதும் ஐயமில்லை.

இந்து தத்துவமும் சமயமும் வருணாஸ்ரமம் தருமம் என்ற அடித்தளத்தின் மீது எழுப்பப்பட்ட கட்டடங்கள் என்பது எவரும் மறுக்கமுடியாத உண்மையாகும். பிராமணியம் வருணாஸ்ரம தர்மத்தின் அடிப்படையாகும். வருணாஸ்ரம தர்மம் ஜாதிப் பிரிவினையையும் அவரவர் ஜாதிக்குரிய வேலையைச் செய்வதும்தான் அவரவர்க்கு ஈசன் விதித்த கட்டளை என்று கூறுவதையும் ஜாதிக் கொடுமைகள், சமுதாய ஏற்றத்தாழ்வுகள், தீண்டாமை போன்ற பல சீர்கேடுகளையும், ஜாதிக்குரிய வேலையைச் செய்வதும்தான் அவரவர்க்கு நியாயப்படுத்துகின்றது. இத்தீமைகளையே பெரியார் ஈ.வெ.ரா அவர்கள் கடுமையாக வன்மையாக எதிர்த்துச் சாடிவந்தார்.

இந்து தத்துவ சாத்திரம் பிராமணீயத்தைத் தூக்கிப் பிடித்துத் தாங்கி நிற்கின்றது. ஆகவே, இவை எல்லாவற்றையும் எதிர்ப்பது என்றால் கண்டதற்கெல்லாம் கடவுள் என்ற கற்பனைப் பொருள் முன் கொண்டுவந்து நிறுத்துவதை எதிர்ப்பதேயாகும். சுருங்கக் கூறின், கடவுள் நம்பிக்கை. மூடப்பழக்கவழக்கங்கள் முதலியவற்றை எதிர்ப்பது என்றால் அது நாத்திகம் தான். நாத்திகத்தின் அடுத்த உயர்நிலைப்படி பொருள்முதல் வதமாகும். விஞ்ஞான ரீதியான பொருள்முதல்வாதமே-தர்க்க இயல் பொருள் முதல் வாதமாகும். இவற்றின் அடிப்படை விஞ்ஞானம் தழுவிய பகுத்தறிவேயாகும்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் பகுத்தறிவின் சிகரமாக விளங்கி வந்தார். இதை விளக்கிச் சொல்லவேண்டும் என்பது முதல் காரணம்.

2. *1934-1935* இந்திய கம்யூனிஸ்டு கட்சியில் நான் உறுப்பினராகச் சேர்ந்தேன். அன்று முதல் இன்று வரை (என் மூச்சு உள்ள வரை) இந்த கட்சியில் இருந்து வருகிறேன்; வருவேன். பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் பலதடவை என்னிடம் கூறியுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



''நீங்கள் செய்யவேண்டிய வேலையை நான் செய்து வருகிறேனே. அப்படி இருக்க ஏன் திரு... என்னைத் தாக்கிக் கொண்டே இருக்கிறார்?''

அதாவது, ''கடவுள் எதிர்ப்பு, ஜாதிப் பிரிவினை, தீண்டாமை, சமுதாயக் கொடுமை, இவை எல்லாவற்றையும் எதிர்ப்பது கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலை அல்லவா, நான் அந்த வேலையைச் செய்து வருகிறேனே... அவ்வாறிருக்க கம்யூனிஸ்டுக் கட்சி என்னை எதிர்ப்பதேன்?'' என்று பெரியார் அவர்கள் என்னிடம் விநயமாகவும், உருக்கமாகவும் பன்முறை கேட்டு வந்துள்ளார். இது முற்றிலும் உண்மை. பெரியார் அவர்களைப் பற்றிச் சரியான கணிப்புப் பல தோழர்களுக்கு இல்லை என்பது என் கருத்து. இந்நூலை எழுதுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

•

*1973* டிசம்பர் *24* ஆம் தேதி தமிழகத்தை இருள் சூழ்ந்தது

தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, ''தமிழா! தலை நிமிர்ந்து நில்! தன்மானத்தோடு வாழ்!!' என்று அறை கூவி அழைத்த ஆசான் பிரிந்தான். தமிழகம் தலை நிமிர்ந்து நிற்கத் தொடங்கி விட்டது; ஆனால், இந்தக் கலையைக் கற்பித்த ஞானி ஆழ்ந்த உறக்கத்தில் அமர்ந்து விட்டான். மூடப்பழக்க வழக்கங்களையும், இல்லாத கடவுளை உண்டு என்ற மூட நம்பிக்கையையும் ஒழித்து, ஜாதிக் கொடுமைகள், குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோர் படும் சொல்லொணா இன்னல்களைப் போக்கி, மனிதன் மனிதனாக பகுத்தறிவு படைத்தவனாகத் திகழ வேண்டும் என்று அல்லும் பகலும் பாடுபட்டு வந்த மேதையின் மறைவு ஈடுகட்ட முடியாத இழப்பாகும்.

இச்சிறிய நூலில், பெரியாரின் புகழைப் புகுத்துவது, அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்துவது போல்வதாகும். அச்சக்தியோ, திறமோ, தகுதியோ எனக்கில்லை என்பதை நான் நன்கு உணர்வேன். எனினும், சில விஷயங்களைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

குழந்தைப் பருவத்திலிருந்து சுமார் 13 அல்லது 14 வயது அடையும் வரை நமது பெற்றோர்களின் வழிகாட்டுதல் மிகப் பெரிய அளவு நமது எண்ணங்களையும், கருத்தோட்டங் களையும் உருவாக்குகின்றது. பிறகு, கல்வியும், சுற்றுச் சார்பும், எண்ணங்களில், கருத் தோட்டங்களில் மாற்றங்களைக் கொண்டுவந்த போதிலும், 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ற பழமொழியின் உண்மையை மாற்றுவது மிக மிகக் கடினமாகிறது.

பழைய எண்ணங்கள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றன. கசடறக் கற்றோர், கற்றபின் கற்றவாறு நிற்போர் கோடியில் ஒருவரே. கோடியில் ஒருவர் பெரியார். குழந்தைப் பருவத்தில் கடவுளைப் பற்றியும், ஜாதியைப் பற்றியும் பெற்றோர் எவ்வளவு சொன்னபோதிலும், தம் பகுத்தறிவைக் கொண்டு, தாமே சிந்திக்கத் தொடங்கும் காலம் வந்ததும், கற்றதும், கேட்டதும், கண்டதும், அவற்றின்படி நின்றதும், பெரியாரைத் தலைவனாக்கின. கடவுள் இல்லை என்பதை இளமையில் பலர் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆனால், திருமணம் செய்து கொண்டு, பேரன் பேத்திகள் எடுத்த பிறகு, இவர்கள் சிவக்கொழுந்து களாகவும், விஷ்ணு பக்தர்களாகவும் மாறி விடுவதைப் பார்க்கலாம். சாகிற காலத்திலாவது ''சங்கரா! சங்கரா!'' என்று சொல்லிக் கொண்டிருந்தால், செய்த பாபமனைத்தும் கழிந்து, சிவலோகத்தையோ, வைகுண்டத்தையோ அடையலாம். அங்குக் கடவுளைக் காணலாம் என்ற மூட நம்பிக்கை ஆட்கொண்டு விடுகிறது. மேலும், குழந்தையாக இருந்த காலத்தில் புகட்டப்படும கடவுள் நம்பிக்கை, வயது முதிர்ந்த காலத்தில், அப்படியே அவர்களைப் பற்றி நிற்கிறது.

ஆகவே, வேதங்களையும், உபநிஷத்துகளையும், சைவ சித்தாந்த நூல்களையும ஆராய்ந்து, அவற்றில் கூறப்படும் கருத்துகள் எவ்வாறு பகுத்தறிவிற்கு ஒவ்வாதவை என்று உணர்ந்த பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள்,

'கடவுள் இல்லை! இல்லை!! இல்லவே இல்லை!!!'

என்று அவர் வாழ்ந்த காலமெல்லாம் கூறிவந்தார் என்றால்

''யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற''

என்பதனை நன்கு உணர்ந்தேயாகும்.

எனவே, பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் இந்திய தத்துவ ஞானிகளின் வரிசையைச் சேர்ந்தவர் என்பது என் ஆழமான கருத்து.

•

என்னுரையை முடிக்குமுன் இந்நூலைப் பெரியார் ஈ.வெ.ரா.வின் வலக்கரமாக இருந்து அவருக்குத் துணைபுரிந்த அன்பிற்குரிய, ஆசான், அறிஞர், காலம் சென்ற தோழர் மா.சிங்கார வேலு அவர்களுக்கு அர்ப்பணம் செய்துள்ள காரணத்தை விளக்குவதும் என் கடமை.

அவ்வாறு விளக்க வேண்டுமாயின் யான் யார் என்பதனைச் சுருக்கமாகச் சொன்னால் அது இந்நூலைப் படிப்பவர்களுக்குத் துணையாக இருக்கும் என்று எண்ணி என் கதையை இங்கு கூறுகிறேன்.

இதற்கு என்னை மன்னிக்கவும்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் ஆவியூர் என்ற ஊரிலிருந்து சென்னை சென்று படித்து முடித்து விட்டு, அன்றைய நிஜாமின் ஹைதராபாத்திற்குச் சென்றான் ஒருவன். அவன் மனைவியின் பெயர் தங்கம்மா. இவர்கள் தாம் முதன் முதலாக அன்று வெகு தூரமுள்ள நாடு என்று கருதப்பட்டிருந்த நிஜாமின் ஹைதரா பாத்திற்குச் சென்றவர்கள். அதற்குப் பிறகுதான் தமிழகத்தி லிருந்து ஒருவர்பின் ஒருவராகச் சிலர் சென்று அங்கு வேலை தேடிக் கொண்டனர். அவர்கள் 'தென் இந்தியர் அசோசி யேஷன்' என்று ஒரு மன்றத்தைத் தொடங்கினர். இதற்கு, முதன் முதல் அங்குச் சென்றவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அவர் பெயர் சீனிவாச அய்யங்கார்.

சீனிவாச அய்யங்காருக்கும், அவர் மனைவி தங்கம்மாவுக்கும் ஏழு குழந்தைகள் பிறந்தன. முதல் குழந்தை இராஜம்மாள் என்ற பெண்; அடுத்தது ராமு என்று அழைக்கப்படும் ராமசாமி; மூன்றாவது துரை என்று அழைக்கப்பட துரைசாமி; நான்வது பங்கஜம் என்று அழைக்கப்பட்ட பெண்; ஐந்தாவது பாச்சா என்று அழைக்கப்படும் பார்த்தசாரதி; ஆறாவது, கிட்டா என்று அழைக்கப்படும் கிருஷ்ணன்; ஏழாவது ரங்கா என்று அழைக்கப் பட்ட ரங்கநாதன். ரங்கா 9 மாதக் குழந்தையாகவும், கிட்டா 3 வயது குழந்தையாகவும் இருக்கும்போது அவர்கள் தாயார் தங்கம்மா காலமானார். தங்கம்மாவின் அக்காவாகிய பொன்னம்மா என்பவர் இக் குழந்தைகளைத் தன் குழந்தைகள் போலவே அன்புடன் வளர்த்து வரலானார். பொன்னம் மாவுக்கு ஒரே ஒரு மகன் குப்புசாமி. குழந்தைகள் ஐந்து வயது ஆக, பள்ளியில் சேர்க்கப்பட்டனர். பள்ளியில் சேர்ந்தபோது கிட்டாவின்பெயர், கிருஷ்ணமாச்சாரி என்றும் ரங்காவின் பெயர் ரங்காச்சாரி என்றும் கொடுக்கப்பட்டன.

ரங்கா பட்டம் பெற்றபின் பம்பாய் மாநகரம் சென்றான். கிட்டா பட்டம் பெற்றபின் ஹைதராபாத்தில் பாதிரிகள் நடத்தி வந்த ஒரு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தேவை என்று கேட்டு அங்கு வேலை தேடிச் சென்றான். வேலைக்காகச் சென்ற முதல்நாள், அந்தப் பள்ளியின் தலைவரான பாதிரி கேட்டார்:

''உன் பெயர் என்ன?''

''என் பெயர் ஏ.எஸ். கிருஷ்ணமாச்சாரி.''

''கிருஷ்ணமாச்சாரியா? இங்கு ஏற்கெனவே ஒரு கிருஷ்ண மாச்சாரி இருக்கிறார். ஆகவே, உன்னை அய்யங்கார் என்று



படிப்பகம்

www.padippakam.com



அழைப்பேன். உனக்கு ஏதாவது ஆட்சேபனை உண்டா?'' என்றார்.

''எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் எனக்கு ஆட்சேபனை இல்லை,'' என்றான் அச்சிறுவன்.

''அதுதான் சரி!'' என்றார் பாதிரி. அன்று முதல் ஏ.எஸ்.கிருஷ்ண மாச்சாரி, ஏ.எஸ்.கே.அய்யங்கார் என்று அழைக்கப்பட்டான். மாணவர்களாக இருந்த காலத்திலேயே ரங்காவும், கிட்டாவும் அரசியலில் மெத்த ஆர்வம் காட்டி வந்தனர்.

*1935-37* காங்கிரஸ் விடுதலை இயக்கத்தில் பம்பாய் மாநகரில் 'வார்டு கவுன்ஸில்'கள் அமைக்கப்பட்டு அவற்றின் உறுப் பினர் பெயர்கள் வெளிவந்தவுடன் பிரிட்டிஷ் அரசால் கைது செய்யப்பட்டு அவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் ரங்கா என்ற ஏ.எஸ்.ரங்காச்சாரி (பிறகு ஏ.எஸ்.ஆர். சாரி என்று புகழ்பெற்ற கம்யூனிஸ்டு வழக்கறிஞர்) ஒருவர். நாசிக் சிறைக்குள் கவி ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாயா வுடன் அனுப்பப்பட்டார்.

ஏ.எஸ்.கே. அய்யங்கார் ஒரு சில மாதங்கள் மட்டுமே விஞ்ஞான ஆசிரியர் வேலை பார்த்து பிறகு அதை விட்டு, சென்னைக்கு *1937*-இல் சென்று அன்று சட்டவிரோதமாயிருந்த இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார். இந்த ஐந்து சகோதரர்களில் இராமசாமிக்கு அவர் தாயார் இருக்கும் சமயத்திலேயே திருமணமாகிவிட்டது. அவர் நீங்கலாக மற்றவர் சாதியை விட்டுத் திருமணம் செய்து கொண்டனர். துரைசாமி முதலியார் ஜாதியைச் சேர்ந்த அம்மையார் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். அவருக்குப் பிறகு பார்த்தசாரதி ஓர் ''ஆங்கிலோ இந்திய'' மாதை (கிருஸ்தவ மதத்தைச்சார்ந்தவரை)த் திருமணம் செய்து கொண்டார். ஏ.எஸ்.ஆர்.சாரி பம்பாய் மாநகர காங்கிரஸ் தேசிய முஸ்லிம் பிரமுகர் ஜனாப் சையத் என்பவரின் மூத்த மகளாகிய தில்ஷாத் சையத் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

ஏ.எஸ்.கே. அய்யங்கார் திருமணமே செய்துகொள்ளவில்லை. காரணம் கேட்டபோது அவர் கூறினார்:

''நான் 25 வயதிலேயே முதல் முறையாகச் சிறை சென்றேன். வெளிவந்ததும் கட்சிவேலை. உடனடியாக மீண்டும் சிறை வாழ்க்கை. கட்சி வாழ்க்கையும், சிறை வாழ்க்கையும் மாறி மாறி வந்தன. நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும் இதே நிலைதான். மொத்தம் 15 ஆண்டுகளுக்கு மேல்சிறை வாழ்க்கை. இந்நிலையில் திருமணம் பற்றிய நினைவே என் எண்ணத்தில் எழவில்லை. அது மட்டுமல்லாமல், ஒரு குடும்பஸ்தன் குடும்பத்துக்காகச் செலவிடும் தன் சக்தியை ஆக்கவேலை களுக்குப் பயன்படுத்தினால் (Sublimate) அவை நல்ல முறையில் நடைபெறும் என்று நம்பிக்கை கொண்டவன்.''

தமிழகம் வந்த பிறகு அய்யங்கார் என்று ஒரு சாதிப் பெயர் இருப்பது சரி அன்று என்ற முடிவிற்கு வந்தார். அவர் விட்டாலும், கட்சித் தோழர்கள் உட்பட பலர் அதை விடவில்லை. ஆகவே வியப்படைந்து

"Fort St.George Zagette No.23
Dated Wednesday
June 11-1969 (Jaishtazi-1891)
Part III-Notifications of interest
To the Public"
Page 692-7th line:
"I, A.S.K.Iyengar Shall Hence Forth BE Known As "A.S.K." A.S.K.Iyengar."

என்று தமிழக அரசு கெஜட்டில் வெளியிட்டார்.

ஏ.எஸ்.கே.யும், அவர் சகோதரர் ஏ.எஸ்.ஆர். அவர்களும் மாட்டுக்கறி (Beef), பன்றிக்கறி (Pork) உட்பட எல்லா உணவு களையும் உண்பவர்கள். மேலும் அவர்கள் குடும்பத்தினர் ஆணும் பெண்ணும் பெருவாரியாக கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் நாத்திகர்கள் மட்டுமல்லர். நடைமுறையில் வருணாஸ்ரம 'தர்மத்தை'யே வெறுத்துப் பகுத்தறிவுக்கு முக்கிய இடத்தைக் கொடுத்து வாழ்பவர்கள்.

ஆகவே, ஏ.எஸ்.கே. பெரியார் ஈ.வெ.ரா. அவர்களை முதல் முதல் *1937*இல் சந்தித்ததுமே, ஒருவரை ஒருவர் நேசிக்கத் தொடங்கினர் என்றால் ஆச்சரியமில்லை.

பிறகு பன்முறை பெரியார் அவர்களைச் சந்தித்துப் பேசி யுள்ளேன். அவரை நன்கு புரிந்து கொண்டவர்களில் நானும் ஒருவன் என்று கருதுகிறேன். இக் கருத்து இந்நூலை இயற்ற ஊக்கம் தந்தது.

நிற்க, மாணவனாக இருந்த காலத்திலேயே மீரத் கம்யூனிஸ்டு சதி வழக்கைப் பற்றிய செய்திகளைத் தினசரி பத்திரிகைகளில் படித்து, கம்யூனிஸ்டு தலைவர்கள் எவ்வாறு அச்சமின்றிப் பிரிட்டிஷ் ஆட்சியைப் புரட்சியின் மூலம் ஒழிப்பதற்காகவும், சோஷலிஸ்டு சமுதாயத்தை ஏற்படுத்து வதற்காகவும் பாடுபட்டு வந்தனர் என்று அறிந்தேன். இது எனக்குத் தூண்டுதலாக இருந்ததால் பள்ளிப் பருவத்திலேயே மார்க்ஸ் எழுதிய பல நூல்களை ஆர்வமுடன் படித்தேன். சென்னை *1934* இறுதியில் என்னை அழைத்தது. வந்த சில நாட்களிலேயே *1935*இல் தோழர் மா. சிங்காரவேலு அவர்களின் தொடர்பு ஏற்பட்டது. முதல் சந்திப்பிலேயே எனக்கு மட்டிலா மகிழ்ச்சி உண்டாயிற்று. அவரது பெரும் புகழைக் காதால் கேட்டிருந்தேனே ஒழிய அவரை நேரில் கண்டதில்லை. ஹைதராபாத்தில் இருந்தவரை புரட்சியின் ஆசான் ஆன அவரைக்காணவேண்டும் என்றிருந்தேன். சென்னை வருகையால் அச்சிந்தனை யாளனை, புரட்சியாளனை நேரில் காணும் பேறு கிட்டியது.

தோழர் எஸ்.வி.காட்டே இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முதல் பொதுச் செயலாளர். அவர் *1937*இல் சென்னை வந்து, தொழிற் சங்க இயக்கத்திற்கும், கம்யூனிஸ்டு கட்சிக்கும் வழிகாட்டத் தொடங்கினார்.

தோழர் காட்டே சென்னை வந்தபிறகு தோழர் மா.சிங்காரவேலு தினசரி மாலை எங்களை *2/65* பிராட்வே அலுவலகத்தில் (அன்று நாங்கள் தங்கி இருந்ததும், சாப்பாடு ஓட்டலிலிருந்து கொண்டு வந்து சாப்பிடும் இடமும் அதுவே.) கண்டு உரையாடி அறிவுரை வழங்கிச்செல்வது வழக்கம். என்மீது அவருக்குத்தனி அன்பு. ஒருநாள் சென்னை உயர்நீதி மன்றத்திற்குச் சில அச்சுத் தொழிலாளிகளுடன் (அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தேன்.) சென்றேன். தோழர் மா. சிங்காரவேலு அவர்கள் வழக்கறிஞர் உடையோடு குறுக்கிட்டார். அவரை அணுகி ''வணக்கம்!'' என்றேன். உடனே என்னைக் கட்டி அணைத்து, வலக் கன்னத்தைக் கடித்துவிட்டு, ''இங்கே எதற்கடா வந்தாய்?'' என்று வினவினார். எனக்கு வந்த கோபம் கொஞ்ச நஞ்சம் அன்று. நோய் ஒரு புறம். அச்சுத் தொழிலாளர் களுக்குத் தலைவனான என்னைத் தொழிலாளர் முன்னிலையில் அவமானப் படுத்தினாரே என்ற எண்ணம் ஒரு புறம்.

அன்று மாலை தோழர் காட்டேவிடம் புகார் செய்தேன். அவர் சொன்னார்:

''இவ்வளவு சிறு வயதிலேயே உனக்குக் கட்சிமேல் உள்ள பிடிப்பையும், உணர்வையும் கண்டு சிங்காரவேலுக்கு உன் மேல் தனி அன்பு,'' என்றார்.

இந்நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிடுவது தமிழக கம்யூனிஸ்டு களின், ஏன் இந்திய கம்யூனிஸ்டு தலைவர்களில் என் இதயம் கவர்ந்த நல்லவர்களில் ஒருவரும், தலைசிறந்தவருமான தோழர் மா. சிங்காரவேலர் என்பால் கொண்ட அன்பை வலியுறுத்தவே. அவர் அன்புக்கு நான் எதைச் செய்தாலும் ஈடாகாது என்றாலும் இச்சிறுநூல் அம்மாபெரும் சிந்தனை யாளனுக்கு ஒரு சிறு காணிக்கையாக இருக்கவேண்டும் என்று அர்ப்பணிக்கின்றேன். ●


படிப்பகம்

www.padippakam.com



# ஆடுகளும் - ஓநாய்களும்

**- சுடலைமாடன்**

**ச**முதாயத்தில் மக்கள் தங்கள் ஓய்வு நேரத்தைப் போக்க பல்வேறு சமூக விழாக்களை கொண்டாடி வருகின்றனர். அவற்றுள் ஒன்றுதான் கோவில் திருவிழா. உறவினர்கள் அனைவரும் ஒன்றுகூடி மகிழ்வுடன் இருப்பர். இக்காலங்களில் விருந்தும் சிறப்பாக இருக்கும். இதில் நாட்டார் தெய்வங்களை வழிபடும் மக்கள் அசைவ உணவையே சாப்பிடுவர். மக்கள் தம் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக மிருகங்களைப் பலியிடுவர். இதனால் உறவினர்கள் அனைவரும் திருப்தியாக உண்ண முடியும். இதில் திடீரென அரசு 53 வருடங்களுக்குப் பிறகு சட்டத்தைத் தூசி தட்டுகிறது.

நாட்டுப்புறத் தெய்வங்களை உயர் தெய்வங்களோடு இணைத்துக் கொண்டால், அங்கு அர்ச்சக உரிமையை உள்ளூர்ப் பூசாரிக்குக் கொடுத்துவிட்டால், அங்கு வசூலாகும் அனைத்துப் பொருள்களும் அவாளுக்கே சென்றடையும். அதன் பிறகு அவர்கள் சொல்வதைத்தான் கேட்க வேண்டும்.

பலியிடுதல் நிகழ்வு என்பது கிறிஸ்து பிறப்பிற்கு முன்பே தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது. வேண்டுதல் என்கிற பெயரிலும் காலங்காலமாக இருந்துவரும் பழக்கம் என்கிற பெயரிலும் பொதுஇடங்களில் விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் கொடுமை இழைக்கப்பட்டு வருகிறது என்பதற்கு முற்றுப்புள்ளி வைத்ததற்கு அரசை பாராட்டலாம். ஆனால் 53 ஆண்டுகள் இல்லாத அக்கறை இப்பொழுது எதற்கு?

1957 இல் தொடங்கி 2001 ஆம் ஆண்டுவரை விலங்குகள் மற்றும் பறவைகள் பலிதடைச்சட்டப் பிரிவு 3, 4, 5, 11(1) இன்படி அமலில் இருந்தது. ஆனாலும் நடைமுறைப்படுத்தவில்லை. மக்களின் வழிபாட்டில் மூர்க்கத்தனமாக செயல்படக் கூடாது. மேலும் அவர்கள் வழிபாட்டில் அரசு தலையிட உரிமை இல்லை என்ற கருத்தும் இருந்தது. வாஷிங்டன் பத்திரிகை கூட இக்கருத்தை ஏற்றுக் கொண்டது,

அரசியலமைப்பு சட்டத்தின் 25(1) பிரிவின்படி மதச் சடங்குகளை, சம்பிரதாயங்களை மற்றவர்களுக்கு இடையூறு தராமல் கடைப்பிடிக்க உரிமை உள்ளது.

சட்டம் என்னதான் சொல்கிறது?

தமிழ்நாட்டில் உள்ள ஆலயத்தில் அல்லது அதைச்சுற்றியுள்ள பகுதிகளில் விலங்குகளையோ, பறவைகளையோ கொலை செய்வது, தமிழ்நாடு விலங்குகள் மற்றும் பறவைகள் பலியிடுதல் தடைச்சட்டம் 12.12.1950 அன்று குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்று 19.12.1950 தேதியிட்ட அரசிதழில் (கெஜட்) வெளியிடப்பட்டது. அப்போது தமிழ்நாடு மாநிலமாக இல்லை. சென்னை மாநிலத்தின் முதல்வராக இருந்தவர் பி.எஸ். குமாரசாமி ராஜா.

இதில் ஏழு பிரிவுகள் உள்ளன. ஆனால் சட்டம் இயற்றப்பட்டு அமுலுக்கு வந்த தேதி 19.12.1950இலிருந்து முதலாம் பிரிவு மட்டுமே இன்றுவரையில் நடைமுறையில் உள்ளது. இதனடிப் படையில் முதலாம் பிரிவில் முகவுரை மட்டுமே உள்ளது. இந்திய அரசியல் சட்டத்தின் இந்தப் பிரிவுகளைப் பற்றி அறிந்து கொள்வது அவசியம்.

கோவில் தொடர்பான விஷயங்களில் Precincts என்பதில் ஒரு கோயிலின் அருகே உள்ள சொந்தமான நிலங்களும் கட்டிடங்களும் கோவிலுக்குச் சொந்தமில்லாத கட்டிடங்களும் சரி இதில் அடங்கிவிடும் என்கிறார்கள்.

அதாவது கோவிலின் தேர் பொதுவாக எங்கே நிறுத்தப் பட்டிருக்குமோ அந்த நிலப்பகுதி (தேர்முட்டி)யும் இதில் அடங்கும். இதன்படி பார்த்தால்,

இந்துக் கோயில்களுக்கு அருகே உள்ள நன்செய்/புன்செய் நிலப்பகுதிகளிலும்/புறம்போக்கு நிலப்பகுதிகளிலும் இந்து பக்தர்கள் பலி கொடுப்பார்களானால் அது உயிர்ப்பலி ஆகாது.

ஆனால் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை இந்தியில் இருந்து தமிழில் மொழிபெயர்த்துள்ள ''உத்தர காமிக ஆகமம்' என்ற நூலில் 158 ஆவது பக்கத்தில் 77ஆவது படலத்தில் கீழ்க்கண்ட வாசகங்கள் பலியிடுவதற்கு ஆதரவாய்....

''துர்கா பூஜைக்காக உபயோகிக்கப்படுகிற எருமை முதலான பிராணிகள் வதம் செய்தால் அவைகள் நல்ல கதியை அடைகின்றன. அதனால் பாவம் ஒன்றும் ஏற்படாது'' என்று கூறப்பட்டுள்ளது. நாம் ஒன்றும் உயிர்களைப் பலியிடுவதை ஆதரிக்கவில்லை. ஆனால் காலம் காலமாக மக்கள் வாழ்வில் ஊறிப்போன பண்பாடுகளின் மீது திடீரென கரிசனம் காட்டுவது எந்த வகையில் (அ)நியாயம்?

கோயில் கட்ட நிதி தரலாம். கோயில் கட்ட தொழிலாளியாக சிலைகளை சிற்பிகள் செதுக்கித் தரலாம். ஆனால் கும்பாபிஷேகம் செய்ய கோயிலில் அவர்களுக்கு உரிமை கிடையாது!

இன்று பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து முன்னுக்கு வந்தவர்களின் மூலம் கோபுரத்தைக் கட்டிக்கொள்ள மதம் வளைந்து கொடுத்திருக்கிறது.

பலியிடப்பட்ட பிராணிகள் அல்லது கோழிகள் கோயிலுக்கோ பூசாரிகளுக்கோ சொந்தமாகி விடுவதில்லை. இவை குடும்பத்தாருடன் ஒன்றாக அமர்ந்து சுவைபட சாப்பிட முடியும். மிருக பலி ஏன் வந்தது? பிராமணர்கள், பிராமணரல்லாத சாதி மக்களை தங்களது கோயிலுக்குள் நுழைய அனுமதி மறுத்தார்கள். சாதிபேதத்தின் அடிப்படையில் அவர்களை அவமதித்து வந்தார்கள். அதனால்தான் இன்று சிறுதெய்வ வழிபாட்டில் கிடா வெட்டக் கூடாது, பலியிடக் கூடாது என்று சங்கர மடத்தின் துணையோடு கெடுபிடி நடக்கிறது. அதாவது இன்றைய பிராமணர்கள், இந்தியாவுக்குள் கைபர் கணவாய் வழியாக நுழைந்த அந்த காலத்தில் அவர்களும் மாமிசம் சாப்பிடுகிறவர்களாகவும், உகந்த நைவேத்தியமாகக் கொண்டவர்களாகவும்தான் இருந்தார்கள்.

புத்த மதம் ஓங்கி வளர ஆரம்பித்த பின்னர்தான் புத்த மதம் இந்து மதத்திற்குப் பதிலாக அரசர்களாலேயே போதிக்கப்படும் மதமாக ஆரம்பித்தபோதுதான் மாமிசம் சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

குமுதம் வார ஏட்டில் தஞ்சாவூர் வரலாற்றினை ஆதாரமாகக் கொண்டு 'கிளாரிந்தா' பற்றிய கட்டுரையில் கூட சதி என்ற பெயரில் உடன்கட்டை ஏறிய பெண்ணின் எரிக்கப்பட்ட சிதையிலிருந்து மாமிசத்தை எடுத்து பிராமணர்கள் சாப்பிட்டார்கள். அதற்காக தஞ்சாவூர் அருகில் அவர்களுக்கு சில நிலப்பகுதிகள் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்கான உள்நோக்கம், சூத்திர பக்தர்களின் விருப்பு வெறுப்புகளை அழித்துவிட்டு பிராமண மயமாக்கும் திட்டமேயாகும். இதற்காக சங்கரமட ஆசியோடு பலவித முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இது நாட்டுப்புறச் சடங்குகளை அழிப்பதற்கான ஏற்பாடாகவே உள்ளது. உலகமயமாக்கலோடு சேர்ந்தே இவ்வகையான செயல்பாடுகள் நடக்கின்றன.

அதனால்தான் கடவுளே இல்லையென்று சொன்ன தந்தை பெரியார் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக உரிமம் வேண்டும் என்று கோரியதுபோல கோயில்கள் பிராமணமயமாவதை சூத்திர கலாச்சாரத்தை ஒழித்துக்கட்ட நடக்கும் தீயமுயற்சிகளாகக் கருதி எதிர்ப்பு கிளம்பியுள்ளது. இறுதியாக,

உயிர்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் ஓட்டல்களில் விதவிதமாய் மாமிசப்படையல்களை இவர்களால் தடைசெய்ய இயலுமா? எல்லாம் அவாளுக்காக. ●

நன்றி : பொருநை.



படிப்பகம்

www.padippakam.com



# ஈ.வெ.ரா.வின் ஊடாக - தமிழ் மொழி

**பொ.வேல்சாமி**

தமிழ்ச் சமூகம் சீர்திருத்தம் செய்யப்படவேண்டும் என்பதின் அடிப்படையில் தான் பெரியாரின் கருத்துகள் அனைத்தும் வெளிப்படலாயிற்று. அதிலும் குறிப்பாக இச்சமூகத்தை சீர்கேடு அடையச் செய்த இந்து மதமும், பார்ப்பனியமும், பார்ப்பனர்களுமே அவருடைய தாக்குதல் இலக்குகளாக அமைந்தன. பார்ப்பனியச்சார்பு உள்ளவை என்று கருத்தக்க எவையும் அவருடைய தாக்குதலுக்குத் தப்பியதில்லை. இதில் தமிழ் மொழிக்குக் கூட அவரால் விதிவிலக்கு அளிக்கப்பட வில்லை. தமிழ் மொழி பார்ப்பனியக் கறைபட்டது, தமிழர்களின் தன்மானத்திற்கும் விடுதலைக்கும் எதிரான கருத்தோட்டங் களைக் கொண்டதுதான் இம்மொழி என்பது அவருடைய அசைக்க முடியாத கருத்து. இது எந்த அளவு நியாயமானது என்பதைக்காண வேண்டுமானால், இத்தகைய கருத்துக் கொண்ட மற்றவர்களின் நடவடிக்கைகளுடன் இதனை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

பார்ப்பனியத்தின் பிடியில் தமிழ்சிக்கி உள்ளது, அதனை வெளிப்படுத்தி மீட்க வேண்டும் என்ற கருத்தோட்டம் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வாழ்ந்த கல்வியாளர்களான மத்தியதர வர்க்கத்தினர்/சாதியினர் இடையே தோன்றி விட்டது. அத்தகைய சிந்தனையாளர்கள் இதற்கான செயல்பாடுகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இச்செயல்பாடுகள் மூன்று வகையில் வெளிப்படலாயின : (1) கலாச்சார, கருத்தியல் களத்தில் நின்று செயலாற்றி யவர்கள், (2) அரசியல் அதிகாரத்தில் பங்கு பெறுதல் என்று செயல்பட்டவர்கள், (3) சமூக சீர்திருத்த இயக்கமாகச் செயல்பட்டவர்கள்.

முதல் வகைப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் சி.வை. தாமோதரப் பிள்ளை, பரிதி மாற்கலைஞர் என்ற சூரிய நாராயண சாஸ்திரியார், வி. கனகசபை பிள்ளை, வேதாச்சலம்பிள்ளை என்ற மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர் போன்றவர் களைக் குறிப்பிடலாம். இவர்களில் வி. கனகசபைப் பிள்ளை தன்னுடைய '1800 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழகம்' என்ற ஆங்கிலக் கட்டுரைத் தொடரில் 'பார்ப்பனியத்தின் தாக்கம் இல்லாத தமிழ்' என்று சங்க இலக்கியங்களை முதன் முதலில் இனங்காட்டினார். அன்று ஒருசில நூல்கள் தவிர சங்க நூல்கள் பல அச்சாகவில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தன் நோக்கத்தைக் குறிப்பிடுகையில், "கி.பி. 9 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியம் எதுவும் இல்லை என்பதே இன்று (1901-1904) மேலை அறிஞரின் பொதுக் கருத்தாக இருந்து வருகிறது. ஆனால் உண்மை இதற்கு நேர் மாறானது. தமிழ் இலக்கியத்தின் தலைசிறந்த, தற்பண்பு வாய்ந்த பகுதி முழுவதும் கி.பி. 9 ஆம் நூற்றாண்டுக்கு முன் இயற்றப்பட்ட பகுதியே எனலாம். அதற்குப்பின் வந்தவை மிகப் பெரும்பாலும் சமஸ்கிருத ஏடுகளைப்பின்பற்றி இயற்றப்பட்ட கீழ்த்தரமான போலிப் பகர்ப்புகளாகவோ, மொழிபெயர்ப்புகளாகவோ மட்டுமே கொள்ளத்தக்கவை யாயுள்ளன ... ஏனெனில் அவை இயற்றப்பட்ட காலத்தில் தமிழர் அராபியருடனும் கிரேக்கருடனும், உரோமருடனும் ஞாவனியருடனும் இவர்களை ஒத்த மற்ற அயல் நாட்டவருடனும் வாணிகத் தொடர்பு கொண்டு, இவை காரணமாக உயர் நாகரிகமும் பெருஞ்செல்வ வளமும் உடையவர்களாய் இருந்தார்கள். அக்காலப் பொருளியல் வளத்தில் ஏற்பட்ட முன்னேற்றமே இலக்கியத் துறையிலும் தமிழருக்குப் பேரூக்கமும் தூண்டுதலும் தந்திருக்க வேண்டும் என்னலாம்.

"உரோமப் பேரரசின் இலக்கிய வரலாற்றில் பேரரசன் அகஸ்டஸ் காலமே பொற்காலம் என்பர். தமிழ் இலக்கிய வரலாற்றிலும் அத்தகு பொற்காலம் அல்லது 'அகஸ்டஸ் காலம்' ஒன்று உண்டு. அது கி.பி. முதல் நூற்றாண்டே யாகும்," (தமிழ் வரலாற்றில் "பொற்காலம்" என்ற கருத்தை முதலில் சொன்னவர் இவரே. பின்னர் வந்த காலங்களில் இக்கருத்து இவர்கொண்ட பொருளிலிருந்து பெரிதும் மாறி போலிப்பகட்டு ஆரவாரத்திற்கு உள்ளாக்கப்பட்டது தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்கு தெரிந்த செய்தி தான்-கட்டுரையாளர்) (அயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம் - பூம்புகார் பதிப்பகம் பக். 14, 15)

இந்த இடத்தில் 18ஆம் நூற்றாண்டில் பெஸ்கி என்ற வீரமாமுனிவர் என்று எழுதுகிறார். 'தான் பார்ப்பனியத்தி லிருந்தும், பார்ப்பனர்களிடமிருந்தும் விலகிய விதத்தை' தன்னுடைய சதுரகராதி நூலில் எழுதும் லத்தீன் மொழி முன்னுரையில் குறிப்பிடுவதை எடுத்துக் காட்டுவது பொருத்த மாக இருக்கும் என்று கருதுகின்றேன்:

"செந்தமிழ் மொழி இறந்துபட்டதாகப் பொதுப்படப் பேசப்படுவதால் இந்த யுகத்தில் உள்ளவரை நம்பாமல், திவாகரம், நிகண்டு பிங்கலந்தை, கையாகாதி (இது என்ன நூல் என்று தெரியவில்லை) போன்ற பழம் நூல்களைக் கவனமாகப் பார்வையிட்டேன் ... மேலும், அறியாதவரா யினும், அபத்தங் களையே கூறுவோராயினும் இந்நாட்ட வரையே, குறிப்பாக பிராமணர்களையே (கிருத்துவ) சமயத்தொண்டர்கள்நம்ப வேண்டியவர்களாகி விடுகிறார்கள். மாறாக அவர்கள் தம் (தமிழர்களுடைய நூல்கள்) படைப்பு களைப் படித்து உணர இயலுமாயின் அவர்களுடைய (பிராமணர்களுடைய) கூற்றுகள் எவ்வளவு தவறானவை; தெய்வங்கள், புராணங்கள் பற்றிக் கூறுவது எவ்வளவு பொருத்தமில்லாதது எனக் காட்டமுடியும். அதுவரை அவர்கள் கொண்டிருந்த எண்ணங்கள் எவ்வளவு தவறானவை என்பதைக்காரணத்தோடு கூறுங்கால், அவர் களால் மறுக்க இயலாது. பழமையான நூல்களை

படிப்பகம்

www.padippakam.com


அடிப்படையாகக்கொண்டு எதிர்த்தால் அல்லது மறுத்தால் எல்லாக் கட்டுக்கதைகளையும் ஒதுக்கித் தள்ளும் நிலைக்கு வந்துவிடுவர். இந்தியர்கள் அனைவரும் காரணகாரியத் தோடு நம்புவதை விட இலக்கிய பிரமாணங்களையே நம்புபவர்களாக இருக்கின்றமையான் பழங்கால ஆசிரியர்களின் எழுத்துச் சான்றுகளாலும் இலக்கிய மேற்கோள்களாலும் நம்ப வைப் பதே சரியானதாகும்''. (சதுரகராதி ஆராய்ச்சி சூ. இன்னாசி, மதுரை பல்கலைக் கழகம் பக். 65-66). இந்த அடிப்படையில் சங்க நூல்களைப் புரிந்து கொள்ளத்தான் அவர் சதுரகராதி, செந்தமிழ் போன்ற நூல்களை எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கண்ணோட்டத்தின் வளர்ச்சியாக வந்த மறைமலை யடிகள், பாவாணர் போன்றோரின் எழுத்துகள் தமிழ் நூல்களின் காலத்தை மிக முற்பட்ட காலத்தவைகளாக கூறுவதில் ஆர்வம் ஏற்படுத்துவதாகவும், 'சிவஞான போதம்' போன்ற நூல்களைத் தனித் தமிழ் நூல்கள் தான் என்று சொல்லுவதிலும் அழுத்தம் கொடுத்தன. இந்தப் போக்கு ஈ.வெ.ரா.வால் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியதைக் கவனிக்க வேண்டும்.

இரண்டாவது வகையினராக டாக்டர் நாயர், சவுந்தர பாண்டிய நாடார், பனகல் அரசர் போன்றவர்களைக் குறிப்பிடலாம். 1916 இல் தென்னிந்திய நலவுரிமைச் சங்கமாக, பிராமணர் அல்லாத இயக்கமாகத் தொடங்கிய இவர்கள் பின்னர் ஜஸ்டிஸ் பார்ட்டியான நீதிக் கட்சியாகி செயல்பட்டனர். அரசு அதிகாரித்தில் பிராமணர் அல்லாத வர்களுக்கு, உரிய இட ஒதுக்கீடு, மற்ற சமூக நிறுவனங்களில் சரியான பங்கு போன்றவற்றை வலியுறுத்திய இவர்கள், 1920 தொடங்கி 1934 வரையில் தமிழகத்தின் ஆட்சியாளர் களாகவும் பதவி ஏற்றனர். பெரியார் தன்னை இவர்களுடன் இணைத்துக் கொண்டாலும், ஈ.வெ.ரா.வின் இணைவிற்குப் பின்னர் இந்த இயக்கம் பெரிதும் மாற்றமடைந்தாலும் இந்த இயக்கத்தின் சரியான வாரிசாக நாம் பெரியாரை விட அண்ணாதுரையின் திராவிட முன்னனேற்றக் கழகத்தைத் தான் கருத முடியும்.

சுதந்திரத்திற்குப் பிந்திய காலத்து தமிழகத்தின் அரசியல் நடவடிக்கைகளில் அண்ணாவால் மொழி உணர்வு என்பது பிரதான பிரச்சாரமாகியது. இதன் செயல்பாடுகளில் முதல் வகையினரான தனித்தமிழ் இயக்கத்தினரும் பங்கு பெற்றனர். பின்னாளில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் ஊடாக அரசியல் அதிகாரம் இவர்களை வந்தடைந்தது. இந்தி எதிர்ப்பில் உடன்பட்டாலும் தமிழ் மேன்மை போன்ற விசயங்களில் 'தாய்ப் பால் பைத்தியம், கண்ணீர்த் துளிகள்' என்று ஈ.வெ.ரா.வால் விமர்சிக்கப்பட்டனர்.

மூன்றாவது வகை என்று குறிப்பதைக் காட்டிலும் ஈ.வெ.ரா.வின் ஊடான பார்வை என்பது பொருத்தமாக இருக்கும். தமிழ், பார்ப்பனியத்தில் ஊறிய மொழி, நவீன கால சிந்தனைக்குத் தன்னை தகவமைத்துக் கொள்ளாத மொழி என்பதே ஈ.வெ.ரா.வின் நிலைப்பாடு. இந்தப் பார்வையின் ஊடாகத் தான் அவர் கருத்துகள் எக்காலத் திலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

''தமிழ், காட்டு மிராண்டிக் காலத்து மொழி. நாகரிக காலத்திற்கு, பகுத்தறிவு காலத்திற்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற காலத்திற்கு, 'யாயும் யாயும் யாராயினரோ' என்ற காலத்திற்கு தமிழ் பயன்படுமா? வேஷத் தமிழரை அல்ல, உண்மைத்தமிழரைக்கேட்கின்றேன். சொல்லுங்கள்.''

''அட பாவமே! மந்திரி கலைஞர் கருணாநிதி 'தமிழுக்குக் கேடு வந்தால் மந்திரி பதவியை விட்டு விடுவேன்' என்று எதற்காகச் சொல்ல வேண்டும்... ஒழுக்கம், நாணயம் கெட்டால், நீதி கெட்டால், நம்பிக்கை கெட்டால் என்பது போன்ற மனிதத் தன்மை எங்களிடம் இல்லையானால், எங்களால் காப்பாற்ற முடியாவிட்டால் பதவியை விட்டு விடுவேன் (ஏன்) உயிரையும் கூட விட்டு விடுவேன்' என்று கூறலாம். 'கப்சா'வும் விடலாம். அதைவிட்டு விட்டு 'தமிழைக் காப்பாற்றாவிட்டால், அதற்குக் கேடு வந்தால் பதவியை விட்டு விடுகிறேன்' என்றால் அதற்கா மக்கள் ஓட்டுக் கொடுத்தார்கள்? ஒவ்வொன்றுக்காகவும் மந்திரி பதவியை விட்டு விடுவேன் என்றால் அப்படி ஒரு மனிதனுக்கு எத்தனை மந்திரி பதவி இருக்கிறது!''

''சுமார் 50, 60 வருடங்களுக்கு முன்பெல்லாம் புலவர்கள் யாராயிருந்தாலும் 'பிச்சை' எடுத்தே தீருவார்கள் ... புலவரைப் பற்றி என் கருத்து 'புலவர் என்றால் சொந்த புத்தி இல்லாதவன், புளுகன்' என்று தான் உரை கூறுவேன். நா. கதிரை வேற்பிள்ளை என்கிற ஒரு தமிழ் வாயாடிப் புலவர் என்னிடம் வந்த போது, ஒரு நிகழ்ச்சியில் 'புலவர்களுக்குப் பகுத்தறிவு கிடையாது என்பது என் கருத்து; அதை உங்களிடமும் கண்டேன்' என்று சொன்னதற்கு 'உன்னிடம் வந்ததே தவறு' என்று சொல்லி என்னிடம் வாங்கிக் குடித்த பாலை விரலை விட்டு வாந்தி எடுத்து விட்டார்'' (ஆனைமுத்து - தொகுதி 2, பக். 984-985).

''தமிழ் மொழிக் களஞ்சியங்களான 'மாணிக்கவாசகர் காலம்' எழுதிய காலஞ் சென்ற மறைமலை அடிகள், 'பெரிய புராணத்திற்கு புதுஉரை எழுதிய திரு. வி.கல்யாண சுந்தர முதலியார் வாழ்வியல் - முக்கியத்துவத்தில் என்ன தரத்தில் இருந்து சென்றார்கள்?' சைவத்தை நிலை நிறுத்திய'' மூடநம்பிக்கைக் களஞ்சியங்களாகத் தானே முடிவெய்தினார்கள்.

''காலம் செல்லாத இன்றைய தமிழ்க் களஞ்சியங்கள் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் சிதம்பரநாதன் செட்டியார், மு. வரதராசனார், இராஜமாணிக்கனார் மற்றும் ஒரு டஜன் உருப்படிகளின் இன்றைய நிலை என்ன? அவர்களால் அவர்கள் ஓரளவுக்கு நன்றாய்ப் பிழைக்கிறார்கள் என்பதைத் தவிர, மனித சமுதாயத்திற்கோ என்ன பயன்? அன்னக் காவடி பஞ்சாங்கப் பார்ப்பான் மகன் ஆங்கிலம் படித்து சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஆகிறான்!

''பார்ப்பனரல்லாதார் என்கின்ற உணர்ச்சிப் போராட்டம் இல்லாதிருந்தால் இந்த மேதாவி டாக்டர்கள் 'மகான்'கள் நிலை இன்று எப்படி இருக்கும்? கிறுக்கன் பாரதிக்கு'' இருக்கிற மதிப்பில் நூற்றில் ஒன்றுகூட இவர்களில் எவருக்கும் இன்று இல்லையே!. (அதே தொகுதி பக். 1002).

''மொழிப் போராட்டம், கலாச்சாரப் போராட்டத்தின் ஒரு பகுதிதானேயொழிய முழுப் போராட்டமாகவே ஆகி விடாது. சட்டம், சாஸ்திரம், சமுதாயம், சம்பிரதாயம், பழக்க வழக்கங்கள், புராணங்கள், இதிகாசங்கள் - இவை எல்லாவற்றிலுமே நம் இழிவு நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றது.


படிப்பகம்

www.padippakam.com




எனவே இவை எல்லாவற்றிலுமே நம் இழிவு நீக்கமடைந்தாக வேண்டும். மொழியால் மேம்பாடும் வெற்றியும் பெற்று விடுவதாலேயே நமது இழிவும், இழிவுக்கு ஆதாரமான கலாச்சாரமும் ஒழிந்து விடமாட்டா. மேலும் இந்த இழிவால் அவதிப்படுபவர்கள் தமிழ் மொழி பேசுகிறவர்கள் - தமிழர்கள் என்பவர்கள் மாத்திர மல்லாமல், இந்தியாவின் மற்ற மாகாணங்களிலும் - மகாராஷ்டிரம் முதலிய மாகாணங்களிலும் இருக்கிறார்கள். அங்குள்ள தாழ்தப்பட்ட தோழர்களும் தம்மை திராவிடர்கள் என்றுதான் கூறிக் கொள்கிறார்கள். உண்மையில் அவர்கள் திராவிடர்கள்தாம்'' (பெரியாரியம் - நிறப்பிரிகை - பக். 23).

இந்து மத இழிவுகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு இஸ்லாத்தையும், இந்தியாவின் பார்ப்பனிய + பனியா கூட்டு அரசியல் பிடியிலிருந்து விடுபட தனித்தமிழகத் தையும் முன்வைத்த பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தமிழ் மொழியையும், பார்ப்பனியத்தின் பிடியிலிருந்து விடுவிக்க லாம் என்று ஏன் கருதவில்லை? மறைமலையடிகள், பாவாணர் போன்ற தனித் தமிழ் கொள்கையாளர்களின் கருத்துகளான தமிழ் சைவம், தமிழ் உலக மொழிக் கெல்லாம் தாய் என்பன போன்ற இன்னொரு வகையான மதவாதம் (சைவம் + வைணவம்) அறிவியல் சிந்தனைக்கு மாறான கற்பனா வாதங்கள் போன்றவை பெரியாரின் அறிவியல் பூர்வமான விடுதலை சிந்தனைக்கு ஏற்புடைய தாய் இல்லை என்று கருத இடந்தருகின்றது. ஆனால் இத்தகைய கருத்தாக்கங்களுக்கு மாற்றாக அல்லது இன்னொரு வகையான சிந்தனைகளை முன் வைத்த, குறிப்பாக தமிழின் அவைதிக மரபை போற்றித் தன்னுடைய ஆய்வுகளில் வெளிப்படுத்திய மயிலை சீனி. வேங்கடசாமி, சாத்தான்குளம் அ. இராகவன் போன்றவர் களை ஈ.வெ.ரா. கணக்கில் எடுத்ததாகத் தெரியவில்லை. பார்ப்பனிய கருத்தாக்கத்தின் தாக்கத்திற்கு உட்பட மறுத்த அல்லது அதனை எதிர்த்த பௌத்த, சைன சிந்தனைகளைத் தாங்கிய தமிழ் நூல்கள் என்பன சாதியில் உடன்படாமை, பெண் கல்வியில் எதிர்ப்புக்காட்டாமை, வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும் தங்கள் படைப்புகளில் கடும் எதிர்ப்புணர்வைக் காட்டியமை போன்றவற்றைத் தன் உள்ளடக்கமாகக் கொண்டிருந்தன. (மணிமேகலை, நீலகேசி போன்ற நூல்களில் இத்தகைய கருத்துகளை ஏராளமாகப் பார்க்க முடியும்.) அவைதிக மதம் சார்ந்த தமிழ்ச் சிந்தனையாளர்கள் நாலந்தா போன்ற அன்றைய பல்கலைக் கழகங்களில் தலைமைப் பொறுப்பு ஏற்று நடத்தி புகழ் பெற்றனர். சமஸ்கிருதம், பாலி போன்ற மொழிகளில் இன்றும் பேசப்படுகின்ற நூல்களை எழுதி இருக்கின்றனர். சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் பௌத்த மதத்தைப் பரப்பச் சென்று இன்று வரை அந்த நாடுகளில் போற்றப் படுகின்றனர். இன்னும் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு போன்ற நூல்களின் பாடல்கள் பலவற்றை பார்ப்பனர்கள் இயற்றி இருந்தாலும் அவற்றில் பிற்காலத்திய பார்ப்பனிய சிந்தனைத் தாக்கம் மிக மிகக் குறைவு எனலாம். அது மட்டுமல்லாது 'ஆஜீவகம்' போன்ற பார்ப்பன எதிர்ப்பு மதம் பற்றிய கருத்துகள் இன்று இந்திய மொழிகளிலேயே தமிழில் மட்டும் தான் உள்ளது என்பதும் கவனிக்க வேண்டிய விசயம்.

இத்தகைய கருத்தோட்டங்களில் தங்கள் ஆய்வை செலுத்திய மயிலை சீனி போன்றவர்களை திராவிடர் கழகம் ஊக்கப்படுத்தி இருந்தால் நிச்சயமாக பார்ப்பனி யத்திற்கு மாற்றான அறிவியல்பூர்வமான, அவைதிகம் சார்ந்த ஒரு தமிழ்க் கல்விப் புலம் செம்மையாக ஆராயப்பட்டு நிலைநிறுத்தப்பட்டிருக்கும். ஈ.வெ.ரா.வின் கலகபூர்வமான அரசியல் செயல்பாடுகளில் இலக்கியம், ஓவியம், சிற்பம், இசை போன்ற நுண்கலைகள் தங்களுக்கான இடத்தைப் பெற முடியவில்லை. இதன் விளைவாக தமிழ் 'காட்டுமிராண்டி மொழி,' 'ஆங்கிலமே வீட்டு மொழி' என்ற கூற்றுகள் பெரியாரிடமிருந்து வெளிப்பட்டதாக நாம் கருதலாம்.

எப்படியாயினும், இந்துத்துவத்தின் ஊடான தேசியம் என்பது இந்திய சுதேசியமாக கட்டமைக்கப்படும் இன்றைய இந்துத்துவ சூழலில், இந்தி, சமஸ்கிருதம் போன்ற மொழிகள் இந்தியாவின் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் தகுதி வாய்ந்தவை என்பது போன்ற பிரச்சாரங்களும், பிற மாநில மொழிகளுக்கு அத்தகைய தகுதி இல்லை என்ற கருத்தியலும் ஏற்புடையது போல கருதப்பட்டாலும், தமிழ் மொழிக்கு அத்தகைய கருத்து பொருந்தாது. இந்தியாவில் உள்ள இன்றைய மொழிகள் தோற்றம் கொள்வதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு, முன்பே தமிழ் மொழி இலக்கிய, இலக்கண வளமுடையதாக இருந்து வருகின்றது. பிற மாநில மொழிகள் அனைத்தும் வைதிகத்தின் இணைப்புடன் தான் தோற்றின. எடுத்துக் காட்டாகத் தெலுங்கு நன்னயரின் மகாபாரதத்துடனும் மலையாளம் எழுத்தச்சனின் இராமாயணத்துடனும் தான் ஒரு மொழியாக உருக்கொள்கின்றது. கன்னடம் தவிர மற்ற இந்திய மொழிகள் எல்லாவற்றின் கதையும் இதுதான். ஆனால் தமிழ் மொழி இவற்றிற்கு 1500 ஆண்டுகளுக்கு முன்பே (கி.மு.வில்) தோற்றம் பெற்றது மட்டுமல்லாது, பார்ப்பனியத்திற்கும், வைதிகத்திற்கும் மாறான ஒரு செழுமையான அவைதிக மரபையும், தன் இலக்கிய, இலக்கணத் தொகுதிகளில் பெற்றிருந்தது என்பது வரலாறு மட்டுமல்ல, இன்றும் உண்மையாக உள்ள நடைமுறை சார்ந்தது. இதனை இனங்கண்டு வளர்த்துச் செல்வது என்பது ஈ.வெ.ரா. ஊடாகத் தொடர்ந்து பயணிப்பதாக அமையும். அண்மையில் வெளிவந்த ஐரோவதம் மகாதேவன் அவர்களின் ஆங்கில நூலில் (கிரியா வெளியீடு) நம் காலத்தில் இப்பணியைச் செம்மையாகச் செய்து, விடுபட்ட கண்ணி மீண்டும் தொடர்வதற்குக் கால்கோள் இட்டுள்ளார். ●




படிப்பகம்

www.padippakam.com



# வரலாறு துரோகிகளை ஒருபோதும் மன்னிக்காது

**- பாரதி வசந்தன்**

'இதழாய் ஓர் எழுத்தியக்கம்' என்று பாவனைகளற்ற நிஜ முகத்துடன் இடைவிடாது, அதே வேளையில் சமரசமற்று இயங்கிவரும் ஓர் இலக்கிய இயக்கம்; அது நானறிந்த வரையில் சமூகத் தளத்திலும், பண்பாட்டுத் தளத்திலும், அரசியல் தளத்திலும், இலக்கியத் தளத்திலுமாய்த் தமிழ்ச் சமூக அளவில் பெரிய அதிர்வுகளை ஏற்படுத்தி வரும் 'கவிதாசரண்'. அந்த இதழில் நான் எழுதுவது என்பது பெருமைக்குரிய விஷயம்.

கடந்த செப்.-அக். 2003 'கவிதாசரண்' இதழில் 'பெரிய ஆளு' என்ற தலைப்பில் ஒரு கவிதையை எழுதியிருந்தேன். அந்தக்கவிதையை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் மிகவும் சாதாரணமான கவிதை போலத்தான் தெரியும். ஆனால், அதன் உள்ளீடாக இருக்கிற விஷயம் மிகவும் கவனத்திற் குரியது. ஒரு மனிதன் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எவ்வளவு சாமர்த்தியமாகத் திட்டமிட்டுக் காய்களை நகர்த்தித் தன் காரியம் முடிப்பதற்காகத் தன்னை முன்னிலைப்படுத்தி, தன்னை மட்டுமே நிலை நிறுத்திக் கொள்ளும் சந்தர்ப்பவாதத்தையும், அதன் வழியே ஆதாயம் தேடும் அவன் மலிவான புத்தியையும் அது அம்பலப்படுத்துகிறது. அதோடு அவன் கடைசியில் புகலிடமாய்ப்போய்ச்சேர்ந்திருக்கிற இடம்எது என்பதையும், அதன் இருப்புகளையும், அதன் பின்னணியில் இயங்கிக் கொண்டிருக்கிற அல்லது இயக்கிக் கொண்டிருக்கிற 'மக்கள் விரோத அரசியலை'யும் ஒவ்வொரு படி நிலையாகப் பதிவு செய்கிறது. அந்தக் கவிதையில் நான் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு நிகழ்வுக்கும் தமிழக அளவில் நிறைய செய்திகள் உண்டு; கருத்தாடல்கள் உண்டு; ஆதாரங்கள் உண்டு. ஆனால், அதில் தொடர்புடையவர்கள் 'பெரிய ஆளு'வின் இத்தகைய மோசமான தன்மை குறித்து எதையும் வெளிப்படையாகப் பேசாமல் ஏன் 'வாய்மூடி மௌனிகளாக இருக்கிறார்கள்' என்பதுதான் எனக்குப் பெரிய கேள்வியாக இருக்கிறது. அதற்காக நான் பேசாமல் இருக்க முடியாதில்லையா..?

என் கவிதையின் ஒட்டுமொத்தப் பரிமாணங்களையும் புறக்கணித்துவிட்டு, என் கவிதையின் குரலையும், அதன் பின்புலமாய் இருக்கின்ற எச்சரிப்புகளையும், சமூகம் சார்ந்த மெய்யான புரிதல்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் அல்லது கவனத்தில் கொள்ளாமல் தனக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக் கொண்டு பார்ப்பது ஒரு வகையான அரசியல் தந்திரம்.

'பெரிய ஆளு' கவிதையில் நான் ஓரிடத்தில் கூட தோழர் ரவிக்குமாரின் பெயரைக் குறிப்பிடவேயில்லை. ஆனாலும் அதைப் படித்தவர்கள் எல்லோருமே 'அது ரவிக்குமார் பற்றிய கவிதைதான்' என்று எளிதில் புரிந்து கொண்டார்களென்றால்அது என்கவிதைக்குக்கிடைத்த வெற்றியில்லை. மாறாக ரவிக்குமார் அப்படியான காரியங்களையெல்லாம் செய்தவர்தான் என்கிற உண்மையை உடனே உணர்ந்து கொண்ட மற்றொரு உண்மையின் நிருபணம்தான் அது. அதில் உண்மை இல்லையென்றால் ஒருவருக்கும் அது ரவிக்குமார் பற்றிய கவிதைதான் என்று தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை. அந்த வகையில் என் கவிதை உண்மைக்கு சாட்சியமாக இருந்திருக்கிறது என்பதில் எனக்கு மகிழ்ச்சிதான்.

எனக்கு ரவிக்குமாரைத் தெரிந்த அளவுக்கு அ. மார்க்ஸை தெரியாது. தொண்ணூறுகளில் புதுச்சேரியில் 'தலித் பண்பாட்டுப் பேரவை' மற்றும் சில தலித் இயக்கங்களின் கருத்தரங்குகளில் என் தலைமையில் அவர் கலந்துகொண்டு கட்டுரை வாசித்திருக்கிறார்; பேசியிருக்கிறார். அவ்வளவு தான். அதன்பிறகு எனக்கும், அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அப்படியிருக்க என் கவிதையில் நான் தன் னெழுச்சியாக ரவிக்குமாரை விமர்ச்சிக்கப் போய் அதற்கு எந்த வகையிலும் தொடர்பே இல்லாத அ.மார்க்ஸை சம்பந்தப்படுத்திப் பார்ப்பது திட்டமிட்ட ஓர் இலக்கிய மோசடியாகத்தான் எனக்குத் தெரிகிறது.

எந்த ஒரு நிகழ்வுக்கும் எதிர்வினைகள் உண்டு. இது இயங்கியல் தன்மை. அந்த விதிப்படிதான் உலகம் இன்று வரையிலும் இயங்கிக் கொண்டிருக்கிறது. அத்தகைய இயல்பான எதிர்வினைகளை 'எதிரிவினைகளாகப்' பாவிப்பதும், அதற்கும் மேலாகப் போய் எதிர்வினைகளே இருக்கக்கூடாது என்று கருதுவதும் இயங்கியல்பூர்வமான சமூக வளர்ச்சிக்கு இடையூறாகத்தான் முடியும்.

நான் பெரிதும் மதிக்கக்கூடிய ஒருவர் என் அன்பிற்கினிய தோழர் உஞ்சை அரசன் அவர்கள். அவர் தமிழக அளவில் தலித் கருத்தியலாளர்களுள் மிகவும் குறிப்பிடத்தகுந்தவர். 'தலித் பண்பாட்டுப் பேரவை' சார்பில் அவர் நடத்திய 'மனுசங்க' இதழில் என்னுடைய தலித் கவிதைகளை நான் மறந்துபோனாலும்விடாமல் கேட்டு வாங்கிப் பிரசுரித்தவர். அத்தகையவர் நவ.-டிச. 2003 'கவிதாசரணில்' என் கவிதை குறித்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில், 'மக்கள் விடுதலைக்கான இலக்கிய வாதிகள் (இடது, முற்போக்கு, தலித்) கண்காணிக்கப்படு பவர்களாக இருக்க வேண்டும்...' என்றும் 'உதிரிகளாய் இருக்கிற கருத்தாளர்கள் எவரையும் சந்தேகிக்க வேண்டும்...' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். நான் அத்தகையவர்களை சந்தேகப்படக் கூட இல்லை. தொடர்ந்து கண்காணித்துக் கொண்டு வந்தேன். அதன் விளைவுதான் என் கவிதை.



படிப்பகம்

www.padippakam.com


என்னுடைய 'பெரிய ஆளு' கவிதைக்காக 'மூளையைச் சிறிது நேரம் ஒப்புக் கொடுத்ததாகச்' சொல்லும் தோழர் 'அந்தப் பெரிய ஆளு' ஏன் அப்படி நடந்து கொள்ள வேண்டும், அவருக்குப் பின்புலமாய் இருந்துகொண்டு வழி நடத்துகிற அரசியல் என்ன என்பதைத் தெரிந்து கொள்கிற முயற்சியில் அதே நேரத்தை ஒப்புக் கொடுத் திருந்தால் என் கவிதையின் பட்டவர்த்தமான உண்மை அவருக்குப் புரிந்திருக்கும்.

புதுச்சேரியில் 'தலித் பண்பாட்டுப் பேரவை' கட்டமைக்கப் பட்டபோது அதில் தோழர் உஞ்சை அரசனோடு கே.ஏ. குணசேகரன், ராஜ் கௌதமன், ரவிக்குமார், சுப்பையா, பாரதி வசந்தன் ஆகிய நாங்கள் எல்லோரும் சேர்ந்துதான் இயங்கினோம். ஏற்கெனவே புதுச்சேரியில் கட்டமைக்கப் பட்டிருந்த பழமைவாத 'வெறும் தமிழ் முழக்க' இலக்கியச் சூழலில் தலித் பண்பாட்டுப் பேரவையானது பெரிய அதிர்வுகளையும், கலகத்தையும் ஏற்படுத்தியதைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். தமிழக அளவில் தலித் பண்பாட்டுப் பேரவையைத் தொடங்கிய உஞ்சை அரசனுக்கு இதில் பெரும் பங்குண்டு.

இந்தத் 'தலித் பண்பாட்டுப் பேரவை'யின் கலந்துரை யாடலில்ஒவ்வொரு முறையும்பங்கேற்கிறபோது ரவிக்குமார் மட்டும், 'பேரவைக்கென்று செயல் திட்டம் எதுவுமில்லை ... நகலறிக்கையும் இல்லை... எப்படி இயங்குவது...' என்று கேட்கிற போதெல்லாம் உஞ்சை அரசன் எழுந்து அதற்குரிய பதிலை சொல்வதை நான் பலமுறை பக்கத்திலிருந்து பார்த்தவன். அப்போது அவர் பெயர் உஞ்சைராசன். 'கறாரான எந்த வரையறையும் இல்லாமல் தலித் பண்பாட்டுப் பேரவை தொடர்ந்து செயல்பட சாத்தியமில்லை...' என்று ரவிக்குமார்சர்வ அலட்சியமாகச் சொல்கிறபோதெல்லாம் உஞ்சை அரசன், 'பாரதி வசந்தன் ... ரவிக்குமார் நிறப்பிரிகையிலும், மக்கள் உரிமைக் கூட்டமைப்பிலும் இயங்குவதால் தலித் பண்பாட்டுப் பேரவை தனித்து வளர்வதை அவர் விரும்பவில்லை. உங்களைப் போன்ற உள்ளூர் தலித் படைப்பாளிகளால் தான் பேரவையை முன்னெடுத்துச் செல்ல முடியும்...' என்று மிகுந்த தோழமையுடன் சொன்னதை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. (அப்போது புதுச்சேரி தலித் மக்களிடைய உள்ளூர் - வெளியூர் பிரச்சனைகள் தீவிரமாக இருந்ததால் தலித் பண்பாட்டுப் பேரவை உள்ளிட்ட பெரும்பாலான தலித் இயக்கங்களின் அமர்வுகள் யாவும் உள்ளூர் தலித் படைப்பாளி என்கிற அடிப்படையில் என் தலைமையிலேயே நடக்கும். அதுபோன்ற நிகழ்வுகளில்தான் நான், அ. மார்க்ஸ் அவர்களோடு அறிமுகம் ஆனது.)

ஒரு முறை நெல்லித்தோப்பில் உள்ள என் பூர்வீகமான குடிசை வீட்டுக்கு தோழர் உஞ்சை அரசன் வந்திருந்தபோதும் இதையே சொன்னதோடு, ரவிக்குமார் பண்பாட்டுப் பேரவையை முடக்குவது குறித்து இன்னும் கூட சிலவற்றைச் சொன்னார். தனிமையில் நாங்கள் இருவரும் அன்று பேசிக் கொண்டதைப் பொது நாகரிகம் கருதி நான் பதிவு செய்ய விரும்பவில்லை. அதன் பிறகுதான் பண்பாட்டுப் பேரவை மெல்ல மெல்ல செயலிழக்கத் தொடங்கியது. அதைத்தான் நான் 'தலித் பண்பாட்டுப் பேரவையத் தரைமட்டமாக்கினாரு...' என்று எழுதினேன். ஆனால் இன்று உஞ்சை அரசன், 'இலக்கிய இயக்கம் அரசியல் இயக்கமாகச் செயல்பட முடியாததாகையால் தலித் பண்பாட்டுப் பேரவை கலைக்கப்பட்டதேயன்றிரவிக்குமாரின்எந்தமுயற்சியாலும், முயற்சியின்மையினாலும் அல்ல...' என்று உறுதிப் படுத்துகிறார். அதே சமயம் ரவிக்குமார் 'காலச் சுவடு' நேர்காணலில், 'ஒரு அவசர கதியில் ஆரம்பித்தோம் என்பதால் ஒருங்கிணைந்து செயல்பட முடியவில்லை...' என்று பொய்யைக் கூறி நழுவிச் செல்கிறார். (இனிமேல் இது மாதிரியான விஷயங்களையெல்லாம் 'சாமி கோயிலில் வைத்துத்தான் சத்தியம் வாங்க வேண்டும்' போலத் தெரிகிறது. இதற்கும்மேல்நான்வேறென்னசொல்லமுடியும்?)

தோழர் தன்னுடைய கடிதத்தின் இடையே குறிப் பிட்டிருக்கிற இன்னொரு முக்கியமான விஷயம், 'இப்ப/ விடுதலைச்சிறுத்தைகள/வீணாக்கிக்கிட்டிருக்காரு' எனும் என் கவிதை வரிகள். அதை அப்படியே நேரடியாகப் பொருள் கொண்டு 'பாரதி வசந்தன் அமைப்பைப் பலவீனமாகப் பார்க்கிறார்...' என்று பழிசுமத்தக் கூடாது. 'வீணாக்கிக்கிட்டிருக்காரு' எனும் கவிதைச் சொல்லாடலின் அரசியல்'கவனமாபிருத்தலின்' இன்னொரு பரிமாணம். எந்த இயக்கம் எழுச்சி பெற்றாலும் அதற்குள் நேரடியாகவோ, இல்லை மறைமுகமாகவோ ஊடுருவி அதனால் ஆதாயம் அடைந்து பின்னர் அதனையே அழிக்கத் திட்டமிடுகிற 'உட்பகையை' உணர்த்துவது.

வீரத்தின் விளைநிலமான விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் என்பது நெடுநாள் சாதிப் பகையின் கணக்கை முடிக்க வந்த நீண்ட யுத்தத்தின் வரலாறு. அது ஊமை ஜனங்களின் உலைக்கள நெருப்பு. அதன் பொதுச் செயலாளர் அன்புக்குரிய சகோதரர் திரு. தொல். திருமாவளவன் அவர்கள் அரசியல்வாதிகளைப் போன்று சாதாரண தலைவர் இல்லை. களத்தில் நின்று போராடுகிற கந்தகக் கிடங்கு. ஆயிரமாண்டுக் காலமாக அடிமைப்படுத்தப்பட்டு, அடங்கிக்கிடந்த தலித் மக்களை ஆயுதம் ஏந்திப் போராடச்செய்த புதிய வரலாறு. தோழர் உஞ்சை அரசன் குறிப்பிடுவதுபோல நான் விடுதலைச் சிறுத்தைகள் தலைமையைப் பலவீனமாகப் பார்க்கிற வனாயிருந்தால் பங்கேற்கிற விடுதலைச் சிறுத்தைகள் நிகழ்வுகளிலெல்லாம் 'கருப்பு நெருப்பே/காலத்தின் கட்டாயமே/திருப்பு முனையே/எங்கள் திருமாவளவனே..' என்று பெருமையுடன் பிரகடனப்படுத்த மாட்டேன்.

நான் இருக்கும் போதும் விடுதலைச் சிறுத்தை; இறக்கும் போதும் விடுதலைச்சிறுத்தை. ரவிக்குமாரைப் போல 'ஆல் பழுத்தால் அந்தப் பக்கம்; அரசம் பழுத்தால் இந்தப் பக்கம்...' என்று வாழ்கிற ஈனவாழ்க்கை எனக்குத் தெரியாது. அப்படி வாழ்கிறதை 'நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு..' என்று நம்புகிறவன் நான். அன்புச் சகோதரர் தொல். திருமாவளவன் அவர்கள் என்னையும், என் கவிதை களையும், அதன் நோக்கங்களையும் நன்கறிவார். நம் வீட்டுக்குள் கொடிய விஷப்பாம்பு வந்துவிட்டது. அதை அடித்துக் கொல்லுங்கள் என்று கூடச் சொல்லவில்லை. பாம்பு நம்மைக் கடிக்காதபடிப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று எச்சரிக்கைப் படுத்துவதற்குக் கூடவா எனக்கு உரிமையில்லை? அந்தப் பொருளில்தான் என் கவிதை வரிகளை அணுக வேண்டும். இப்படியெல்லாம் நான் சொல்வதால் என்மீது சிலருக்கு இப்போது கோபம் கூட வரலாம். ஆனால், 'இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்/ கெடுப்பார் இலானும் கெடும்' எனும் திருக்குறளும், 'சிநேகிதன் அடிக்கும் அடிகள் உண்மையானவைகள்;

படிப்பகம்

www.padippakam.com



சத்துரு இடும் முத்தங்களோ வஞ்சனை உள்ளவைகள்...' எனும் பைபிள் வசனமும், 'இப்ப/ விடுதலைச்சிறுத்தைகள/ வீணாக்கிக் கிட்டிருக்காரு..' எனும் என் கவிதை வரிகளின் உட்பொருளைக் காலம் கடந்தாவது ஒரு நாள் கட்டாயம் உணர்த்தும்.

''விடுதலைச் சிறுத்தைகள்' தென் மாவட்டங்களில் வலுவாக இருந்தபோதிலும் அப்போது வடமாவட்டங்களில் அறிமுகமாயிருக்கவில்லை. மக்கள் கல்வி இயக்கத்தில் இருந்தவர்களை அழைத்து தலித்துகளை ஒருங்கிணைத்து விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் கிளைகளை ஆரம்பிக்கும்படிக் கேட்டிக்கொண்டோம்...' என்று ரவிக்குமார் 'காலச் சுவடு' ஜூலை - ஆக. 2000 இதழில் கூறியிருக்கிறார். ஏதோ இவர்தான் வடமாவட்டங்களின் சேரிகள் தோறும் சாதி வெறியர்களுக்கு மத்தியில் விடுதலைச் சிறுத்தைகளின் கொடிகளை ஏற்றி வீர வணக்கம் செய்வதற்குக் காரணமாயிருந்தார் என்பதைப் போல ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவது எத்தகைய மோசடியான சித்தரிப்பு. அதை விடுங்கள். அவரோடு சேர்ந்து 'யார் யார் கேட்டுக் கொண்டார்கள்..' என்பதை நேர்மையான முறையில் பதிவு செய்யாதவர் சொல்வது உண்மைதானா என்பதை ஆராய்வதற்குள் அவரே அந்த நேர்காணலில் 'ஆனால் உருவாகும் அமைப்புகள் எல்லாம்' ஏதோ ஒரு வகையில் சர்வாதிகாரத் தன்மையுடனேயே இருந்து வருகின்றன..' என்று விடுதலைச் சிறுத்தைகளையும் சேர்த்து ஓர் அபிப்ராயத்தைப் பொத்தாம் பொதுவாகப் பகிரங்கமான குற்றச் சாட்டுடனேயே முடிக்கிறார். இவை எவ்வளவு பயங்கரமும், வஞ்சகமும் நிறைந்த வார்த்தைகள். எத்தனை மோசமான கீழத்தரம் மிகுந்த வாக்கு மூலங்கள். மற்றெல்லா தலித் இயக்கங்களையும் அரசியல் கட்சிகளையும் விட ஜனநாயகப் பண்புகள் மிகுந்த விடுதலைச்சிறுத்தைகள் தலைமையை நேரடியாகவே கொச்சைப் படுத்தின இந்த வக்கிரங்களெல்லாம் எப்படித் தோழர் உஞ்சை அரசனுக்குத் தெரியாமல் போனது என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

ஏறக்குறைய இதே காலக்கட்டத்தில்தான் 'வாய்மொழி வரலாறு' எனும் தலைப்பில் இளைய பெருமாள் அய்யாவைப் பற்றி ரவிக்குமார் 'சித்திரை நெருப்பு' எனும் புத்தகம் போட்டபோது அதில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிதறிக் கிடந்த 'லெட்டர் பேட்' தலித் இயக்கங்களைக்கூட பதிவு செய்தவர் அப்போது பெரும் காட்டுத் தீயென எழுந்து நின்ற விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தைப் பற்றியோ அதன் தலைவர் திருமாவளவன் அவர்களைப் பற்றியோ ஒரே ஒரு வார்த்தைகூட பதிவு செய்யவில்லை. அதைக் கண்டித்து நானும், புதுச்சேரி தோழர்கள் சிலரும் வெகுண்டெழுந்து நியாயம் கேட்க ரவிக்குமாரைத் தேடிக் கொண்டிருந்தது தனிக்கதை.

அதேபோன்று உஞ்சைஅரசன், 'விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பின் எவ்வடிவத்துக்குள்ளும் ரவிக்குமார் தன்னை இணைத்துக் கொள்ளவோ, ஆளுமை செய்யவோ இல்லை...' என்று அடித்துச் சொல்லுகிறார். நல்லது. ஆனால், ரவிக்குமார் 'காலச் சுவடு' நேர்காணலின் இரண்டாம் பகுதியில் (செப்-அக்.2000), 'விடுதலைச் சிறுத்தைகள் தேர்தல் நிலையை மேற்கொள்ள நானும் ஒரு தூண்டுகோலாக இருந்தேன்...' என்று பெருமையோடு பதிவு செய்கிறார். அமைப்பின் எவ்வடிவத்துக்குள்ளும் தன்னை இணைத்துக் கொள்ளாதவர் அல்லது ஆளுமை செய்யாதவர் 'எப்படி தூண்டுகோலாக இருந்தார்? எந்த வகையில் தூண்டுகோலாக இருந்தார்...' என்பதை ஒன்று ரவிக்குமார் விளக்க வேண்டும். இல்லாவிடில் உஞ்சை அரசன் விளக்க வேண்டும். ஏனெனில் தனி நபரை விடவும் தலைமை முக்கியமானது; தலைமையை விடவும் தத்துவம் முக்கியமானது. அந்தத் தத்துவத்தின் போக்கையே ஒருவர் தன் சுயநலத்துக்கு ஏற்ப, தான்தான் வழி நடத்துவது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி, அதையே தன் அரசியலாக அமைக்கப் பார்ப்பது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம். எப்போதுமே இதுபோன்ற கீழ்த்தரமான காரியங்களில் ஈடுபடும் பொய்ம்மைக்குத்தான் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள நிறைய முஸ்தீபுகள் தேவைப்படுகின்றன. ஆனால் உண்மைக்கு அப்படி எதுவும் தேவையில்லை. அது தனக்குத் தானே நிருபணமாய் என்றைக்கும் நிலைத்து நிற்கும். தோழர் உஞ்சை அரசன் என் கவிதையின் உண்மைப் பொருளை உணராது, என் உயர்ந்த நோக்கத்தைத் திசை திருப்புவதன் மூலம், ஒரு சந்தர்ப்பவாதியின் மீது ஒரு நல்ல ஜனநாயக வாதியைப் போன்ற சித்தரிப்பை ஏற்படுத்தியதால்தான் நான் இதையெல்லாம் கூட எழுதும்படி ஆயிற்று. ஆனாலும், நான் சார்ந்திருக்கும் விடுதலைச்சிறுத்தைகள் அமைப்பின் பொது நன்மை கருதியும், என்னிலும் முத்தவர் தோழர் உஞ்சை அரசன் என்பதாலும் இதனை நான் இதோடு முடித்துக் கொள்ளவே விரும்புகிறேன்.

அதே சமயம், ரவிக்குமாரின் 'காலச்சுவடு' நேர்காணலின் இன்னொரு இடத்தில், 'என்னால் தலித் இயக்கங்களின் மீது தமிழக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடிந்தது...' என்று அவரே ஒப்புதல் வாக்குமூலம் தருகையில் அதன் ஊடாக நிகழ்த்தப்பட்ட மோசமான விளைவுகளைத்தான் 'தலித் இயக்கங்கள ஒழிச்சிக் கட்டினாரு...' என்ற என் கவிதை வரிகளோடு பொருத்திப் பார்க்க வேண்டும். மேலும், தோழர் தன் கடிதத்தில், 'ரவிக்குமாரின் எழுத்தை எதிர்கொள்ள முடியாத கோழைத்தனம்...' என்கிறார். எனக்குக் கோழைத்தனம் இருந்திருந்தால் ரவிக்குமாரைக் குறித்து கவிதை எழுதியிருக்க மாட்டேன். அவரோடு 'காம்ப்ரமைஸ்' செய்து கொண்டிருப்பேன். ரவிக்குமாரின் எழுத்து வன்மை எனக்குத் தெரியும். அவரின் எழுத்து தலித் விடுதலைக்கு முன் கை எடுத்த தாத்தா 'ரெட்டைமலை சீனுவாசனை ரெட்டை ஜடை சீனுவாசன்,,,' என்று கிண்டலடித்த தலித் சித்தாந்த எழுத்து; 'தலித் பண்பாடு இதுதான் என்று கூறுவது, தலித் இலக்கியம் இப்படித்தான் இருக்க வேண்டும் என வரையறுப்பது இவற்றில் எல்லாம் எனக்குத் துளியும் உடன்பாடில்லை...' என்று 'காலச்சுவடு' கோஷ்டிக்கு காவடி தூக்கிக் கொண்டு பின்பாட்டு பாடுகிற பின் நவீனத்துவ எழுத்து; காலம் காலமாய்ப் பேசப்பட்டும், போராடியும் இன்னமும் தீர்க்கப்படாதிருக்கிற ஒட்டுமொத்த தலித் பிரச்சனைகளை 'தலித் பிரச்சனை singular ஆன ஒன்று...' என சர்வசாதாரண மாகச் சொல்லும் உலகத் தரம் வாய்ந்த எழுத்து. என்னால் அப்படியெல்லாம் எழுத முடியாது. ஒப்புக்கொள்கிறேன். நானெல்லாம் பாமரர்களுக்காக பாமரத்தனமாக எழுதக்கூடியவன். ஆனால் பாருங்கள். தலித்துகள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று ஒடுக்கப்படுகிற மக்கள் யாவரும்



படிப்பகம்

www.padippakam.com



பெரும்பாலும் ஒன்று படிக்காத பாமரர்களாய் இருக்கிறார்கள்; இல்லாவிடில் படித்தவர்களால் ஏமாற்றப் படுகிற பாமரர்களாய் இருக்கிறார்கள். அவர்களுள் ஒருவனாய் இருந்துகொண்டு ரவிக்குமாரை எதிர்கொள்ள கோழைத்தனம் தேவையில்லை. உண்மையும் நேர்மையும் இருந்தால் போதும். அது என்னிடத்தில் இருக்கிறது.

கடிதத்தை நல்ல தமிழ்நடையில் தொடங்கி அருமையாக எழுதிக்கொண்டு வந்த தோழர் உஞ்சை அரசன் திடீரென்று 'நரகல் நடைக்குப்' போனது ஆச்சரியமாய் இருக்கிறது. நானாகிலும் 'தாடியோடு' நின்று விட்டேன். அவர் 'கவட்டி' வரைக்கும் போயிருக்க வேண்டியதில்லை. என்மீது அப்படிக் கோபப்படவும் தேவையில்லை. தன் ஒருவன் தேவைக்காக அல்லது தன்னை உயர்த்தி தத்துவத்தை இரண்டாம் பட்சமாக்கிக் கொச்சைப்படுத்துகிற ஒருவனைஇப்படிச்செய்யாதே என்று எடுத்துச் சொன்னால், அப்படிச் செய்கிறவனைவிட்டுவிட்டு, சொல்லு கிறவனை அடிக்கிறது போல வருவது 'அறிவு அராஜகம்' இல்லையா...? ஒருவன் தலித்தாக இருக்கிற காரணத் தாலேயே அவன் செய்கிற எல்லா தில்லுமுல்லுகளையும், மோசடி களையும், சமூக விரோதங் களையும் கண்டுகொள்ளாமல் இருந்துவிட வேண்டுமென்ற கட்டாயம் எதுவு மில்லை. எங்கேயிருந்தாலும் நன்மை இருக்கும் பட்சத்தில் தட்டிக் கொடுக்கவும், தின்மை விளையும் பட்சத்தில் தட்டிக் கேட்கவுமான மனத்திட்பம் மனிதர்களுக்கு வரவேண்டும். காலம் சில சமயம் தியாகிகளைக் கனப்படுத்தத் தவறியிருக்கலாம். ஆனால் வரலாறு துரோகிகளை மட்டும் ஒருபோதும் மன்னிக்காது.



தோழர்கடிதத்தின் இன்னொரு அம்சம் பெரியார் குறித்தது. 'அம்பேத்கர் இறுதிவரை இந்துத்துவத்தை எதிர்த்ததோடு தான் ஓர் இந்து அல்ல என்பதை நிறுவுவதற்காக புத்த மதத்துக்கு மாறினார். ஆனால், பெரியார் கடைசிவரை இந்துத்துவத்தை கடுமையாக எதிர்ப்பவராக இருந்தாலும் மதம் மாறவில்லை. இந்த ஒன்றைத்தவிர அம்பேத்கருக்கும் பெரியாருக்கும் வேறு எந்த வேறுபாட்டையும் நான் பார்க்கவில்லை...' என்று திருமாவளவன் ஜூலை 1-15, 2003 தேதியிட்ட 'தமிழா தமிழா' இதழின் நேர்காணலில் அற்புதமாகச் சொல்கிறார். அவருக்கும் பெரியாருக்கும் எந்த முரண்பாடும் இல்லை. இயக்கமும் அதை அரசியலாகப் பொது விவாதத்தில் வைக்கவில்லை. ஆனால், இயக்கத்தின் பின்னே ஒளிந்துகொண்டு தங்கள் சுயநலத்துக்காகச் செயல்படுகிறவர்கள்தாம் தங்கள் சொந்தப் பிரச்சனைகளை இயக்கத்தின் பிரச்சனை என்பதுபோல ஆக்கப் பார்க்கிறார்கள்.

'பெரியாரிஸ்டுகள்' சாதிப் புத்தி மாறாதவர்களாயிருந்தால் அது விஷயத்தில் அவர்களைத்தான் விமர்சிக்க வேண்டுமே ஒழிய பெரியாரை அல்ல. இதன் பொருள் பெரியாரை விமர்சிக்கக் கூடாது என்பதல்ல. சூரியனுக்குக் கீழே பூமியில் உள்ள யாவும் விமர்சனத்துக்கு உரியதுதான். ஆனால் அந்த விமர்சனத்தை எந்தத் தளத்திலிருந்து, யாருடைய தோள்மீது உட்கார்ந்து கொண்டு செய்கிறோம் என்பது முக்கியம். அந்த விமர்சனம் யாருடைய 'குரலாக' ஒலிக்கிறது என்பது அதைவிடவும் முக்கியம்.

எனக்குத் தெரிந்து 'தென்திசை முளைத்த செஞ்சுடர்கள்.' என்று தொல். திருமாவளவனையும், டாக்டர் கிருஷ்ண சாமியையும் சிறுபத்திரிகைத்தளத்தில் முதன்முதலாகப் பதிவு செய்து உள்ளார்ந்த மகிழ்ச்சியோடு வரவேற்று எழுதியவர் 'கவிதாசரண்' அய்யா. நான் 'கவிதாசரணை' விற்பனைக்கு எடுத்துக்கொண்டு போகிற போதெல்லாம், வாங்குகிற வர்கள் பிரித்துப் பார்த்துவிட்டு 'அய்யோ...இது உங்கதலித் பத்திரிகை... எனக்கு வேண்டாம்..' என்று நெருப்பைத் தொட்டுவிட்டு அலறுவதைப் போலத் திருப்பித் தந்து விடுகிற அனுபவம் எனக்கு நிறைய உண்டு. புரிதல் அவர் களிடத்தில் இல்லையென்று ஒற்றை வரியில் இந்தப் பதிவை நிராகரித்து விடலாம். ஆனால், நிதர்சனத்தில் 'கவிதாசரண்' இன்னமும் தீண்டத்தகாத பத்திரிகையாக, தீண்டத்தகாதவர்களின் பத்திரிகையாகவே இருந்து வருகிறது. அதனால்தான் இந்தக் கட்டுரையைத் தொடங்கும்போது 'கவிதாசரணில்' எழுதுவது எனக்குப் பெருமையான விஷயம் என்றேன்.

இன்னமும் இங்கே, 'இலக்கியத்திலும் இட ஒதுக்கீடு வேண்டும்...' என்று கேட்கிற நிலைமையில்தான் நாம் இருக்கிறோம். 'குமுதம்' தொடங்கி 'காலச்சுவடு' வரை, 'தினத்தந்தி' தொடங்கி 'தீராநதி' வரை எல்லாப்பத்திரிகைகளையும் தலித் படைப்பாளிகளும், சிந்தனையாளர்களும், தலித் மக்களும்தான் காசு கொடுத்து வாங்கிப் படிக்கிறார்கள். அப்படியிருக்க, அந்தப் பத்திரிகைகளில் 'எங்களுடைய முகம் எங்கே, குரல் எங்கே, வாழ்க்கை எங்கே...' என்று கேட்க அவர்களுக்கும் உரிமை இருக்கிறது. அப்படி தலித்துகள் யாரும் முன்வந்து கேட்காமலேயே ஒவ்வொரு இதழிலும் தலித்தியத்தை உயர்த்திப் பிடித்து வரும் 'கவிதாசரணை' சந்தேகிப்பது சரியில்லை. 'எல்லாவற்றையும் சந்தேகி' என்றான் மார்க்ஸ். அதற்காக பெற்ற தாயின் கற்பையே சந்தேகப்படக் கூடாது. 'கவிதாசரண்' விஷயத்திலும் நான் இதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்று: 'பேண்டவனெ அடிக்காம பீயெப் போட்டு அடிக்கிற கதெயா இருக்கு'ன்னு என் கவிதையைப் படித்துவிட்டு தோழர் உஞ்சை அரசன் ரொம்பவும் வருத்தப்பட்டிருக்கிறார். அவர் என்னைப் போல தைரியமாய் முன்வந்து 'பேண்டவன்' யாரென்று அடையாளப்படுத்தினால் அவன் தலித் விடுதலை உள்ளிட்ட ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகத்தின் விடுதலைக்கு எதிரானவனாய் இருக்கும் பட்சத்தில் அவனையும் அடிக்க என் பேனா சித்தமாயிருக்கிறது. அதே சமயம், 'பீயெப் போட்டு அடிக்கிறதா' சொல்வதன் மூலம் என் கவிதையில் நான் குறிப்பிட்டவரை 'பீயென்று' ஒப்பக்கொண்டதற்கு நன்றி. என் தகுதிக்கு நான் 'பீயை' அடித்திருக்கக் கூடாதுதான். அதுதான் இவ்வளவு நாற்றமாய் நாறுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# செருப்புக்கும் கீழே சில மரமல்லி மலர்கள்...

பாப்லோ அறிவுக்குயில்

கோடையின் வருகையை அறிவிப்பது போல் சுள்ளென்று உறைத்தது காலை வெயில். சிறீபுரந்தானிலிருந்து முப்பது கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து அலுவலகம் வந்து தன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது ராஜ்தூத் மோட்டார் சைக்கிள். பழைய வண்டியாக இருந்தாலும் செலவு வைக்காமல் இயங்கும் அதன் இஞ்சின் திறனைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. செம்மண் புழுதி அப்பிய நிலையிலும் தன் கம்பீரத்தை இழக்காமல் இருந்தது. வாகன நிறுத்துமிடம் வரை தள்ளிக்கொண்டு போகத்தான் முடிந்தது; ஜனநெரிசலில் ஓட்டிச்செல்ல இடமில்லை. நீக்கமற எங்கும் தென்பட்டன மனிதத் தலைகளாய்... தவணையைக் கட்ட, பத்திரத்தை அடகு வைத்துவிட்டு கடன் வாங்க, வாங்கிய கடனு எனக்கான வட்டியைச் செலுத்த வாடிக்கையாளர் களால்ஏற்பட்ட திடீர்கூட்டம், இன்று வாரத்தின் முதல் நாளென்பதை உணர்த்தின.

மதியத்திற்குப் பிறகு கட்டிக் கொள்ளலா மென்று பணங்கட்ட நிற்கும் வரிசையைப் பார்த்துக் கொண்டே கடந்து சென்றார் பாலுசாமி. முகவர்களால் மூச்சுத் திணறியது அறை. நாற்காலிகளில் அமர்ந்திருப்பவர்களைத் தவிர, பெரும்பாலானவர்கள் ஆங்காங்கே மேஜையோரங்களில் விண்ணப்பப் படிவங்களை வைத்துக் குனிந்து எழுதிக் கொண்டிருந்தனர். தன்னைவிட சீனியர்களுக்கு வணக்கம் சொல்லிவிட்டுச் சென்ற பாலுசாமி பையைத் திறந்து, படிவத்தை வெளியிலெடுத்து கடைசி மேஜையின் விளிம்பில் வைத்து எழுதத் தொடங்கினார். சிறது நேர இடைவெளிக்குப் பின் அமர்ந்திருந்த நாற்காலிக்காரர் 'தான் லோன் செக்ஷன் செல்வதாகவும் வர நாழியாகு மென்றும் அமர்ந்து எழுதும்படி' சொல்லி விட்டுச் சென்றார். கடைசி பக்கத்தையும் பூர்த்தி செய்து முடித்தார். மனிதர்களைக் கண்டு அச்சப்படாமல் ஜன்னலின் வெளிப்புறக் கதவோரத்தில் அமர்ந்து, டிவிக்... டிவிக்கென்று வாலை ஆட்டி இனிமையாக குரலெழுப்பியபடி இருந்த சிற்றலகுக் குருவி ஒன்று, கனத்த சரீர பி.கே. ராமலிங்கம் போட்ட தும்மலைக் கேட்கச் சகிக்காமல், விருட்டென்று சிறகை விரித்தது. தொடர் அலைச்சலும் அதனால் உண்டான களைப்பும் மெல்ல குறையத் தொடங்கின.

வாய்ப்பாளர் பட்டியலை வெளியே எடுத்துப் பார்க்கத் தொடங்கினார். வேணா நல்லூர் சிங்காரு, வடகடல் கலியன், சுத்தமல்லி வசந்தா இவர்களெல்லாம் புதிதாகச் சேர்ந்துள்ளவர்கள், வசந்தாவைத் தவிர மற்றவர்கள் முழுத்தொகையையும் கொடுத்துவிட்டார்கள். வசந்தா மட்டும் ஆண்டு பிரீமயத் தொகை இரண்டாயிரத்தில் முன்னூறு ரூபாய் பாக்கி வைத்திருக்கிறார். புரட்டிக் கொண்டே வந்த பாலுசாமியன் முகம் இறுக்கமடைந்தது; 'கோவிந்தராசு - சிறீபுரந்தான்' என்றிருந்த பெயரைப்பார்த்ததும் சுரீரெனத் தைத்தது கோபம்.

ஏரியாவிற்குச் செல்கின்ற போதெல்லாம் சிறீபுரந்தான்ஊருக்குச் சென்று கோவிந்தராசுவை பாலுசாமி பார்க்காமல் வந்ததே இல்லை. அவரிடம் புதிய பாலிஸி போடச் சொல்லி ஆயிற்று ஒரு வருடம். ஒவ்வொரு முறையும் 'இந்தா அந்தா' வென்று 'ஆவோட்டி' வருகிறார். அவர் தம்பி ஐம்பதினாயிரம் மொத்தத் தொகைக்குப் பாலிஸி எடுத்துள்ளார் என்று சொன்ன பிறகுதான், சரியென்று உறுதியளித்து, வரச்சொன்னவுடன் தான் சிறீபுரந்தானுக்குச் சென்றார் பாலுசாமி.

நெல், பருத்தி, கடலை என்று பருவத்திற்குத் தகுந்தாற்போல், விளையும் தானியங்களை பெரிய விவசாயி களிடமும், கூலித்தொழிலாளிகளிடமும் சில்லறையாக வாங்கி, வெளியூரில் கொண்டுபோய் விற்று கொள்ளை இலாபம் பார்ப்பவர் கோவிந்தராசு. வண்டியைப் பூவரசு மரநிழலில் நிறுத்திவிட்டுச் சென்றவரை வரவேற்று, திண்ணையில் அமரச் சொன்னார். பாலிஸி பற்றிய விளக்கங்களை எல்லாம் ஒவ்வொன்றாய்க் கேட்டுத் தெரிந்து கொண்ட பிறகு, ஒரு இலட்சம் காப்புத் தொகைக்குப் பாலிஸி எடுத்துக் கொள்வதாக வியாபாரி கோவிந்தராசு சம்மதித்தார். கையெழுத்து வாங்குவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது,

வீட்டுவேலை செய்து கொண்டிருந்த மனைவியை அழைத்தார்.

''தோ வந்துட்டேன்யா...'' திருகையில் மாவரைத்துக் கொண்டிருந்த கையோடு, வெளியே வந்து என்னவென்று கேட்டதும், ''பீரோவுல நூறு ரூவா கட்டு ஒண்ணு வெச்சிருக்கேன் எடுத்துக்கிட்டு வா...'' என்று கணவர் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டே நின்ற பெண்மணி, அப்பொழுதுதான் பாலுசாமியை உற்றுக் கவனித்தாள்.

''இதுக்கு முன்னாடி சார பாத்தாப்ல இருக்கே... சாருக்கு எந்த ஊரு?''

''அடிக்கடி இங்கதான் எல்லேசி விசயமா வர்றேனே! அப்பப் பாத்திருப்பீங்க...''

''சரி, ஒங்க ஊரு...?''

''அரியலூருங்க...''

''பூர்வீகமே அரியலூருங்களா?''

''இல்லீங்க - உடையார்பாளையம் பக்கம் மணகெதிங்க...''

''மணகெதியா நீங்க! அப்ப காளாத்திக் கொட்டா பரமசிவம் ஒங்களுக்கு என்ன வேணும்...?''

''அவரு எங்க ஊருதான். சொந்தம்லாம் இல்லீங்க...''

''அப்ப சாரு எந்தத் தெரு? - கருக்காயன் கொட்டாயா?''

''இல்லீங்க. கிழத்தெரு...''

ஊர்ப்பாசம் வார்த்தைகளில் உற்சாகமாய் ஒட்டிக்கொள்ள துள்ளலோடு ஒலித்த குரல் அமுங்க, அப்பெண்ணின் மலர்ச்சியான முகம் சட்டென சுருங்க... நெற்றியைச் சுருக்கி -

''காலனியா?''

கேள்வி எரிச்சலோடும் தெரிந்தே ஆகவேண்டுமென்ற தீவிரத்தோடும் ஒற்றைச் சொல்லாய் ஓங்கி ஒலித்தது.

''ஆமாங்க...''

''ஆருட்டுப் பையன்?''

''வடிவேலு மவங்க...''

''ஓ! தலையாரி வடிவேலு மவனா நீ. வெட்டியான் முருவனோட பேரன்னு சொல்லு...''



படிப்பகம்

www.padippakam.com




அந்த அம்மாளின் குரலில் எகத்தாளமும் கிண்டலும் சரிவிகிதத்தில் கலந்திருந்தன. கலகலத்துப் போய்விட்ட உத்திரத்தைப் போல மனதிற்குள் எஞ்சியிருந்த நம்பிக் கையின் உள்ளீடாய் இழையோடி யிருந்த உறுதி உளுத்து உதிரத் தொடங் கியது. இதுவரை பேசியதே அதிகம் என்பதுபோல் அம்மணி புருஷனை உள்வீட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

வண்டியை நிறுத்தியிருந்த இடத்தில், விரிப்பைப்போல் பரவியிருந்த நிழல் மெல்ல நகர்ந்திருந்தது.

மனைவியிடம் ஆலோசனை செய்துவிட்டு வெளியே வந்தவர், ''கோச்சிக்காதீங்க தம்பி. இன்னைக்குப் பாத்து சயனத் தடையா பூடுச்சி. சயனங் கேக்காம நாயெந்த நல்ல காரியத்திலேயும் ஈடுபடுற தில்லே... தப்பா எடுத்துக்காதீங்க. வர திங்கக்கெழம பணத்தக் கட்டிப் புடலாம்.''

முன்பேயே ஒரு முடிவை எடுத்துவிட்டு அதற்குத் தகுந்தாற்போல் வந்து பேசுகிறவரிடம் வேறென்ன பேசுவது? ''சரிங்க'' என்று உணர்ச்சியே இல் லாமல் சொல்லிவிட்டு வெளியே வந்தார். வெயிலில் நின்ற தன்னுடைய ராஜ்தூத்தை உதைத்து கிளம்பிச் சென்றவர்தான், கோவிந்தராசு வரச்சொன்ன கிழமையில் வந்து பார்க்க வேண்டியது ஒரு நல்ல முகவரின் கடமை என்பதால் இன்று காலைதான் மீண்டும் சிறீபுரந்தான் சென்றார்.

வீடு பூட்டி இருக்கவே, பக்கத்து வீட்டாரிடம் கேட்டார். ஏதோ முக்கிய விஷயமாக, புருஷனும் பொண்டாட்டியும் வெளியூர் போயிருப்பதாகச் சொன்னார் களே தவிர, எந்த ஊருக்கென்று அவர்களுக்கும் தெரியவில்லை. ஏற்கனவே அறிமுகமாகி யிருந்த பூவரசு மரம் மட்டும், தன் மஞ்சள் கன்னம் மினுங்க சினேகமாய் விசாரிப்பது போலுணர்ந்தார் பாலுசாமி.

தேநீர் கடையில் கூட்டம் குறைந்திருந்தது. உள்ளே சென்று அமர்ந்தவரிடம், ஸ்ட் ராங்காக ஒரு டீபோட்டு வந்து கொடுத்து விட்டு, ''சார் ஒங்ககிட்ட ஒரு விஷயம் சொல்லணும்,'' என்று பீடிகையுடன் பேசினார் கடைக்காரர்.

''ம் - சொல்லுங்க கோபால்.''

''நேத்து இருட்டிப்போயி கொயிந்தராசு அண்ணன் வந்தாரு... இதுக்கு முன்னாடி எத்தினியோ மொற ஒங்களப் பாத்துப் பேசினப்பல்லாம் சொந்த ஊரப்பத்தி சொல்லாம மறச்சிபுட்டீங்களாம். சொன் னாக்க எங்க சாதி தெரிஞ்சிடுமோண்ணு பொய் சொல்லிபுட்டீங்களாம். இதுலியே இவ்வளவு மய்மம்மா இருந்த ஆளுகிட்ட நாம ஏன் எல்லேசி சேரணும்னு அண்ணி சொன்னதாம். இதக்கூட சரி கெடக் கிட்டும்னு உட்டுடலாம். வெட்டி யானோட பேரன்னு தெரிஞ்சும் அவங்க மின்னாடி திண்ணையில கால்மேல கால்போட்டுக் குந்தியதுதான் அவரு பொஞ்சாதியால பொறுத்துக்க முடியிலி யாம். இவரு எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அந்த அண்ணி முடியவே முடியாதுண்ணு சொல்லிடிச்சாம்... அதான் இது விஷயமா வரவேண்டாம்னு அண்ணன் சொல்லச் சொல்லிபுட்டாரு...''

''இது நான் எதிர்பார்த்ததுதானே கோபால், இதுக்குப் போயியா இப்புடி தயங்கித் தயங்கி பேசுறீங்க? நானொரு இன்சூரன்ஸ் ஏஜெண்ட் - அவெங்க பாலிசி எடுக்கப் போறவங்க. பணங் குடுத்தா கட்டிட்டு வரப் போறேன். இதுக்கு எதுக்கு யேன் அப்பனப் பத்தியும் தாத்தாவப் பத்தியும் சொல்லணும்? அவசியமே இல்ல. அந்தக் காலத்துல ஒம்பாட்டனும் ஏம்பாட்டனும் பொம் பளைங்கப்போல முடிய வளத்துக் கொண்டப் போட்டுகிட்டு இருந்திருக் காங்க. இப்ப நீங்களும் நானும் அப்புடியா இருக்கோம்? தலமுற மாற மாற எல்லாமும் மாறத்தானே செய்யும்? இவங்க போடப்போற ஒரு பாலிசிக்காக எந்தாத்தாவப் போல கூழக் கும்புடு எல்லாம் போட முடியாது. அப்படித்தான் என்னோட சுயமரியாதைய விட்டுட்டு வாழணும்னா... எம்மயிரே போச்சின்னு இந்த வேலய விட்டுட்டுப் போவக்கூட தயங்காதவன் நான். சரி நான் கௌம்புறேன் கோபால். ஆயிரம் வருஷத்து அழுக்க ஒரே நாளுலேவா வெளுத்துட முடியும்...?''

குடித்த டீக்கு, கோபால் வேணாமென்று எவ்வளவோ மறுத்துப் பார்த்தும் சில்லரையைப் பிடிவாதமாய்க் கையில் திணித்து விட்டு, கிளம்பினார் பாலுசாமி. வேறு எங்கும் வண்டியை நிறுத்தாமல், பல்வேறு கேள்விகள் குடைந்து கொண்டிருக்க அலுவலம் வந்தடைந்தார்.

தேவையில்லாமல் கோவிந்தராசுவைப் பத்தி நினைத்து நேரத்தை ஏன் வீணடிக்க வேண்டும்? அறையை விட்டு வெளியே வந்து மரநிழலில் நின்றார். முன்னிலும் அதிகமாய் வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது. மரமல்லி மலர்கள் தரையெங்கும் உதிர்ந்து கிடந்தன. செருப்புக் காலுக்குள் அகப்பட்டுச் சிதையும் மலர்களைப் பார்க்கத்தான் வேதனையாயிருந்தது. கூட்டம் அப் படியே இருப்பது போலவே இருந்தது.

மெஸ்சிற்கு அழைத்த ஜெயராமன் சாரிடம் வேண்டாமென்று மறுத்துவிட்டு, திரும்பவும் தன்னிடத்திற்கே திரும்பினார். சஞ்சலப்பட்டு ஆகப்போவது ஒன்று மில்லை. பணங்கட்ட வேண்டிய வேலை யையாவது கவனிப்போமென்று சலா னெடுத்து இரண்டுவரிதான் எழுதியிருப்பார்; மேலாளர் கூப்பிடுவதாக அலுவலக உதவியாளர் சேகர் வந்து சொன்னார்.

அறையினுள் மேலாளர் யாரிடமோ பேசிக் கொண்டிருப்பது தெளிவாய்க் கேட்டது.

''நீங்க சொல்லுறதுபோல நேரடியா எல்லாம் பணங்கட்ட முடியாதுங்க. ஒங்களுக்கு சர்வீஸ் செய்யத்தான் நாங்க நூற்றுக் கணக்குல ஏஜண்டுகளை நியமனம் செஞ்சிருக்கோம். ஒங்க பாலிஸி மெச்சூரிட்டி ஆகிறவரைக்கும் ஏஜண்டோட உதவி வேணும். என்ன புரிஞ்சதுங்களா?''

''சரிங்க, சார்...''

''எங்க ஏஜெண்ட் ஒருத்தர வரச்சொல் லிருக்கேன். ஒங்களுக்கு வேண்டிய உதவிய செஞ்சித் தருவாரு... பத்து வருஷ சர்வீசு உள்ள ஏஜெண்ட்... என்னப்பா சேகர், பாலு சார் வரல?''

கதவைத் திறந்து சேகர் அழைத்ததும் பாலுசாமி உள்ளே சென்று மேலாளருக்கு வணக்கம் சொன்னார். கணவன் மனைவி இருவரும் மேலாளரைப் பார்த்தபடி அமர்ந்திருந்தனர்.

''வாங்க பாலுசாமி. இவங்க ரெண்டு பேரும் புதுப்பாலிசி போடணும்னு வந்திருக்காங்க. 'பாஃம் 300 ஐ' ஃபில்லப் பண்ணி கையெழுத்த வாங்கிக்கங்க... ம். அப்படியே கேஷ் கவுண்டருல கட்டிட்டு ரசீத இவருகிட்ட கொடுத்திடுங்க'' இவருதான் ஒங்க ஏஜெண்ட்.''

திரும்பி பாலுசாமியைப் பார்த்ததும், என்ன பேசுவதென்று தெரியாமல் ஒரு கணம் தடுமாறிப் போனார்கள் சிறீபுரந்தான் கோவிந்தராசும் அவர் மனைவியும். அவர்களையும் அறியாமல் இருவரின் விழிகளிலும் பொறியில் சிக்கிய விலங் குணர்வின் நிழல் படிந்திருந்தது. ●

www.padippakam.com





# அபிப்ராய விமரிசனம்!

**- தஞ்சை ப்ரகாஷ்**

(12 ஆண்டுகளுக்கு முன் எழுதிய கட்டுரை இது. அப்போது வெளியிடுவதில் சில கேள்விகள் இருந்தன. இன்று தஞ்சை ப்ரகாஷ் உயிருடன் இல்லை. விவாதிக்க வழியில்லை. வெளியிடுகிறோம். - இதழாசிரியர்.)

தமிழில் அபிப்ராயர்கள்தான் எங்கும் திரிகிறார்கள். அபிப்ராயங்களுக்குக்கூட வரம்புண்டு, லக்ஷியம் உண்டு என்பது தமிழர்கள் பொதுவாய் அறியார்கள். புதுக்கவிதையைப் பற்றி யார் எங்கு அபிப்ராயம் எப்படிச் சொல்லலாம் என்பது இல்லாமல், யார் வேண்டுமானாலும் எதையும் சொல்வது என்பது உலகிலேயே தமிழ்நாட்டில்தான் அனுமதிக்கப்படுகிறது. இது தமிழ் மொழிக்குக்கூட சிதிலம்தரும் என்பது பலர் உணராமலே இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் அரசியல் தலைவர், கவிதை பற்றிய விமர்சனம் என்ற பெயரில் உளறுவது பலருக்கும் வேதவாக்காய் தெரியும்! சினிமா நடிகர் இலக்கியம் பற்றி எதையாவது பேத்துவதும், தமிழ்ப் பண்டிதர் சினிமாபற்றி தெரிந்ததுபோல் குறிப்பு தருவதும், வேறு நாடுகளில் எங்கும் இதுபோன்ற அபத்தங்கள் இல்லை. அபிப்ராயம் கொள்வதில் தவறில்லை. ஆனால் அதை வெளியே கொட்டு வதில் கோளாறு இருக்கிறது. நான் கவிஞன்தான். எனினும், கவிதையைப் பற்றி நான் வெளிப்படையாகப் பேசுமுன் அபிப்ராயங்களை நானே வடிகட்டி, தரமாக இறுத்து, அதனை செப்பம் செய்து, கவிதைத்துறை விமர்சன அறிஞர்களின் அபிப்ராயங்களுடன் உரசிப் பார்த்து, தகுதியானதா என நானே தெரிந்த பின்னரே, அபிப்ராயமாக வெளியிட முயல்வேன். தான்தோன்றித் தனமாய் தோன்றியதை எல்லாம் வெளிக் கொட்டுவது எனக்கும், என் மொழிக்கும், உங்களுக்கும், இன்னும் யாவருக்குமே தீம்பு தருவதாய் முடியும். ஆனால் தமிழ்ப் புலவர்களும், ஆங்கிலப் பண்டிதர்களும், ஸம்ஸ்கிருத வித்வான்களும், தமிழ் நாட்டில் எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், அபிப்ராயம் சொல்கிறார்கள். ரேடியோ, டி.வி., தமிழ் பத்திரிகைகள், தமிழ் பண்பாட்டு அறிஞர்கள், யாருமே எதுவுமே இதற்கு விதிவிலக்கின்றி, அபிப்ராயக் களஞ்சியமாய் இருக்கிறார்கள். தமிழ் இலக்கியப் பத்திரிகைகளும் இதற்கு விதிவிலக்கல்ல! பாரதி பற்றி ''அன்றும்'' இன்றும் கொள்ளப்பட்டுள்ள அபிப்ராயங்களை எடுத்துப் பார்த்தாலே, எத்தனை அபத்த முட்டாள் தனங்களை தமிழகம் பொறுமையாக சகித்து வந்திருக்கிறது என்று புரியவரும். தமிழ்ப் பண்டிதர்கள் ஆரம்ப காலத்தில் 1913 வாக்கில், பாரதியை ஒரு புலவனாகக்கூட ஏற்கவில்லை. (கவிஞன் என்கிற கதை அவர்களுக்கே தெரியாத - புரியாத - அறியாத விஷயம்.) அறிஞனாகவும் மதிக்கவில்லை. பிற்காலத்தில் - பாரதி 1920 வாக்கில் பத்திரிகைகளில் ஓரளவு கவிஞனாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அரசியல் துறையால் உந்தப்பட்டு, கவிதைகள் பாமர மக்களால் கூட ஏற்கப் பட்டபின், பண்டிதர்கள் அவரை கவிஞனாக ஏற்றாலும் அறிஞனாக ஏற்கவில்லை. 1940 வாக்கில் ''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா'' என்ற பாடலே காதுகளில் ஒலித்த பின்னரும், பாரதி மஹாகவி இல்லை - தேசியக் கவி என்று ஒப்புக் கொள்ளலாம். என்று அபிப்ராயம் சொன்னார்கள் தமிழ்ப் புலவர்கள்! 1960 வாக்கில் - பாரதி மணிமண்டபம் கட்டி, அறிஞரெல்லாம் பாரதி விழா எடுத்தபின், சிவாஜி, ஜெமினி, சினிமாக்காரர்கள் பாரதி விழா எடுத்து அல்லோலகல்லோலப் படும்போது, பண்டிதத் தமிழ் அபிப்ராயர்கள் அப்போதும் அபிப்ராயம்தான் சொன்னார்கள் - பாரதி மஹா கவிஞன்தான், ஆனால் பாரதிதாசன் அவனைவிட பெரிய கவி என்று. 1978 வாக்கில், இந்தியா முழுவதும் பாரதிக்கு நூற்றாண்டு விழாவும், வைபவமும் செய்தபோதும் ஓயவில்லை. பாரதிதாசன் என்று சொல்லாதீர்கள் பாவேந்தர் என்று புகலுங்கள். கனக சுப்புரத்தினம் பாரதிக்கு தாசன் இல்லை என்றார்கள். இவை யாவும் தமிழகம் சகித்தது; தலையாட்டியது. இன்றும் அதே முட்டாள்தனமான அபிப்ராயங்களுக்கு தலைசாய்த்து, தலையாட்டிமாடுகளாய் ஒப்புக் கொள்வது தவறு என்று இங்கே எவருக்குத் தெரியும். உணர்ச்சி வசப்படுவதும், கிளிப்பிள்ளை போல் சொல்லிக் கொடுத்ததையே சொல்லிக் கொண்டிருப்பதுவும், தமிழ் என்றதுமே மெய் மறந்துபோய் விடுவதுமான அபிப்ராயக் குப்பைகள் வெளியுலகில் செல்லுபடியாகாது. பாரதி பற்றிய விமர்சனம் போதிய அளவில் 1910 வாக்கில் மட்டுமல்ல 1991இலும் சரியாக செயல்படாத மூடத்தனம் தமிழ் அறிஞரிடையே நிலவி வரும் வரை தமிழில் எதைப்பற்றியும் வெறும் அடிப்படை இல்லாத உளறல்களையே - அபிப்ராயங்களாக நம்புவதும் அதையே விமர்சனமென அறிவற்று தவளைபோல் சொல்லிக் கொண்டிருக்க நேருவதல்லாமல் தமிழ் உருப்பட வழியில்லை. விமர்சனக் கலை எனும் துறையில் தோயத்தமிழர்கள் முயலவேண்டும். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதில் ஏதும் பயனில்லை. நாலு பேருக்கு முன் நம் திறன் ஏற்றிப் பாராட்டப்பட அது திறமையான கலையாயிருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. வெறும் பாராட்டும் புகழும் அதற்குப் போதாது. எனவே வரலாற்று ரீதியாக விமர்சனக் கலையைப் பயில வேண்டும். படிக்காமல் அபிப்ராயர்களாய் காலந்தள்ள முடியாது. காலம் தூக்கி உங்களை எறிந்து விடும். சிதம்பர ரகுநாதன் எழுதிய விமர்சனக் கலை (1955) நூலை தொடங்கிப் படிக்க வேண்டும். அதனைத் தொடர்ந்து க.நா. சுப்ரமணியம் (1956) எழுதிய ''விமர்சனக்கலை'' எனும் நூல் அடுத்தபடி! 20 வருட எழுத்து பத்திரிகை வால்யூம்கள் உதவும்! ஆவனர் முத்துசாமியின், இலக்கியச் செல்வி நூல், க.நா.சு.வின் படித்திருக்கிறீர்களா மூன்று வால்யூம், சி.சு. செல்லப்பாவின் ''இலக்கிய விமர்சனம்'' 1968, கே. கோதண்டராமன் இலக்கிய விமர்சனப் பார்வை, 1960 க.நா.சு.வின் ''இலக்கிய விசாரம்,'' உலகத்துச்சிறந்த நாவலாசிரியர்கள், பேராசிரியர் ஆ. முத்துசிவனின் 'கவிதை,' அசோக வனம் - நவீன இலக்கிய பத்திரிகைகளான 'கசடதபற,' 'நடை,' 'ப்ரக்ஞை,' 'ஞான ரதம்,' 'பாலம்,' 'மீட்சி,' 'நிகழ்,' 'கணையாழி,' 'பாறை,' 'வெளி,' நிறப்பிரிகை, செம்மலர், மனிதம், மனஓசை என இன்றுவரை வெளிவரும் பத்திரிகைகளின் விமர்சன வழிகளையும் ஒவ்வொரு இலக்கிய வாசகனும் ஆசிரியனும் கவிஞனும் தெரிந்து படித்துப் புரிந்தறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இவை யாவுமே விமர்சனக் கலைகளை திறந்த தமிழில் துவங்கிய முயற்சிகளே. எனவே இதுபோல ஒரு வரிசை ஆங்கிலத்திலும் பிறமொழிகளிலும் உண்டு. தேர்ந்த விமர்சனம் செய்ய இந்த வழிகளையும் தனதாக்கிக் கொண்டாலே அது கைகூடும்.

ஒவ்வொரு கவிஞனும் படைப்பாளியும் ஒரு நல்ல விமர்சகனாக முடியாது. ஆனால் ஒவ்வொரு நல்ல விமர்சகனும் ஒரு படைப்பாளியாக முடியும். விமர்சனமே குறைகளற்ற படைப்பை நோக்கி படைப்பாளிகளை கொண்டு சேர்க்கும். எனவே, அபிப்பராயங்கள் தோன்றும் போது அதனை ஊறப் போட்டு, அறிவின் துணைகொண்டு ஆறப்போட்டு, அபிப்ராயங்கள் தோன்றும் ஆழங்களுக்கு தேடிப்போய், இப்படி அபிப்ராயம் தோன்றுவதற்குக் காரணம் என்ன என்று துளைந்து அறிய வேண்டும். அதன்பின்னர் இன்ன காரணத்தால் இந்த எண்ணம் சாத்யமாயிற்றென்று தெரிந்துகொண்டு, ஏற்கனவே யுள்ள அபிப்ராய விமர்சனங்களின் துணைகொண்டும் தேர்ந்த இலக்கிய ரசனைக் கொள்கைகளில் மோதி, முரணி, கலந்து, பின்னர்தான் படைக்க முன்வர வேண்டும். தோய்ந்து தோய்ந்து படித்துப் படித்தாலும் கூட, நம் கொள்கைகள் உருவாவதில்



படிப்பகம்

www.padippakam.com



தவறு நேரலாம். எனவே, விமர்சனத்தை மூன்று வழிகளில் பரிசீலனை செய்தாக வேண்டும் : ஒன்று - தன் நிலை. அது சுய விமர்சனம் - (தன்னை அறிதல்). அடுத்தது பிறர் நிலை - பரவிமர்சனம். ஆத்ம விமர்சனம் (தன்நிலை பிறர்நிலை அற்ற பொது நிலை). உலகமெங்கும் விளங்கும் யாவும் உணரும் மூன்று நிலை, இந்த மூன்று தளங்களிலும் எல்லாவற்றையும் உரசிப் பார்த்து அறிந்துவிட முடியும். தமிழ் இலக்கியம் இன்னும் தன்னையே உணரவில்லை. ஒப்பற்ற சிலப்பதிகாரம் ஒன்றைக் கூட அது விமர்சித்தறிய வில்லை! தமிழின் சாதனைகள் இன்னும் புற உலகுக்கு எட்டவில்லை. நம்மவர் எட்டவிடப் போவது மில்லை. காரணம் விமர்சனத்துக்கு நமக்கு நாமே தயாரித்து எல்லாம் உண்டு விட்டு உறங்கும் திருப்தி! இது கேவலம்! அறியாமை! அவலம்! தமிழ் விமர்சனத்தின் அடிப்படைகள் என்ன என்பதாக நான் எண்ணுகின்றேன்? ஏன் மாற்ற வேண்டும்? தமிழில் விமர்சனம் என்பது இப்போதுதான் அஸ்திவாரமிடப்படும் காலம் என்பதால்தான். தமிழ் பண்டிதர்கள் விமர்சகர் இல்லை. ஆகவும் முடியாது; கூடாது. ஆங்கில மற்றும் சமஸ்கிருதப் புலவர்களுக்கும் இந்த அதிகாரம் கிடையாது. கூடாது. தமிழ் மொழியில் விமர்சனத்துக்கான அடிப்படை நூல்கள் இல்லை. இருப்பவை எல்லாமே இலக்கண நூல்கள்தாம். இலக்கண நூல்களுக்கான Commentary 'கமண்ட்டரி உரை நூல்கள், அலங்கார லக்ஷண நூல்கள்தாம். சமஸ்கிருதத்திலும் இதேகதிதான்! எனவே இங்கே தமிழர்கள் "எல்லாம் இங்கே உண்டு. இங்கில்லாதன எங்குண்டு" எனும் ஆத்திரப் பேச்சைவிட்டு விட வேண்டும். படிக்க வேண்டும். ஆங்கிலத்தில் விமர்சனம் எனும் வார்த்தைக்கே நீண்ட காலம் பரிசீலனை நடந்திருக்கிறது. தமிழில் முதன் முறையாக விமர்சனம் (Criticism) க்ரிட்டிஸிஸம் என்பது அதன் சரியான அடிப்படை வரலாற்றுணர்வுடன் துவங்குவது மஹரிஷி வ.வெ.சு. ஐயரவர்களின் கம்பராமாயண நோட்டுகள் எனும் - கம்பராமாயண ரசனை எனும் நூலுடன்தான். தமிழின் முதல் விமர்சகர், முதல் விமர்சன எழுத்தாளர், முதல் விமர்சனக்கலை நுட்பப்படைப்பாளி வ.வெ.சு. ஐயர் அவர்கள்தான். பாரதி அதிருஷ்டக்காரன். பாரதியை முதலில் விமர்சித்து கவிஞனாய் ஊக்குவிக்க அவனுக்கு வாய்த்தவனே தமிழின் முதல் விமர்சகராய்க் கிடைத்தது தமிழின் பேறு! எனவே வெறும் அபிப்ராயர்கள் வாயலப்பிக் கொண்டிருக்கும் 1991இலும் கூட விமர்சனம் இன்னது என்று எடுத்துச் சொல்ல காய்தல் உவத்த லில்லாத விமர்சனப் பரம்பரை தமிழில் உண்டாவதில்லை என்ற வருத்தத்தைச் சொல்ல எனக்கு வெட்கம் இல்லை. தமிழில் தொல்காப்பியத்துக்கு முன்னிருந்தே இலக்கியக் கொள்கைகள் இருந்தன. இலக்கிய கணமரபு இருந்தது. இலக்கிய உறுப்பு, இலக்கணங்கள் இருந்தன. இலக்கண உரைமரபு வரலாறும் கூட இருந்தது. அலங்கார மரபு, அணி மற்றும் யாப்பு மரபு நூல்களும் இருந்தன. இருக்கின்றன. ஆனால் இவை யாவும் விமர்சனமல்ல. விமர்சனத்துக்குத் துணை புரியும் அங்கங்களுமல்ல. இவைகளால் விமர்சனம் தோன்றவுமில்லை, வளரவுமில்லை. தமிழ் மொழியிலும் சரி, சம்ஸ்க்ருத மொழியிலும் சரி விமர்சனக் கருத்துகள் லக்ஷண லக்ஷிய நூல்களாய் வழங்கி வந்தன என்று ஒப்புக் கொள்ளலாமே தவிர விமர்சனம் எனும் கலைத்துறை ப்ரக்ஞை இன்றும் தமிழில் வெகு அருகியே காணப்படுகிறது என்பதற்காக தமிழ் படித்த கலைஞர் யாவரும் வருத்தப்பட வேண்டும். வேதனைப் படவேண்டும்.

1911 வாக்கில் அதற்கு முன் தமிழ் விமர்சனத்தின் அடிப்படைச் சிந்தனைகளை எழுப்பியவர்கள் என்று அ. மாதவையா, பரிதிமாற் கலைஞர் எனும் வி.கோ. சூரிய நாராயண சாஸ்த்திரியார், பி.ஆர். ராஜமய்யர் ஆகியோரைக் குறிப்பிட முடிந்தாலும் இவர்களும் பண்டிதத்தனமான பெருமித அபிப்ராயங்களையே முக்காலும் எழுதி வந்தார்கள். ஆயினும் விமர்சன சாயலில் தமிழில் முதலில் முகங்காட்டி புதுமையை நினைவூட்டியவர்கள் இவர்கள். மேதைமை கலையாகாது. படிப்பும் புலமையும் கவிதை பண்ண முடியாது. அஃதே போல் அபிப்ராய மெத்தனம் விமர்சனமாகாது. எனவே, தமிழின் முதல் விமர்சகர், ஒப்பியல் முறை விமர்சனத்துறை துவக்கிய முதல் இலக்கிய கர்த்தா மகரிக்ஷிவ.வெ.சு. ஐயர்அவர்களாக இருப்பதை எவரும் மறுக்க முடியாது. தடம் பதித்துச் சென்றுள்ள அவரது கம்பராமாயண விமர்சனம் இன்னும் தமிழில் (பூரணமாய்) வராமல் இருப்பதும் தமிழர்களின் துர்பாக்கியமே. புத்தக வடிவில் இதனை யாரேனும் வெளிக்கொணர வேண்டும். இந்நூலின் ஆங்கிலப் பெயர்ப்பை 1940 வாக்கில் தில்லித் தமிழ்ச்சங்கம் வெளியிட்டு புகழ் சேர்த்தது. இந்த நூல் இன்றும் விமர்சன அறிஞருக்கே ஒரு சவாலாகத் திகழும் திறமை சான்றது. ஆம். கம்பன் கவிதை அதன் மூல நூலான வால்மீகியையே வென்றுவிட்ட அற்புதத்தை வ.வெ.சு. அய்யர் இந்த நூலில் விமர்சன இலக்கியமாக்கித் தந்திருக்கிறார். வால்மீகியையே மறுக்கும் ஆணித்தரம் தமிழின் முதல் விமர்சன நூலின் தரமும் திறமும்! இது எப்படி வாய்த்தது? தமிழின் முதல் விமர்சகராகிய மகரிஷி வ.வெ.சு. ஐயருக்கு பன்னிரண்டு மொழிகள் தெரியும். உலகம் கூற்றிய பயங்கரவாதி. தேசியப் போரில் சுதந்தர தேவிக்கு மாலையிட்ட அஞ்சா நெஞ்சன். பலமொழிகளிலும் உள்ள இலக்கியங்களை அந்தந்த மொழிகளிலேயே படித்து ரசித்த பேரறிஞர். அதனால்தான் உலக மொழிகளில் உள்ள இதிகாசங்களை எல்லாம் கம்பனுடன் ஒப்பியல் இலக்கிய விமர்சனம் செய்து, உலகக் கலைஞர்கள் எல்லாம் வென்ற கவிஞன் கம்பனை தமிழுக்கு விமர்சனம் தந்து, வெளிநாட்டிறிஞரும் அந்தணரும் கம்பனை ஒப்புக்கொள்ள வைக்க வ.வெ.சு. ஐயரால் முடிந்தது. எனவே, விமர்சனம் - ஒரு மொழிக்கு எத்தனை தேவை என்பதனை இப்போது இப்படி இவ்வளவில்தான் சொல்லக்கூடும். 1950 வாக்கில் தமிழ் விமர்சன இலக்கியத்துக்காகவே ஒரு பத்திரிகையை இலக்கியப் பத்திரிகையாய் சி.சு. செல்லப்பா துவங்கினார். வ.வே.சு. ஐயரின் 'பாலபாரதி,' மாதவய்யாவின் 'பஞ்சாமிர்தம்,' பாரதியின் 'இந்தியா,' 'விஜயா' போன்ற பத்திரிகைகள் 1920 களிலேயே சிறந்த இலக்கிய விமர்சனதாகம் கொண்டு எழுந்தாலும் அவை யாவும் வெறும் அபிப்ராய ஏடுகள்தாம். இன்றும் எத்தனையோ இலக்கிய பத்திரிகைகள் வெளிவந்தாலும் விமர்சன நோக்கில் அவை 1991 இலும் செயல்படுகின்றனவா என்றால் பெரும்பாலும் இல்லை என்பதே என் எண்ணமாகும். மணிக்கொடி, தேனீ, கலாமோகினி, கிராம ஊழியன் போன்ற மறுமலர்ச்சி இலக்கியப் பத்திரிகைகளும் சூறாவளி, சந்திரோதயம் போன்ற சிறந்த இலக்கிய பத்திரிகைகளை வெளியிட்ட தமிழ் விமர்சனக் கலைஞர் க.நா. சுப்ரமண்யமும் கூட 1930 களில் 40 களில் விமர்சனங்களை எட்டித் தொடவில்லை என்றுதான் சொல்லவேண்டும். 1950களில் கம்யூனிஸக் கும்பலிலிருந்து வெளிவந்த சரஸ்வதி, தாமரை, சமரன் ஆகிய ஏடுகளும் கூட விமர்சன ஆசை கொண்டனவே ஒழிய கலைத்திறம் கொண்ட இலக்கியப் பத்திரிகைகளாகவே வெளிவந்தன. விமர்சனம் அங்கும் அபிப்ராயங்களாகவே இருந்தன. வெளியாயின.

1950 வாக்கில் சி.சு. செல்லப்பா (மணிக்கொடி எழுத்தாளர்) "இலக்கிய விமர்சன குரல்" என்ற அடிக்குறிப்போடு "எழுத்து" எனும் தமிழின் முதல் விமர்சன ஏட்டை வெளியிட்டார். காலத்தின் தேவையை நிறைவேற்றியதே போல 1920 இல் ஆசைப்பட்ட இலக்கிய விமர்சனத்துக்கான தமிழின் சேவையை 1950 வாக்கில் தமிழ் விமர்சனத்தின் அடிப்படைகள் எளிமையாக போடப்பட்டன. எழுத்து தொடர்ந்து 20 ஆண்டுகள் தவறாது வெளிவந்து தமிழின் முதல் விமர்சன அடிப்படை நூல்களை எழுத்து பிரசுரம் மூலம் உருவாக்க வழி வகுத்தது என்பது மாற்ற முடியாத வரலாறு. எழுத்தைப் பின்பற்றி விமர்சனக் கட்டுரைகளை க.நா. சுப்ரமண்யம் என்ற விமர்சகர் (இவரை இலக்கிய விமர்சகராய் தமிழகம் ஏனோ ஒப்புக் கொண்டது!) துவக்கிய 'இலக்கிய வட்டம்' பத்திரிகையும் கணிசமாய் விமர்சன ப்ரக்ஞையை உருவாக்கியது. 'எழுத்து'வில் உருவாகிய விமர்சகர்கள்; 'இலக்கிய வட்டத்தில்' உருவான விமர்சனக்காரர்கள்தாம் தமிழின் முதல் விமர்சன பாரம்பரியத்தை உருவாக்கினார்கள். நவீன மறுமலர்ச்சியாளர்களும் கவிஞர்களும் தோன்றினார்கள். தமிழின் புதுக்கவிஞர்களும் அதுசார்பான விமர்சன இயக்கமும் புரட்சியும் எழுச்சியும் இந்த விமர்சகர்களாலேயே உருவாயின. அதுவரை மறுக்கப்பட்ட புதுக்கவிதைக்கு அங்கீகாரம் கிடைக்கவும் இந்த விமர்சகர்கள் காரணம் என்பதை எவனும் இன்றுவரை எடுத்துக் கூறக்கூட நன்றியற்றவர்களாயிருக் கிறார்கள். தமிழ் இலக்கியத்தில் பாரதிக்குப்பின் மரபுகள்,

படிப்பகம்

www.padippakam.com



மறுமலர்ச்சிகள், எல்லாமே குழுகுழுவாக சிதைந்து இலக்கிய வரலாற்றில் தங்கள் குழுக்களின் சாதனைகளையே முன்னுரைத்து ஓங்கித் தங்களை முன்னிறுத்தப் பாடுபடுகிறார்கள். தனித்தனித்தீவு களாகி நிற்கிறார்கள். இதற்கும் காரணம் விமர்சனம் இல்லாததால் தான். விமர்சனம் செய்யப்பட்டிருந்தால் எது சரி, எது தவறு என்பது புரிந்திருக்கும். புலவர்களுக்கும் வேற்றுமை புரிந்திருக்கும். அறிஞர் பணியை கவிஞர்கள் செய்யப் போயிருக்க மாட்டார்கள். பத்திரிகைகளில் வருவன எல்லாம் இலக்கியமாக ஏற்காமல் மறுத்திருப்போம். நாடகம் என்றால் என்ன, கவிதை - நாவல் - சிறுகதை போன்ற நவீன இலக்கிய உருவங்கள் எவை, எப்படி? விமர்சனம் என்பது இன்னது என்றெல்லாம் புரிந்திருக்கும். இப்போது அதற்கெல்லாம் வழியில்லாமல் 50 ஆண்டுகளாய் அறிஞர்களும் பண்டிதர்களும் கலைஞர்களும் தடுமாறி ஒருவர் வேலைக்குள் மற்றொருவர் சம்பந்தமேயில்லாமல் தலையை நுழைத்து, அதுவும் கெட்டு இதுவும் கெட்டு, ரெண்டும் குட்டிச் சுவராகி, 1991 இல் கூட இன்னும் எதிலும் தெளிவு பெறாமால், அண்ணா எழுதியதும் சிறுகதை, புதுமைப்பித்தன் எழுதியதும் சிறுகதை, வையாப் புரிப்பிள்ளை எழுதியதும் சிறுகதை, மு. வரதராசனார் எழுதியதும் சிறுகதை, கிருபானந்தவாரியும் சிறுகதையாசிரியர், கலைஞர் கருணாநிதியும் சிறுகதைக் கலைஞர், டி.கே. சீனிவாசனும் சிற்றரசும் சிறுகதையாசிரியர்கள், பெரியார் ஈ.வெ.ராமசாமி நாயக்கரைத் தவிர எல்லாரும் சிறுகதையாசிரி யர்கள் என்ற மாதிரி பொது 'அபிப்பிராயங்கள்' தமிழ் நாட்டில் மட்டும்தான் விளங்க முடியும்! உளற முடியும்! நிலைநாட்டி வெற்றிகரமாய் எல்லாரையும் தலையாட்டச் செய்ய முடியும். ஏனென்றால் இங்கு விமர்சனக்கலை விளங்கவில்லை.

தமிழனுக்கு எதையும் விமர்சனம் செய்ய ஆசையில்லை. ஆனால் எலலாம் தமிழில் உண்டு என்று வார்த்தைக்கு வார்த்தை சொல்லும் ஆசை உண்டு! தமிழைப் புகழ்ந்து இங்கே எந்தப் பொய்யையும் அரங்கேற்றி விட முடியும். விமர்சனக்கலை என்று அவர் முதுகை இவர் சொரிய, இவர் முதுகை அவர் சொரிய, பாராட்டும் புகழும் பட்டமும் பதக்கமும் பொன்னாடையுமாய் தமிழ் அல்லோல கல்லோலப்பட்டாலும் தமிழருக்கு உண்மை மட்டும் தேவையில்லை. தமிழர்களின் தலைவர்களைக் கூர்ந்து பார்த்தாலே விமர்சனத்துக்கு அஞ்சும் இந்தக் கோழைத் தலைவர்களை இனங்காண முடியும். நக்கீரன், கீரன் என்று அர்த்தமில்லாமல் புகழுவதுடன் சரி! புலம்புவதுதான் மிச்சம். தமிழனுக்கு தனக்கென ஒரு குணம் உண்டென்பதை நிரூபிக்க பிறரின் குணங்களையும் அறிந்தேயாக வேண்டுமல்லவா? தமிழர்கள் தங்களை விமர்சித்துக் கொள்ள முதலில் அவர்களுக்குத் துணிவு - தவறுகளை ஒப்புக்கொண்டு திருத்திக் கொள்ளும் துணிவு வேண்டும். விமர்சனம் இல்லை என்பதைக் கேவலமாய் எண்ண வேண்டிய தில்லை. அதை உடனே உருவாக்கும் வேகமும் செயலும்தான் தமிழனை உயர்த்தும் என்று நம்பவேண்டும்.

''யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியலே!
இங்கே பீடிகளுக்கும் ஊதுபத்திக்கும் பேதம் புரியலே''

என்றான் ஒரு தமிழ் கவி.

விமர்சனம் என்று இறங்கும்போது - தன் திறனை ஊன்றியறிய வேண்டும். நிறைய படிக்க வேண்டும். மிகை என்று புரிய வேண்டும். தேர்ந்த ரசிகனாய் உருவாக வேண்டும். விமர்சனக் கொள்கைகளை ஐரோப்பியர்கள் பல நூற்றாண்டுகளாய் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கியிருக் கிறார்கள். உதாரணமாக அத்வைதம் - என்று ஒரு தத்துவம் இருக்கிறது - எல்லாம் ஒன்று! ஏகம் எனும் தத்துவந்தான் அது. இருமை இன்மை என்பது அதன் குறி. இலக்கியம் எப்பொழுதும் ஒருமையுள் அடங்கமுடியாது. ஒரு கவிஞன் இன்னொருவனுக்குத் தான் எழுதிய கவிதையைத் தந்தாக வேண்டிய அவஸ்தை இருக்கும்போது ஒருமை எனும் தத்துவம் - அத்வைதம் அங்கே இல்லை அல்லவா? தான் பாடிய கவிதை தனக்கே போதும் எனும் மூடக் கவிஞர்கூட தனக்குள் இருக்கும் இன்னொருவனை மறந்து போகிறார். இன்னொருவனை எதிர்பாராத கவிதை இந்த உலகில் இருக்க முடியுமா? இந்தக் கேள்வியை பதிலாக்க வேண்டுமானால் விமர்சனம் தேவை. எனவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வெறும் அபிப்ராயங் களால் முடியாது. திட்டவட்டமான விமர்சனக்காரர்கள் தேவை. எனது விமர்சன நோக்கின் அடிப்படிகளை இனி ஒரு சமயம் வைத்துக் கொள்வோம். இங்கே நான் கூறிய விஷயங்கள் முதல்நிலை . ஐரோப்பிய விமர்சனக் கலை வரலாற்றை நாற்பது வால்யூம்களில் அறிய முடிகிறது. உலகக் கவிஞர்களின் கரு பற்றி, அதாவது கவிதை பிறப்பு பற்றி கதாபாத்திரங்கள் எப்படி அமைவுற முடியும் என்பது பற்றி, உலக (theme) தீம் - கதை மூலம் இத்தனைதான் என்று அறுதியிட்டு விபரம் கூறும் world themes எனும் விமர்சன நூல் 37 பாகங்கள், உலக இலக்கிய விமர்சனத் துறைகள் பத்து பாகங்கள், Companion to world literature 12 பாகங்கள், Literary Theories - இலக்கிய உலகக் கொள்கைகள் முப்பது பாகங்கள் என விபர நூல்களே ஒரு நூலகம் அளவுக்கு வெளியாகியுள்ள (Best Books of the world - 32 vols.). உலகின் சிறந்த நூல்கள் 32 பாகம், உலகத்துச் சிறந்த கவிதைகள் பத்துபாகம் (World of Poets - 10 vols) என விபர விளக்க விமர்சன நூல்களும் ஏராளம். அருந்தமிழர்கள் இந்தப் பக்கம் எல்லாம் போவது கிடையாது. போனாலும் தமதாக்கிக் கொள்வது கிடையாது. அபிப்ராயம் என்று எதை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குப் புரிவதில்லை. உலக இலக்கிய மரபு என்று ஒன்று இருக்கிறது என்பதை சற்று சிரமப்பட்டேனும் புரிந்துகொண்டாக வேணும் இவர்கள்.

''தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா'' என்பது சரி. ஆனால் அதற்கேற்ற தகுதியை உருவாக்கிக் கொள்ள வேண்டாமா? தமிழ் மொழி நவீனப்படத் தன்னைத் தயாரித்தாக வேண்டும். 10000 வருடத்துக்குமுன் உண்டாக்கப் பட்ட கொள்கைகளை வைத்துக் கொண்டு இன்றைய வேகத்துக்கு ஈடு கொடுக்க மிகச்சிரமப்படுகிறது. எனது விமர்சன நோக்கத்தை மேம்போக்காகச் சொல்ல முடியும். உள்ளே இறங்கும் வேளை வர ஒவ்வொருவருக்கும் அடிப்படை உருவாக வேண்டும். மேடைகளுக்குத் தங்களைத் தயாரித்துக் கொள்ளவும் திரைப்படங்களுக்குத் தங்களை அமைத்துக் கொள்ளவுமே தமிழ்ன திறமைகள் வீணாகின்றன - ஆர்.கே. கண்ணன் - தி.க. சிவசங்கரன் - தர்முசிவராமு - டி.கே. துரைசாமி, தி.சு. சச்சிதானந்தம், ஏ.ஜே. கனகரட்னா, மு. தளயசிங்கம், வல்லிக்கண்ணன் , ஞானி, கே.எஸ். ஜெகநாதன், கனகசெந்தில் நாதன், இளவேனில் போன்ற இன்றும் எழுதிக் கொண்டிருக்கும் விமர்சகக் கலைஞர்கள் தமிழில் உண்டு. ஆனால் இவர்கள் விமர்சன நூல்களைப் படைக்கத் தமிழகம் இவர்களைத் தயாரிக்கவில்லை. மாறாக விமர்ன அரிச்சுவடியாளர்களாகவே ஆரம்ப நிலையிலேயே இருந்து வருகிறார்கள். விமர்சனக் கட்டுரைகளை எழுதும்போதும் பெரிய விளம்பர நிலையில் இவர்கள் விமர்சனக்கலை முயற்சிக்குப் பெரிய படைப்புகளைத் தரவில்லை. இவர்கள் தமிழின் விமர்சனத் துறைக்கு என்ன செய்து கொண்டிருந்தார்கள்? இப்போது என்ன செய்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள எந்தத் தமிழ்த் துறையும் ஊக்கம் தரவில்லை. இவர்கள் விளம்பரங்களுக்கப்பால் வாழ்கிறார்கள். எல்லா அமைப்புகளையும் எதிர்த்து விமர்சனத் துறையில் குரலெழுப்பிய க.நா. சுப்ரமண்யம் எதைப் பற்றியும் கவலைப் படாது எண்பத்திரண்டு வயதிலும் தமது எண்பத்திஎட்டாம் புத்தகத்தை தமிழுக்கு வைத்துவிட்டு இறந்தார். தமிழ் நாடக இலக்கிய விமர்சனத் துறையில் உழைத்த ஆண்டி ராமசுப்ரமண்யமும் இன்னும் வெளிவர முடியாத நாடகக் கலைக் களஞ்சிய விமர்சன நூலை தொண்ணூற்றிரண்டாம் வயதில் தமிழில் எழுதி முடித்து இறந்து போனார். வெங்கடசாமிநாதன் தமது பத்தாண்டு ஓயாத விமர்சனப் போராட்டத்தை தமிழில் செய்து ஓய்ந்து அமைதியாகி உயிருடன்தான் வாழ்கிறார். இப்படித் தன் படைப்பாளிகளை அறிந்துகொள்ள முடியாத அவல அறியாமையில் தமிழ் என்றுமுளதென்றமிழாய் மூட மௌடீகத்தில் ஆழ்ந்திருக்கும் போது எனது விமர்சன நோக்கத்தை கேட்கும் வாசகனே! உங்களிடம் இருக்கும் வாசகர்களையாவது தமது விமர்சக மரணம் அறியுமாறு தூண்டுங்கள். இந்தக் கருத்துகளை நீங்களும் உங்கள் வாசகர்களும் பொய்யாக்கி இல்லாமலாக்குங்கள்! ஆனால் ஆதாரத்துடன் இல்லாமல் ஆக்குங்கள். உயர்வான படைப்புடன், இந்த விமர்சனத் துறையை எனக்கு அறிமுகம் செய்யுங்கள் போதும்! ●



படிப்பகம்

www.padippakam.com



# எங்கள் தந்தையரைப் புதைப்பதற்கு

- செர்ஜியோ ரமிரேஸ், தமிழாக்கம்: கலைச்செல்வன், பக்கம் 263, விலை ரூ. 100/-
நிழல் 31/48 இராணி அண்ணா நகர், கலைஞர் நகர், சென்னை - 600 078.

இலத்தின் அமெரிக்காவில் அரசியல் வாதிகள் கூட உலகம் மெச்சும் சிறந்த கலை இலக்கியவாதிகளாக இருப்பது ஆச்சரியமான செய்தி! இந்த நாவலை எழுதுயிருப்பவர்கூட நிகாரகுவா நாட்டின் முன்னாள் துணை ஜனாபதியாக இருந்தவர் தான்.

நிகாரகுவாவில் சான்டினிஸ்டா புரட்சி வெற்றி பெறுவதற்கு முன் ஆண்டு வந்த சமோசா-வின் கொடுங்கோலாட்சியை விவரிப்பதே இந்நாவலின் மூலக்கரு. பதிப்பாசிரியர் கூறுவது போல ஆசிரியர் யதார்த்த பாணி நடையில்தான் நாவலை எழுதி இருக்கிறார் என்றாலும் நேர்க் கோட்டு கதை சொல்லும் பாணியை மாற்றும் வகையில் அத்தியாயங்களை மாற்றிப் போட்டு விளையாட்டுக் காண பித்திருக்கிறார். தமிழில் எழுதும் முற்போக்கு எழுத்தாளர்கள் கவனிக்க வேண்டிய விஷயம்!

பாத்திரங்களான இன்டியோ, ஜில்குவோ டலானோ, ராவுல் செப்பிட்டோ, பாஸ்ட் டோரிட்டோ, கட்டலினோ முதலியவர்கள் வாயிலாக கதை நகர்த்திச் செல்லப்படுகிறது. பாத்திரங்களும் - காலமும் மாறிமாறி வருவதால் வாசகர்கள் இவர்களைப் புரிந்து கொண்டு கதையின் சரடை பிடித்துக்கொண்டு செல்வதற்கு ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஒவ்வொரு படத்தை வெளியிட்டிருப்பது வாசகர்கள் அயர்ச்சி யடையாமல் வாசிப்பதற்கு உதவுகிறது.

நாவல் எடுத்தவுடன் துப்பறியும் கதை போல செல்கிறது. சர்வாதிகாரியின் வலதுகரமான கேப்டனை கடத்து வதுடன் முதல் காட்சி. பின்னர் இசைக் குழுவாக இருக்கும் போராளிகள் தங்கள் தங்கள் அனுபவங்களைக் கூறுவதன் மூலம் நாவல் விரிந்து செல்கிறது. நிகாரகுவாவிலிருந்து வெளியேறி பல்வேறு நாடுகளில் இருந்து கொண்டு புரட்சிக்கு உதவும் உள்ளங்களைச் சொல்கிறது. ஈழப்போராட்டத்தில் ஈடுபட்டு உண்மையில் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் இந்நாவலின் பாத்திரங் களுக்கும் நிரம்ப ஒற்றுமையைக் காண முடிகிறது.

ஒவ்வொரு பாத்திரமும் தனது அனுப வங்களை விவரிப்பதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்தமான அனுபவப் பகிர்வை யும், வரலாற்றையும் மெல்ல மெல்ல உணர்கிறோம். தமிழில் எழுதப்படுபவை அல்லது இந்தியாவில் வந்துள்ள நாவல் களை படிக்கும்போது வெறும்தனிமனித அனுபவங்களாகவே அவை நின்று விடுவதைப் பார்க்கலாம். லத்தின்அமெரிக்க எழுத்தாளர்கள் மட்டுமே இவற்றிலிருந்து மாறுபட்டு தங்கள் நாட்டின் ஆன்மாவை வெளிக்கொணரும் விதமாக தங்கள் படைப்புகளை வெளியிடுகின்றனர். இதனால் தான், சல்மான் ருஷ்டி நிகாரகு வாவுக்கு சென்ற போது இந்த நாவல் தனக்கு வழித்துணைவனாக இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

நாவலில் பாத்திரங்கள் படும்பாடு நம் நெஞ்சைப் பிழிவதாக மட்டும் அல்லாமல் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்கிற யதார்த்தத்தையும் உணர்த்தி விடுகிறது. இதுதான் லத்தின் அமெரிக்க நாவல் உயிர்துடிப்பாக இருப்பதற்குக் காரணம். மூன்றாம் உலகம் முழுவதும் தேர்தல் என்பது எப்படிப்பட்ட விளையாட்டு என்பதை விவரிக்கிறது. உலகமயமாகி வரும் இன்றைய வேளையில் நமக்கு முன்பே இவற்றையெல்லாம் அனுப வித்துவிட்ட மூன்றாம் உலக மக்களின் அனுபவங்கள் தேவை என்பதை இந்நாவல் சுட்டுகிறது.

மொழிபெயர்ப்பாளரின் சரளமான நடை நம்மை வியக்க வைக்கிறது. ''இந்நாவ லின் காலமும் களமும் திடீர் திடீரென்று முன்னோக்கியும், பின் நோக்கியும் பாய்வ தாகத் தோன்றலாம். ஆனால், நாவல் முடியும் பொழுது அனைத்தும் அதன தன் இடத்தில் சரியாகச் சேர்ந்து கொள் கின்றன'' என்பது உண்மைதான். நிழல் வெளியிட்டு வரும் மூன்றாமுலக இலக்கிய வரிசையின் ஒன்பதாவது நூலான இதனை படித்த போது மற்ற எட்டையும் படிக்க வேண்டும் போல இருக்கிறது.

# ஈரானிய சினிமா

**- தொகுப்பு ப. திருநாவுக்கரசு, பக்: 172, விலை ரூ. 60/- வெளியீடு நிழல் - சென்னை - 78.**

நிழல் பதிப்பகம் வெளியிட்டுள்ள ஏழாவது நூல் 'ஈரானிய சினிமா.' இதற்கு முன் மக்களுக்கான சினிமா; ஆப்ரிக்க சினிமா; அரசியல் சினிமா; பை சைக்கில் தீவ்ஸ்; ஜான் ஆப்ரகாம் கலகக்காரனின் திரைக்கதை; புகலிட தமிழ் சினிமா முதலிய நூல்களையும் வெளியிட்டுள் ளனர். இந்நூல்கள் அனைத்தும் இந்திய மொழிகளில் தமிழில் மட்டுமே வெளி வந் திருப்பது சிறப்பு அம்சங்கள். நிழலுக்கு நிறைய மொழிபெயர்ப்பாளர்களின் ஒத்துழைப்பு இருக்கிறது. இல்லா விட்டால் இதுவெல்லாம் வெளி வந்திருக்காது.

ஈரானிய சினிமா நூல் மூன்று பகுதியாக பிரிக்கப்பட்டிருக்கிறது 1. ஈரானிய திரைப் பட வரலாறு 2. ஈரானிய இயக்குநர்கள் 3. திரைப்பட கதைச் சுருக்கங்கள். நான் காவது பகுதியாக ஈரானிய சினிமாக்கள் உலக அரங்கில் பெற்றுவரும் விருதுப் பட்டில்.

முதல் பகுதியில் ஈரானிய சினிமாவுக்கும் அந்நாட்டின் அரசியலுக்கும் உள்ள தொடர்பை விவரிக்கிறது. ஒவ்வொரு ஆட்சி காலத்திலும் திரைப்படத்துறைக்கு கொண்டு வரப்பட்ட தணிக்கைகள் போன்றவை தெளிவாக அந்நாட்டு இயக்குநர்கள் மூலம் விளக்கப்படு கின்றன. இதே போன்று ஈரானியத் திரைப்படங்களில் குழந்தைகளை ஏன் அதிகளவு நடிக்க வைக்கின்றனர் என்கிற செய்தி பலரிடம் எடுக்கப்பட்ட பேட்டி மூலம் வெளிக்கொணரப்படுகிறது.

இரண்டாவது பகுதியில் ஈரானிய இயக்கு நர்களின் கருத்துகளை கட்டுரை வாயி லாகவும் பேட்டி மூலமாகவும் கொண்டு வந்துள்ளனர். உலக அரங்கில் பெரும் புகழுடன் விளங்கி வரும் அப்பாஸ் கியரொஸ்டமி, மக்மல்பஃப், மஜித் மஜிதி, கரீமி, ஜஃபர் பானாகி, ஜலினி முதலிய இருபதுக்கும் மேற்பட்ட இயக்குநர்களின் பணிகளை அறிகிறோம். ஒரு நாட்டின் பெயரில் ஒரு நூலைக் கொண்டு வரும் போது யாரையும் விட்டு விடாமல் எல்லா செய்திகளையும் தொகுத்திருப்பது தொகுப்பாளரின் கடின உழைப்பைக் காட்டுகிறது. யாராவது ஒரே ஆளை எடுத்துக் கொண்டு காமா சோமா என்று தயாரித்தாலும் யார் கேட்கப்போகிறார்கள்? ஆங்கிலத்தில் ஒரு வார்த்தை கூட தெரியாதவனெல்லாம் மொழி பெயர்ப்பாளர் என்று பெயர் போட்டுக் கொண்டு திரியும் நம்து காலத்தில், நிழலின் பணிகள் வியப்பை

www.padippakam.com



ஏற்படுத்துகின்றன.

மூன்றாவது பகுதியில் ஈரானிய திரைப் படங்களைப் பார்த்தவர்களிடமிருந்து அனுபவப் பகிர்வுகளாக கட்டுரை வாங்கிச் சேர்த்திருப்பது இந்நூலுக்கு வலிமை சேர்க்கிறது. நாமும் இப்படங்களைப் பார்க்க வேண்டும் என்கிற ஆவலை ஏற்படுத்துகிறது. ஈரான் திரைப்படங் களுடைய வெற்றிக்கான காரணங்கள் "வாழ்க்கையினுடைய யதார்த்தங்களை கலாபூர்வத்தோடு வெளிப்படுத்தியது தான்" என்கின்றனர்.

ஷாவின் கொடுங்கோலாட்சியை எதிர்த்து உருவானவர்கள்தான் இன்றைய இயக்கு நர்கள். ஆகவே அவர்கள் மத அடிப் படைவாதங்களை எதிர்த்து எந்தளவுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ போராடி தங்கள் கருத்துகளை வெளிக்கொண்டு வந்து விடுவதை தற்போது வெளிவந்த சில படங்களைப் பார்த்தபோது உணர முடிந்தது. இஸ் லாமிய உலகில் பெண்கள் உரிமை பெற்று முன்னுக்கு வருவது வரவேற்க வேண்டிய அம்சம். 'சைக்லிஸ்ட்' படத்தில் சிறு பெண்ணாக நடித்த சமீரா மக்மல்ஃபப் இன்று உலக படவிழாக்களில் பல பரிசுகளை பெறுவதும், ஆப்கானிய அடிப்படைவாதத்தை எதிர்த்து படம் செய்திருப்பதும் நினைத்துப் பார்க்க முடியாத விஷயங்கள்.

ஈரானிய சினிமாவை பார்க்கும் போது நமது தமிழ்த்திரைப்பட உலகம் இன்னும் நாடகங்களை செல்லுலாய்டில் தந்து கொண்டிருப்பதை பார்க்கும் போது வேதனை அளிக்கிறது. உலக சினிமா வரலாறுகள் அனைத்தையும் நிழல் கொண்டு வந்து தரவேண்டும்.

# மார்க்கேஸின்
## வாழ்க்கையிலிருந்து

**- ஜான் லீ ஆண்டர்சன்,**
**தமிழாக்கம்: வீ.கே. பாலகிருஷ்ணன்,**
**பக்: 85, விலை ரூ. 30/-**

காப்ரியல் கார்சியா மார்க்கேஸ் என்ற கொலம்பிய எழுத்தாளரின் வாழ்க் கையை விவரமான நுணுக்கங்களுடன் ஆய்கிறது. அவருடைய வாழ்க்கை யிலிருந்து சுவையான செய்திகளை விவரிக்கிறது. லத்தின் அமெரிக்க எழுத் தாளர்கள் அனைவரும் அந்தந்த நாட்டு சமூகத்தின் மனசாட்சிகளாக வாழ்ந்து தமது படைப்புகளில் கொடுத்து வருகின் றனர். தவிர்க்க இயலாமல் அவர்கள் எல்லோரும் இடது சாரிகளாக இருக் கிறார்கள். எகா மார்க்கேஸ், ரிமிரேஸ், கொத்தசார், கார்பெண்டியர், புயந்தஸ் அலண்டே போன்ற எண்ணற்றோர். ஆனால் தமிழில் இவர்களை மொழி பெயர்க்கும் கனவான்கள் இவர்களின் அரசியல் பின்புலங்களைச் சொல்லாமல் 'கலை கலைக்காக' என்கிற சிமிழில் அடைக்கும் வேலையை லாவகமாக செய்து வருகின்றனர். இந்த வெட்ககரமான போக்கை இங்குப் பதிவு செய்து விட வேண்டும் என்கிற முனைப்புடனே எழுது கிறேன். இதற்கு ஒரு எ.கா. மார்க் கேஸுக்கு பூணூல் போடாத குறைதான் அவர் பெயரில் வந்துள்ள மற்றொரு நூலை படிப்பவர்களுக்கு தெரியும். இந்த விஷயம் தமிழில் இப்படி காதும் காதும் வைத்தது மாதிரி நடந்து வருவதைப் பார்க்கும் போது அறிவு ஜீவிகள் என் பவர்கள் வாயையும் ... மூடிக் கொண்டு இருப்பதை என்ன சொல்வது? மார்க் கேஸ்பிடல் காஸ்ட்ரோவுக்கு, பாப்லோ நெருடாவுக்கெல்லாம் நண்பராக இருந்தவர் - இருப்பவர். *1982*ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற தொகை யைக் கொண்டு இளம் பத்திரிக்கை யாளர்களுக்கான கல்லூரியையும், மீந்த காசில் நாளிதழையும், இன்னும் மீந்த காசை கொலம்பிய கொரில்லாக்களுக்கும் கொடுத்தவர் என்பதை படிக்கும் போது இங்குள்ள எழுத்தாளர்களை என்ன சொல்வது? 'நூற்றாண்டுத் தனிமை' என்ற நூலை அப்படியே விழுங்கி தமிழில் ஒரு நாவலாக ஒருவர் வாந்தி எடுத்திருப்பது யாரும் அறியாததல்ல!

மார்க்கேஸின் வாழ்க்கை குறிப்புகளுடன் அவர் வாழ்க்கையையே ஒரு சிறுகதை யாக எழுதியிருப்பதை (என்னுடைய தந்தை என்னுடைய தாயை வென்றெடுத்த கதை) இந்நூலுடன் இணைத்திருப்பது பதிப்பாசிரியன் திறமையைக் காட்டுகிறது. மார்க்கேஸின் ஒவ்வொரு படைப்பும் பிறந்த பின்புலத்தை இந்நூல்போல் எதுவும் விளக்கிச் சொன்னதில்லை.

காணக்கிடைக்காத மார்க்கேஸின் பல புகைப்படங்களைப் பார்க்க முடிந்தது.

இனியாவது லத்தின் அமெரிக்க எழுத் தாளர்களைப் பற்றி மொழிபெயர்க்கும் இலக்கிய கண்மணிகள் அவர்கள் பின்பு லத்தை மறைக்காமல் வெளியிடட்டும்!

**- மலேஷியா ராஜேந்திரன்**

Printed by Mrs. Kavithasaran
at Allwell Press at
31, T.K.S. Nagar, Chennai - 600 019.
Edited & Published by Kavithaasaran

## பதிவுகள்

தென்னை மரத்திற்கு
குழி தோண்ட
சேகரித்த பொருட்கள்

தலைமுடி துறந்து
நிர்வாணம் தரித்து
உறங்கும்
இளைய தங்கையின்
ரப்பர் பொம்மை

மூன்றாம் உலகப் போருக்கு
வித்திடுமோ என்று
ஒருகாலத்தில் அஞ்சப்பட்ட
தம்பி மார்களின்
கூர் உடைந்த
சுண்டுவிரல் பென்சில்கள்

அப்பாவின் தலைமுடிக்கு

ரகசியமாய் சாயமேற்றிய
சிதைந்து போன தூரிகை



கடைசித் தம்பியின்
வெளுத்துப்போன
ரப்பர் சூப்பி

கொப்பளித்து வந்த
சிரிப்பலைகளை
ஒரேயடியாகத்
துவைத்துப்போட்டது
உடைந்து போன
பாட்டியின் மூக்குக்கண்ணாடி.


**- பிரேம பிரபா**



படிப்பகம்

www.padippakam.com


அடுத்து அவரது தூரிகை பாய்வது அடக்குமுறை சட்டங்களின் மீது. அந்நியர் ஆட்சியில் புரட்சியாளர் களை, விடுதலை வீரர்களை அடக்குவதற்காகவே கொண்டு வரப்பட்டது ரவுலட் சட்டம். அச்சட்டத்தின் மூலம் கைகள் மட்டும் கட்டப்பட்ட மனித உரிமை, இந்தியா விடுதலை பெற்றுவிட்டதாகச் சொல்லப் படும் காலத்திற்குப் பின் கொண்டு வரப்பட்ட மிசா, தடா, பொடா சட்டங்களினால் எத்தகு கொடூரமாக முடக்கப் பட்டுள்ளது என்பதை நான்கு தொடர் ஓவியங்கள் மூலம் மிக எளிதில் புரிய வைக்கிறார்.



மிசாவில் கையோடு வாயும் கட்டப்பட்டு, தடாவில் மடக்கப்பட்டு, பொடாவில் முதுகு எலும்போடு சேர்த்து முடக்கப்பட்டது மனித உரிமை.

'உலக பயங்கரவாதம்.' இதனைக் காரணம் காட்டி இந்தியா கொண்டு வந்தது 'பொடா' என்றால், அமெரிக்காவோ ஆப்கான் என்ற ஒரு நாட்டையே அழித்தது. அதோடு தீரவில்லை அதன் கொலை வெறியாட்டம். ஒரு பின் லேடனுக்காக ஆப்கான் நாட்டை அழித்த அமெரிக்கா ஒரு சதாமுக்காக ஈராக் நாட்டை அழித்தது. ஒரு மனிதனுக்காக ஒரு நாட்டையே அழித்து தானே உண்மையான 'உலக பயங்கரவாதி' என நிரூபித்த அமெரிக்காவின் அதிகார வெறியை, ஈவு இரக்கமில்லா இரத்தப் பசியைத் தனது ஓவியங்களின் மூலம் சிவக்கச் சிவக்கக் காட்டுகிறார் ஓவியர்.

பிணம் தின்னிக் கழுகுகள் இன்று உயிரோடு விழுங்கியது மனிதத்தை. நகங்களில் இரத்தம் சொட்ட, அடங்காத வெறியோடும், ஆர்ப்பரிக்கும் திமிரோடும் நிமிர்ந்து நிற்கும் அந்தக் கழுகில், அமெரிக்காவின் குணாதிசயத்தை முழுவதுமாகக் காட்டிவிடுகிறார். கடந்த தலைமுறையின் பெருமை களைப் பறைசாற்றும் கலைச்செல் வங்களை நிர்மூலமாக்கி, வருங்காலத் தலைமுறையினரான பச்சிளம் குழந் தைகளை முடமாக்கி, ஒட்டுமொத்த மாக ஒரு இனத்தை அழித்தொழிக்க முற்பட்ட அமெரிக்காவின் உண்மை யான முகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார் ஓவியர்.



ஏவுகணைகளின் மூலம், ஆயுதங் களின் மூலம், ஈராக்கையும் ஆப் கானையும் தாக்கியழித்த அமெரிக்கா, இங்கே நம் மண் மீது, உலகமய மாக்கல் என்ற பெயரில் ஒரு பெரும் படையெடுப்பை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. கலாச்சார சீரழிவை மட்டும் அது நிகழ்த்த வில்லை. மாறாக நம் அடுத்த தலைமுறைக்கு நாம் விட்டுச் செல்ல எதுவும் இல்லாத வகையில் நம் அனைத்து வளங்களையும் சுரண்டி, அதை நம்மிடமே விற்றுக் கொழிக்கின்றது.

நாட்டிற்கே சோறு போட்ட தஞ்சை நிலம் இன்று வறண்டு, வெடித்து, காய்ந்து கிடப்பதற்குக் காரணம் கர்நாடகம் மட்டுமல்ல, உலகமய மாக்கலின் பெயரால் நடக்கும் நீர் சுரண்டலும்தான். இவற்றை மிக எளிமையாக தனது ஓவியத்தின் மூலம் காட்டியுள்ளார்.

வறண்டது நிலங்கள் மட்டுமா? மனித முகங்களும்தான். புகழேந்தியின் தூரிகையில் வெளிப்பட்ட அந்த உழவனின் முகத்தில் தென்படும் சோகம், இழப்பின் துயரம், ஏமாற்றம், 'எல்லாம் முடிந்து விட்டது' போன்ற விரக்தி,... இன்னும் ஏதேதோ உணர்வுகள் நம் நெஞ்சில் ஒரு பெரிய பாரத்தையே ஏற்றி விடுகின்றன.

அந்த பாரத்தை இறக்கி வைக்க நாம் என்ன செய்யப் போகின்றோம்? வறண்ட நிலம் துளிர்க்க, மனிதம் மீண்டும் உயிர்க்க... நம் பங்களிப்பு என்னவாக இருக்கப் போகிறது?

வெறும் பரிதாபத்தைத் தூண்டி, படி தாண்டியவுடன் மறக்கச் செய்யும் ஓவியங்கள் அல்ல அவை. நிறைவரங்கத்தில் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் கூறியதைப் போல... அதிகமாக பரிதாப்பபடுகிறவனே அதனை எதிர்த்துக் கேள்வி கேட்கிறான்... அதையும் விட அதிகமாகப் பரிதாபப் படுகிறவன்... திருப்பி அடிக்கிறான்.

நாம் குறைந்தபட்சம் கேள்வியாவது கேட்போமா?... அப்படி கேட்போமா னால் அதுவே நாம் அந்த ஓவி யருக்குச் செய்யும் கைம்மாறு.

அந்தக் கேள்வியே ஓவியரின் வெற்றி.



குளிர்பதன அறைகளில் உயர்தட்டு மக்களுக்காக மட்டுமே என்று இருந்த ஓவியக் கலையை வெகு மக்களக்கு எடுத்துச் சென்றிருக்கும் ஓவியர் புகழேந்தியின் சீரிய பணி தொடரட்டும். •

படிப்பகம்

www.padippakam.com

Registrar of Newspaper of India Dis. 5479 / 90













படிப்பகம்